20-12-1935

உ

குமார குருப்யோ நம:

# திருத்தணிகை க்ஷேத்திர மகாத்மியம்

என்னும்

# தணிகை புராண வசனம்.

இஃது

தமிழ் வித்துவான்,

**த. பு. முருகேச நாயகரவர்கள்**

எழுதியது.

திருத்தணிகை புத்தக வியாபாரம்,

**எ. க. செங்கல்வராய செட்டியார்**

அவர்களால்,

சென்னை

ஸ்ரீ சுப்பிரமணியவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1935.

இதன் விலை] *Rigistered Copy Right.* [அணா 12.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும் அடியிற் கையொப்பமிட்ட யான் தெரிவிப்பது யாதெனில்:—திருத்தணிகை க்ஷேத்திர மஹாத்மியம் என்னும் தணிகை புராணம் ம-ா-ா-ஸ்ரீ, தமிழ் வித்துவான் த. பூ. முருகேச நாயகரவர்களால் எழுதச்செய்து என் சுதந்தரமாக அச்சிட்டு மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்திருப்பதால் என் உத்தரவின்றி இந்நூலை அச்சிடக்கூடாது, அப்படி அச்சிட்டால் சட்டப்படி வசூல் செய்யப்படும். இந்த அறிவிப்பில் தெரிந்துகொள்ளவும்.

இப்படிக்கு,

எ. க. செங்கல்வராய செட்டியார்,

புத்தகவியாபாரம்,

திருத்தணி.

குருப்யோநம:

## தணிகைபுராண வசன

# முகவுரை.

தாயுமானவர்

"மூர்த்திதலந் தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

என விதந்தவாறு, அடைந்தாரை அஞ்சேலென் றாதரிக்கும் அருட்பெருந் தடங்கடலாகிய ஆறுமுகப்பெருமான் எழுந்தருளிய தலங்கள் பலவெனினும் அத்தலைமைத்தெய்வம் யாவுந்தணிந்து ஆசாரிய மூர்த்தமாயிலங்குந் தலந்தணிகையொன்றே யாகலின், அத்தலப் பிரபாவங்களை கந்தபுராணம், தணிகைப்புராணம், தணிகைமான்மியம் முதலியனவும், தணிகையாற்றுப்படை, திருப்புகழ், திருவருட்பா முதலியனவுஞ், பிரகாசப்படுத்துபவெனினும் விரிந்து கிடத்தலின் ஏனோரு மெளிதி லுணருமாறு ஒருபுடை புதுக்கித் தொகுத்துத் தருக. என தணிகை புத்தக வியாபாரம் செங்கல்வராயச்செட்டியாரவர்கள் விரும்பியவாறு, முன்னர் தேவர் சிறைமீட்ட தெய்வத்திருவாகிய சிவசண்முகப்பெருமான் திருவருளிருந்த வண்ணம் கந்தபுராணம், தணிகைப்புராண மென்பவைகளினின்று விரிவஞ்சி, சரித்ரரூபம் சிலபல பொருத்தொதுக்கி யொருவாறு தொகுத்தனம் எனினும் திருப்புகழாதிய வாராய்ச்சியினும், அத்தணிகைக் கணியற்கையினு மமைந்து கிடக்குஞ் சில சரிதங்களையும் வரைதற் காண்டானருள் எங்ஙனோ எஞ்சின. அன்றி, தலமகத்வ தற்கால விளக்கம், உற்சவசொரூபம், தற்கால தீர்த்தநிலை, மற்றை மூர்த்திநிலைகள் முதலியவைகளையும் விளக்குமாறு விசாகப்பெருமான் விழைவித்திலன், எனினும் இறைவன் இன்னருள் இன்னோர் பதிப்பினேனு மெய்து மாறிறைஞ்சுகின்றாம் அஃதன்றி, எம் சந்தற்பமாகமின்றிய ஏழைத் தமிழ்க்கணெய்தும் எப்பிழைகளையும் மன்னித்து, "கோவுடனே கூடிவரும் குருட்டாவு மூர்புகும்" என உமாபதி சிவமிசைத்தவாறு கற்றோர் கடாக்ஷிப்பார்களாக.

தெய்வநாயக னடிமை,

த. பூ. முருகேச நாயகர்.

# விஷய அட்டவணை


| | | |
|---|---|---|
| திருநாட்டுப்படலம் | .... .... | 10 |
| திருநகரச்சிறப்பு | .... .... | 10 |
| புராண வரலாற்றுப் படலம் | .... ... | 13 |
| நைமிசப்படலம் | .... .... | 13 |
| திருக்கைலை | .... ... | 14 |
| ஸ்தலப் பெயர்கள் | .... ... | 14 |
| சத்தரிஷீசுரர் | ... .... | 21 |
| வீராட்டகாசப் படலம் | .... ... | 23 |
| பிரமன் சிறையடைதல் | .... .... | 24 |
| முருகக்கடவுள் சிருஷ்டி செய்தல் | ... ... | 25 |
| பிரணவோபதேசம் செய்தல் | ... ... | 26 |
| குமரேசப் படலம | .... ... | 30 |
| பிரமன் திருஷ்டிபெறு படலம் | ... .... | 34 |
| நந்தியுபதேசப் படலம் | .... ... | 38 |
| நந்தி தீர்த்தம் | ... .... | 41 |
| பலயிலக்கணம் | .... ... | 44 |
| பசுவிலக்கணம் | .... ... | 45 |
| மாயை இலக்கணம் | ... ... | 47 |
| அகத்திய ரருள்பெறு படலம் | ... ... | 53 |
| முருகக்கடவுள் மூர்த்தங்கள் | ... ... | 56 |
| அகத்தியருக்கு ஞானோபதேசஞ் செய்தல் | ... | 64 |
| ஸ்ரீ பரிபூரண நாமப்படலம் | ... .... | 70 |
| சூரபதுமன் வதை | .... ... | 85 |
| அக்கினிமுகாசூரன் வதை | ... ... | 93 |
| காளி ஐயனார் வாகனங்கள் | ... ... | 102 |
| தெய்வயானையம்மையார் திருமணம் | ... | 102 |
| பிரமன் அருள்பெறுபடலம் | ... ... | 103 |
| நாரணன் அருள்பெறு படலம் | ... ... | 106 |
| இந்திரனருள்பெறு படலம் | ... ... | 111 |
| நாகம் அருள்பெறு படலம் | ... ... | 115 |
| இராமன் அருள்பெறு படலம் | ... ... | 118 |

## விஷய அட்டவணை.

| | | | |
|---|---|---|---|
| நாரதர் அருள்பெறு படலம் | .... | ... | 121 |
| களவுப் படலம் | ... | ... | 128 |
| வள்ளியம்மையார் திருமணப் படலம் | | ... | 149 |
| தணிகைத் தலமகத்துவம் | ... | .... | 153 |
| பிரமேசுரர் | ... | ... | 155 |
| விரத விசேஷப் படலம் | ... | ... | 156 |
| தத்துவார்த்தப் படலம் | ... | ... | 158 |

# விஞ்ஞாபனம்.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பத்திவளர்த் தருள்வளர்த்தாட் கொள்வா னிந்தப்
பாரேழும் பிறவனைத்து மாகி யோங்குஞ்
சித்தேசான் மறைமுடிவுந் தீண்டாச் சோதீ
சித்தாந்தத் துறைமிதந்த தேனே வானோர்
மூத்தனெலாந் தொழுஞான முனியே யாறு
முகத்தேவே யருட்கடலே தணிகைக் குன்றின்
வைத்தோங்கு மாணிக்க வடிவே சுப்ர
மணியேநின் னடிமறவா தருளுவாயே.

# தணிகை பிரமோற்சவங்கள்.

மாசிமீ மக நக்ஷத்திரத்திற்குப் பத்து நாள் முன்னுக ஆரம்பம்; உற்சவமூர்த்தி பெரிய உற்சவர்; உற்சவம் மலைமேலே நடக்கும்; த்வஜாரோஹணத்துக்கு முன்நாள் இரவு விநாயகர் உற்சவம்; அங்குரார்ப்பண உற்சவம்-சமித்திரேசுரர் (அஸ்திர தேவர்) புறப்பாடு; இந்திர தீர்த்தத்திலிருந்து தாசி தலையிற் புற்றுமண் கொண்டுவரப்படும்.

முதல்நாள்:—காலை-த்வாரோஹணம்; இரவு-கற்பக விருக்ஷம்-(அது பழுத்த பட்டபடியால் ஸ்வாமி விமானத்தின்மீது வருவார்)

இரண்டா நாள்:—காலை-சூர்யப்பிரபை; இரவு-பூத வாகனம்.

மூன்று நாள்:—காலை-சிங்க வாகனம்; மாலை-ஆட்டுக்கடாவாகனம்

நான்காநாள்:—காலை-பல்லக்கு; மாலை-நாக வாகனம்.

ஐந்தா நாள்:—காலை-அன்ன வாகனம்; மாலை-வெள்ளி மயில்.

ஆறு நாள்:—மாலை-புலிவாகனம்; தாசிகளது மஞ்சள்நீர் உற்சவம்

இரவு-யானை வாகனம்; காமக்கூத்து-தேவதாசிகளுள் ஒருத்தி மன்மத வேஷத்துடன் புன்னைக்காய் கொண்டு ஆடல்.

ஏழா நாள்:—காலை-ரதோற்சவம்.

எட்டா நாள்:—காலை-யாளி வாகனம்; மாலை—ஸ்வாமி கீழே ஆறுமுகஸ்வாமி கோவிலில் ஊஞ்சலாடுதல்; இரவு-ஸ்வாமி மலைக்கு மேற்புறத்துப்போய் அடிவாரத்தி லிறங்குதல்; கன்னமிடுதல்; வள்ளியைத் திருடுதல்-வேடர் கூட்டக்காட்சி; பிறகு குதிரைவாகனம்; பின்னர் இரவு 3-மணிக்கு வள்ளியம்மை திருக்கலியாணம். தேவசேனை கதவடைக்கிறது; பதினைந்து நிமிஷம் பாடல், மங்களம்.


ஒன்பதா நாள்:—காலை-இந்திர விமானம் மாலை கந்தபொடி உற்சவம்; இரவு-சண்முக ஸ்வாமிக்கு அபிஷேகம், பாதி பிரதக்ஷிணம்.

பத்தா நாள்:—மாசி மகம். காலை - (அகஸ்திரதேவர் குமார தீர்த்தத்துக்கு வருவார்) ஷண்முகஸ்வாமி-முழுப்பிரதக்ஷிணம் வருதல், மட்டையடி சேவை; தாசிகள் மட்டையா லடித்தல்.

மாலை-குமார தீர்த்தத்துக் கருகில் தீர்த்தவாரி; மண்டபத்திற் பெரிய உற்சவருக்கு அபிஷேகம்.

இரவு-மூன்றுமணிக்குக் கொடியிறங்குதல்.

சித்திரைமீ:—சித்திரை நக்ஷத்திரத்திற்குப் பத்து நாளைக்கு முன்பு ஆரம்பம்; மாசி பிரமோற்சவம் எப்படியோ அப்படியே; ஆனால் வேடர் உற்சவ மாத்திரம் கிடையாது. எட்டாநாள் இரவு தேவசேனை திருக்கலியாணம். வள்ளியம்மை கதவடைப்பது. 11-ம் நாள் பெரிய உற்சவர் தணிகைக்குக் கிழக்கில் 6-மைல் தூரத்திலுள்ள விநாயகபுரம் தேவசேனையின் தாயார் வீடு போய் வருவார்.



திருத்தணிகை முருகக்கடவுள்.

20-12-35

கணபதி துணை.

வேலுமயிலுந் துணை.

# திருத்தணிகை

# க்ஷேத்திர மஹாத்மியம்.

## காப்பு.

அறுசீராசிரிய விருத்தம்.

அன்பருளக் குகைதோறு மமர்கேரு மணிக்குன்றே யமல ஞான
இன்பமதப் பொழிமுக்க ணிபமுகத்தெம் பெருமானே யெந்[illegible]மூவர்
பண்ணுதமிழ் முறைவகுக்கப் பரமேயைங் கரத்தேவே தணிகை[illegible]லாங்
குன்றெறிலார் சரிதவளங் கூறவகைத் தந்தெனையாட் கொள்ளுவாயே.

## வாழ்த்து.

வாழ்கவான் புவிவா னோர்கள் வளர்கமே லோர்கள் வேள்வி
ஆழ்கவெவ் வுயிரு மின்ப மருளுக சைவ மெங்கும்
மாழ்கவெம் பகைபா வங்கள் மல்குக செங்கோ னீதி
சூழ்கநந் தணிகைச் செவ்வேள் தோகைவே லடியாரன்பே.

## * நூற்பயன்.

"சேயிடை யிருந்து கேட்பினுந் தொழிலுஞ்
செப்பினுஞ் சித்தம் வைத்திடினும்
ஆயிடை வதித லாதிகள் செயினும்
அலகில்பல் வவத்தினு மீட்டு
மாயிரு வினையுஞ் சவட்டிமீ ளாத
வரம்பிலின் புறத்துவ தென்றாற்
காயிலை வேலோன் தணிகையின் பெருமை
கட்டுரைக் கடங்குவ தன்றே."

* இக்கவி தணிகை புராணத்துள்ளது.

## முதலாவது

## திருநாட்டுப் படலம்.

ஔவையார்,

"வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து"

எனக் கூறியவாறு, உலகத்தில் எல்லா வளப்பங்களும் நிரம்பி அனேக பெரியோர்களையும், அளவிறந்த புலவர்களையும், எண்ணற்ற கொடையாளிகளையும், ஆயிரக்கணக்கான சிவ சந்நிதானங்களையும் தன்னகத்தடக்கி, வேதாகம மோக்ஷ சத் சமயமாகிய சைவநெறியிற் றலைசிறந்து விளங்குவது தொண்டைநாடேயாம்.

### திருநகரச் சிறப்பு.

இத் தொண்டை நாட்டின்கண் காஞ்சிபுரத்திற்கு வடக்கே திருவேங்கடத்தருகிலுள்ளது திருத்தணிகையாம். இத்திருத்தணிகையில்

தணிகை பு. குமரேசப்ப. 15-கவி.

"...............................................கங்கையை
வருகென வழைத்தவன் மருவின் மாயையிற்
பொருவில்பல் பொருள்களும் பூத்திட் டானரோ"

எனவும், அருணகிரிநாதர் திருப்புகழ்.

"சிறப்பிலக் குணர்த்துசித்த! வுற்றநெல் பெருக்குற
பெருக்குசெய்த் திருத்தணில பெருமாளே"

எனவும் கூறியவாறு,

குமாரக் கடவுளே கங்கையை வரவழைத்து ஒப்பற்ற பலவித பொருள்களை உண்டாக்கி விளைவுகளைப் பெருக்கி பலவித நெற்களையும் பெருகச் செய்கின்றன ரென்றால் அத்தணிகாசலத்தின் பெருமையை யாரால் சொல்லமுடியும் ?

இத் திருத்தணிகையில் எங்குபார்த்தாலும் மடங்கள், எங்கும் * சத்திரங்கள், எங்கும் சுனைகள், தடாகங்கள், எங்கும் செய்கால்களி

* தற்கால் திருத்தணியில் 340-சத்திரங்க ளிருக்கின்றன. இதன்றி அனேக சத்திரங்கள் வேறே இடிந்து கிடக்கின்றன.

திருப்புகழ்.

"திருக்குள நாளும் பலதிசை யூகஞ்
சிறப்பத ருவெண் டிசையோடும்
திரைக்கடல் சூழும் புவிக்குயி ராகுந்
திருத்தணி" என்றபடி


எங்கும், விளைவுகள், எங்கும் பெரியோர்கள், எங்கும் சந்நதிகள், என்றும் திருவிழாக்கள் என்றால் இத்திருத்தணிகையின் பெருமையை என்னென்று கூறுவது? இதன்றி சிவன், விஷ்ணு, பிரமன், இந்திரன் சரஸ்வதி, ஆதிசேடன், அகத்தியர், நாரதர், ஸ்ரீராமர், சப்தரிஷிகள், சப்தகன்னியர்கள், நந்தீசர் முதலியவர்கள் பலதீர்த்தங்களை யுண்டாக்கி, பலமூர்த்திகளைத் தாபித்து, தாங்களும் பல சந்நிதானங்களைக் கொண்டு எழுந்தருளி யிருக்கின்றன ரென்றால் அத்தணிகையின் பெருமையை என்னென்று கூறுவது? இதன்றி அத்தணிகாசலத்தில் வசிப்பவர்களெல்லாம் (திருப்புகழ் 272-ம் கவி,

"மாரன் வெற்றிகொள் பூமுடிக்குழ
லார்வி யப்புற நீடுமெய்த்தவர்
வாழ் திருத்தணி" என்றபடி)

நல்ல தவத்தைச் செய்தவர்கள் என்றால் அதன்பெருமையை நம்மாற் கூறப்படுவதல்ல தணிகைபுராணத்துள்,

"அத்தலந் தன்னையா மடைகுவாமென
புத்தியி னினைப்பினும் புறத்திற் செல்லினும்
பத்தடி நடப்பினும் பரித்த நோயெலாம்
கொத்தொடு மவர்புறம் வழிக்கொண் டோடுமே"

என்றபடி, அத் தணிகாசலத்திற்குப்போக வேண்டுமென நினைத்தாலும், அங்கரத்தின் ஓரமாகச் சென்றாலும், திருத்தணிகைக்குப் போகின்றேன் எனப் பத்தடிதூரம் நடந்தாலும் அவர்களைவருத்தும் எவ்வித நோய்களும், பூத பைசாச ராக்ஷச உபத்திரவங்களும், பகை பழி, பாவம் முதலியவைகளும் நீங்கி புனிதராவார்களென்றால் தணிகாசலத்தினும் சிறந்த க்ஷேத்திரம் உலகத்திலில்லை எனக்கூறலாகும்.



## † நைமிசப் படலம்

பூர்வம் பிருகு, போதாயனர், விபாண்டகர், துருவன், நாரதர், அத்திரி, அகத்தியர், ஆங்கிரசர், காத்தியாயனர், கண்ணுவர், பராசரர், கௌசிகர், சமதக்னி, மார்க்கண்டேயர், பரத்துவாசர், காசிபர் முதலிய அனேக முனிவர்கள் பிரமதேவனை யடுத்து நாங்கள் தவஞ்செய்வதற் குரிய இடம் எவ்விடம் எனக்கேட்க, அதற்குப்பிரமன் ஓர் தருப்பைப் புல்லை வளைத்து சக்கரமாக உருட்டி இது எங்குபோய் நிற்கின்றதோ அவ்விடமே நீங்கள் தவஞ்செய்தற்குரிய இடமாம் எனக்கூறியனுப்ப அவ்வாறு அத்தருப்பை சென்று நின்ற இடமே நைமிசாரணியம் எனப்படுகின்றன.

## புராண வரலாற்றுப் படலம்.

இந்த நைமிசாரணியத்தில் மேற்கூறிய முனிவர் முதலியவர்கள் வேதாத்யாயனம், யாகம், அவிர்ப்பாகம், ஈஸ்வரபூஜை தவம் முதலிய வைகளைச் செய்துகொண்டு சதா ஆனந்தமயமாக வாழ்ந்துகொண்டி ருக்குஞ் சமயத்தில் ஓர்நாள் சூதபுராணிகர் வழக்கப்படி அவ்வனத் தின்கண் வந்தருளினர். அவரைக் கண்டவுடன் முனிவர்கள் எதிர் சென்றழைத்து சோடசோபசாரங்களுஞ்செய்து மாதவ சிரேஷ்டரே! தேவரீர் சிற்சில தினங்கட்கு முன்னர் அடியேங்கள் உய்யும் பொருட் டுப் பதினெண்புராணங்களையும் உரைத்தீர்களல்லவா? அவைகளுள் முதற் புராணமாகிய ஸ்காந்தபுராணம் ஆறு சங்கிதையில் மிகவும் சிரேஷ்டமான சங்கர சங்கிதையில் தயாவிபவ சாக்ஷாத் சிவ சண் முகக் கடவுள் திருவோலக்கங்கொண்டெழுந்தருளி யிருக்கும் தலங் களில் விசேஷமான்து தணிகாசலமே எனத்திருவாய் மலர்ந்தீர்க ளன்றோ! அத்தகைய திவ்யக்ஷேத்ர பிரபாவத்தை எங்களுக்குத் தெரிவித்து, நாங்கள் அத்தணிகாசலபதியாகிய ஸ்ரீ சிவசுப்பிரமணி யக்கடவுள் திருவருளைப்பெற்றுய்யுமாறு அனுக்கிரகிக்கவேண்டும் எனப் பிரார்த்தித்தார்கள்.

---

† நேமி—சக்கிரம், நேமிசம்பந்தம் நைமிசம் எனப்படுகின்றன. நைமி சாரண்ய மென்னும் வனம் வடக்கே லக்னோபாலம் ஜங்கிஷன்களின் மத்தி யிலுள்ள சாண்டிலா ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 25-ம் மைலிலும், சித்தாப்பூருக்கடுத்த நைமிசார் ஸ்டேஷனுக்கு கிழக்கே 7-மைலிலு மிருக்கின் றது. இந்த சூதபுராணிகர் மடமும், அதில் அடுக்கிய பல ஓலைச்சுவடிகளு மிருக்கின்றன.

உடனே சூதபுராணிகர் ஆனந்த பரவசமுற்று, சிறிது நேரம் சிவத்தியானத்திருந்து, விழித்து ஓ! தவ சிரேஷ்டர்களே! நீங்கள் முன்னமே கல்வி, ஆசாரம், தயை சற்சன சஹவாசம், சாந்தம், ஞானம், ஆத்மபூஜை, அடியாரன்பு முதலிய பாக்கியங்களைப் பெற்றிருக்கின்றீர்கள். மேலும் மேலும் மோக்ஷஞான செல்வங்களைச் சம்பாதிப்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கிறீர்கள். உங்களைத் தரிசிப்பதற்காகவே இங்குவந்தேன். நீங்களோ எனக்கு நல்ல புண்ணியத் தொழிலைக்கொடுத்தீர்கள். அத்தணிகாசல மகாத்மியத்தைக் கூறுவதாலேயே நானும் புனிதனாகின்றேன் ஆகையால் கேளுங்கள் எனக்கூறுகின்றார்.

## திருக்கைலை.

முன்னோர் காலத்தில் கைலாஸத்தின்கண் சாக்ஷாத் சிவபெருமான் உமாதேவியாரோடு சிங்காசனத்தில் எழுந்தருளியிருந்தார். அக்கால் முறையே முப்பத்து முக்கோடி தேவர், நாற்பத்தெண்ணாயிர முனிவர் சித்தர் முதலிய பலரும் பணிந்து விடைபெற்றுக்கொண்டிருந்தனர். இவருள் சிரேஷ்டர்களான சப்தரிஷிகள் மாத்திரம் அஞ்சலியஸ்தராய் வணங்கி நிற்பதைக் கண்ட சிவபெருமான் நந்திதேவரது சிஷ்யராகிய சனற்குமாரரை நோக்கி இம் மகரிஷிகள் இஷ்டத்தை நிறைவேற்றுவாயாக வென மறைந்தருளினார். உடனே சனற்குமாரர் நந்திதேவரை வணங்கி, மகரிஷிகளைப்பார்த்து. ஓ! தவசிரேஷ்டர்களே! நீங்கள் உமாபதியை அடைந்துய்யும் மார்க்கத்தை விரும்பினீர்களன்றோ! அதற்குப் பலவித மார்க்கங்க ளிருந்தாலும் அவைகளுள் சிரேஷ்டமானது ஈஸ்வர பக்தி ஒன்றேயாம். அதற்கு முதற் காரணம் மூர்த்தி, தலந், தீர்த்தம் என்பவைகளை முறையே வழிப்படுதல் வேண்டும். அத்தலங்கள் அளவிறந்தனவாகும், அவைகளுள் சிவஸ்தலங்களே சிரேஷ்டமானதாகும்.

## ஸ்தல மகத்துவம்.

### ஸ்தலப் பெயர்கள்.

அவைகளுள், ஸ்ரீ சிவசண்முகக்கடவுள் திருவோலக்கங்கொண்டெழுந்தருளிய ஸ்தலங்கள் அளவற்றனவாகும். இவைகளுள் முக்கியமான ஸ்தலங்கள் அறுபத்துநான்காகும், இவைகளுள் சிரேஷ்ட

மானது: சயுக்தபுரம், குமாரசலம், திருவேங்கடம், ஸ்ரீ பூரணகிரி என்னும் நான்காம். இந்நான்கினுள் மிகவும் சிரேஷ்டமானது ஸ்ரீ பூரணகிரி என்னும் ஸ்தலம் ஒன்றேயாகும். இத்தலமானது தேவலோகத்திலுள்ள எல்லா செல்வங்களையும், தன்னிடத்தில் நிரைக்கப் பெற்றுள்ளதால் 1. ஸ்ரீ பூர்ணகிரி யெனவும், அன்பர்கள் விரும்பும் மோக்ஷ ஞான செல்வங்களை நினைத்த க்ஷணத்திலேயே கொடுக்கும் வல்லமை வாய்ந்திருப்பதால் 2. க்ஷணிகாசலம் (கணிகவெற்பு) எனவும், உலக முதற்காரணராகிய சாக்ஷாத் பரமசிவனே ஸ்ரீ சிவசண்முகக் கடவுளைத் தடக்கு மூலகாரணரான ஆசாரிய மூர்த்தமாகக் கொண்டு அம் முருகக் கடவுளினால் உபதேசிக்கப் பெற்றமையால் 3. மூலாத்திரி எனவும், பிரதிதினமும் அழகிய மூன்று நீலோற்பல புஷ்பங்கள் புஷ்பித்தலினால் * 4. அல்லகாத்திரி எனவும், கற்ப கற்பாந்தங்களிலும் அழியாது நிற்பதால் 5. கற்பசித்து எனவும், அசுரேந்திரனாகிய சூரன் முதலினோரோடு செய்த மகாயுத்தமும், ஸ்ரீ வள்ளிநாயகியின் பொருட்டு வேடர்கள் போருக்கெழுந்து வந்த கலகாவேசமும் தணிந்த இடமாதலின் 6. தணிகை (திருத்தணிகை) (செரு-யுக்தம், தணி-தணிந்தது—செருத்தணி) எனவும், ஸ்ரீ சிவபெருமானுக்கு முருகக்கடவுள் பிரணவப்பொருளை உபதேசஞ் செய்யப்பட்டதால் 7. பிரணவார்த்தபுரம் எனவும், இந்திரன் வரம்பெற்ற தலமாதலின் 8. இந்திரநகரம் எனவும், நாரதமுனிவர் மிகவும் அன்புடன் பூசித்த க்ஷேத்திரமாதலால் 9. நாரதப்பிரியம் எனவும், அகோரன் என்னும் ஓர் தவசிரேஷ்டருக்கு மோக்ஷங்கொடுத்த காரணத்தால் 10. அகோர கைவல்யம் எனவும் கூறப்படுவதாகும்.

இதன்றி, முன் யுகங்களில் ஸ்ரீ குமாரக்கடவுளை வழிப்பட்டு பற்பல சித்தி, முத்தியாதி வரங்களைப் பெற்ற தேவர், முனிவர், ரிஷிகள் முதலினோர் உண்டாக்கி வைத்த பல தீர்த்தங்களும், பல சிவலிங்கங்களும், சந்நிதானங்களும், அத்தலத்தின் பலதிசைகளிலும் இருக்கின்றன.

இவ்வித மகத்துவம் பொருந்திய புண்ணிய க்ஷேத்திரமானது கங்காநதி தீரத்திலுள்ள காசிக்கு இருநூறு யோசனை தூரத்தில் தொண்டைநாட்டின்கண் காஞ்சிபுரத்திற்கு இரண்டுயோசனை தூரம்

* அல்லகாத்திரி என்பதையே காரணமாகக் கொண்டு 1. நீலகிரி 2. நீலோற்பலகிரி, 3. உற்பலகிரி, 4. கல்லாரகிரி, 5. சாலிமலை, 6. குவளைச்சிகரி எனவும் வேறு பெயர்கள் கூறப்படுகின்றன.

வடக்கிலும், கிழக்கடலுக்கு ஐந்துயோசனை தூரம் மேற்கிலும், விரிஞ்சிபுரத்திற்கு வடகிழக்கில் மூன்றுயோசனை தூரத்திலும், திருக்காளத்தியின் நிருதிமூலையில் மூன்றரை யோசனை தூரத்திலும் இருக்கின்றன.

ஸ்ரீ சண்முகக் கடவுள் ஆறுதிருமுகங்களைப் பெற்றிருப்பதைப் போல, இத்தணிகாசலமானது ஆறுசிகரங்களையும், பலதீர்த்தங்களையும், பல சுனைகளையும், நூற்றுக்கணக்கான சத்திரங்களையும், சந்நிதானங்களையும், பெற்றிருக்கின்றன. இம்மலைக்கு வடக்கில் வெண்ணிறமான பச்சரிசிமலையும், தெற்கில் கருநிறமான பிண்ணாக்கு மலையுமுண்டு. அம்மலைகளில் மகா மகத்துவம் வாய்ந்த பல தீர்த்தங்களும், வற்றாத ஊற்றுச் சுனைகளும், பல அதிசயங்களும் இருக்கின்றன. அங்கு அநேக * சித்தர்களும், மகரிஷிகளும் இருக்கின்றார்கள். அவ்வதிசயங்களும், அம்மகாத்துமாக்களும் உத்தம பக்த, தவசிரேஷ்டர்களுக்கே காணப்படுகின்றன. அம்மலைச்சாரல்களில் முப்பூ முதலியன விளைகின்றன. † உலகத்திலுள்ள எல்லா வித்வான்களும் தணிகாசலேசரை வழிபட்டுத்தான் வித்வாம்ஸராகின்றார்கள்.

குமாரக்கடவுள் அத்தணிகையின்கண் சர்வகாரணராகிய சாக்ஷாத் சிவபெருமானுக்கே * குருமூர்த்தமாகயிருந்து பிரணவோபதேசஞ்செய்ததால் அத்தணிகாசல மானது உலகிலுள்ளவர்களும், தேவர்களும், முனிவர்களும், மற்றுள்ளவர்களும் பிரதிதினமும்.

---

திருப்புகழ் திருத்தணி.

"செழிக்கு முத்தம சிவசர ணர்கள்தவ
முநிக்க ணத்தவர் மதுமலர் கொடுபணி
திருத்த ணிப்பதி மருவிய குறமகள்—பெருமாளே."

* திருப்புகழ் 264.

"தலமகன் மீதெண் புலவரு லாவுந்
தணிகையில் வாழ்செங்—கதிர்வேலா."

* திருப்புகழ் 265.

"பகவதி வரைமகள் உமைதர வருகுக
பரமன திருசெவி களிகூர
உரைசெயு மொருமொழி பிரணவ முடிவதை
உரைதரு குருபர உயர்வாய
உலகம னலகில உயிர்களு மிமையவர்
அவர்களு முறுவர முநிவோரும்
பரவிய னுதின மனமகிழ் வுறஅணி
பணிதிகழ் தணிகையி லுறைவோனே."

வழிப்படுவெதாயின. இதன்றி தணிகைமலையானது இந்த † உலகத்திற்கே உயிராய் உலகின் மத்தியில் விளங்குவதாகும் இதன்றி,

சிவபெருமான் குமாரக்கடவுளிடம் ஞானோபதேசம் பெற்று வீராட்டகேசஞ் செய்ததால் வீராட்டகேசரென்னும் திருநாமத்துடன் சிவலிங்க ரூபமாய் எழுந்தருளியிருக்கின்றனர். அவ்வாறு சிவபெருமானுக்கு பிரணவோபதேசஞ் செய்த மூர்த்தியாகிய ஆறுமுகங்களோடுங் கூடிய ஸ்ரீகுமாரக்கடவுள் அவ்வீராட்டகேசர் சமீபத்தில் எழுந்தருளியிருக்கின்றனர். அச்சிவபெருமானது சடாமுடியினின்று தோன்றிய சிவகங்கையென்னும் தீர்த்தமும் அவ்விடத்தி லிருக்கின்றன.

ஒரு காலத்தில் குமாரக்கடவுள் கைலாயத்திலிருந்து சிவகங்கையை வரவழைத்த குமார தீர்த்தமென்னும் சுனையும், குமாரக்கடவுளால் பிரதிஷ்டை செய்து பூசித்து வந்த ஆபத் சகாய விநாயகக்கடவுளும், குமாரேஸ்வரரென்னும் சிவலிங்கமும் அவ்விடத்தில் இருக்கின்றன.

பிரமதேவன் ஸ்ரீ குமாரக் கடவுளை நோக்கித் தவஞ் செய்து ருட்ச சூத்திரமும், கமண்டலமும், சிருஷ்டித் தொழிலும் பெறும் பொருட்டு உண்டாக்கிய பிரம தீர்த்தமும், பிரமேஸ்வர ரென்னும் சிவலிங்க மூர்த்தமும் அவ்விடத்திலிருக்கின்றன.

சரஸ்வதியம்மையார் முன்னர் ஸ்ரீ தணிகாசலத்தின்கண் எழுந்தருளி உண்டாக்கிய சாஸ்வதி தீர்த்தமும், சரஸ்வதியினாற் பிரதிஷ்டை செய்து பூசிக்கப் பெற்ற சரஸ்வதீஸ்வரர் என்னும் சிவலிங்கமும் அவ்விடத்திலிருக்கின்றன.

ஸ்ரீ நந்தியெம்பெருமான் சிவபெருமான் உத்திரவின்படி ஸ்ரீ தணிகாசலத்திற் கெழுந்தருளி ஸ்ரீ குமாரக்கடவுளை நோக்கித் தவஞ்செய்த நந்திகுகையும், நந்தி தேவரின் பொருட்டு குமாரக்கடவுள் வரவழைத்த நந்தியாறும் அவ்விடத்திலிருக்கின்றன.

---

† திருப்புகழ்.

255. "திரைக்கடல் சூழும் புவிக் குயிராகுந்
திருத்தணி மேவு பெருமாளே"

263. "சகமிடை பூவி னடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே"

அகஸ்திய மகாமுனிவர் சிவபெருமான் உத்திரவின்படி தமிழ்ப் பாஷையைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு தவஞ்செய்து பிரதிஷ்டைசெய்து பூசித்த அகத்தீஸ்வரர் சந்நிதானமும், அகஸ்தியரால் உண்டாக்கிய அகஸ்திய தீர்த்தமென்னும் தீர்த்தமும் அவ்விடத்திலிருக்கின்றன.

முன்னம் தேவேந்திரன் தேவலோகத்திலிருந்து நீலோற் பல மலரை வரவழைத்து நாட்டிய இந்திர நீலச்சுனையும், அவனாற்பூசிக்கப் பெற்ற செங்கழுநீர் விநாயகக்கடவுள் சந்நிதானமும், இந்திரேஸ்வரரென்னும் சிவலிங்கமும், இந்திர தீர்த்தமென்னும் தீர்த்தமும் அத்தணிகாசலத்தின்கண் இருக்கின்றன.

மகா விஷ்ணுவானவர் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்த விஷ்ணுவேஸ்வர மூர்த்தியும், விஷ்ணுவாலுண்டாக்கிய விஷ்ணுதீர்த்தமும் அத்தணிகாசலத்தின்கண் இருக்கின்றன.

வாசுகியென்னும் நாகராஜன் சூழ்கிய நாகதீர்த்தமும், நாகராஜனாற் பூசித்த நாகேஸ்வரமூர்த்தியும் அத்தணிகாசலத்தின்கண் இருக்கின்றன.

ஸ்ரீ ராமபிரான் குமரக்கடவுளைப் பூசித்து ஞானோபதேசம், பெற்று சீதாபிராட்டியாரோடு வீற்றிருக்கும் சந்நிதானமும், பூசித்த சிவலிங்கமூர்த்தமும், தீர்த்தமும் அத்தணிகையின்கண் இருக்கின்றது.

நாரதமகா முனிவர் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து, ஓர் தீர்த்தமுண்டாகிப் பூசித்ததால் நாரதலிங்க மெனவும், நாரததீர்த்தமென்றும் கூறும் சிறந்த மூர்த்த, தீர்த்தங்கள் அத்தணிகாசலத்தின்கண் இருக்கின்றன.

தாருகா சூரன், சூரபதுமன் முதலிய இராக்ஷசர்கள் தேவலோகத்திலிருந்து கொள்ளை கொண்டுபோன எல்லாப் பொருள்களையும் குமாரக்கடவுள் கொண்டுவந்து வைத்திருந்து மறுபடியும் தேவர்களுக்குக் கொடுத்தவிடம் திருத்தணிகையேயாகும். விஷ்ணுபுத்திரியாகிய வள்ளியம்மையாருக்குத் திருமணமும் நடந்த இடமும் அத்தணிகாசலமேயாம். பிரமனைச் சிறையினின்று விடுவித்ததும், சிவபெருமானுக்கு பிரணவோபதேசஞ் செய்ததும், இராக்ஷச சம்மாரத்தின்பின் எல்லா தேவர்களையும் கைவிலங்கைத் தரித்துவிட்டு, தங்கள் தங்கள் தொழிலைப் பழையபடி செய்கவென வேண்டிய வரங்களைக் கொடுத்தனுப்பியதும் திருத்தணியேயாம்.

இவ்வாறு பிரமன், விஷ்ணு, சிவன் முதலிய கடவுளர்கள் வழிப்பட்டு வேண்டிய வரங்களைப் பெற்றதனாலேயே அத்தணிகாசலத்திலெழுந்தருளிய குமாரக்கடவுளுக்கு * மூவர்பெருமான் எனவும், 0 சுயம்பு மூர்த்தி எனவும், அடைந்தவர்களது பகை, பிணி, வஞ்சம், பாவம் முதலிய தீமைகளையும் பிறப்பிறப்பு என்பவைகளையும், நீக்கி பரமுத்தியைக் கொடுத்ததினால் † வயித்தியநாதர் எனவும், தமிழுக்கு முதற்றெய்வமாய் விளங்குதலினால் ‡ தமிழ்க்கவிப்பெருமாள் எனவும் கூறப்படுகின்றன.

அத்தணிகா சலத்தின்கண் ஸ்ரீ குமாரக்கடவுள் ஒரு திருமுகமும், இரண்டு திருக்கரங்களும் அதாவது நின்ற திருக்கோலமாய் இடையில் ஒரு கையும், வேலாயுதந் தாங்கிய மற்றொருகையுமாக ஸ்ரீ தெய்வானையம்மை, வள்ளியம்மையார் சகிதமாய் வீற்றிருக்கின்றனர்.

இத்தகைய பலவிதி மகத்துவம் பொருந்தியதாலேயே உலகத்திற்கே அத்தணிகாசலமானது ஒப்புயர்வற்ற சிரேஷ்ட ஸ்தலமாக விளங்குகின்றன. அத்தணிகாசலத்தினை நினைத்தாலும், சொன்னாலும், அதன் திருப்பெயரைக் கேட்டாலும், அத்தலத்திற்குச் சென்றவர்களைத் தரிசித்தாலும் அத்தல மான்மியத்தை வாசித்தாலும்; அத்தலத்தினை வழிபட்டாலும், அவர்கள் இஷ்டார்த்தங்களை இம்மையிலேயே பெறக்கூடுமென்றால் அத்தணிகாசலத்தைவிட உலகத்தில் சிறந்த ஸ்தலம் வேறில்லை. ஆகையால் நீங்கள் அந்த தணிகா சலமென்னும் க்ஷேத்திரத்தை யடைந்து தீர்த்தங்களில் மூழ்கி பரிவார தேவர்களை வழிப்பட்டு, பின்னர் எமது தயாவிபவ சாக்ஷாத் குமாரக்கடவுளை தியானித்து நீங்கள் விரும்பிய இருவினையொப்பு மலபரிபாகமுற்று ஸ்ரீ குமார சாரூப்யவாழ்வைப் பெறுவீர்களாக என சனற்குமார முனிவர் கூறினர்.

---

* திருப்புகழ் 276.

" தினைப்பு னத்தினைப் பணைமு லைத்தம டந்தைபாகா
திருத்த ணிப்பதிக் குன்றின் மேற்றிகழ் கந்தவேளே
பனைகர ரக்கயத் தண்டர் போற்றிய மங்கைபாலா
படைத்த ளித்தழிக் குந்த்ரி மூர்த்திகள் தம்பிரானே."

0 திருப்புகழ்.


" பக்கத்து பதார்த்தர்க ளூடேவே
சொக்கத்து சுயப்பொரு ளாகவே
பட்சத்து திருத்தணி மேவிய பெருமாளே."

† திருப்புகழ். 287.

" பதியான திருத்தணிமேவு
சிவலோகமெ னப்பரிவு வேறு
பவரோக வயித்திய நாதப் பெருமாளே,"

‡ திருப்புகழ் 275.

" தொழுதெழுத் தருச்சொற்பொற் பரிசைத் திருத்தணிச்
சுருதித் தமிழ்க்கவிப் பெருமாளே.



# சப்த ரிஷீஸ்வரர்.

## சப்தரிஷி தீர்த்தம்.

### சப்த கன்னியர்கள்.

இவைகளைக் கேட்ட முனிவர்கள் எழுவரும் இருவிழிகளினும் ஆனந்த பாஷ்பம் பொழிய, மயிர்க்கூச்செறிந்து பரவசமுற்று அஞ்சலி யஸ்தராய் சனற்குமார முனிவரைப் பணிந்து, ஐயனே நாங்கள் கடைத்தேறும் வண்ணம் தணிகாசல மகாத்மியத்தை இன்னும் விரிவாகத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்து, சனற்குமார முனிவரால் தணிகாசல மகத்துவம் முற்றும் மிகவும் விகசிதமாய் கேட்டுணர்ந்து, விடைபெற்று, கயிலாயத்தைவிட்டு நீங்கி தென்னாடுற்று ஸ்ரீ தணிகாசலத்தைச் சேர்ந்து அங்குள்ள புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து ஆனந்த பரவசமுற்று நகரப் பிரதக்ஷணமும், கிரிப் பிரதக்ஷணமும் செய்து, ஸ்ரீ குமாரக்கடவுள் சந்நிதானத்தை யடைந்து தியானித்து, ஸ்ரீ தணிகாசலபதி எழுந்தருளியிருக்கும் சந்நிதானத்திற்குத் தென்கீழ் திசையில் அம்மலைச்சாரலின் ஓர் புறத்தில் ஒவ்வொரு ரிஷிகளும் ஒவ்வொரு புனித தீர்த்தத்தையுண்டாக்கி, அத்தீர்த்தக்கரைகளில் ஒவ்வொருவரும் ஒவ்வோர் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து அருச்சித்து, நிஷ்டைகூடி, பேதாபேதமெனப்படும். ஞாதுரு, ஞான, ஞேயம் என்பவைகள் காணா பேரின்ப முத்தியை அடைந்திருக்கின்றனர். இவ்வாறு * சப்த ரிஷிகளால் உண்டாக்கிய தீர்த்தங்களை † ஏழு சுனை, அல்லது சப்த ரிஷி தீர்த்தமென்றும், இவர்களால் பிரதிஷ்டை செய்த இலிங்க மூர்த்திகளை சப்த ரிஷீஸ்வரர் எனவும் வழங்குகின்றன. அங்கு குமாரக் கடவுளை வழிப்பட்டெழுந்தருளிய * கன்னிமார் சந்நிதானமு மிருக்கின்றன. எனச் சூத புராணிகர் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களுக்குக் கூறினர்.

---

* திருப்புகழ், 261.

"செழிக்குமுத்தம சிவசரணர்கள் தவ
முநிக்கணத்தவர் மகிழ்மலர் கொடுபணி
திருத்தணிப்பதி மருவிய குறமகள் பெருமானே"

† பிரதி வருடமும் மாசிமாதம் பிரமோற்சவ முடிவில் பதினோராம் நாள் கொடியிறங்கியபின் ஸ்ரீ தணிகாசலேசர் இக்கன்னிமார் சந்நிதானத்திற்கு எழுந்தருளுகின்றனர்.



இவைகளைக்கேட்ட நைமிசாரண்ய வாசிகள் சூதபுராணிகரை நோக்கி மாதவ சிரேஷ்டரே! தேவரீர் தணிகாசல மகாத்மியத்தை சனற்குமார முனிவர் சப்த ரிஷிகளுக்குக் கூறியதாகக் கூறினீர்களல்லவா, அம்முனிவர்கள் யார் யார்? அப்படி கூறிய காலம் எப்போது? அத்தணிகாசலத்தின் ஒவ்வொரு மகத்துவமும் எதெதற்காக உண்டாகின? அவைகளின் பிரபாவங்கள் எப்படி? இவைகளை எங்களுக்குச் சிறிது விளக்கமாகக் கூறவேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். அவைகளைக்கேட்ட சூதபுராணிகர் கூறத்தொடங்கினார்.

சத்த ரிஷிகள்.

இந்த உலகம் பிரமனால் சிருஷ்டிக்கப்படுவதாகும். அப்பிரமன் மாறுங்காலத்தைப் பிரம கற்பமெனப்படும். ஒரு பிரம கற்பமானது பதினான்கு மனுக்களால் அரசாளப்படுவதாகும். இதில் ஒரு மனுவின் காலம் எழுபத்திரெண்டு சதுரயுகம் கொண்டதாகும். இம்முறையாக தற்கால் நடைபெறும் பிரம கற்பத்தில் சுவாயம்பு, சுவாரோஷிதன், உத்தானபாதன், தமசன், ரைவதன், தாக்ஷிஷன் என்னும் ஆறு மனுவந்தரங்கள் நடந்துவிட்டன. இப்போது நடைபெறுவது ஏழாவது மனுவந்தரமாகிய வைவஸ்வத மனுவந்தரமாகும். இவ்விதம் நடைபெறும் ஒவ்வொரு மனுவந்திரத்திற்கும், வெவ்வேறு சத்த ரிஷிகள் இருந்து வருகின்றனர். இவ்வாறிருப்பவர்களில் அத்தணிகாசல மகாத்மியத்தைக் கேட்ட முனிவர்கள் மூன்றாவது உத்தானபாத மனுவந்தரத்தில் இருந்த சத்தியன், சத்திய சித்து, சத்தியசேனன், தருமன் சூனு முதலிய சத்த ரிஷிகளாகும். அத்தணிகாசலப் பிரபாவங்களைக் கூறவென்றால் தேவர்களாலும், மூவர்களாலும் முடியாததாகும். ஆயினும் சிறிது சுருக்கமாகக் கூறுகின்றேன். சித்த சாந்தமாகக் கேட்பீர்களாக என சூத புராணிகர் கூறுகின்றார்.

# வீரட்டகாசப் படலம்.

## வீரட்டகாசர் துதி

அறுசீ ராசிரிய விருத்தம்.

திங்களங் கொழுந்து தாவுஞ் செஞ்சடைப் பிரானே மூவர்
தங்கணா யகனே சம்போ சங்கரா செங்க ணேற்றா
அங்கணா வெல்லாம் வல்ல வருட்பெருங் கடலே யாரும்
மெங்கள்வீ ரட்ட காச வீசநின் னடிகள் போற்றி.

## திருக்கைலாயம்.

முன்னொரு காலத்தில் கைலாயத்தின்கண் பரமேஸ்வரன் பார்வதி சமேதராய் மத்தியில் ஸ்ரீ குமாரக்கடவுள் எழுந்தருளியிருக்க வீற்றிருந்தனர். அப்பொழுது சிவகணங்களுள் தலைவராகிய சந்திரகாசரென்பவர் மோக்ஷத்தை விரும்பினவராய்ப் பரமேஸ்வரன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ஐயனே! முன்னர் வேத முதலிய யாவும் விளங்க விளக்கினீர். அவைகளுக்குத் தாரகமான பிரணவோபதேசம் செய்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, அவ்வாறே பரமேஸ்வரன் சந்திரகாசருக்குப் பிரணவோபதேசஞ் செய்தருளினர். இதனைக் குமாரக்கடவுள் ஒன்றும் கவனியாதவர்போல அவ்வுபதேச நுட்பப் பொருள்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்து பின் சிலகாலஞ்செல்ல ஒரு நாள் குமாரக்கடவுள் பார்வதி பரமேஸ்வரனைவிட்டு கைலாயத்தின் வேறோரிடத்தில் எழுந்தருளியிருந்தனர்.

## பிரமன் சிறை யடைதல்.

அக்கால் பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள் வழக்கம்போல் சிவபெருமானைத் தரிசிப்பதற்காக கைலாயத்திற்குச் செல்லத்தொடங்கி அவர்கள் போகும் வழியில் குமாரக்கடவுளைக் கண்டு பிரமன் தவிர மற்றவர்கள் யாவரும் கிரமப்படி வணங்கி, துதித்துச் சென்றனர். பிரமதேவன் மாத்திரம் மிக்க குழந்தைப்பருவமுள்ள சிறுவன் இவனை ஏன் வணங்குவது? என்னும் கர்வத்தால் வணங்காது சென்று சிவபெருமானை தரிசித்து மற்றைத் தேவர்களோடும் திரும்பி வரும்பொழுது, குமாரக்கடவுள் வீரவாகு தேவரைப் பார்த்து அப்பிரமனைப் பிடித்துவா என்றனர். அவ்வாறே வீரவாகு தேவர் பிரமனைப் பிடித்துவந்து குமாரக்கடவுள் முன்பு நிறுத்தினார் அக்கால் குமாரதேவர் பிரமனை நோக்கி ஓய் பிரமனே! எல்லா வேதங்களும் உன்னிடமே யிருந்து உண்டானதினாலும், சகல லோகங்களையும் நீயே சிருஷ்டிப்பதினாலும் நீ எதிலும் நிபுணனாயிருக்கலாம். ஆகையால் நீ அவ்வேதங்களுக்கு மூலமாகிய பிரணவப் பொருளைத் தெரிவிப்பாயாக எனக் கேட்டனர். அதற்குப் பிரமதேவன் ஒன்றுங் கூறாமல் நின்றிருந்தான். மீண்டும் குமாரக்கடவுள் பிரமனை நோக்கி ஏ! பிரமனே! நீயே தேவரில் மிக்கவனென்றும், செல்வத்திற் சிறந்தவனென்றும் கர்வித்திருக்கின்றாய். அவ்வாறாயின் நீ எமது தந்தையாகிய பரமேஸ்வரனை நித்தமும் வணங்கவேண்டியதில்லை. நீ வீரத்தில் மேலானவனென்னில் எமது வீரவாகு தேவரால் இங்கு கட்டுண்டு நிற்கமாட்டாய். யாவையும் நீயே படைப்பவனென்னில், என்னையும், விஷ்ணுவையும், சிவனையும், சிவகணங்களையும், ஐம்பெரும் பூதங்களையும் நீ படைத்ததில்லை. எனப் பலவுங் கூறியும் அப்பிரமன் வணங்காமையால், முருகக்கடவுள் சிறிது கோபமுற்று தமது திருக்கரத்தால் அப்பிரமன் தலையிற் குட்டி வீரவாகு தேவரைக்கொண்டு சிறையிலடைத்து வைத்தனர்.

## முருகக்கடவுள் சிருஷ்டித்தொழில் செய்தல்.

அதன்பின் முருகக்கடவுள் உலகத்தில் சிருட்டித்தொழில் நடைபெறவேண்டியதைக் கருதி தேவகணங்கள் புடைசூழ திருப்பதி எனவும், சேஷாசலமெனவும் கூறும் திருவேங்கட மலையில் எழுந்தருளி அப்பிரமதேவன் செய்துவந்த *சிருஷ்டித்தொழிலை அநேக தேவ வருடங்களாகச் செய்துவந்தனர். இதனைக்கண்ட திருமால், இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும் திருக்கைலாயஞ் சென்று நந்தி தேவரிடம் விடைபெற்று பரமேஸ்வரரைப் பணிந்து அஞ்சலியஸ்தராய் நின்று ஓ கருணாநிதியே! முன்னே தேவரீரது இளைய குமாரராகிய குமாரக்கடவுளை இப்பிரமன் மிகவும் சிறிய குழந்தைப் பருவமுள்ளவர் இவரை நாம் எதற்காக நமஸ்கரிப்பதென்னும் அகந்தையால் மதியாது சென்றனன். அதனால் முருகக்கடவுள் வீரவாகு தேவரை யனுப்பி அப்பிரமனைப்பிடித்து பலவிதமான கேள்விகளைக் கேட்டு, பிரணவத்திற்குப் பொருள் கூறவில்லையென அப்பிரமன் சிரசிற் புடைத்து சிறையில் அடைத்து வைத்திருக்கின்றனர். அப்பிரமன் செய்துவந்த சிருஷ்டித் தொழிலையும் திருவேங்கடத்தி லெழுந்தருளித் தாமேசெய்து வருகின்றார். அம்மட்டோ எங்கள் தொழில்களையுங்கூடத் தாமே செய்கின்றார். இவைகளைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காகவே இவ்விடம் வந்தோமெனக் கூறினார்கள்.

இவைகளைக்கேட்ட உமாபதியாகிய சிவபெருமான் தேவர்களைப் பார்த்து, தேவர்காள்! † சத்தி வேலாயுதத்தைத் தாங்கிய குமாரக் கடவுள் வேறு, நாம் வேறென் றெண்ணாதீர்கள். நமது குழந்தையாகிய முருகனுக்குப் பிழை செய்தவர் நமக்கே பிழை செய்தவராவார்கள்; அவனுக்கு அன்பினர் நமக்கும் அன்பினராவர். ஆகையால் நமது குமாரனுக்குக் குற்றஞ்செய்த பிரமனுக்கு உண்டாகிய தண்டனை கிரமமேயாம், அப்பிரமனைச் சிறையிலிருந்து விடுவது கூடாத காரியம் என்றனர்.

மீண்டும் விஷ்ணுமுதலிய தேவர்கள் சிவபிரானைப் பிரார்த்திக்க, கருணா சொரூபியாகிய பரமேஸ்வரன் உளமிரங்கி அங்கு பிரம்பைக் கையிற் றாங்கிக் காவலாக யிருக்கும் நந்தியெம் பெருமானை நோக்கி,

---

* திருப்புகழ் 303.

"பொன்றென் றணிகையில் நின்றங் கெழுபுவி
என்றுஞ் செயவல பெருமாளே"

† தணிகைப் புராணம் வீராட்டகாசப் படலம் 91-ம் கவி.

"செம்மைய ஞான சத்தித் திருவுருக் கொண்ட செம்மல்
எம்மின்வே றல்லன் யாமு மவனின்வே றல்லேங் கண்டீர்
அம்மழ வடிவி னன்பா லன்புசெய் தவர்பி ழைத்தோர்
நம்மடித் தொண்டு செய்தோர் நவைபடப் பிழைத்தோ ராவர்."


* ஐந்து முகங்களாக வுள்ள நாம் வேறு, ஆறு முகங்களாக வுள்ள முருகன் வேறென் றெண்ணவேண்டாம். உருவம் மாத்திரம் இரண்டே யன்றி, இவ்விரு உருவிலும் சிவமாகிய நாமே யிருந்து அண்டகோடிகளா யிருக்கின்றோம். ஆகையால், நாம் கொடுக்கும் வரம் முருகன் கொடுத்ததாகும்; முருகன் கொடுத்த வரம் நாம் கொடுத்ததாகும். வேறுவேறென் றெண்ணவேண்டாம். ஆகையால் நீர் திருவேங்கட மலைக்குச் சென்று நமது குமாரனாகிய முருகக்கடவுளை முறைமைப்படி வணங்கி ஸ்தோத்திரஞ்செய்க. திருமால் முதலினோர் வருந்தி வேண்டுதலினால் அக்குமாரக் கடவுள் பிரமனைச் சிறைவிடுத்து, எம்மிடம் வருவான், அவனோடு நீயும் வருவாயாக என அனுப்பினர்.

## சிவபெருமானுக்கு குமாரக்கடவுள் பிரணவோபதேசஞ் செய்தல்.

நந்திதேவர் சிவபெருமான் உத்திரவின்படி திருவேங்கட மலையை அடைந்து, குமாரக்கடவுளை வணங்கி காளகண்ட சதுர்ப்புஜ திரிநேத்திரதாரியாகிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தவைகளைக் கூறினர். இவைகளைக் கேட்ட சுப்பிரமண்யக்கடவுள் பிரமனைச் சிறையினின்று விடுத்து, நந்தி தேவரோடு திருக்கயிலாயத்தை யடைந்தனர். சிவபிரான் உடனே குமாரக்கடவுளைத் தழுவி குழந்தாய்! அறிவுள்ளோர் யாதொரு குற்றமுஞ் செய்யார்கள். அறிவில்லார் தெரிந்தோ தெரியாமலோ குற்றஞ்செய்தால் அறிவுடையோர் அதனைப் பொருத்தருளல்வேண்டும். நீ அவ்வாறின்றிப் பிரமனைப் பெருந் தண்டனை செய்தனை; அவன் செய்யும் சிறுதொழிலையும் நீயே செய்கின்றனை இது தகுமோ எனக் கேட்டனர். அதற்கு குமாரக் கடவுள் தந்தையை நோக்கி பிரமனே பிரணவப் பொருள் தெரியாதவன், அவன் சிருட்டித்தொழில் செய்யத் தகுமோ தகாது. ஆதலின் அத்தொழிலை நாமே செய்கின்றனம் எனக் கூறினர். இதைக்கேட்ட சிவபெருமான் குமாரக்கடவுளை நோக்கி குழந்தாய்! உமக்கு அப்பிரணவப் பொருள் தெரியுமோ? தெரியுமானால் அதனைச் சொல்லுவாயாக என, குமாரக் கடவுள் ஓ ஜகதீசா! பிரணவப் பொருளை அவ்வளவு எளிதாக எல்

* தணிகைப்பு: வீராட்டகாசப்பட. 97-ம் கவி.

“உருவம்வே றன்றி யைந்து முகனறு முகனென் றேதுந்
திருவுரு விரண்டன் மாட்டுஞ் சிவமெனும் யாமே மின்ற
பொருவிலா ருயிராய் நிற்பேம் பொலிந்தவிவ் வுருவி னின்றுந்
தருவர மனைத் தாங்குத் தருவர மிவனு தாமே.”



சிவபெருமானுக்கு குமாரக்கடவுள் பிரணவோபதேசஞ் செய்தல்.

ளோருக்கும், நினைத்த யிடங்களி லெல்லாம் சொல்லத் தக்கதல்ல; பக்குவம் வாய்ந்த சிஷ்யர்களுக்கே கூறத்தக்கது. கேட்போர் காலத்தையும், இடத்தையும் அநுசரித்து சிஷ்ய பாவமாய் இருந்து கேட்க வேண்டும் என்றனர். இதைக் கேட்ட பரமேஸ்வரன் அத்தியந்த சந்தோஷமுற்று ஆசிர்வாதஞ்செய்து குழந்தாய்! உனது இஷ்டப்படியே நீ விருப்பமுற்றிருக்கும் ஸ்ரீ தணிகாசலத்திற்கு சமீபத்தில் வரும் மாசி மகத்தன்று வருகின்றோம் அச்சமயம் அப்பிரணவப் பொருளை உபதேசிப்பாயாக. என குமாரக் கடவுளுக்கு விடையளித்து, பின்னர் திருமால், இந்திரன் முதலிய தேவர்களும், சிவகணங்களும் புடைசூழ சிவபெருமான் தணிகாசலத்தை யடைந்து அதன் வடகீழ்த் திசையில் ஓரிடத்தை யுண்டாக்கி ஒரு க்ஷண நேரம் வடமுகமாய் அமர்ந்து தவஞ் செய்திருந்தனர்.

அக்கால் ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள் பன்னிரு கரங்களும், ஆறுமுகங்களும் பிரகாசிக்க மயில்வாகன ரூடராய் பரமேஸ்வரரின் இடதுபக்கத்தில் கிழக்குமுகமாக அமர்ந்தனர், உடனே சிவபெருமான் சிவசண்முகக்கடவுளை வந்தனை வழிபாடுகளுடன் ஓர் சிம்மாசனத்தில் எழுந்தருளச்செய்து சிஷ்ய பாவமாகத் தாழவிருக்க, ஸ்ரீ சிவ சண்முகக் கடவுள் பிரணப் பொருளை உபதேசித்தருளினர்.

உடனே “அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதி சொரூபராய் தனக்குத்தானே மகனும், தனக்குத்தானே குருவும், தனக்குத்தானே சிஷ்யனுமாகிய சிவபெருமான் பிரணவ சொரூபராகிய ஸ்ரீ ஞான சண்முகக்கடவுளின் தீரத்தையும் ஆணவமாதி பகைகளையும், சூரனாதியர் பகைகளையும், நாசப்படுத்தும் பராக்கிரமத்திற்குச் சந்தோஷித்தவராய், வீராவேசங் கொண்டு ஆரவாரஞ்செய்தனர். அதனால் பரமேஸ்வரருக்கு * வீராட்டகாசர் எனவும், அவர் எழுந்தருளிய ஸ்தானத்திற்கு வீராட்ட

* சிவபெருமானுக்கு உபதேசம் செய்த ஆறுமுக ஸ்வாமிகள் சன்னிதானம் கீழ்த்திருத்தணியில் நாசங்குப்பத்திற்கு செல்லும் வழியில், தணிகாசலத்திற்கு வடகிழக்கில் நந்தியாற்றின் தென்கரையில் இருக்கின்றன. இங்கு பிரதி மாசிமாதம் பிரமோற்சவத்தில் 8-ம் நாள் மாலை தணிகாசலபதி எழுந்தருளி ஊஞ்சல் உற்சவம் கொண்டருளுகின்றனர். வீராட்டகாசர் சந்நிதானம் ஆறுமுகஸ்வாமிகள் சன்னிதானத்திற்கு நேராய் வெகு சமீபத்தில் நந்தியாற்றின் வடகரையிலும் இருக்கின்றன. இவ் வீரட்டகாசரது சடை முடி தரித்த சிவலிங்கம் பார்வைக்கு மண்ணவாகிய பிரிதிவு லிங்கம் போன்றிருக்கின்றன. இச்சன்னிதானங்களைச் சுற்றி முன்னர் ஓர் பெரிய பட்டின மிருந்ததாகச்

காசம் எனவும் பெயருண்டாயின. குமாரக்கடவுள் சிவபெருமானுக்கு பிரணவோபதேசஞ் செய்தமையால் அத்தணிகாசலத்திற்குப் பிரணவபுரம், எனவும், சிவபெருமான் க்ஷணநேரந் தவஞ்செய்ததற்கிரங்கி முருகக்கடவுள் அருள் புரிந்ததால் க்ஷணிகமலை அல்லது கணிக வெற்பு எனவும், சர்வமூலகாரணராகிய சிவபெருமானுக்கு சர்வமூல மந்திரமாகிய பிரணவப் பொருளை உபதேசித்ததனால் மூல வேதண்டமெனவும் கூறப்படுகின்றன. குமாரக்கடவுள் முதற்கடவுளாகிய சதாசிவ மூர்த்திக்கே உபதேசஞ் செய்ததால் அக்குமாரக்கடவுளுக்கு சாமிநாதன் எனவும், குருபரன் எனவும் பெயருண்டாயின. பின்னர் * வீராட்டகாசப் பெருமான் சகல ஜீவகோடிகளையும் ரக்ஷிக்கும்பொருட்டு அவ்விடத்தில் சடைமுடி தரித்த ஓர் சிவலிங்கமாக எழுந்தருளி யிருக்கின்றனர். இதன்றி வீராட்டகாசர் தமது குருநாதராகிய முருகக்கடவுளை வழிபடும்பொருட்டு அத்தணிகாசலத்தில் ஓர் தடாக முண்டாக்கி அதில் தம் சடாமுடியி லுள்ள சிவகங்கையை விட்டு நிரைத்தனர். இதனைச் † சிவகங்கை எனக் கூறுகின்றனர். அச்சிவகங்கையில் மூழ்கி ஸ்ரீ ஆறுமுகக்கடவுளையும், வீராட்டகாசரையும் வழிபடுவோர்கள் ஆணவமலங்களைப் போக்கி, உண்மை ஞானத்தைப் பெற்று இகபரபோக பாக்கியங்களையும் நினைத்த காரிய சித்திகளையும் அடைகிறார்கள்.

---

சொல்லிக் கொள்ளுகின்றனர். அதற்கறிகுறியான சில பல அடையாளங்கள் காணப்படுகின்றன.

முக்கிய குறிப்பு:-பிரணவோபதேசம் மாசிமக நக்ஷத்திரமாதலின் அன்று குமாரக்கடவுள் ஆசாரிய மூர்த்தமாக வீராட்டகாசர் சந்நிதானத்திற் கெழுந்தருளி உபதேசஞ்செய்யும் உற்சவம் நடைபெற வேண்டியது சம்பிரதாயம். அவ்வாறின்றி திருத்தணிகை பிரமோற்சவத்தில் 10-ம் நாளாகிய மகநக்ஷத்திர உற்சவமானது மூழுப்பிரதக்ஷணம் நடைபெற்றும், தாசிகள் மட்டையாலடிக்கும் உற்சவம் நடைபெறுவது வியக்கத்தக்கதே.

* திருப்புகழ்.

"அப்பணி சடையான் மெச்சிய தணிமலை
அப்பென அழகிய பெருமாளே." 274.

திருப்புகழ்:

"பெடைத்திரட் களித்தகுக் குடக்கொடி சாத்தபொய்ப்
பிதற்றரைப் படுத்துசற் குருவாய்முன்
பிறப்பிலிக் குணர்த்துசித் தவுற்றநெற் பெருக்குறப்
பெருக்குசெய்த் திருத்தணிப் பெருமாளே." 250.

† இச் சிவகங்கை என்னும் திருக்குளம் தற்கால் தூர்க்கப்பட்டு அதில் பயிரிடப்படுகின்றன.

## ஐந்தாவது

# குமரேசப்படலம்.

### குமாரக்கடவுள் துதி.

#### அறுசீராசிரிய விருத்தம்.

அருணைகோ புரத்தடியி லெழுந்தகுரு பணியேயன் றால நீழல்
வருமௌனிக் குபதேசம் வழங்குசிவ மேசமர புரியின் மார்க்கம்
வருவாரை மறித்தாண்ட மாதவமே திருத்தணிகை மலைமே லோங்கும்
அருட்கொழுந்தே யாறுமுகப் பரமேயெம் மஞ்பேடாண்டருளுவாயே

---

ஐம்பொறிகளையும் அறிவு சொரூபமாக்கி, ஸ்ரீ நீலகண்ட, சந்திர சேகரனாகிய பரமேஸ்வரனுக்கே சதா வழிபாடு செய்யும் தவ சிரேஷ்டர்காள்! முன்னர் ஓர் காலத்தில் ஸ்ரீ குமாரக்கடவுள் சிவ பெருமானிடத்தில் இருக்கும் வேலாயுதம் என்னும் ஞான சத்தியைப் பெறக் கருதி தணிகாசலத்தின் கீழ்ப்பக்கம் அடிவாரத்தில் ஓர் சுத்தமான இடம் உண்டாக்கி அங்கு கைலாயத்திருந்த சிவகங்கையை வரவழைக்க அது ஓர் * சுனையுருவாய் வந்து சேர்ந்தது. அதில் குமாரக்கடவுள் மூழ்கி, அச் சிவகங்கையைக்கொண்டு பலவித பொருள்களையும் விளையச் செய்ததோடு தனது சன்னிதானத்திற்கு வடகீழ்ப் பக்கத்தில்

---

* இச் சிவகங்கையை குமார தீர்த்தம் எனவும், சரவணப் பொய்கை எனவும் வழங்கப்படுகின்றன. இதனை குமாரக் கடவுள் பிரதி ஆடி கிருத்திகைக்கு முன் ஐந்து தினங்கள் வரை மாலை வேளைகளில் கீழே இறங்கிவந்து 1-வது நாள் ஒரு பிரதக்ஷணமும், இரண்டாம் நாள் மூன்று பிரதக்ஷணமும், மூன்றாம் நாள் ஐந்து பிரதக்ஷணமும், நாலாம்நாள் ஏழு பிரதக்ஷணமும், ஐந்தாம்நாள் பரணியன்று ஒன்பது பிரதக்ஷணமும், பின் மூன்று நாள் அதாவது கிருத்திகையன்று தெப்பவுற்சவம் மூன்று சுற்றும், ரோகணியன்று ஐந்து சுற்றும், மூன்றாம் நாள் மிருகசீரிடத்தன்று ஏழு சுற்றும் வருகின்றார். மார்கழி திருவாதிரையிலும் குமாரக்கடவுள் வருகின்றார். இக்குமார தீர்த்த தடாகத்தின் சுற்றிலும் பலமரபாருடைய மடங்கள் இருக்கின்றன. சுமார் 75-வருடங்களுக்கு முன் இச் சிவ கங்கையின் மங்கையின் மத்தியில் நீராழி மண்டபம் கட்டத்தொடங்கி இதன் மேற்பக்கம் கரையை வெட்டி ஜலத்தை வடியச்செய்து தூர் வாரிய போது இதன் தென்பக்கத்தில் அதிக ஆழமுள்ள ஓர் பெரிய சுனையும், மற்ற பக்கங்களில் ஆறு குட்டைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தமின்றி தனித்தனி

† ஆபத் சகாயர் என்னும் விநாயகக்கடவுளைத் தாபித்து வந்தனை வழிபாடுகளைச்செய்து, பின்னர் தமது சன்னிதானத்திற்கு வடபாகத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து, பலிபீடம், சந்நிதானம், மண்டபங்கள், கோபுரங்கள், மதில்கள், நந்தவனம் முதலியவைகளை உண்டாக்கி தென்னை, வாழை, கரும்பு முதலியவைகளினால் அலங்கரித்து, தோரண முதலியவைகளைத்தூக்கி, நவரத்தினங்களாலாகிய ஆபரணங்களினால் அலங்கரித்து புஷ்பம், அக்ஷதை முதலியவைகளைக் கொண்டு ஆகம முறைமைப்படி பாத்தியம், ஆசமனம், அருக்கியம், நைவேத்தியம், தீபதூபம், ஏகாங்க, திரியாங்க, பஞ்சாங்க, சாஷ்டாங்கமென்னும் முறையாக நமஸ்காரம், தோத்திரம் முதலியவைகளைச் செய்து, பின்னர் கருவி கரண தீதமாகிய பரஞானத்தா லெய்தும் பரமானந்த சொரூபராகிய முருகக்கடவுள் சிவலிங்கப் பெருமான் எதிரே வந்து கும்பிட்டு வணங்கி நின்றனர். அக்கால் சிவபெருமான் தம் திருக்குமாரராகிய இளைய பிள்ளையார் வழிபாட்டிற்கிரங்கி, முருகக்கடவுள் எவ்விதமாகத் தம்மைப் பூசித்தனரோ அச் சின்னங்களெல்லாம் பிரகாசிக்க தேவர்கள் மலர்மாரி தூவ சிவகணங்கள் புடைசூழ முருகக்கடவுள் எதிரே தோன்றி, குழந்தாய், நின் அரிய திருத்தொண்டிற்கு நாம் சந்தோஷித்தனம். உனக்கு வேண்டிய வரம் யாது. எனக்கேட்க, முருகக் கடவுள் அஞ்சலிஹஸ்தராய் இருகரங்களையும் சிரமேற் கூப்பி, புன்னகையோடு வணங்கி ஓ மகாதேவா! தேவர்களை இம்சை செய்கின்ற இராக்ஷசர்களது பயங்கரத்தை ஒழிப்பதற்குத் தக்க ஆயுதம் தேவரீரது திருக் கரத்திலிருக்கும் ஞான சத்தியாகிய வேலாயுதமே யாம். ஆகையால் அதனை அனுக்கிரகிக்கவேண்டும்.

---

யாக வெவ்வேறு நிறமுள்ள ஜலங்களை உடையதாக இருந்ததெனப் புலவர் கூறுவதன்றி, இத்தல புராண வசன மொன்றிலும் குறிக்கப்பட்டிருக்கின்றது.

தணிகை யாற்றுப்படை.

"எத்துயர்த் திரளு மத்தினத் தகற்றும்
சரவணப் பொய்கைத் தடம்புனற் றுளைந்து"

என்றபடி, யார் எவ்வித நோய், பேய்களால் வருத்தமுற்றவரினும்; அச்சரவணப் பொய்கையில் மூழ்கி புனிதராவதை பலர்வாய் கேட்பதன்றி, இன்றும் காணப்படுகின்றன:

† ஆபத் சகாய விநாயகர் என்பவரே திருத்தணிகைத் தல விநாயகர் இவர் சந்நிதானம் மலைமேல் முருகக் கடவுள் சந்நிதிக் கருகில் வட பாகத்தில் இருக்கின்றனர்.

எனப் பிரார்த்தித்தனர். உடனே சிவபெருமான் கருணை கூர்ந்து குமாரக் கடவுளுக்குத் தமது * சக்தி வேலாயுதத்தைக் கொடுத்து அச் சிவலிங்கத்தின்கண் மறைந்தருளினர். அன்று முதல் குமாரக் கடவுள் ஞான சக்தியை ஒரு கரத்தினுற்றாங்கி ஒரு கரம் இடையிற் றாங்கி நின்ற திருக்கோலமா யெழுந்தருளி இருக்கின்றனர்.


அதனால் அச் சிவலிங்கத்தைக் குமார லிங்கமெனவும், ஞான சத்தியைப் பெற்றதால் குமாரக் கடவுளை ஞான சத்திதரன் எனவும், கைலாயத்திலிருந்து குமாரக்கடவுள் வரவழைத்த சிவ கங்கையை குமார தீர்த்தம் எனவும் பெயர் வழங்கப்படுகின்றது. இக்குமார தீர்த்தத்தினால் மாசிமாதம் மக நக்ஷத்திரத்தில் குமாரக்கடவுள் சிவலிங்கப்பெருமானுக்கு அபிஷேகஞ் செய்ததாதலின் உலகத்திலிருப்பவர்கள் மாசிமாதம் மக நக்ஷத்திரத்தில் முழுகி, குமார லிங்கத்தையும், குமாரக்கடவுளையும் கிரமப்படி பூசிப்பாராகில் பிறந்ததனாற் பெற வேண்டிய பேரின்ப வாழ்வை இம்மையிலேயே அடைவார்கள்.

யாராலும், எத்தினத்திலாவது குமார தீர்த்தத்தில் மூழ்கி குமாரக் கடவுளை வழிபடுவோர் குஷ்டம் முதலிய எந்த ரோகமிருந்தாலும் அவைகள் நீங்கி, ஆசார சீலராய், அறிவும், ஞானமும் உண்டாகி, எவரும் புகழ, தீர்க்காயுசுடன், கல்வி, செல்வம், தீரம், திரகாத்திரம், மனைவி, மக்கள், சுற்றம், ஸ்னேகம் முதலிய எல்லா போகங்களையும் பெற்று தங்கள் வம்ஸம் முழுவதும் சிவலோக முற்று ஸ்ரீ ஞான சண்முகப் பெருமான் சாயுச்சியப்பதவியை அடைவார்கள்.

---

* இங்கு சத்திவேலாயுதத்தைச் சிவபெருமானாற் கொடுக்கப்பட்டதென்பதை அருணகிரிநாதர் திருப்புகழ் 56-ம் கவியில் சத்தியினாற் கொடுக்கப்பட்டதெனக் கூறுகின்றார். அதாவது:—

" பங்கயிலா நீலி மோடிப
யங்கரி மாகாளி யோகினி
பண்டசு ராபாண சூரனோ—டெதிர் போர்கண்
டெம்புதல் வாவாழி வாழியெ
னும்படி வீரான வேல்தா
என்றுமு ளானேம னோகர—வயலூரா." என்பதனாலறிக.



பிரமன் ஒருட்டி பெறுதல்.

## ஆறாவது

# பிரமன் சிருட்டிபெறு படலம்.

குமாரவேள் துதி.

அறுசீ ராசிரிய விருத்தம்.

ஆறுமுகப் பெருமானே யருட்குன்றே யாளவந்த வரசே யெங்கும்
வீறுபர மேயடியார் வேண்டுவதெல் லாமீதவும் வேந்தே யந்நாள்
மாறுபடு சூர்தடிந்து வானோர்தஞ் சிறைதவிர்த்தோர் மன்னனுய்ய
நீறுபுனைந் தாண்டதமிழ் நிருபாநந் தணிகைவரை நின்ற தேவே.

காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும்வென்று, கரணேந்திரியங்களிற் கலந்துங் கலவாது ஆனந்தமே அறிவு சொரூபமாய் விளங்கும் அறிஞர்காள்! முன்னர் குமாரக்கடவுள் சிருபெருமானிடம் ஞான சத்தியைப் பெற்ற சரிதங் கூறிவந்தேன். இனி பிரமதேவன் சிருட்டித் தொழிலைச் செய்யும்பொருட்டு குமாரக்கடவுளை வழிபடும் சரித்திரத்தைக் கூறிவருகின்றேன். கேளுங்கள். என்று சூதபுராணிகர் கூறுகின்றார்.

முன்னே பிரமதேவன் சிறையினின்று விடுபட்டு தனது சத்திய லோகத்திற்குச் சென்று தான் வழக்கப்படி நடத்தியிருந்த சிருட்டித் தொழிலைச் செய்யத் தொடங்கினான். அது ஒன்றுங் கைகூடி வரவில்லை. அதனால் அதிகமும் வருத்தப்பட்டு. முன்னர் யார் ஜெகத்தைச் சிருட்டிக்குந் தொழிலைக் கொடுத்தவரோ அப் பரமேஸ்வரனே மறுபடியும். அவ்வல்லமையைக் கொடுக்க வேண்டியவரெனத் துணிந்து, தென்னாட்டில் உள்ள உத்தாலக வனம், குற்றாலம், பேரம்பலம் முதலியவற்றைத் தரிசித்து, பின்னர் வெகு நாள் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தான். அதற்குச் சிவபெருமான் பிரசன்னராகி, ஏ பிரமனே! நீ எதற்காகத் தவஞ்செய்கின்றாய்? உனக்கு என்ன வரம் வேண்டும் எனக் கேட்டனர். அக்கால் பிரமன் ஓ கருணாநிதியே! முன்னம் அடியேன் தெரியாது செய்த குற்றத்திற்காக, தேவரீரது இளைய குமாரராகிய சண்முகக் கடவுளால் குட்டுண்டு காராக்கிரகத்தில் அடியேன் அடைபட்டுக் கிடந்தபோது தேவரீரது பெருங் கருணையால் அச்சிறையினின்று விடுபட்டேன். ஆயினும், எனது சிருட்டித்தொழிலை அக்கார்த்திகேயரே செய்து வருகின்றார். அத்தொழிலை

அடியேன் பழையபடி செய்யத் தலைப்பட்டும் ஒன்றும் நடத்தக்கூட வில்லை. ஆகையால் எனது சிருட்டித் தொழிலை நான் பழையபடி விக்கினமில்லாமல் செய்யும்படி அனுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவைகளைக்கேட்ட சிவபெருமான் கருணைகூர்ந்து ஏ! பிரமனே! நமது குமாரனாகிய சுப்பிரமணியன் விதித்த சிட்சையை அவனே அனுக்கிரகிக்கவேண்டுமேயல்லாமல் மற்றொருவரால் ஆவதல்ல. அம்முருகனே வேதம், ஆகமம், உபநிடதம் முதலிய எல்லா கலைகளும், எல்லா உலகத்திலுள்ளவர்களும் பணியும் பரமாசாரியனாகும். நமக்கு அவனே ஆசான். அவனை நீ மதியாமையால் இத்தீங்கை அடைந்தனை. ஆகையால் நீ குமாரக் கடவுளையே வழிபட்டு உனது சிருட்டித் தொழிலைப்பெறுவாயாக எனக் கட்டளையிட்டனர். இவைகளைக்கேட்ட பிரமன் சிவபெருமானைப் பணிந்து ஐயனே குமாரக்கடவுளைப் பூசிக்கத்தக்க உத்தம தலம் எது? எனக் கேட்க, சிவபெருமான் பூலோகத்தில் திரிமூர்த்திகளும், தேவர் முதலியவர்களும், உலகத்திலுள்ள யாவரும் பூசிக்கப்படுவதும், யாம் உபதேசம் பெற்றதும், எல்லா வளப்பங்களும் பொருந்தியதும், குமாரக்கடவுள் நம்மைப் பூசித்து வேலாயுதத்தைப் பெற்றதுமாகிய மேலான புண்ணியஸ்தலம் தணிகாசலம் ஒன்றேயாம். அத்தலமோ தொண்டை நாட்டின்கண் காஞ்சி, காளத்தி, திருவாலங்காடு, திருவிற்கோலம், திருவின்றவூர், திருமாற்பேறு முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குத் திலகம்போல் விளங்குவதாகும். அப் பர்வதத்தின்கண் சென்று குமாரக் கடவுளை வழிபட்டு உனது தொழிலைக் கைக்கொள்ளுவாயாகவென்று மறைந்தருளினர்.

இவைகளைக் கேட்டதும் பிரமதேவன் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தவனாய் தென்னாட்டை யடைந்து மதுரை, திருச்சிறுப்புள்ளி, புலியூர், காஞ்சிபுரம் முதலிய க்ஷேத்திரங்களை வணங்கி, தணிகாசலத்திற்கு பத்து நாழிகை வழி தூரத்தில் நேர் கிழக்கில் ஓர் இடத்தைக் கண்டு, அங்கு ஓர் சிவலிங்கம் ஸ்தாபித்து தேவர்களோடு ஒரு வருட காலமட்டும் பூசித்திருந்தனன். அதனை விருத்தமாபுரி எனக் கூறப்படுகின்றனர். பின்னர் அப்பிரமன் ஸ்ரீபூரணகிரியை அடைந்து குமார தீர்த்தத்தில் மூழ்கி, தணிகாசலத்தை வலம்வந்து, ஆபத்சகாய விநாயகக் கடவுளைத் தரிசித்து, குமாரலிங்கத்தைப் பூசித்து, குமாரக் கடவுளைப் பணிந்து, பாடி, தியானித்து, ஆனந்தக்கூத்தாடி, தணிகாசலத்தின் கீழே இறங்கி ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி, அத் தீர்த்தக்கரை

யில் ஓர் சிவலிங்கம் ஸ்தாபித்து வேண்டிய உபகரணங்களை யெல்லாம் ஏற்படுத்தி ஆராதித்துச் சடாக்ஷரத்தைக் கிரமப்படி தியானித்து முருகக் கடவுளின் திருவுருவத்தை அறிவு சொரூபமாக்கி தபஞ் செய்திருந்தனன். இவ்வாறு பிரமதேவன் மிகவும் சிரமப்பட்டு செய்யும் அரிய தவத்திற் கிரங்கி கருணா சொரூபியாகிய முருகக்கடவுள் தமது பாத தாமரைகளில் சிலம்பு கிண்கிணிகள் கலீர் கலீர் என சப்திக்க, செம்பட்டினால் முறுக்கிய திரு அரை ஞாணும், வலம் இடமாகச் சுற்றிய மேற்போர்வையும், மார்பில் புஷ்பமாலை, ரத்னமாலை, உருத்ராக்கமாலை என்பவைகளும், காதுகளில் பன்னிரு சூரியர்களும் ஒன்றாய்த் திரண்டு இரண்டாய் விளங்குவதுபோலும், இரு குண்டலங்களும், பொற்பட்டம், கடகம், வைர வாகுவலயம் முதலிய ஆபரணங்களும் பிரகாசிக்க, * அழகெலாந்திரண்டு ஓர் உருவமாக எழுந்தது போல சகல தேவ கணங்களும் புடைசூழ, ஒரு கரத்தில் வேலாயுதந் தாங்கி மற்றோர்கரம் அபயாஸ்தமாகக்கொண்டு, பன்னிருகோடி சூரியர்கள் ஒன்றாகக் கூடியதுபோன்ற சோதி சொரூபியாய் மயில் வாகனத்தின்மீது எழுந்தருளி தேவர்கள் புட்ப மழை பெய்ய, சங்கு குடமுழா, தக்கை, வீணை முதலிய மேள வாத்தியங்கள் ஆரவாரிக்க அப்பிரமதேவன் முன்னே தோன்றினார்.

உடனே பிரமதேவன் புளகாங்கிதனாய் மயிர்க்கூச்செரிய ஆனந்த பரவசமுற்று தண்டாகாரமாய் விழுந்து பலவிதமாகத் தோத்திரஞ் செய்து, வேத வேதங்களுக்கும், தேவ தேவர்கட்கு மெட்டாத பேரொளிப் பிழம்பே! மூவரும் பூசிக்கும் முதல்வரே! நாயினுங் கடையேனாகிய அடியேன் முன்னர் செய்த பிழைகளனைத்தும் பொருத்து சிறையினின்று விட்டீர்கள். ஆயினும், இன்னும் எப்பிழை யிருந்தாலும் பொருத்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்து நிற்க, இதனைக்

---

* காந்தபு. யுத்தகா. சூரபன்மன் வதைப்ப.

"சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னி
லோர்க்குறு மொளியுஞ் சீரு மிளமையு மெழிலு மெல்லா
மார்க்குள வுலகி லம்மா வற்புதத் தோடும் பல்கால்
பார்க்கினுந் தெவிட்டிற் றில்லை யின்னுமென் பார்வை தானும்." 437

"ஆயிரங் கோடி காம ரழகெலாந் திரண்டொன் றாகி
மேயின வெனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடி னினைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லா முவமையார் வகுக்க வல்லார்."

எனச் சூரபன்மன் வியந்தவா றுணர்க.

கண்ட மயில் வாகன ரூடராகிய குமாரக்கடவுள் ஏ பிரமனே! உன் தவத்திற்கு நாம் சந்தோஷித்தோம். நீர் இங்கு எதற்காக வந்து தவஞ்செய்தனை? உமக்கு வேண்டிய தென்ன? வென்று கேட்க, பிரமதேவன் ஐயனே! எனது சிருஷ்டித் தொழிலை பழையபடி அடியேன் உய்யும்பொருட்டு கிருபைசெய்யவேண்டுமென, குமாரக்கடவுள் இன்னும் யாது வேண்டுமென, பிரமதேவன் தேவதேவனே தேவரீரது திருவடியில் என்றும் மாறாத பக்தியும், தேவரீரது அடியார்களிடத்தில் எந்த காலத்திலும் நீங்காத அன்பும், வேண்டும் இதன்றி ஏழையேனால் உண்டாக்கிய தீர்த்தமும், சிவலிங்கமும், என் பெயரினால் பிரசித்தியடையவும் வைகாசிமாதம்; விசாக நக்ஷத்திரமும், பௌர்ணமியும், ஆதிவாரமும் கூடிய இத்தினத்தில் இந்த தீர்த்தத்தில் † மூழ்கி, என்னாற் பிரதிஷ்டை செய்யப்பட்ட இச்சிவலிங்கத்தைப் பணிபவர்கள் பிரமஹத்தி தோஷ முதலிய சகல பாபங்களும், குஷ்டம் முதலிய கொடிய ரோகங்களும் ஒழிந்து என்னுலகத்தை அடையவும் வேண்டும். இதுவுமல்லாமல்,

அடியனேன் தேவரீரை வழிப்பட்டு, துதித்தசரித்திரத்தைப் படிப்பவர்களும், அதனைக் கேட்பவர்களும் நான்குவித கவிகளையும் பாடும் செந்தமிழ்ப் புலவர்களாகி, பகை, பழி, பாவம், கோபம், ரோகம், சோகம் முதலிய தோஷங்களில்லாதவர்களாய் தங்கள் சாயுச்சிய பதவியை அடையவும் வேண்டும். எனப் பிரார்த்தித்து வணங்கி நின்றான். ஸ்ரீ குமாரக்கடவுள் பிரமன் கோரிய வரங்கள் யாவும் அனுக்கிரகஞ்செய்து மறைந்தனர். அன்றுமுதல் பிரமனாலுண்டாக்கிய சுனைக்கு பிரமதீர்த்தமெனவும், பிரமனாற் பூசித்த இலிங்கத்திற்குப் பிரமேசுரரெனவும்பெயர் வழங்குகின்றன. பிரமதேவனும் தேவலோகத்திற் சென்று பழையபடி சிருஷ்டித்தொழிலைச் செய்யத் தலைப்பட்டனன்.

---

† பிரம தீர்த்தமென்பது, திருத்தணிகையில் மலையின் அடியிலிருந்து மலையின்மேல் செல்லும் நடுவழியில் இருக்கின்றது. இதனை பிரமசுனை என்கின்றனர்.

குறிப்பு:—தணிகாசலத்தில் வைகாசி மாதத்தில் வசந்தோற்சவ மாத்திரமே 10-நாள் நடைபெறுகின்றன. வைகாசி விசாகம், பௌர்ணமிகளில் குமாரக்கடவுளை பிரமன் கோரியபடி குமாரக்கடவுள் வரமளித்தாரென்பதன் அறிகுறியாக எந்த திருவிழாவும் இல்லாதிருப்பதை தர்மகர்த்தர்கள் கவனியாதிருப்ப தென்னமோ!

ஏழாவது

# நந்தி யுபதேசப் படலம்.

ஸ்துதி:

அறுசீராசிரிய விருத்தம்.

உலகமு முயிரும் வானு மும்பரும் பிறவு மாகி
அலகிலா விளையாட் டெய்தி யருட்குழாந் தணிகை வெற்பின்
இலகுசெவ் வேற்கைக் கொண்ட வெந்தையே யடியா ரன்பின்
குலவுசண் முகப்பி ரானே குகனேநின் னடிகள் போற்றி.

புண்ணியமே திருமேனியாகக் கொண்டு வேதாகமோக்த சத் சமய நெறியிற் சிறந்த மாதவ சிரேஷ்டர்களே! முன்னர் பிரமன் சிருஷ்டித்தொழிலைச் செய்ய வரம்பெற்ற சரித்திரத்தைக் கூறிவந் தேன். இனி நந்தியெம்பெருமான் உபதேசம்பெற்ற சரித்திரத்தைக் கூறுகின்றேன். கேட்பீர்களாக என சூதபுராணிகர் கூறுகின்றார்.

முன்னொருகாலத்தில் கைலாயத்தின்கண் பார்வதியாரோடு சிவ பெருமான் சிம்மாசனத்தி லெழுந்தருளி யிருக்கும்போது * நந்தியெ ம்பெருமான் சிவபெருமானைவணங்கி ஐயனே! அடியேனுக்கு வேதம், ஆகமம் முதலிய சகலசாஸ்திரங்களையும் அனுக்கிரகஞ்செய்ததோடு, அவைகளின் பொருள்களையும் விளக்கமாகக் கூறிவந்தீர்கள் அவைக ளில் பதி, பசு, பாசம் என்னும் திரிபதார்த்த இலக்கணமும், அத னுள் பதியாகிய தேவரீரை இரண்டறக்கலத்தலாகிய பரமுத்தியை அடையு மார்க்கமும் தெரிவித்து, அதன் பயனை அடியேன் அடையு மாறு கிருபை செய்யவேண்டும் எனப் பிரார்த்தித்தனர். இதைக் கேட்ட சிவபெருமான் நந்தீசரது பரிபக்குவத்தை நோக்கி ஏ! நந்தி!

* நந்திதேவர் என்பவர் திருக்கைலாயத்தில் சிவபெருமான் சந்நிதானத் தில் சகல சிவகணங்களுக்குந் தலைவராய், சகல தேவ ரிஷிகளையும் சந்நிதா னத்தில் ஒதுங்கி நிற்கும்படி பொற்பிரம்பேந்தி யிருப்பவர். இவரே சிவபெரு மானுக்கு முதன்மாணாக்கரும், சந்தான குரவர்களுக்கு முதற்குருவும், இரண் டாஞ் சம்புவுமாக சடாமுடியும், நான்கு திருக்கரங்களும், ரிஷப முகமும் பெற்றுள்ளவர். இவர் தந்தை சிலாதார். இவர் மனைவி சுயசை. இவர் அனேக வருடங்களாகத் தவஞ்செய்து சிவபெருமானுக்கு வாகனமுமாக விருப்பவர்.

நாம் இருப்பது கயிலாயமாகும். இக் கைலை பஞ்சகிருத்தியங்களை நடத்துமிடமாம். நீ விரும்பிய பரமுத்தியானது பஞ்ச கிருத்தியங்களைக் கடந்ததாகும். ஆகையால் அதனை இக்கயிலாயத்தின்கண் உபதேசித்தற்கில்லை. அதனை நீர் தெரிந்துக்கொள்ளவேண்டிய இடம் யாவும் தணிந்து சுத்த சாக்ஷாத்காரமாய் விளங்கும் துரியஞான க்ஷேத்திரமாகிய தணிகாசலம் ஒன்றேயாம். அது பரிபூரண நிலையை வழங்கப் படுவதனாலேயே அதற்கு பூரணகிரி என்னும் பெயர் வழங்குகின்றது. நமது வடிவே அம்மலையுருவமாகும். நமது இளையகுமாரனாகிய கார்த்திகேயன் அம்மலையின்கண் எழுந்தருளி நமக்கும், மற்றுள்ள தேவதேவர் யார்க்கும் ஆசாரியனாக விளங்குகின்றான். அவனுக்கு நிகராக எந்த தேவ தேவர்களுமில்லை. ஆகையால் நீர் அத்தணிகா சலத்தையடைந்து ஸ்ரீ குமாரக்கடவுளை வழிப்பட்டு தவஞ்செய்வாயாகில், ஸ்ரீ ஞான சண்முகப்பெருமான் உமக்குப் பிரத்தியக்ஷமாகி, ஓர் தெய்வீகமான நதியை வரவழைத்து அதில் உம்மை மூழ்கச்செய்து, சிவதத்துவாமிர்தக் கடலுள்ளும் மூழ்க விடுவன். இப்போது கூறிய நதியானது, வில்வ விருக்ஷங்களாற் சூழ்ந்துள்ள வில்வமாபுரமென்றோர் க்ஷேத்திரமுண்டு. அங்கு நமது உருவம்போல் ஐந்து சிகரங்களோடு கூடிய வில்வமா சயிலம் என்னுமோர் மலையுண்டு. அது நமக்கு மிகவும் அன்புள்ள இடமாகும். அதனைக் * கஞ்சகிரி யெனவும் கூறுவர். அம்மலை ஐந்துயோசனை உயரமும் ஐந்துயோசனை நீளம் பூமியிலுமுள்ளது இதன் பரப்பு ஒருயோசனையாகும். இம்மலை தற்கால் சிகரம் மாத்திரமே வெளியிற் காணுவதாகும். இம்மலையின் உச்சியில் தெய்வீகப்பொருந்திய சிவதத்துவாமிர்த மென்னும் ஓர் தீர்த்த மிருக்கின்றது. நம்மைக்கோரிய சனற்குமாரமுனிவர் முதலியவர்கள் வந்து அதில் மூழ்கி வேண்டிய சித்தி முத்தியாதிபவைகளைப் பெற்றதாகும். அத்தகைய அரிய புண்ணிய தீர்த்தத்தை நதிபுருவமாக அழைத்தருளுவான். ஆகையால் நீ அவ்விடம் செல்வாயாக என திருவாய் மலர்ந்தருளினார்.

இவைகளைக் கேட்ட நந்தியெம்பெருமான் ஆனந்த பரவசத்தராகி, சிவபெருமானை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, கைலாயத்தினின்று நீங்கி தென்திசைநோக்கப் புறப்பட்டு காசி, பிப்பிலாரண்யம், மதுரை, கேதாரம், கும்பகோணம், திருக்காளத்திமுதலிய எல்லாதல

---

* கஞ்சகிரி என்பது தொண்டை நாட்டில் திருவல்லத்துக்குச் சமீபத்தில் இருப்பது.

ங்களையும் வணங்கி கடைசியாக ஸ்ரீ பூரணகிரியென்னும் தணிகாசலத்தை யடைந்து, நகரப்பிரதக்ஷணமும், கிரிப்பிரதக்ஷணமும் செய்து அங்குள்ள சர்வ தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து குறிகுணங்கடந்த சச்சிதானந்தராகிய வீரட்டகாசக் கடவுளையும், ஆறுமுகக் கடவுளையும், வணங்கி, தணிகாசலத்தின்மேல் சென்று குமார தீர்த்தத்தில் மூழ்கி, அங்குள்ள பெரியோர்களை வணங்கி, ஆபத்சகாய விநாயகக் கடவுளையும், குமாரலிங்கத்தையும், பூசித்து திருமாடவீதியையும், குமாரக்கடவுள் சந்நிதானத்தையும் பிரதக்ஷணம் செய்து சந்நிதானத்துட்சென்று வேதமுடிவுங் காணக்கூடாத பேரொளிப் பிழம்புருவாய் இச்சை, கிரியை, ஞானம் என்னும் மூன்று சத்திகளும் மூன்றிதழ்களாகப் பிரகாசிக்கும் வேலாயுதத்தைத் தாங்கிய ஸ்ரீ குமாரக் கடவுளைக் கண்டு, கண்ணருவிபாய, இரு கைகளையும் சிரமேற் கூப்பி வேதங்களைக்கொண்டு தோத்திரஞ்செய்து ஏகாக்கிரக சித்தமுடையவராய் வணங்கி, மீண்டும் கிரிப்பிரதக்ஷணம் வருவாராயினர்.

அவ்வாறு நந்தியெம்பெருமான் கிரிப்பிரதக்ஷணம் வரும்போது, அத்தணிகாசலத்தின் ஒரு சார் மேற்பக்கத்தில் ஓர் குகை யிருக்கக் கண்டு, இந்த அழகிய குகையானது நாம் தவஞ்செய்வதற்குரித்தான இடமாகும் என நினைந்தனர். இதற்குள் முருகக்கடவுள் திருவருளினால் ஆகாயத்தின்கண் அசரீரியாக "அன்பனே! இக் குகையில் பஞ்சேந்திரியங்களையும் வென்ற பல முனிவர்கள் தங்கி தவஞ்செய்து அவர்கள் விரும்பிய சித்திகளை அடைந்த இடம். அதனாலேயே இதற்குச் சித்திக்குகை எனப் பெயர் வழங்குகின்றது. ஆகையால் நீ தவஞ்செய்வதற்குத் தக்க இடம் இதுவே யாகும்" எனக் கூறின. இதைக் கேட்ட நந்தீசர் ஐம்புலன்களையும் அடக்கி, பிராணகலையின் நடு நாடியில் அசைவற நின்று யோக நிலையைப்பொருந்தி நான்கு சதுர்யுகம் அரிய தவத்தைச் செய்தனர். தேவர்களும், இராக்ஷசர்களும் எதற்காக நந்தியெம்பெருமான் இவ்வாறு இவ்வரிய தவத்தைச் செய்கின்றார்! என அதிசயித்திருந்தனர். ஸ்ரீ முருகக்கடவுளும் நந்தீசர் செய்யும் அரிய பெருந்தவத்திற் கிரங்கி மயில்வாகன ரூடராய் நந்தீசர் முன்னே வந்து நின்றனர். முருகக் கடவுளைக் கண்டதும் நந்தியெம்பெருமான் ஆனந்த பரவசமுற்று, பலவிதமாகத் துதித்து வணங்கி நின்றனர். இதைக் கண்ட தணிகாசலபதியாகிய குமாரக்கடவுள் நந்தீசரைத் தமது திருக்கரங்களால் தடவி ஏ நந்தி! நீ வெகுகாலமாய் உடல் மெலிந்து அரிய தவஞ்செய்தனை உனது அபீஷ்டத்தைக்கேள்

தருகின்றோம் என்றனர். நந்தீசர் மயிர்க்கூச்செறிய புளகாங்கிதமுற்று, அஞ்சலியஸ்தராய், பலவிதமாகத் துதித்து வணங்கி ஓ தேவ தேவா! * சிவதத்துவாமிர்த மென்னும் தீர்த்தத்தை நதியுருவாக இங்கு வரவழைத்து அடியேனை அதில் மூழ்கும்படிச் செய்து பசு, பதி, பாசம் என்னும் திரிபதார்த்த லக்ஷணங்களை உணர்த்தி சிவதத்துவாமிர்தத்தை அனுக்கிரகித்து, அடியேனை இரக்ஷிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தனர்.

## நந்தியாறு.

இவ்வாறு நந்தி தேவரீரது பிரார்த்தனையின்படி ஸ்ரீ குமாரக் கடவுள் தென் மேற்றிசையாகத் திரும்பி தமது திருக்கரத்தை நீட்டி வில்வாசலத்திலுள்ள சிவ தத்துவாமிர்தத்தை ஒரு நதியுருவமாக வருக என நினைந்தார். அக்கணமே அச் சிவதத்துவாமிர்தம் விசேஷமாய் பிரவாகித்து நமது குருபரன் எழுந்தருளியிருக்கும் தணிகையங்கிரியைப் பிரதக்ஷணம் வருவதுபோல் வலமாகச் சுற்றிக்கொண்டு ஸ்ரீ வீராட்டகாசப் பெருமானையும், ஸ்ரீ ஞானசண்முகக் கடவுளையும் வணங்கி, † சிவகங்கை யென்னும் தீர்த்தத்தின் பக்கமாகத் தாழ்ந்து கிழக்குமுகமாகச் சென்று சமுத்திர சங்கமாயிருக்கின்றது.


---

* இச்சிவ தத்துவாமிர்தம் சில காலத்திற்குமுன் சோளிங்கபுரத்தில் ஏரி யுண்டானதால் தடைபட்டு, இப்போது அச் சோளிங்கபுரத்தின் ஏரிகரை கலங்கலின் வழியாய் பிரவாகங் குறைந்து சிறுநதியாக வருகின்றது.

† இச் சிவகங்கை மலையின்மேல் குமாரக்கடவுள் சந்நிதானத்தின் உட் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் அபிஷேக அலங்காரங்கள் நடக்கும் மேடையின்கீழ் உள்ளதாகக் கூறப்படுகின்றன. இத்தீர்த்தம் சிவபெருமான் குமாரக்கடவுளிடம் உபதேசம் பெற்றபோது குருநாதன் வழிப்பாட்டின் பொருட்டு தோண்டப்பட்டு அதில் தம் சடாமகுடத்திருந்த கங்காஜலத்தை நிறைத்து வைத்ததாகும். (உதாரணம் தணிகைபுராணம் வீராட்டகாசப் பட 124-ம் கவி.

"அத்திகு வைப்பின் வீராட்டகாசத் தடிகளா சான்வழி பாட்டிற்
கொத்தநற் றீர்த்த மகழ்ந்துவார் சடிலத் தொண்புனல் பாய்த்தினர் நிறைத்து
வைத்தன ரதனுற் சிவகங்கை நாமம் வழங்குமத் திருத்தநீர் படிந்தோர்
மொத்து நோய் தீரா தனவெலாந் தீர்ந்து போகமும் வீடுமெய் துவரால்."

இங்கு சித்திரை, மாசிமாத பிரமோற்சவங்களையும் ஆருத்ராவிலும் ஐப்பசி ஸ்கந்த சஷ்டியிலும் ஆறுமுக ஸ்வாமிகளுக்கு அபிஷேக முதலியன நடைபெறுகின்றன.



ஆறுமுகஸ்வாமி, கோயில் நந்தியாறு,

இவ்விதமாகப் பிரவகித்து வந்த நதியில் நந்தியெம் பெருமானை நோக்கி அன்பனே இந்த சிவ தத்துவாமிர்தத்தில் ஸ்னானஞ் செய்க எனக் கட்டளையிட்டனர். நந்திதேவரும் அவ்வாறே ஞான சாகரத்தில் மூழ்கினவரைப்போல் மூழ்கிக் கரைமீது வந்தனர். அதனால் அந்நதிக்கு நந்தி நந்தினி அல்லது நந்தியாறு எனப் பெயருண்டாயின. பின்னர் நந்தியெம் பெருமான் முருகக்கடவுளை வணங்கி ஓ ஜகதீசா! பிரமன் அகந்தையை நீக்கி யாண்ட பெருமானே! மூவரும் வணங்கும் முதற் கடவுளே! முத்தொழிலும் நடத்தவல்ல மூர்த்தியே! இன்னும் ஒரு வரம் கொடுத்தருளவேண்டும். அதாவது நான் தவஞ்செய்த இக்குகையும், நான் மூழ்கிய இச்சிவ தத்துவாமிர்தமும், என் பெயரால் வழங்கவேண்டும். அன்றி அடியேனுக்குக் காக்ஷிகொடுத்தருளிய நாளாகிய தைமாதம் பௌர்ணமியோடு பூச நக்ஷத்திரம் கூடிய இத்தினத்தில், இத்தீர்த்தத்தில் நியமமாயிருந்து மூழ்கி தேவரீரை அன்போடு தரிசித்தவர்களும், பூசித்தவர்களும், அவர்களுக்கு உதவி செய்பவர்களும், யாராயிருந்தாலும் அவர்கள் இஷ்டார்த்தங்களை அனுக்கிரகஞ்செய்து, பின்னர் அவர்களுக்கு தேவபோகத்தையும் அருளவேண்டும். இதன்றி, மூன்றுவருட காலமட்டும் ஒவ்வொரு அமரபக்ஷத்து சதுர்த்தசிகளில் மிக்க அன்புடன் இந்த சிவதத்துவாமிர்தத்தில் ஸ்னானம் செய்து, விரதமாக யிருந்து தேவரீரது திருநாமங்களைத் தியானித்து வணங்கி வழிபாடு செய்பவர்களும், அவர்கள் நியமகம் தவர விடாமல் அவர்களுக்குச் சகாயம் செய்து தூண்டுவோர்களும் இகபர போகங்க ளெல்லாவற்றையும் ஒருங்கே அனுபவித்து, அடியேன் பெற்ற பெருதற்கரிய பெரு வாழ்வையும் பெறவேண்டும். இதுவுமல்லாமல், எந்த தினத்திலாவது இந்த நதியில் மூழ்குவோர் எவ்வளவு கொடிய பாபிகளானாலும், மடையர்களானாலும், எந்த நோயினரானாலும், எந்த ஜாதியார்களானாலும், எவ்வளவு கொடியர்களானாலும் அவர்கள் இந்த நதியில் ஸ்னானஞ் செய்து, தேவரீரது அடியவர்களை வழிப்படுவோர்களும், தேவரீரது சரித்திரத்தை கேட்பவர்களும், தேவரீரது மங்கள குணானுபவங்களைத் துதிப்பவர்களும் தெய்வீகம் பொருந்திய குணானுபவங்களை அடைந்து நல்ல ஆயுள், கீர்த்தி, செல்வம், மனைவி மக்கள், ஞானம் முதலியவைகளைப் பெறவேண்டும் நான் தவம்புரிந்த இக்குகையில் தங்கி தேவரீரைத் தியானிப்பவர்கள் இஷ்டார்த்தங்களை யெல்லாம் பெறவேண்டும். எனப் பிரார்த்திக்க, குமாரக்கடவுள் அவ்வாறே வேண்டிய வரங்களைக் கொடுத்து, மீண்டும் ஏ! நந்தீசரே! தூரத்திலிருந்தாவது யாரானாலும் இந்த நதியை நினைப்ப

வர்களும், நீ தவஞ்செய்த குகையை நினைப்பவர்களும், நம்மைத் தியானிப்பவர்களும் இகபரபோக பாக்கியங்களைப் பெற்று மோக்ஷவீட்டை அடைவார்கள். இதுவுமல்லாமல் மிகவும் இழிவுடையோர்களானாலும், மிருகங்களானாலும், பக்ஷிகளானாலும், செடி, கொடி விருக்ஷங்களானாலும் நமது தணிகாசலத்தின்கண் வாழ்ந்தாலும், இறந்தாலும் நமது குமார சாரூப்ய வாழ்வையே யடைவார்கள் எனத் திருவாய் மலர்ந்து பின்னர் நந்தீசருக்கு சிவ ஞானோபதேசஞ் செய்யத்தொடங்கினார்.

## குமாரக்கடவுள் நந்தீசருக்கு ஞானோபதேசஞ்செய்தல்.

### பதியிலக்கணம்.

ஏ! நந்தீசா! நீ விரும்பும் ஞான நிலையைச் சொல்லுகின்றேன். ஞானமென்பது புறச் சமயத்தவர் கூறுவது கனவைப்போல பலவிகற்பப்படும். ஆகையால் அவைகளை விட்டு உண்மை ஞானத்தைக் கூறுகின்றேன். கேட்பீராக, சைவாகமங்களில் கூறப்படுவனவாய், திரிகரணங்களுக் கெட்டாதனவாய், வியாபகமாய், அனாதி நித்திய சத்தியோடுள்ளனவாய் விளங்குவது ஐந்து பொருள்களாம். அவை பதியும் பதிக்கு அடிமையாகிய பசுவும், பசுவினிடத்தில் விருத்தியாகும் ஆணவமும், அவ்வாணவத்தை விளைவிக்கும் மாயையும், கருமமுமாகும், இவைகளில் மாயை கன்மம் இரண்டையும் ஆணவத்தோடு சேர்த்து பாசம் ஒன்றே எனக் கூறுவர். அவைகளுள்:

பதி என்பது யாவும் இயல்பாகவே அறியும் முற்றறிவுடையதும், அறிந்ததை உயிர்களின் பக்குவா பக்குவங்களுக்கிணங்க அறிவிப்பதுமாகிய சூக்குமப் பொருளாகிய சித்தாகும். பசு என்பது பதி அறிவிப்பதை அறிந்து விளங்கும் ஸ்தூல சித்தாயுள்ள ஆன்மாவாகும். ஆணவம் என்பது ஆன்மா சிவத்தோடு கலவாவண்ணம் மறைத்து அறிவோடு கலந்து ஆன்மாவை பிரபஞ்சத்தில் செலுத்தி நிற்பதாகும். மாயை என்பது பிரபஞ்ச ரூபமாக உள்ள பொருள்களாகும். கருமம் என்பது அப்பிரபஞ்சத்தின் சுக துக்க உணர்ச்சியாயுள்ளதாகும்.

உள்ளுணர்வை மறைக்கும் ஆணவத்தின் வல்லமையினால் மாழ்கிக் கிடக்கும் ஜீவர்களுக்கு தாயினும் மிகுந்த கருணையோடு, உயிர்களின் பக்குவா பக்குவங்களைத் தெரிந்து சுத்த மாயை என்னும்

இச்சை, கிரியை, ஞானம் என்பவைகள் மெல்ல மெல்ல வியாபித்தற்குரிய காரண தேகம், காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்களும் கூடிய கஞ்சுகதேகம், திரிகுணங்களும் வேறுபடாது தொக்கு நிற்கும் குணதேகம் என்னும் மூன்று தேகங்களும் கூடிய கரணங்களும், அவைகள் பொருந்துவனவாகிய புவனங்களும் கொடுத்து, போகங்களை அநுபவிக்கும்பொருட்டு மாயா புவனங்களிலே போக்கு வரவும், போக்கு வரவு செய்வதற்குரிய சூக்கும வுடம்புடனே தூல வுடம்புங்கூட்டி, அப்பசுபதியாகிய சிவன் மறுபடியும் சிருஷ்டி செய்யும்போது உயிரும் உடம்பும்போல் கலப்பினால் உயிர்களே யாகவும், பொருட்டன்மையினால் சிவமாகியும், இருவினைக்கேற்க ஐந்தொழிற்படுத்தி அவ்வுயிர்களோடு உடனாகியும், அத்துவிதமாகி நின்று, உருவம், அருவம், அருவுருவம் என்னும் வடிவுகளைக் கொண்டு, தமது ஆணைவழி உயிர்களின் தத்துவப்பகுதிகளை நடத்தி, நல்வினை, தீவினைகளை அநுபவிக்கச் செய்து, அவ்வுயிர்களின் ஆணவ மலத்தைப் போக்கி யருளுவார்.

இதன்றி, பிரம விஷ்ணுக்களினிடமாக நின்று படைப்பு காப்புகளைச் செய்து பின்பு படைத்துக் காப்பதுபோல சங்காரத் தொழிலையும் அச்சிவனே செய்வர். அது எதுபோலென்னில் இரும்பு நெருப்பைச்சேர்ந்து சுடுவதே யல்லாமல், இரும்புக்குச் சுடுந்தொழில் கிடையாது, சுடுந்தொழில் நெருப்புக்கேயாம் என அறியக்கடவாயாக அன்றி, அநாதிமல முத்தராய், அநாதியே உயிர்களோடு கலந்து விளங்கும் நின்மல சிவன் அநாதி பந்தமாகிய ஆணவமலத்துடனே மாயை கன்மம் இரண்டும் இல்லாதவராவர், இவ்வாறு பஞ்ச கிருத்தியங்களையும் நடத்தியும் யாதொரு விகற்பமும் இல்லாமையாலும், சர்வ சுதந்தர முள்ளமையாலும், குணபேதமற்ற ஞான சொரூப ராதலானும், ஆன்மாக்களுக்கு இன்ப முதலியவற்றை அநுக்கிரகிப்பதனாலும் சிற்சத்தி சொரூபராகி சிவபெருமானுக்குச் சமானமான பொருள் உலகில் ஒன்றுமே யில்லை இச் சிவத்தைத் தவிர வேறோர் கடவுளே கிடையாது.

## பசு விலக்கணம்.

பசு என்பது உயிர்களாம். அவ்வுயிர்கள் இருள்போல மறைக்கும் ஆணவமலத்தோடு கலந்து கேவலாவத்தையை உடையனவும், கருவிகளோடுங் கூடி விளங்குவதனால், சகலாவஸ்தையை உடையன

வும், அது அதுவாய்ப் பொருந்துவதனால் வியாபகத்தை யுடையன வும், மலரகிதமாகி மோக்ஷ மடைவனவும் என பலவகைப்படும். அவ்வுயிர்கள் அளவற்றனவாயினும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுகின்றனர். அன்றி, அவ்வுயிர்கள் இயல்பாக அறியுஞ் சக்தி இல்லாதனவும், பிரபஞ்சத்தைப்போல் அறிவேயில்லாதனவும் அல்ல. அப்பிரபஞ்சானுபவத்தின் பொருட்டு கருவிகளோடுங் கூடி அறிந்தனவற்றையும், நூல்களால் அறிந்தவைகளையும் கனவுகண்டதைப்போல கலங்கி மாறி யுணருந் தன்மையினவாம். ஆகையால் அந்த சத்தின் தன்மையும் அசத்தின் தன்மையும் இல்லாமல் அவ்விரண்டினோடுங் கூடிநின்று அதுவதுவாய் அறிதலால் அவ்விரண்டிற்கும் வேறாகிய சதசத்தாக விளங்குவனவாகும். அன்றி உயிர்கள் மூல ஆணவ மலம் மறைப்பதனால் சிவத்தை மறந்து பிறப்பிறப்புகளில் சிக்கி, வானுலகம், மண்ணுலகம், பாதாளம் என்னும் மூன்றுலகத்திலும் சுழன்று கூடிய இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றனர். சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகத்தை அறிந்து அனுபவியாது. உலகம் அசத்தாகையால் அதுவும் அறிவில்லாத சடப்பொருளாம். ஆகையால் அதற்கு வேண்டுவது ஒன்றுமில்லை.

ஆகலின், இருவினையும், அவைகளை அனுபவிக்கும் கரணேந்திரியங்களும், அவைகளாலாகிய வெவ்வேறான உடம்புகளும், அவைகள் வசிக்கும் பிரபஞ்சமும் உயிர்களுக்கே வேண்டியதென தெரிந்து கொள்வாயாக.

## ஆணவத்தின் இலக்கணம்.

நெல்லில் முளை தோன்றுவதற்கு நிமித்த காரணமான உமியைப் போல ஆணவமலமானது உயிர்களிடத்தில் விளங்கும் இச்சை, கிரியை, ஞானம் என்பவைகளைப் பொருந்தி, பதியைத் தோன்றவொட்டாமல் மறைப்பதாகும். அன்றி கண்ணொளியைக் கலந்து விளங்கும் பூதவிருளைப்போல ஆத்மாவைக்கலந்து நிற்கும் ஆணவமலமாகிய தன்னை கெடுக்கும்பொருட்டு ஆதிசத்தியையும் தன் வசப்படுத்தி, அச்சத்தியை முடிவில் கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று காரணாவஸ்தைகளிலும், மேலாவஸ்தை, கீழாவஸ்தை என்னும் இருவகையிலும் வரும் சாக்கிர, சொப்பன சுழுத்தி, துரிய துரியாதீதம் என்னும் ஐந்

தவத்தைகளிலும் தவறாமல் உயிர்கள் பொருந்தும்படி தான் பலவேறு சத்திகளினாலே பற்றியிருக்கும். அப்படி ஐந்து அவஸ்தைகளிலும் பொருந்தும் ஜீவர்களது ஞானசக்தி வியாபாரத்தையும் எந்த நாளும் கீழே இழுத்துவரும். ஆகையினால், உயிர்கள் செய்யும் எந்த நற்காரியங்களையும் ஆணவம் செய்யவிட்டாமல், அவ்வுயிர்களுக்கு மேலுமேலும் அஞ்ஞானத்தை வளர்க்கும். நல்ல நினைவு, நல்ல வாக்கியம் நல்ல காரியம் என்பவைகள் ஒன்றையுமே தோன்றவிடாது.

## மாயையின் இலக்கணம்.

இந்த ஆணவத்தை அடக்கும் பொருட்டு, ஜீவன் விரும்பும் மாயை என்பது சுத்தமாயை என இருவகைப்படும். இதில் சுத்தமாயை என்பது சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் ஐந்து சுத்த தத்துவங்களையும், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்கு நான்கும், அகரம் முதல் க்ஷகரம் ஈறுகக்கூறும் ஐம்பத்தோரக்ஷரமும், அந்த அக்ஷரங்களால் ஆகிய ஓம் வியோம், வியாபி என்பவை முதல் நமோ நம: என்பது முடிவாகக்கூறும் எண்பத்தொருபதங்களும், நம: சுவாகா, சுதா வஷட், வெளஷட், பட், உம்பட் என்னும் முடிவுகளையுடைய ஏழு கோடியாகக்கூறும் மகாமந்திரங்களும், காமிகாகம முதலாலக்கூறும் இருபத்தெண் மூலாகமங்களும், நாரதியம் முதலாகிய இருநூற்றேழு உபாகமங்களும், நான்கு வேதமும், வேத ஜாகைகளை விளக்கும் ஆறு சாத்திரங்களும், பிரமம் முதலிய பதினெண் புராணங்களும், எழுத்திலக்கணம் முதல் அவஸ்தைப்பிரையோகம் முதலிய அறுபத்து நான்கு கலைக்யானங்களும், சிவம் சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசம், அரன் என்னும் ஏழுவகைச் சிவபேத வடிவங்களையும் சரிதை முதலிய நான்கு பாதங்களின் வழிபட்டு, சாலோகாதி பதவிகளை அடையும். அபரமுத்தர்களுக்கும், விஞ்ஞானகலர், பிரளயாகலர் என்பவர்களுக்கும், நல்ல உடம்பும் கருவி கரணங்களும், உத்தம தேசமும், உத்தம போகங்களையும், அப்போகங்களை அனுபவிக்கும்படி நடத்துகின்ற சிவசத்தி பொருந்துவதற்கான சாந்தியாதீதம், சாந்தி, வித்தை, பிரதிஷ்டை, நிவர்த்தி என்னும் ஐந்துகலைகளையும் மற்றவைகளையும் தோற்றச் செய்வதாகும்.

அசுத்தமாயை என்பது காலம், நியதி, கலை, வித்தை, அராகம் புருடன், ஆன்மதத்துவம், இருபத்துநான்கு ஆகிய பிரகிருதித் தத்து

வம் ஏழையும், பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலிய சகலருக்கும் தனுகரண, புவன போகங்களையும் தோன்றச் செய்வதாகும். இந்த ஏகதேச அறிவைச் செய்யும் மாயா காரியம் இல்லையானால் உயிர்களுக்குச் சுக துக்கமில்லை. அப்படி இல்லாமற்போனால் உயிர்கள் அச்சுக துக்கங்களை ஒழித்து முத்தியடைவிதற் கில்லாமற்போகும் அப்படி இல்லாவிடில் மூல ஆணவத்தின் மயக்கும் ஒழியாது. (இதனால் உயிர்களுக்கு மாயை, கன்மம் என்பவைகளும் வேண்டியதாகும். (ஆன்மாக்கள் அனாதியாய் மாயா காரியத்தினால் தொழிற்பட்ட வழியல்லது இருவினைகளையும் காரியப்படுத்தமாட்டாது. இவ்விருவினைகளின் காரியங்களையல்லாமல் அம்மாயா காரியங்களும் பொருந்தாது. ஆதலால் மாயை, அசுத்தமாயை என்னும் இரண்டும் ஆணவ மலத்தைப்போல் அனாதி உட்பொருள்களாகும்.

இவ்வினை என்பது: மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினால் செய்யப்படுகின்ற இதம், அகிதம் என்பனவாகும். இவ்விருவினையின் காரண காரியங்களே புண்ணிய பாவங்களாகும். உயிர்களிடத்தில் புண்ணிய பாவங்களின் பலனே அனுபவிக்கும் சுக துக்கங்களாகும். அச்சுகதுக்கங்களின் அனுபவமும் ஒரு ஸ்தூல உடம்பிலிருந்து செய்யப்பட்டு அச்செயல் அழிந்தாலும் அதன் பயன் அழியாது சூக்குமமாய் நின்று வேறொரு ஸ்தூல தேகத்திலே காரியப்பட்டு அனுபவிப்பதாகும். மனம் வாக்கு காயமென்னும் திரிகரணங்களும் தங்கள் தொழிற்களைச் செய்யாதிருக்குமானால் அதனால் வரும் நல்வினைகளனந்தம், அத்திரிகரணங்களும் மூடமுற்று தொழிற்படா திருக்குமானால் அதனால் வரும் தீவினைகளும் அனந்தமாகும்.

நல்வினையையே பலர் நல்வினையெனவும், பலர் தீவினையெனவும் கொள்வதுண்டு. தீவினையையே பலர் தீவினையெனவும், பலர் நல்வினையெனவும், கொள்வதுண்டு. நல்வினையென்று செய்வதே தீவினையாகவும், தீவினையென்று செய்வதே நல்வினையாகவும் வருவதுண்டு. ஒன்று அனுபவத்திற்கு வரும்போது பக்குவபேதத்தால் அது மாறிபட்டு ஜீவ செய்கை, பூத செய்கை, தெய்வசெய்கை என்பவைகளில் ஒன்றாக ஏற்பட்டு, ஜீவர்கள் விரும்பியது, விரும்பாதது, விரும்பியது வேறாகியது என மூவகைப்பட்டு வரும். தீவினையென்கிற அதிபாதகங்களின் பலனை அனுபவித்தே தீரவேண்டும். இப்பிராயச் சித்தம் தான் செய்யாவிடினும் விலைகொடுத்து பிறரைக் கொண்டாவது செய்ய வேண்டும் இவ்வாறு செய்யாதிருந்தாலும் நீங்குவதுண்டு. புண்ணிய

ங்களெல்லாம் இன்பத்தையே கொடுக்கும். பாபங்களெல்லாம் துன்பத்தையே கொடுக்குமேயல்லாமல் வீணாய் விடாது.

நால்வகை யோனி, எழுவகைத்தோற்றம் எண்பத்துநான்கு நூறாயிரம் ஜீவபேதம் என்னும் பிறவிபேதங்களிலும் விளக்கிடாய் மாறி மாறிப் பிறந்துழலும் ஆன்மாக்களை அப்பிறவிச் சுழலினின்று மீட்டு காத்து இரக்ஷிக்கும் பொருட்டு சிவபெருமான் ஆதியில் இவ்வுலகத்தைச் சிருஷ்டிக்கும்போது உலகமெங்கும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவங்களாக தமது சத்தியினாலே வெளியாகி ஆன்மாக்களின் புண்ணியத்திற் கீடாய் புண்ணியத்தைச் செய்து அடையும்படி கூட்டிவைத்து அவ்வாறு வருவதற்கான அகச்சமயம் ஆறுக்கும் பொதுவான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குபாதங்களையும் தெரிந்து நடக்கும்படி நடத்தி மீட்டும் அதன் உத்தம வழியைக் காட்டி அந்த சிறந்த நிலையில் நிற்பதாகிய தபோபலத்தினாலே தன் சத்தி குறைந்து நீங்கும் ஆணவமல பரிபாகம் வரச்செய்து, அதனால் அடையத்தக்க சத்தினி பாதத்தை விளக்கி, அவ்விளக்கத்தினால் இருவினையும் அறிவினிடத்தில் சமமாகப் பொருந்தும்படிச் செய்து, அதனால் பாச ஞானமும், பசு ஞானமும் கீழ்ப்பட்டு வியாப்பியமாய் அடங்க, அதன் மேற்பட்டு வியாபகமாய் விளங்கும் ஞான சொரூபராகிய ஆன்ம நாயகர் * குரு மூர்த்தமாக எழுந்தருளி † ஆறத்துவாக்களையும் நீங்கும்படி நிருவாண தீக்ஷை செய்தருளி பெயர், சாதி, குணம், கன்மம், பொருள் என்பவைகளைத் தோன்றவொட்டாத நிருவிகற்பக் காட்சியும், அதுவோ இதுவோ வென்னும் இரட்டுறு காட்சியும், வெளிக்காட்சியும் ஆகிய ஞான சத்தியின் தொழிற்பாட்டினால் ஒவ்வொன்றும் மும் மும் முறையாக ஆராய்ந்துணரும் சிவஞானம், உணர உணர்த்தும் ஆன்மஞானமும் சூரியன் ஒளியும் கண்ணொளியும்போலக் கலந்து சுத்தாத்துவிதமாயிருக்கும். எனக்கூறி, பின்னும் தெளிந்தோரையும் தெளியச்செய்ய

---

* சிவஞான சித்தியார்.

"அறிவரியான் தனையடையத் தேசுநோக்கி
அங்கங்கே யுயிர்க்குயி ராயறிவு கொடுத்தருளாற்
செறிதலினாற் றிருவேடம் சிவனு ருவேயாகும்."

† ஆறத்துவா என்பது:—மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, காலாத்துவா.

வல்ல ஸ்கந்த பரமாசாரியார் நந்திதேவரைப் பார்த்து தசகாரிய வகையில் வைத்து உபதேசிக்கத் தொடங்கினார்.

பிருதுவி தத்துவ முதல் சிவதத்துவ மிறுதியாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மாவாகிய் தன்னுடன் கூடிய விடத்தில் உண்டாகிய தொழில்களெல்லாம் அந்தந்த தத்துவங்க ளிடத்திலும் வேறு வேறாக இது இது இந்த இதனை செய்கிறதென்று தன்னில் வேறாக வைத்து ஆன்மா உணர்வது குற்றத்தை யுண்டாக்கும் அத்தத்துவ ரூபமாகும். அதனால் அத் தத்துவங்களெல்லாம் அவைகளை நடத்துகின்றவனை யன்றி தொழிற் படக் கூடாதவைக ளாதலால் அவைகளை ஆன்மா சடப்பொருளென அறிவதே தத்துவ தரிசனமாகும். இந்த தத்துவங்களெல்லாம் ஒரு பொருளைப்போல் தோன்றி மத்தியில் தன்னில் வேறுபட்டு அம்முதற் காரணமான மாயையில் ஒடுங்கு முண்மையை ஆன்மா உணர்வதே தத்துவ சுத்தியாகும் நந்தியே! இதனால் பாசத்தினிடத்தில் மேற்கூறிய தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்னும் முக்காரியமும் பொருந்தியதென அறிவாயாக.

இவ்விதம் தத்துவ சுத்தியான பின்பு அருளாகிய உறவும், மலப் பகையும் அணுகாது. அவ்வாறு தத்துவங்களில் நீங்கிய ஆன்மா தன்னைப் பிரமமென உணர்ந்து நிற்பது ஆன்மாவுக்கு உருவாகும். இவ்விதம் சுத்தாவஸ்தையை அடையும் வரைக்கும் தன்னில் வேறாகிய பாசக்கூட்டங்களோடு அது அதுவாய் அழுந்தியிருந்த ஆன்மாவுக்கு உயிராக இருந்து உணர்த்தி வந்தது அருள் எனக்கூறி அவ்வகம் பிரமத்தை நீக்க அநந்த அருளைப்போல நானும் சிவசமமே என்று துணிவடைதல் ஆன்ம தரிசனமாகும். அந்த அருளின் குணங்களைத் தன் குணமாகக்கொண்டு பஞ்சகிருத்தியங்களையும் செய்ய நினைந்து, பின்பு அவ்வருளின் செயலை தன் செயலாகக் கொண்டு அவ்வருளிலேயே அழுந்தி விடுதல் ஆத்ம சுத்தியாகும். அவ்வருளினால் தன்னை பிரமமென நினைத்தலும், அவ்வருளினால் பஞ்சகிருத்தியங்களையும் நானே செய்பவனென்னென்று எண்ணுகின்ற எண்ணமானது அடங்கி யுணர்ந்து நிற்பதும் அந்த அருள் மயமே யாகி தன் போதமுற்றும் சிவபோதமாய் அடங்கி நிற்பதுந்தானே முன்கூறிய ஆன்ம தரிசனம், ஆத்ம சுத்தி, ஆத்ம லாபம் என்பனவாகும். இதனையே முறையே சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், எனக் கூறப்படுகின்றன.

ஏ நந்தீ! இனி சிவபோக இயல்பைக் கூறுகின்றேன் கேட்பாயாக அவ்வாறு ஆன்மா சிவத்தோடு கலந்து விட்டதனாலேயே நீரோடு நீர் கலந்ததுபோல் ஒரு பொருளாகமாட்டாது. பொருள் வேறானால் இருளும் ஒளியும்போல் வேறாகவுமாட்டாது. அனாதி அத்துவித நிலையே நிலையாகச்சேர்ந்துவந்து சேர்தலும், வந்து சேராமையுமில்லாமல் அனாதி கேவலத்தும் ஆணவமலத்திலே அவ்விருள் மயமாய்க் கலந்தாற்போல ஞானமே வடிவமாய், அச் சிவஞானத்துள் அழுந்தி சிவத்தை புணரும் உண்மையுணர்வு நிலைபெற்று, அவ்வுணர்வும் அச்சிவத்தின் வசமேயாகி மோக்ஷசாகரத்தை தனது அனுபவமேயாக் அனுபவிப்பது சிவ போகமாம். இந்நிலைக்கு மேலாக ஆன்மா அடையவேண்டியது வேறே எந்த நிலைமையுமில்லை. இந்நிலைமையை அடைந்த ஆன்மா இதை விட்டு எக்காலத்தும் நீங்கவேமாட்டாது.

ஏ நந்தி! இனி உண்மை ஞானம் அடைந்தோர்களது செய்கைகளைக் கூறுகின்றேன் கேட்பீராக. இவ்வித உண்மை ஞானத்தை அடைந்தவர்களுக்கும் அவர்கள் எடுத்த சரீரத்திற்குத்தக்கபடி வினையானது வரும். அப்படி வந்தாலும் துரியம், துரியாதீத மென்னும் அவஸ்தைகளில் நிற்பவர்களுக்கு அவ்வினை ஏறாது. சுத்த சாக்கிரம், சுத்த சொப்பனம், சுத்த சுழுத்தி என்னும் அவஸ்தைகளில் நின்றாலும் அவ்வினை ஏறும். என்றால் ஆகாமிய, சஞ்சித, பிராரத்துவங்கள் சாமான்ய நிலையில் யாரையும் ஒருகணமும் விடாது. ஆகையால் அறிவுடையோர் தன் நிலை தவறியதைத் தெரிந்து அந்த அவஸ்தைகளிலிருந்து விலகி துரியாதீதத்தை யடைந்து அதில் அழுந்தி அவ்வினைகள் தம்மை அணுகவொட்டார்கள். உண்மை ஞானிகள் ஆணவமலம் நீங்கியதனால் மாயாமலமும், கருமமலமும் அருள்மயமாக நிலைபெற்று உலகத்திலுள்ள பெத்தான்மாக்கள் முத்தியின்பம் அடையும்பொருட்டு சாஸ்திர உபதேசத்தினாலும், தெளிந்த வாக்கினாலும், சுவானுபவ நிலையினாலும் ஆதரித்து தெய்வீகமாய் விளங்குவார்கள். இவ்விதமான சிவஞானத்தைப் பெற்று ஜீவன்முத்தி, பரமுத்தி நிலையைக் கொண்ட பெரியோர்கள் அகம்புறமென்னாமல் எவ்விடத்தும் சிவன் தோற்றம் ஒன்றையே கண்டு துதித்து வணங்கி மேலுமேலும் இன்பவடிவாகவே விளங்குவார்கள்.

இவ்வாறு ஸ்கந்த பரமாசாரிய ஸ்வாமிகள் பெத்தம்முத்தி என்னுமிரண்டிடத்திலும் பசு, பதி, பாசத் தன்மைகள் ஒரேவகையல்லா

மல், மற்ற சமய வாதிகளைப்போல முன்பின் முரணுகக் கூறுவதில்லாமல், ஒவ்வொரு பொருளிலும் உத்தேசம், இலக்கணம் பரிசை்ஷ என்னும் மூவகையாலும் நன்றாய்க்கூறி. உபதேசித்தவைகளை யெல்லாம் கேட்டு, கேட்டபடியே சந்தேக விபரீதமில்லாமல் சிந்தித்து, தெளிந்து நிஷ்டைகூடிய மாதவசிரேஷ்டராகிய நந்தி யெம்பெருமான் தானடைந்த சிவானந்தம் மேலிட மேலிட தம்மை ஆண்டருளிய குமாரகுருவை, அவரது அளவிடற்கரிய மங்கள குணுனுபவங்களைப் பலவிதமாகத் துதித்து, முடிவில்

"அருள்பொழி விழியீ ராறு மலர்தரு முகமோ ராறுந்
திருவரு ளினிது தந்த செங்கனி வாயுங் கையும்
மருமலர்ப் பதமும் வாய்ந்த வள்ளற துருவ மெல்லாம்
பெருகிய சுகத்துக் கப்பாற் பிறங்குமப் பிறக்கம் போற்றி."

எனக்கூறி வணங்கி நிற்கும் நந்தி யெம்பெருமானை குரு மூர்த்தமாக எழுந்தருளிய குமார பரமாசாரியர், திருவருட் பார்வை செய்து, ஏ நந்தி! உனது தவப்பலன் இன்று சித்தியாயின. இனி நீ கயிலாயஞ் சென்று எமது தந்தையாகிய பரமேஸ்வரரது திருவடிகளில் வழிப்பட்டு அவரது கட்டளையின்படி வாழ்வாயாக என ஆசீர்வதிக்க, நந்தியெம்பெருமான் குமார குருவைப் பலமுறை வணங்கி, மயிர்க்கூச்செறிய, ஆனந்தக் கண்ணீரொழுக, ஆகாயமார்க்கமாய் பின் பக்கமாகத் திரும்பி மெல்ல நடந்து திருக்கோயிலைவணங்கி, அப்பால் தணிகாசலத்தை வணங்கி, அப்பால் தான் முழுகிய நதியை வணங்கி, எல்லையை வணங்கி, தணிகைமலை மறையுமட்டும் கும்பிட்டவண்ணமாய் தேம்பி,அழுது, வணங்கி, பலவிதமாகத் துதித்து, பிறிவாற்றாது நின்று மெல்ல நடந்து, அயர்ந்து, திகைத்து, தணிகை மறைந்தபின் திரும்பித் திரும்பியும், வணங்கி வணங்கியும் சென்று திருக்கயிலாயத்தை அடைந்து சிவபரஞ்சுடரின் ஏவல் வழி யிருந்தனர்.

இவ்விதம் ஸ்ரீ ஞான சுப்ரமண்ய சிவம் சிவபெருமானுக்கும், நந்தியெம் பெருமானுக்கும் மோக்ஷ சாதனத்தை உபதேசித்தருளினரென்றால். அக்குமாரக்கடவுளின் கருணையையும், அந்நதியாற்றின் பெருமையையும், அங்குவழிபடும் பக்தர்களின் மகத்துவத்தையும், அத்தலத்தின் புண்ணியத் தன்மையையும் யாரால் அளவிட்டு கூற முடியும்?

எட்டாவது

# அகத்திய ரருள்பெறு படலம்.

ஸ்துதி

அறுசீ ராசிரிய விருத்தம்.

மறையனந்தந் துறையனந்தம் வகுத்தெழுவா
யின்றினுந் தேட நீடுங்
கறையகன்ற வுருட்கடலைக் காலம்பாற்
றிணைகாட்டா தெல்லா மாகித்
தறைபரவ வேலேந்துந் தனிமுதலைத்
தணிகைமா மலைமீ தோங்கும்
இறையையெம துயிர்த்துணையை யெஞ்ஞான்று
முளக்கோயி லிருத்தி வாழ்வாம்.

அகிலமாயையின் ஆணவப் பகையை வென்று, ஐம்புலன்களை யும். காரணங்களிலொடுக்கி, காரணங்களை அறிவு சொரூபமாக்கி, அறிவை அப்போ டெப்புற்றவாறு அபேதமின்றி அறிவேயா யிலங்கும் நைமிசாரண்ய முனிவர்காள்! முன்னர் குமார ஞான பரமாசாரியார் நந்தி யெம்பெருமானுக் குபதேசஞ்செய்த சரித்திரத்தை கூறினேன். இனி அகத்தியர் வரம் பெற்ற சரித்திரத்தைக் கூறுகின்றேன். இதனை அறிவு, சம்பாவனை, சந்தோட மென்பவைகளோடிருந்து கேட்பீர்க ளாக.

முன்னொரு காலத்தில் சிவபெருமான் கைலாயத்தைவிட்டு பார் வதியாரோடு காசியில் கங்காநதி யோரத்தில் எழுந்தருளி யிருக்கும் போது அகஸ்திய மகாமுனியர் அவ்விடஞ் சென்று உமாபதியை வணங்கி ஓ கருணாநிதி! உலகத்திலுள்ள பாஷைகளிற் சிறந்ததான தமிழ்ப்பாஷைக்கு இலக்கண வரம்புகளையும், ஞான நிலையையும் அடி யேனுக்கு உபதேசித்தருள வேண்டும் எனப் பிரார்த்தித்தனர். இவை களைக் கேட்ட சர்வ ஜீவ தயாபரனாகிய சங்கரன் ஏ அகஸ்தியா! நீர் கேட்பவைகளைக் கொடுக்கக்கூடிய பிரபு என்றும் இளமை மாறாத கட்டழகுடைய ஞான மூர்த்தியாகிய கந்தனையன்றி உலகில் வேறே எந்த தெய்வமுமில்லை. ஆகையால் நீ ஸ்ரீ தணிகாசலத்தை அடைந்து

அம்முழுமுதற் கடவுளாகிய முருகனை வணங்கிப் பெறுவாயாக. நாமும் அத்தணிகாசலத்திற் சென்றுதான் ஞானோபதேசம் பெற்றனம். நமது நந்திதேவரும் அத்தணிகையிற் சென்றுதான் ஞானோபதேசம் பெற்றான்.

"ஒருடல் விட்டொளி பெற்றதிக் காசி
பாரிடை வந்து பணிந்தவர்க் கெல்லாம்
ஈருடல் வீட்டிருண் மாயைகன் மங்கள்
வேருடன் மாய்த்தலிற் காசியின் மேலாம்."

இக்காசிமாநகரமானது தன்னை அடைந்தவர்களுக்கு இறந்த பின்பு ஸ்தூல தேகத்தின் தோஷங்களை மாத்திரம் போக்கக்கூடியதே யல்லாமல் வேறொன்றும் செய்யாது அத்திருத் தணிகையோ அடைந்தவர்களுக்கு வேண்டிய போக பாக்கியங்களை இம்மையிலேயே அனுக்கிரகஞ்செய்து, அவர்களது ஸ்தூலவுடம்பு, சூக்ஷுமவுடம்பு, என்னும் ஈருடம்பின் தோஷங்களையும், இடையினிற்கும் மலமாயை கன்மம் என்பவைகளையும் போக்கி, காரண சரீரத்தைக்காட்டி, தம்மில் இரண்டறக் கலக்கும் ஞானபுரமாகும். இக்காசியானது * தாரகமந்திரத்தை உபதேசிக்கும் இடமாகும். அத்தணிகையோ உண்மை ஞானத்தைக் கூறுமிடமாகும். உபதேசித்தால் வரும்பயன் நம்மை அடைவதாகும். உண்மை ஞானத்தால் வரும் பயன் நம்மில் இரண்டறக் கலக்கும் பரமுத்தியாகும். ஞானமே எவற்றினுஞ் சிறந்தபொருள் அதைக் கொடுக்குந் தலங்கள் பலவற்றினுஞ் சிறந்தது திருத்தணிகையாம். ஆதலின் நாம் குமாரக்கடவுளிடம் உபதேசம் பெற்றபோது ஓர் தடாக முண்டாக்கி நமது சடாமுடியிலுள்ள கங்கையினால் நிறைத்திருக்கின்றோம் இது நம்மா லுண்டாக்கியதால் அதனைச் சிவகங்கை யென வழங்கப் படுகின்றன. இக்காசியிலுள்ள கங்கையோ பகீரதனால் ஏற்பட்டதால் நம் பெயரின்றி கங்கையெனவும், பகிரதி யெனவும் வழங்குகின்றன. இக்கங்கையைப் பார்க்கிலும் அத்தணிகையிலுள்ள கங்கை ஆயிர மடங்கு அதிகமாம். இங்கு உபதேசம் பெறுவதைப் பார்க்கிலும் தணிகையில் உபதேசம் பெறுவது ஆயிரமடங்கு மேலானதாகும். அங்கு நந்திதேவருக்காகக் குமாரக்கடவுள் அழைத்த நந்தியாறும் அச் சிவகங்கைக்குச் சமானமாகும். அன்றி அத்தணிகையில் நம் இளையகுமாரனாகிய குமாரக்கடவுள் கையிலி னின்று வரவழைத்த குமார தீர்த்தமிருக்கின்றது. அக்குமார தீர்த்தமும், நந்தியாறும், சிவகங்கையும் தன்

* தாரகம்—ஓர் மந்திரம்.

மையில் ஒரு தன்மையதாயினும் ஒன்றுக்கொன்று கோடிபாகம் சிறந்ததாகும். இவைகளுள் குமாரதீர்த்தமோ † குஷ்டம், பெருவியாதி, ரணங்கள், முயலகனோய், சூலை, மார்பிலாணி, கண்டமாலை, பாதசக்கரம் நீரிழிவு, ராஜப்பிளவை, க்ஷயம் முதலிய சகல தீமைகளையும் போக்கி முத்தியைக் கொடுப்பதாகும். இதன்றி அச் சரவணப்பொய்கையென்னும் குமார தீர்த்தத்தில் முழுகினால் கலியாணமில்லாதவர்களுக்குக் கலியாணம் நடக்கும். புத்திரரில்லாதவர்களுக்குப் புத்திர பாக்கிய முண்டாகும். கல்வியில்லாதவர்களுக்குக் கல்விச்செல்வமுண்டாகும் பகையை வெல்வதாயினும், செல்வம் வேண்டினும், பேய் பிசாசு பூததோஷங்களை ஒழிக்க வேண்டினும், யாதாவதொரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டினும், வேறெந்த சித்தியைப் பெற வேண்டினும், எதை ஒழிக்க வேண்டினும், அதனை நினைத்து குமாரக் கடவுளைத் தியானித்து அக்குமார தீர்த்தத்தில் முழுகினால் அக்காரியங்கள் உடனுக்குடனே சித்தியாகும்.

இதன்றி தணிகாசலத்தில் வசித்தாலும், அதன் பெயரைச்சொன்னாலும், அத்தணிகையிலிருந்து வருவோர் அல்லது தணிகைக்குப் போவோரைத் தரிசித்தாலும், முருகக்கடவுளை நினைத்து வணங்கினாலும், அவரது சடாக்ஷரத்தைத் தியானித்தாலும், அவரது அடியார்களைப் பூசித்தாலும், அவரது மகத்துவத்தை வாசித்தாலும், கேட்டாலும் வேண்டிய போக பாக்கியங்களைப் பெற்று மலரகிதராகி ஸ்ரீ ஞான கந்த சாரூப்பத்தை யடைவார்களென்றால் அதன்பெருமையை இன்னும் விசேஷமாகக் கூறுவதென்ன விருக்கிறது?

அத்தணிகாசலத்திற் சென்று அன்னதானம் சொர்னதானம், வஸ்திரதானம் முதலிய தருமங்களைச் செய்தால் மற்ற ஸ்தலங்களிற் செய்யும் தான தருமங்களைப் பார்க்கிலும் கோடிபாகம் மேலானதாகும். அத்தணிகாசலத்தில் நந்தவனம் வழிச்சாலை, மடம், தடம், சத்திரம், அத்தலத்தில் வருவார்க்கு இடங்கொடுத்தல், உபசரித்தல், தான தருமஞ்செய்தல், உதவிபுரிதல் முதலியவைகளைச் செய்வோர்கள் தங்கள் இஷ்ட சித்திகளை இம்மையிலேயே பெற்று ஸ்ரீ ஞான சண்முக சிலோகத்தை யடைந்து தேவ போகங்களை அனுபவிப்பார்கள்.

---

† குஷ்டம்—கை கால் குறைவு, பெருவியாதி—கை கால் வீங்கிப் பருத்து நீருதல்.

அத்தணிகாசலத்தில் வீற்றிருக்கும் குமாரக்கடவுள் சந்நிதானத்திலும், அவரது மகோற்சவங்களிலும் திருத்தோரணம் ஆலவட்டம் தீபம், தூபம், சுத்திகரித்தல், அலகிடல் சுன்னமிடல் முதலியவைகளைச் செய்வோரும், அக்குமாரக்கடவுளின் முன்னர் அவரது திருப்புகழைப்பாடுவோரும், பாடச்செய்வோரும், அவைகட்கு வேண்டிய உபகரணங்களை உதவுவோரும், கோபுரம், மதில், மண்டபம், மடம், தடாகம், சாலை, சோலை, சந்நிதி முதலியவைகளை பழுதுபார்ப்போரும் அத்தணிகையிலுள்ள வீராட்டகாசம் முதலிய சந்நிதானங்களில் உள்ளன்போடு பத்திசெய்து திருப்பணி செய்வோரும் இகத்திலேயே இம்மை மறுமைப் பயன்கள் யாவையும் பெற்று அவர்களது மனைவி மக்கள் முதலிய குடும்பத்தோடும், சுற்றத்தோடும் சுவர்க்காதிபத்தியத்தையடைந்து குமார சாயுச்சிய பதவியையும்பெற்று வாழ்வார்கள்.

## முருகக்கடவுளின் மூர்த்தங்கள்.

இச்சை, கிரியை, ஞானம் என்னும் மூன்று சக்திகளையும் இலைவடிவமாகக் கொண்டு விளங்கும் கூர்மை பொருந்திய வேலாயுதத்தை வலதுகரத்திற் றாங்கி, இடது கரத்தை மேற்றொடையில் வைத்து நின்ற திருக்கோலமாய் விளங்கும் சத்திதராது திருவுருவத்தைச் செய்து அமைப்பவர்களும்,

கூர்மைபொருந்திய மழுப்படையைப்போலும் தண்டாயுதத்தை வலக்கரத்திற்பிடித்து, இடது திருக்கரத்தை இடையில்வைத்து நின்ற திருக்கோலமாய் விளங்கும் கந்தப்பெருமான் திருவுருவத்தைச் செய்தமைப்பவர்களும்,

ஒருகரத்தினால் தமது வலது தொடையிலுள்ள நாயகியைத்தழுவியும் ஓர் கைஅபயமும், மற்ற பத்து திருக்கரங்களிலும் வில், வாள் வேல், வச்சிராயுதம், சூலம், அம்பு, தாமரை, கொடி, தண்டாயுதம், அங்குசம் என்னும் 10-ஆயுதங்களை ஏந்தி, 6-திருமுகங்களோடு விளங்கும் சிவசண்முகக்கடவுள் திருவுருவத்தைச் செய்தமைப்பவர்களும்,

இடது திருக்கரத்தை இடது இடையிற்றாங்கி, வலது திருக்கரத்தை அபயாஸ்தமாகக்கொண்டு விளங்கும் ஸ்ரீ ஞான சுப்பிரமணியக்கடவுள் திருவுருவத்தைச் செய்து வைத்து பலரும் வழிப்படும்படியுமாறு செய்பவர்களும்,

வரதாஸ்தமாக ஒரு கரமும், கோழிக்கொடி ஒருகரத்திலுமாக, இடது பக்கத்தில் இருகரங்களும், வேலாயுதமும், வாளுந் தாங்கிய இருகரங்கள் வலது பக்கத்திலுமாக நான்கு திருக்கரங்களைக்கொண்டு விளங்கும் யானை வாகனத்தையுடைய தேவதேவன் திருவுருவத்தைச் செய்தமைப்போரும்,

வேல், கேடகம், மணி, தாமரை, கோழிக்கொடி, கதாயுதம், உளி, அம்பு, வாள், வரதம், அபயம், வில் என்பிவைகளைத் தாங்கிய பன்னிருதிருக்கைகளும். ஆறுதிருமுகங்களும்கொண்டு விளங்கும் சரஹண பவக் கடவுள் திருவுருவத்தை உண்டாக்கி வைப்பவர்களும்,

வச்ராயுதம், கேடகம், வரதம் என்பவைகளை இடதுபக்கத்திற் கொண்ட 3-திருக்கரங்களும், வேல், வாள் அபயம் என்பவைகளை வலது பக்கத்திற்கொண்ட மூன்றுதிருக்கரங்களுமாக ஆறுகரங்களும், ஆறு திருமுகங்களும், கடப்பமாலையும் பிரகாசிக்க விளங்கும் கார்த்தி கேயக் கடவுள் திருவுருவைச் சமைத்து வைப்பவர்களும்,

வலதுபக்கத்தில் வாளாயுதம், வேலாயுதம் என்பவைகளும், இடதுபக்கத்தில், கோழிக்கொடியும், தண்டாயுதமுமாகத்தாங்கிய நான்கு திருக்கரங்களும், ஒருதிருமுகமும் பிரகாசிக்கும் குமாரக்கடவுள் திருவுருவத்தைச் சமைத்து பலரும் வழிபடத் தாபிப்பவர்களும்,

வேல், அம்பு, வாள், சக்கரம், பாசம், அபயம் என்பவைகளை வலது பக்கத்திலும், வச்ராயுதம், வில், தோமரம், அங்குசம், தாமரை என்பவைகளை இடது பக்கத்திலுமாகத் தாங்கிய பன்னிரு திருக்கரங்களும், ஆறு திருமுகங்களுங்கொண்டு வள்ளியம்மை, தெய்வயானையம்மை சமேதராய், மயில் வாகனத்தில் எழுந்தருளிய ஆறுமுகக்கடவுள் திருவுருவத்தைச் செய்தமைத்து பலருங் கடைத்தேறச் செய்வோர்களும்,

வரதம், தண்டம், கேடகம், தோட்டி, பாசம், வச்சிராயுதம், அபயம், வாள், சூலம், சக்காம், இருப்புலக்கை, வேல் என்பவைகளைத் தாங்கிய பன்னிரு காங்களும், ஆறுதிருமுகங்களும், பிரகாசிக்க, விளங்கும் தாரகாந்தக் கடவுள் திருவுருவத்தைச் சமைத்து வைப்பவர்களும்,

அபயம், இருப்புலக்கை, வாள், சூலம், வேல் தோட்டி என்பவைகளை வலது பக்கத்திலும், வரதம், வச்சிராயுதம், வில், தாமரை, தண்டம், தண்டாயுதம், என்பவைகளை இடது பக்கத்திலும் தாங்கிய

பன்னிரு திருக்கரங்களைக் கொண்டு விளங்கும் ஸ்ரீ சேனாபதியின் திரு வுருவத்தை உண்டாக்கி அன்பர்கள் வழிப்பாட்டிற்கு உதவு வோர்களும்,

வரதாஸ்தமும், கமண்டலமும் இடபாகத்திலும், அபயாஸ்த மும், ஜபமாலையும் வலது பாகத்திலும் பிரகாசிக்க, நான்கு திருக்கரங் களோடு சிருட்டித் தொழிலைச் செய்யும் பிரம சாத்த னெனக்கூறும் ஸ்ரீ குகேசன் திருவுருவத்தை செய்து அமைப்பவர்களும்,

வலக்கரங்களில் அபயமும், உருத்ராக்க மாலையும் பிரகாசிக்க இடது பக்கத்தில் ஒருகரத்தில் கமண்டலமும், மற்றோர் கை இடை யிலும் விளங்க ஸ்ரீ வள்ளி நாச்சியார் வலபாகத்தில் வீற்றிருக்க, ஸ்ரீ மகாவிஷ்ணு நீர் வார்க்கத் திருமணம் புரிந்த முருகக் கடவுளின் திரு வுருவத்தை உண்டாக்கி அமைப்பவர்களும்,

இடதுகை இடுப்பிலும், வலதுகை தாமரை மலரைத் தாங்கி யும், பாதங்களில் கிண் கிணிகள் சப்திக்கவும் விளங்கும் பால சுப்பிர மணியக் கடவுள் திருவுருவத்தை உண்டாக்கி வைப்பவர்களும்,

வேல், வாள், அம்பு, அபயம் என்பவைகளை வலதுபக்கத்திலும் வச்ராயுதம், கேடகம், வரதாஸ்தம், வில் என்பவைகள் இடது பக் கத்திலும் தாங்கிய எட்டுத் திருக்கரங்களும், ஆறு திருமுகங்களும் பிரகாசிக்கும் தேவ தேவாது திருவுருவத்தைச் செய்து வைப்பவர் களும்,

வலது கரங்கள் அபயமும், வேலாயுதமுந் தாங்கி இடது கரங் கள் வரதமும், வச்சிராயுதமும் தாங்கி விளங்கும் மகாதேவன் திரு வுருவத்தைச் சமைத்து வைப்பவர்களும்,

இப்பதினாறு திருவுருவங்களல்லாமல், முருகக்கடவுள் கொண் டுள்ள நானாவிதமான எண்ணிறந்த வுருவங்களில் இஷ்டமூர்த்தங் களைச்செய்து வைப்பவர்களும், அம்முருகக்கடவுளது நாயகிகளாகிய வள்ளி தெய்வயானை யம்மையார் திருவுருவங்களைச் செய்து வைத்து பூசிப்பவர்களும், அம் முருகக்கடவுளது தம்பிமார்களாகிய வீரவாகு தேவர் முதலிய நவவீரர்களது திருவுருவங்களைச் சமைத்து வைப்ப வர்களும் இம்மையில் நோயற்றவாழ்வும், இணையற்ற செல்வமும் பெற்று, எதிரொருவருமின்றி உலகில் எவரும் தமது ஏவல் கேட்க, நல்ல மனைவி, மக்கள், சுற்றம், நட்புகளை வாய்ந்து, சகல போகபாக்கி யங்களையும் அனுபவித்து முடிவில் அகாமிய சஞ்சித, பிராரத்வ கன்

மங்கள் நீங்கி, தேவர்கள் மலர்மாரி தூவ, வானதுந்துமிமுழங்க தேவ விமானத்தி லெழுந்தருளி, சுவர்க்கலோகஞ்சென்று தேவர்களாகி ஸ்ரீ ஞான சண்முக சாரூப்ய வாழ்வைப் பெறுவார்கள்.

அவ்வாறு பொன், வெள்ளி, செம்பு, வெண்கலம், இரத்தினம் கருங்கல், முதலியவைகளிற் செய்ய முடியாதபரம ஏழைகளாயிருந்தாலும், எவ்வளவு அசக்தர்களா யிருந்தாலும் தங்களுக்கு மண், ஓடு, செங்கல், மரம், பலகை, மஞ்சள், களிமண், முதலிய கிடைக்கும் ஏதாவதொன்றில் அத்திருவுருவங்களில் இஷ்டமானதைப் பாவனை செய்து பூசித்தாலும், அவர்கள் அன்பிற்கேற்றவாறு அக்குமாரக்கடவுள் எல்லாசித்தி, பத்தி முத்தியாதிகளையும் அனுக்கிரகஞ்செய்வார்.

சரியை, கிரியை, யோகம் என்னும் நிலையை உடையவர்கள் அம்முருகக்கடவுள் திருவுருவி லொன்றைத் தாபித்து பூசித்து திருவிழா நடத்தி வழிபடுவார்களானால் அவர்கள் அடையும் பெரும்பலனை நாம் உரைத்தற்கரிதாகும். அன்றி தேவர்களில் முருகக்கடவுளையன்றி உயர்ந்த தேவர்களில்லை. தலங்களில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் அருளும்தலம் ஸ்ரீ தணிகா சலத்தையன்றி வேறே தலமே இல்லை. நாமும் அத்தணிகையிற் சென்றுதான் எவற்றிற்கும் மூலமாகிய பிரணவோபதேசத்தைப் பெற்றோம். ஆதலால் அகத்தியா! நீ தணிகைக்குச்சென்று ஸ்ரீ ஞான சத்திதரனை இருதய தாமரையிலிருத்தி, தவஞ் செய்வாயாகில் நீ நினைத்தவைகள் யாவும் அம்முருகக் கடவுள் அனுக்கிரகஞ்செய்வார். எனக்கூறி பரமேஸ்வரன் சென்றனர்.

உடனே அகஸ்திய முனிவர் சிவபெருமான் திருவாணையின்படி வடதிசை நோக்கிச் சென்று பலவளப்பங்களும் பொருந்தி தேவநாடென விளங்கும் தென் கயிலாய மென்னும் தணிகாசலத்தைக்கண்டு கீழ் திருத்தணிகை யென்னும் மாடமாளிகை நிரைந்த வீராட்டகாசத்தை யிடைந்து, அடுத்துள்ள ஆறுமுகக்கடவுளை வணங்கி நந்தியாற்றில்மூழ்கி, உத்தூளனமாக விபூதியணிந்து, உருத்ராக்கமாலைபூண்டு சிவத்தியானத்தோடு வீராட்டகாசக் கடவுள் சந்நிதானத்தை யடைந்து தண்டாகாரமாக விழுந்து கும்பிட்டு, வலம்வந்து, கோயிலினுட் சென்று,

"ஒருபாலின் மலைமடந்தை யொழியாமை வீற்றிருந்து
மிருபாலு மிடியர்க ளிறைஞ்சேத்துந் தனிமுதலே
தருவானத் திறையவனுஞ் சதுமறையோன் முகத்தவனுந்
திருமாலு மரியாநின் றிருவடியென் சிரத்தினவே."

"புலியிருந் தோர்த்த விசயனை பொருப்பு நெடுஞ்சிலை குழைத்துங்
குவிமுலை சற்றே பொருதக் குழைந்தரு ளும்பெருந் தகையே
சவிமணிநூ புரத்தொலியுந் தழங்கிய கைப்பறையொலியு
மவிர்சடை நீர்முழக் கொலியு மடங்கலு மென்செவி யனவே."

"முறைமுழுதும் பகுத்தமைத்து மூன்றதிறப்ப மூவருக்கு
முறைமலர்வா ணியைத்திருவை யுமையையருளுறக் கடலே
பிறைமுடியு நகைமுகமும் பெருந்தோளும் வரைமார்பு
நிறையுதர பந்தனமு நிலாக்கச்சும் விழியனவே."

எனப் பலவிதமாகத் துதித்து வணங்கி நிற்க, அக்கால் குமாரக் கடவுள் அகஸ்தியர் முன்னே தோன்றி ஏ அகஸ்தியா! நீ நம்மை ஆதிவராகமூர்த்தி வேதவிதிப்படி தவஞ்செய்து பூசித்த ஆதிவராகபுரியிற் சென்று ஒருவருடகாலமட்டும் பூசித்து பின்பு தணிகாசலத்தின்மேற் சென்று குமாரக்கடவுளைப் பூசிப்பாயாகில் அம்முருகன் உமக்குப் பிரத்தியக்ஷமாகி உமது கருத்தை நிறைவேற்றுவார் எனக்கூறி சடைமுடியோடிலங்கும் பிருதிவி இலிங்கத்துள் மறைந்தனர்.

இதனைக் கேட்ட அகஸ்திய முனிவர் ஆனந்த பரவசமுற்று அழுதகண்ணுந் தொழுத கையுமாகிப் பலவிதமாகத் துதித்து வீழ்ந்து, வணங்கி, கும்பிட்டு, உரைகுழறி, விம்மி, பாலரோடுன்மத்தர் போலப் பலமுறைக்குதித்து, கூத்தாடி வலம்வந்து வீராட்டகாசரை பரவிச்சென்று ஆதிவராகபுரியை அடைந்து சிவாக்ஞையின்படி ஓர் இலிங்கப் பிரதிஷ்டைசெய்து வேதவிதிப்படி நியமத்துடன் ஒருவருடகாலமட்டும் பிரதிதினமும் நந்தியாற்றில் மூழ்கி திரிகாலக்கிரமமாய் சகஸ்த்ர. நாமார்ச்சனையோடு பூசித்து, அவ்வொருவருடம் கடந்ததும், தணிகாசலத்தை யடைந்து குமாரதீர்த்தத்தில் மூழ்கி, மலைமேற் சென்று, ஆபத் சகாய விநாயகக் கடவுளைப் பணிந்து, பின்பு குமாரலிங்கத்தை வணங்கி, சடாக்ஷர தியானத்தோடு காணும் அடியார்களை வணங்கி, வேறொன்றுந் தோன்றாத சிந்தையும் சிரமேற் குவித்தகையும், ஆனந்தக்கண்ணீர் ஒழுகிய வண்ணமும் மயிர்க்கால்கள்தோறும் கசியும் வியர்வையும், புளகாங்கமுமாக வலம்வந்து குமாரக்கடவுள் சந்நிதானத்துட்சென்று பலவிதமாகத்துதித்து வணங்கிப் பூசித்து அன்னாகாரமின்றி அன்று இரவு நீங்கி மறுநாள் விடியற்காலை யெழுந்து குமாரதீர்த்தத்தில்மூழ்கி மலையின் கீழிறங்கி நந்திக்குகையையும், அவரால் ஸ்தாபித்துள்ள இலிங்க மூர்த்தியையுங் கண்டு வணங்கி, அதன் தென் மேற்றிசையில் ஓர் தீர்த்த முண்டாக்கி அத்தீர்த்தக்

கரையில் கரணேந்திரியங்களுக் கதீதமாக விளங்கும் சிவயோக நிலையுற்று ஒருவருடகாலம் கனிகளையும், ஒருவருட காலம் கிழங்குகளையும் ஒருவருட காலம் இலைகளையும், ஒருவருடகாலம் ஜலத்தையும், ஒருவருடகாலம் காற்றையும் ஆகாரமாகக்கொண்டும், பின்னர் ஆகாரமே யில்லாமலும் நூறு வருட காலமட்டும் தவஞ்செய்திருந்தனர்.

இதனைக்கண்ட குருபரன் மயில்வாகன ரூடராய், தேவதுந்துபி முழங்க, வள்ளி தெய்வயானையோடு சிவகணங்கள் புடைசூழ அகஸ்திய மகாமுனிவர் சமீபத்திற்சென்று தமது திருக்கரத்தால் அகஸ்தியரைத் தடவிக்கொடுத்து, ஏ அகஸ்தியா! நீ செய்த புண்ணிய மிகுதியால் இத்தணிகாசலத்தை அடைந்தனை குமாரதீர்த்தம், சிவகங்கை, நந்தியாறு முதலியவைகளில் மூழ்கிப் புனிதனாய் வீரட்டகாசர், குமாரலிங்கம், ஆபத் சகாய விநாயகர் முதலிய மூர்த்திகளைப்பணிந்து வழிபட்டனை, அதனாலேயே நீ சகல சித்திகளும் கிடைத்தவனாய் பின்னர் அருமையாகிய தவத்தினைச் செய்து தேகம் மிகவும் மெலிந்தனை. ஆதலின் உமக்கு வேண்டியதைக்கேட்பாயாக எனக்கூற அகஸ்திய மகாமுனிவர் மீண்டும் வணங்கி ஐயனே! அடியேன் தமிழ் நாட்டிற் சிவபெருமானுக்ஞையால் தமிழ்த்தலைவனாக வந்தயிடத்தில் தமிழை யோசிக்குங்கால் நிலபேதத்தால் பதினெண் வகையாயிருக்கின்றன. அதன்றி திசைச் சொற்களும் விரவிக்கிடக்கின்றன. அவைகளைத் திருத்தவும், இலக்கண வரம்புறவும், ஞானவரம் புறவுஞ்செய்தற்கில்லை. ஆகையால் அத்தமிழ் வரம்பும், அதன்பால் ஞானவரம்பும் தெரியுமாறு அனுக்கிரகிக்கவேண்டும். அதன்றி! அடியேன் சமீபத்தில் ஆதிவராகபுரத்தில் பிரதிஷ்டைசெய்து பூசித்த சிவலிங்கப்பெருமானை யான் பூசித்த தினமாகிய தைமாதம் பூச நக்ஷத்திரத்தில் வேதவிதிப்படி அன்புடன் பூசிப்பவர்கள் சர்வ பாவகன்மங்களும் நீங்கி மோக்ஷலோகத்தை யடையும்படி அனுக்கிரகிக்கவேண்டும். இதுவுமல்லாமல் அடியேன்பேரால் யான் உண்டாக்கிய இத்தீர்த்தம் என்பேரால் விளங்கவேண்டும். தேவரீர் அடியேனுக்குக் காக்ஷிகொடுத்த நாளாகிய இந்த புரட்டாசிமாதம் திருவோண நக்ஷத்திரத்தில் இந்ததீர்த்தத்தில் மூழ்கி தேவரீரை தரிசிப்பவர்கள் சகல தோஷங்களுந் தீர்ந்து தங்கள் குமாரசரூப்ய வாழ்வைப் பெறவேண்டும். சோமவாரமும் திருவாதிரை நக்ஷத்திரமும் கூடிய நாட்களில் இத்தீர்த்தத்தில் முழுகுவோர்களுக்கு இம்மையில் வேண்டிய போகபாக்கியங்களையும், மறுமையில் சிவபோகத்தையும் அருளல் வேண்டும். எனப் பிரார்த்தித்து நிற்க

முருகக்கடவுள் அகஸ்தியர் வேண்டியபடி வரங்களைக் கொடுத்து, அகஸ்தியருக்குத் தான் குருமூர்த்தமாக யிருந்து தமிழை வரம்பு படுத்தும் வழிகளை விளக்கி, தமிழில் சிவாகம முதலிய ஞான சாஸ்திரங்களை யமைக்கும் மார்க்கத்தையும் உபதேசிப்பாராயினர்.

ஏ அகத்ய! நீ விரும்பிய வாறு ஞானோபதேசஞ் செய்கின்றோம் கேட்பாயாக. மேலான தருமமாய், தருமா தருமங்களை விளைவிப்பதாய், பசு, பதி, பாசமென்பவைகளைத் தெரிந்து சிவத்தை யடைவதற்குச் சமீபித்த மார்க்கமாய் அநுஷ்டிக்க ஆணையைத் தருவதாய் விளங்குது வேதாகமமாகும். அவ்வேதாகமங்கள் சிவபெருமான் அருளியவைகளாகும். அவ்வேதாகமங்களைக்கொண்டு சிவனை வழிபாடு செய்வதே மேலான தருமமாகும் இதில் ஓம் என்னும் பிரணவத்தை முதலாகவும் சிவாய என்பதை முடிவாகவும் கொண்டு தியானிக்கும் சடாக்ஷர மந்திரமானது எல்லா மந்திரங்களுக்கும் மேலானதாகும் இச்சடாக்ஷரத் தியானத்தால் இம்மை மறுமைப்பலன்கள் யாவும் ஒருங்கே பெறலாம். இவற்றுள் ஓம் என்னும் வாக்கியத்தை உரைப்பவர் வேத முதலிய எல்லாக்கலைகளையும் உரைத்தவர்களாவார். அவ்வோங்காரப் பொருளைத் தெரிந்து கொண்டவர்கள் சகல சாஸ்திர ரகஸ்யங்களையும் தெரிந்துகொண்டவராவார்கள் அப்பிரணவத்தைத் தெரியாதவர்கள் சூரியனில்லாவிடில் கண்ணொளி யில்லாததுபோல அகக்கண் இல்லாதவர்களேயாவர். அன்றி. * ஆணவம், மாயை, காமியம், ஜீவர்கள், பரம் என்பவைகள் அநாதி நித்தியமாக வுள்ளது. இவைகளைக் காட்டி வகைப்படுத்தும் உபநிஷத வாக்கியங்களை பக்குவா பக்குவமறிந்தே உபதேசிக்கவேண்டும். பக்குவ மில்லாதவர்களுக்கு உபதேசிப்பவர்கள் அவ்வுபதேசத்தைக் கேட்டவர்களோடும் நரகத்தையடைவார்கள்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை விளைவிப்பது முழுமுதற் கடவுளாகிய சாக்ஷாத் சிவபெருமானாற் சொல்லிய வேதாகமங்களைத்தவிர வேறே நூற்களே உலகிற் கிடையாது. இவ்வேதாகமங்களை அநுஷ்டிப்பவர்கள் சிலரே யிருக்கின்றார்கள். இதனைவிட்டு மாயாமலச் செருக்கால் பயனற்ற புறச்சமய நூற்களை அநுஷ்டிப்போர் பலருளர்.

---

தணி பு. அகத். அருள். ப. 153.

* ஆணவ மாயை காமிய முயிர்க ளமலனு மநாதிமெய்ப் பொருள்"

இவ்வேதாகமங்களாற் றுதிக்கப்படுகின்ற நிற்குண, நின்மல, நிரஞ்சன, நிராமய, நிராதாராகிய பரமேஸ்வரன் அகாமிய சஞ்சித பிராரத்வ கன்மங்களிற் சிக்கி வருந்தும் ஆன்மாக்கள் கடைத்தேறும் பொருட்டு தனது நிட்கள ரூபத்தை மறைத்து சகள ரூபமாகத்தோன்றி தாவரம் சங்கமம் என்னும் இரண்டு உருவிலும் எழுந்தருளி பலசமயம், பலநாமம், பலரூப்மாக விளங்குகின்றார். அக்கருணை மூர்த்தியை பூசிப்பவர்களும், பூசிப்பவர்களுக்கு உதவி செய்வோர்களும், அவர்களுடைய பந்து, சிநேகர்களும் அவர்கள் சரித்திரத்தைக் கேட்பவர்களும், கேட்டதனை குணமாகக்கொண்டு சந்தோஷிப்பவர்களும், அவர்களைத் தரிசித்தவர்களும், அவர்களுக்கு இடங்கொடுப்பவர்களும் முன் பிறப்பிற்செய்த தோஷங்களும், இப்பிறப்பிற் செய்த வினைகளும் நீங்கி சிவலோகத்தை யடைவார்கள். அவர்கள் ஒருக்கால் பிறப்பாளர்களாயின் விசேஷித்த சிவநெறியில் நின்று சிவபூசை அடியார் பூசைகளில் மேம்பட்டவராய், சிவஞானத்தை யடைந்து முடிவில் அச்சிவனோடு இரண்டறக்கலந்து பிறவாமுத்தியை யடைவர். இச்சிவபத்தர்கட்கு இடையூறு செய்வோரும், வீண்வாதம் புரிவோரும், அவர்கள் செய்தனவற்றைப் பழிப்போரும், அவர்கள் பக்தியைக் கெடுப்போரும், சிவபுராணங்களின் பயனைக் கைக்கொள்ளாதவர்களும், அதனை அவமதிப்போரும், அதைப் பிறர்க்குரைக்காதவர்களும் இம்மைப் மறுமைப்பயன்களை ஒழித்து ரௌரவாதி நரகத்தையே யடைவார்கள்.

இனி வேதாகம புராணோதி காசங்களை பூசைசெய்யும் முறையையும், ஆசாரியனை வழிபடும் முறைகளையும், அதனைக் கேட்பவர்களின் நியமங்களையும், அவைகளாலெய்தும் பயனையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவைகளையும், சிவாலயம், திருக்குளம், திருத்தேர், திருவிழா முதலியவைகளை ஏற்படுத்தி வைப்பதினாலெய்தும் புண்ணியங்களையும், சைவ தருமங்களையுங் கூறுகின்றேன். கேட்பாயாக.

## அகத்திய மகா முனிவருக்கு
# ஞானோபதேசம் செய்தல்.

ஏ அகத்திய கடவுளை வழிபட்டு பிறவிப் பயனைப் பெறாதவன் மனிதனாகமாட்டான். ஆகையால் எப்படியும் கடவுளை வழிபட்டே தீரவேண்டும். இதற்காகவே சிவபெருமான் வேதம், ஆகமம் முதலிய வைகளை அனுக்கிரகஞ் செய்திருக்கிறார், ஆகையால் அவ்வேதாகமங் களிற் கூறிய முறைப்படி புண்ணிய வழியில் நின்று பசு,பதி, பாசங்க ளைத் தெரிந்து, சிவத்தை அடைவதற்கு மிகவும் எளிதான சைவ சம யாசாரத்தைக் கைக்கொண்டு அன்புடன் அநுஷ்டிப்பதே சிறந்த வழி பாடாகும். அவற்றுள் ஓம் சிவயநம என்னும் மந்திரமே எல்லா மந்தி ரங்களினுஞ் சிறந்ததாகும். அம்மந்திரத்தால் பராசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி, ஞானசத்தி, சிவம் என்பவர்களையும் அவர் களா லடையக்கூடிய சித்தி, பத்தி, முத்திகளையும் அடையக்கூடும். அன்றி வித்தினின்று விருக்ஷந்தோன்றி அனந்தமாகக் கிளைப்பது போல், அம்மந்திரத்தினின்றே வேதாகமும், உலகுயிர்களும், பிறவுந் தோன்றியது. இம்மந்திரத்தை யுணர்ந்தவர்களே எல்லாம் உணர்ந்த வர்களாகும். அதை யார் தெரியாதிருக்கிறார்களோ அவர்கள் சூரிய னில்லாவிடில் கண்ணொளி யெப்படி இல்லையோ அதுபோல் அறிவற்ற நடைப்பிணங்களே யாவார்கள். அன்றி ஆணவம், மாயை, கன்மம், ஜீவர்கள், ஆன்மா என்னும் அறுதி நித்தியப்பொருள்களை விளக்கு வனவாகிய இந்த ஓம் சிவய நம என்னும் மந்திரத்தை உத்தம பக்த பக்குவிகளுக்கல்லாமல் மற்றவர்களுக்கு உபதேசிக்கக்கூடாது. ஒருக் கால் உபதேசித்தால் உபதேசித்தவரும், உபதேசம் பெற்றுக்கொண்ட வரும் நகரத்தையே அடைவார்கள் இதனை முப்பிறப்பிற் செய்த புண் ணியவான்களல்லது மற்றவர்கள் அடையமுடியாது. அன்றி அம்மந் திரப் பொருளைக் கூறும் நூற்களுமில்லை,

ஏ முனிபுங்கவா! ஜாதி, குலம், பிறப்பு, இறப்பு, தன்மை, நாமம் ரூபம் முதலிய யாதுமின்றி, எல்லாப் பொருள்களினும், எவ்விடங்களி னும், எள்ளினுள் எண்ணெய்போல் பிரிவின்றி நிறைந்து விளங்கும் சிவபெருமானவர் மாயாமலத்தாற் கட்டுண்டுகிடக்கும் ஆன்மகோடி கள் தம்மை தெரிந்து வழிப்பட்டுக் கடைத்தேறவேண்டு மென்னுங் கருணையால் நானாவித மூர்த்தி பேதங்களாகவும், இலிங்க மூர்த்தமா

கவும் சகள ரூபமுற்று எழுந்தருளி யிருக்கின்றார், அவரைப் பூசிப்ப தனால் சர்வ கர்ம பாவங்களும் ஒழிந்து வேண்டிய போக பாக்கியங்க ளைப் பெறலாம். அப்படி பூசிப்பதற்கு மந்திரம் ஓம் சிவாய நம: என் பதேயாகும். அதை எதைக்கொண்டு பூசிப்பதென்றால்,

முன்னர் தேவர்களும் அசுரர்களுங்கூடி திருப்பாற்கடல் கடைந் தபோது அப்பாற்கடலினின்று உண்டாகிய அமுர்தமும்,பால்,தயிர், வெண்ணெய், நெய், கோமயம் என்பவைகளிலிருந்து முறையே வில் வம், தாமரை, நீலோற்பலம், செந்நெல், சந்தனம் கோரோசனை முத லியவைகளும், அவைகளினின்று தோன்றிய பலபொருள் * களையும் கொண்டு பூசித்தல் வேண்டும். அவ்வாறு பூசிப்பவர்கள் இகத்தில் உத்தமமாகிய மனைவி, மக்கள், செல்வம், கீர்த்தி, ஆயுள், சுற்றம், நோயில்லாமை முதலிய இகபோகங்களை யனுபவித்து, அதன்பின் சிவகணங்களாகி தங்கள் விசேஷத்த பக்தியின் பலனாக சிவத்தோடு இரண்டறக்கலந்து பிறவா முத்தியை அடைவார்களென்பது சத்தி யம். இத்தகைய புண்ணிய சிலர்களின் சுற்றமும், அவர்களது இருபத் தோர் தலை முறைகளும், இவர்களைத் தரிசித்தவர்களும, சிவபூஜைக்கு உதவி புரிந்தவர்களும், அவர்கள் சரித்திரத்தை எழுதியவர்களும், அதைப்படித்தவர்களும், படித்ததைக் கேட்டவர்களும், அதை எழு தச் சொன்னவர்களும், கேட்கச் சொன்னவர்களும், இவைகளுக்குத் துணையாயிருந்தவர்களும் சிவசாரூப்ய வாழ்வை யடைவார்கள். இவ் விதம் சிவபெருமானை புரத்தில் வைத்து பூசிப்பதன்றி அந்த அன்பின் வழியாக நின்று அகத்திலும் வைத்து போக பூஜையாகச்செய்வோர் கள் பெருமையையும், அதன்மேல் குணங்குறி கடந்த ஞான பூஜை யாகச் செய்யும் சிவஞானிகளின் பெருமையையும் யாரால் சொல்ல முடியும், முடியாது.*

உடனிருந்து கேட்பவர்களுக்கு இடையூறு செய்வோர்களுக்கும் குதர்க்கிகளுக்கும், பொறாமை கொள்வோருக்கும், வேதம் முதலிய சாஸ்திரங்களைப் பழிக்கும் பாவிகளுக்கும், தாழ்ந்த மரபினர் எழுதிய நூல்களில் ஜாதிகாரணமாக அந்நூலினையும் அவமதித்து அச்சாத்திர பலனை அனுபவியாதவர்களுக்கும், அஞ்ஞானம் அகலாதவர்களுக்கும், தாங்கள் கற்றறியாத பக்குவிகளுக்குக் கூறாதவர்களுக்கும், தெரிந்தபெரி யோர்கள் உரைக்கமாட்டார்கள். மேலான ஞானத்தை தங்கள் குரு

---

தணிகை பு. அகத்திய னருள்பெறு ப. 157.

* "ஆதலா லெனி லுறவவ் வாறு மருவிய பொருள்களும்"

மரபில் சொல்லத் தக்கவர்கள் இல்லாத பக்ஷத்தில், அப்பரம்பரையில் வந்தவர்களிடத்தில் கேட்டுத் தெளிதல் தக்கதாகும். இதரவகையில் கேட்பது தகாது, அப்படி கேட்கத் தொடங்கும்போது, கடவுளையும், ஆசாரியனையும் வணங்கி ஓர் மண்டபம் அலங்கரித்து, கொடி, தோரணம், தீபம், முதலியவைகளைத் தூக்கி, அம்மண்டபத்தில் சிவபெருமான் திருவுருவப் பிர்திஷ்டைசெய்து, தூபதீப, நைவேத்ய ஆராதனைகளுடன் நியமமாகயிருந்து, அங்கு ஓர் சிம்மாசனத்தின் கண் கேட்கப் புகும் * சிவபுராணத்தை அமைத்து சிவபெருமானைப் பூசிக்கும் முறைமைப்போலவே சர்வோபசாரங்களுடன் பூசித்து பலவிதமாக தானதருமங்களைச் செய்து, அதிதி முதலியவர்களுக்கு அறுசுவையோடுகூடிய உணவுகளைக் கொடுத்து அநந்தரம் † அஷ்டாங்க, பஞ்சாங்க, திரியாங்க ஏகாங்க மென்னும் முறைமைப்படி ஆசாரியனைப் பணிந்து ‡ அவ்வாசாரியனை சிவபெருமானென்றே பாவித்து சந்தனம், புட்பம், புட்பமாலை முதலியவைகளால் பூசித்து, கிழக்கு முகம் நோக்கிய உயர்ந்த சித்திர பீடத்திலிருக்கச் செய்து, சிவபுராணத்தைக் கூறும்படி பிரார்த்தித்தல் வேண்டும்.

---

தணிகை பு. அக அரு. ப. 166-ம் கவி.

"சென்னிதா ளிருகன் னங்கள் திருமுகம் வாய்பு யங்கள்
என்னுமோ ரெட்டுஞ் சென்னி யிருகர முழந்தா ளைந்து
நன்னிலந் தோயத் தாழ்ந்து நயந்துபி னதற்குப் பாங்கர்
மன்னுமூங் கோயிலாக்கிக் குரவனை வழிபா டாற்றி"

சிவதரு மோத்தரம்.

"புத்தகத்தினைப் பூசை புரிகிலார்
சித்தவ கூர்தரத் தேசிகன் றன்னையும்
அத்தகைப் பல னிவ்வுநே தன்றியுங்
கொத்தை சேர்நிர யக்குழி கூடுவார்"

உபதேச காண்டம்.

"ஏசறு புராண காதை படித்திடுந் திசைப் போர்க் கென்னி
வாசன மளித்துப் பூவாற் சாந்தத்தா லவர்க்கு வேண்டும்
பூசனை யிய ற்றியன்னோர் பூருவ நோக்கி லைக
மாசறு சரிதை கேட்போ ரிருப்பது வடக்கு நோக்கி"

கையேடு வாசிக்கப்புகும் மாணாக்கன் ஆசாரியன் கொடுக்கும் புத்தகத்தை பய, பக்தி, சிரத்தையோடும் வாங்கி, திருச்சிற்றம்பலம். என்று ஆரம்பித்து எழுத்துப்பிழை, சொற்பிழை, அபசுரம், பராமுகம், வேறுசிந்தனை யொன்றுமில்லாமல் வாசிக்கவேண்டும். அதன்றி ஆரம்பித்த விஷயத்திற்குத் தக்க இராகத்தில், அதற்கேற்ற சுதியில் எல்லோருக்கும் கேட்கும்படியாக வாசித்தல் வேண்டும். வாசித்தமுடிவில் திருச்சிற்றம்பலம் என்றுகூறி கும்பிட்டு வணங்கி முடித்தல் வேண்டும்.

அச்சிவபுராணத்திற்கு பொருளை விளக்கிக்கூறும் ஆசாரியன் கிழக்குநோக்கி, சிவத்தியானபரனாய் திருச்சிற்றம்பல மென்றெடுத்து, காப்புக்கூறி, கேட்பவர்களுக்கு சொல்பவர்மேல் அன்புண்டாகவும், நீக்கமின்றி ஈஸ்வரபக்தி பெருகவும், கல்வி ஞானங்கள் வளரவும், ஆசாரம் உண்டாகவும் வேண்டுமென்னும் ஞாபகத்தோடு, இனிய மொழியும், மலர்ந்த பார்வையும், கனிந்த உள்ளமும், தெளிந்த கல்வி கேள்வி ஆராய்ச்சியும் எவர்க்குங் கேட்கத்தக்க தொனியும் உடையவராய்க் கூறல்வேண்டும். விஷயப்போக்கு எச்சுதியில், எவ்விராகத்தில், எந்த சந்தற்பத்தில் நடைபெறுகிறதோ அவைகளை மாறாது வசனித்தல்வேண்டும். சிவபுராணக்கருத்தை இன்றியமையா விடங்களில் விரிவாகவும், விளக்கமாகவும், எளிய நடையாகவும், அலங்கரித்துக்கூறல் வேண்டும். இடையில் பரியாசவாக்கியம், அனாவஸ்ய உபமானங்கள், டம்பகதைகள், பயனிலாப்பாடல்கள் முதலியவைகளை உபயோகிக்கக் கூடாது. கேட்பவர்கள் வேறு சிந்தனைகளை அணுகாதபடி இடையிடையே சிவ நாமோச்சாரணங்களை கூறும்படிச் செய்து, அவர்களை பக்தியானந்த வசத்தில் இருக்கச் செய்தல் வேண்டும்.

* சிவபுராணத்தைக்கேட்பவர்கள் முழுகி, தோய்த்துலர்ந்த வஸ்திரத்தோடு, சிவசின்னதாரிகளாய், சிவபக்தியுடன், ஆசாரபரராய், பந்து சிநேகர்களோடு காலப்போல் வந்து, புராணிகரை சிவனாகப் பாவித்து * கும்பிட்டு, வினயத்துடன் எதிர்முகமாக சித்திரப்பதுமைப்போல மௌனமாக அசைவற குப்பிட்டுக்கொண்டிருந்து கேட்டல் வேண்டும். புராணிகர் இடையிடை கட்டளை யிடுவதுபோல்

---

சைவசமயநெறி.

* "படிக்கும் பொழுது பணிகுரவன்றாள்
முடிக்கும் பொழுது முயன்று."

சிவ நாமோச்சாரணஞ் செய்தல்வேண்டும் † புராணங்களெல்லாம் வேத சாரமாகையால், வேத வித்துவாயுள்ள ஞானியாயிருந்தாலும் புராணமென்றால் அதனைப் பலமுறையும் கேட்பதே மேலான தருமமாகும், அப்படி கேட்பவர்கள் கேட்கும்போது அச்சபையோருக்கு விரோதமானவைகளைச் செய்யக்கூடாது. ‡ புராணம் நடக்கும்போது இடையில் எழுந்துபோவாரும், சிரிப்போரும், குதற்கிப்போரும், வேறு விஷயங்களைப் பேசுவோரும், புராணத்தை அவமதிப்போரும், தூங்குவோரும், படுத்தபடி கேட்போரும், காலை நீட்டிக்கொண்டிருப்போரும், பொறாமை கொள்வோரும், வேறுபொருள் கற்பிப்போரும், புராணம் பொய் என்போரும், உயர்ந்த ஸ்தானத்தில் உட்கார்ந்திருப்போரும், தாம்பூலம், தரிப்பவரும், கைகால் வாய் அலம்பாமல் அவமதிப்பாய் உட்காருவோரும், கையைக் கட்டிக்கொண்டு கேட்போரும், குத்துக்காலுடன் உட்கார்ந்திருப்போரும், இடையிடையே சிவநாம தியானம் செய்யாதவர்களும், அழுக்காடையுடன் இருப்பவரும், லாகிரி செய்திருப்பவரும், சிவபுராணத்தை அரைகுறையாகக் கேட்பவரும், பகை, பழி, பாவம், நோய், அனுசாரம், தரித்திரம், விசனம், என்பவைகளில் அழுந்தி மீளாத துக்கத்தை அனுபவித்து முடிவில் நரகத்தை அடைவார்கள். பின்பு பிறந்து மலைப்பாம்பு, பன்றி, நாய், கழுதை முதலிய கொடிய பிறவிகளைப் பெற்று கஷ்ட மடைவார்கள்.

---

சூத சம்மிதை.

† ஆரண முழுது முணர்ந்தவே தியனே யாயினுஞ் சிவபுராணத்தி
னேரணிப் பொருளை யுணர்ந்தில னாயினிலங்குமவ் வேதமற்றவனை
தாரணி யிடத்து நம்மைவஞ் சித்தோன் றனெனவே நனியஞ்சும்
பூரண மறைப்பொருளாதலி னதனைப் புராணத்தாற் றெரிதரல் வேண்டும்

உபதேச காண்டம்.

‡ "அறந்தரும் சிவபுராண மோதுறு மவைய கத்து
பிறங்கு வெள்ளிலை நுகர்பவர் பிறமொழி பகர்வார்
உறங்குகின்றவர் நீட்டுறுங் காலின ருவற்றறைத்
திறம்பு பொய்மையென் றுரைப்பவர் களிபடச் சிரிப்போர்."

பிரமோத்தர காண்டம்.

"ஆன்ற காதையின் மேல்விருப் பற்றவர்
தோன்று மூற்கதைப் பொய்யென் றுரைப்பவர்
மூன்று கோடி நரகத்தின் மூழ்கியே
நான்ற நாவுடை நாய்ப்பிறப் பெய்துவார்."

இதன்றி * சிவபுராணத்தைக் கூறுவோர்கள் எக்குலத்தவராயினும், எத்தொழிலைச் செய்பவராயினும் சிவபக்தி, அடியார் பக்தி, குருபக்தி முதலியவைகளிற் சிறந்தவராயிருப்பின் அவர்களைத் தெய்வமென்றே பாவித்தல்வேண்டும். அன்றி சிவபுராணத்தை இடையில் விடாது. ஆதிதொடங்கி அந்தம்வரையில் கிரமமாகக் கேட்கவேண்டும். புராணம் முடிந்ததும் புராணிகருக்கு ஆடையாபரணம், தாம்பூலம் தக்ஷிணை முதலியவைகளைக் கொடுத்து புராணத்துடன் மங்கள வாத்தியத்துடன் வீதி வலஞ்செய்வித்தல் வேண்டும்.

அன்றி, சிவ சாத்திரங்களை வாசிப்பவர்களும், படிப்பவர்களுக்கு உதவி செய்வோரும், கேட்பவரும், புத்தகதானஞ் செய்வோரும், வீட்டில் வைத்துப் பூசிப்பவரும், சிவபூஜை செய்தபலனையே யடைவார்கள்.

இதன்றி ஏ அகத்திய! ஆலயங்கள், கோபுரம், திருமதில், மண்டபம், நந்தவனம், தடாகம், சோலை, சாலை, மடைப்பள்ளி, மடம் முதலியவைகளைச் செய்பவர்களும், செய்பவர்களுக்குத் துணையாயிருப்பவர்களும், செய்யத் தூண்டுவோர்களும் இம்மை மறுமைப்பயன்களை ஒருங்கே அனுபவித்து பிறவாப்பெருமுத்தியைப் பெறுவார்கள், என்று அரக்கர்கள் உயிரைக்கவரும் வேலாயுதத்தை தாங்கிய குமாரக் கடவுள் கூறியதன்றி மேலான தரும மார்க்கங்களையும் சரியை, கிரியா, யோக, ஞானங்களையும், வேதாகம வழிப்பாட்டின் பலன்களையும் கிரமமாக கூற அகத்திய மகாமுனிவர் யாவுங் கேட்டுத் தெளிந்து, பலமுறை பணிந்து பலகாலம் அத்தணிகாசலத்தின்கண் இருந்து பிறகு பொதியமலையை அடைந்து தமிழை வளர்த்து வந்தனர் என்று சூத புராணிகர் நைமிசாரணியமுனிவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளினர்.

---

* பிரயோத்தர காண்டம்.

"எக்குலத்தவ ராயினு மீர்ஞ்சடை
முக்க ணன்கதை யோது முதல்வனை
மக்க ளுள்ளிவ னும்மக னென்பவர்
கக்கு வாய்ப்புழுக் காஞ்சிறு நோய்க் கொள்வார்."

# ஸ்ரீ பரிபூரண நாமப் படலம்.

காப்பு.

அறுசீ ராசிரிய விருத்தம்.

உடையானே யாறுமுகப் பெருமானே
யுலகுயிரா யனைத்து மாட்டும்
விடையானே தொழுதேத்தும் வேதியனே
வேதமெலாம் விளம்பினானே
கடையானென் பிறவிகெடக் கண்டவருட்
கடலேயெந் தணிகைச் செவ்வேற்
படையாயெம் பெருமானே வுனையலதோர்
பற்றுமிலைப் பாலிப் பாயே.

ஆலயமே காயம், அறிவே சிவலிங்கம், அன்பே திருமஞ்சனம். சகித்தல் சாந்தம் என்பவைகளே புஷ்பம், பிராணனே நைவேத்யம் எனக்கொண்டு சதாநிஷ்டைசெய்யும் ஞான சொரூபிகளாகிய நைமிசாரண்ய முனிவர்காள்! இதுவரையில்: குமாரக்கடவுள் கும்பமுனிக்கு அநுக்கிரகஞ் செய்தவைகளிற் சிறிது ஒருவகையாய்க் கூறிவந்தேன் இனி ஸ்ரீ பரிபூரண நாம சரித்திரங்களைக் கூறிவருகின்றேன் கேட்பீர்களாக.

முன்னே ஒரு கற்பத்தில் சாகத்தீவில் ஒரு அரசன் இருந்தான், அவன் பெயர் பிரபாகரன், அவன் மனைவியின்பேர் சுகுமாரி, இவர்களுக்கு சூரன், பதுமன், சிங்கன், தாரகன் என நான்கு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுக்குத் தகப்பனாகிய பிரபாகரன் சகல வித்தைகளையுங் கற்பித்து, இந்நால்வரையும் இராச்சியத்தை ஆளும்படி முடிசூட்டி வைத்துவிட்டு தன் நாயகியோடும் தவஞ்செய்வதற்காகக் காட்டிற்குப் போய்விட்டான். அதன்பின் அந்நால்வரும் அரசாட்சி செய்துகொண்டிருக்கிறபோது ஒருகால் அகத்திய மகாமுனிவர் அவர்களிடத்திற்கு வந்தனர். அவர்களுள் சூரன் பதுமன் என்னும் இரு அரசர்களும் அகத்தியரை வணங்கி ஆனந்தங் கொண்டார்கள். அகத்தியர் அந்த சூரன் பதுமன் என்னும் இருவரையும் வாழ்த்தி அவர்களுக்கு ஸ்ரீ ஞான சண்முகக்கடவுளின் அனந்த நாம கல்யாண குணானுபவங்களைக் கூறினர். அடுத்து ஒருநாள் திருணபிந்து என்னும் மக

ரிஷி அவ்விடத்திற்குச் சென்று சிங்கன், தாரகன் என்னும் இருவரு க்கும் காளியின் மகாத்மியத்தையும், ஹரிஹர புத்திர னென்னும் ஐய ஞர் பெருமையையும் கூறினர். இவைகளைக்கேட்ட அந்நால்வரும்

"மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்
தானிடத் தைந்துமாடு மரன்பணிக் காகவன்றோ"

எனத்துணிந்து தங்கள் அன்பு மேலிட்டால் சூரனும் பதுமனும் கோழிக்கொடியும், மயிலுமாகவும் சிங்கமுகாசூரன் காளியின் வாகன மாகவும் தாரகன் ஐயனுருக்கு யானைவாகனமாகவும் கருதி அந்த க்ஷணத்திலேயே அந்நால்வரும் தங்கள் மைந்தர்களை இராச்சிய பரி பாலனஞ் செய்யும்படி ஏற்பாடு செய்துவிட்டு கயிலாயகிரியை அடை ந்து நாற்பதினாயிரம் வருடம் வரையில் தவஞ் செய்துக்கொண்டிருந் தார்கள்.

இவ்வாறிருக்குங்கால் அக்கைலாயத்தின்கண் ஸ்ரீ ஞானசண்மு கக் கடவுளின் வாகனமும், கொடியுமாக வுள்ள மயிலும், சேவலும் சிவபெருமான் தரிசனைக்காகச் சென்று, செல்லும் வழியில் தவஞ் செய்துக்கொண்டிருக்கும் மயில், கோழி, சிங்கம், யானைகளாகிய சூரன், பதுமன், சிங்கன், தாரகன் என்பவர்களை நோக்கி நீங்கள் எதற்காகத் தவஞ்செய்கின்றீர்கள் எனக் கேட்க, அதற்கவர்கள் முறையே முருகக்கடவுள், ஐயனுர், காளி என்பவர்கட்கு வாகனமாக தவஞ்செய்கின்றோம். என இதைக்கேட்ட மயிலும், கோழியும் ஓகோ நமது பதவியைக் கைக்கொள்ளு மாறல்லவா தவஞ்செய்கின்றார்கள். எனக்கோபித்து அந்நால்வரையும் பூதகணங்களாருகவெனச் சபித் துச் சென்றதுகள். அப்படியே அந்நால்வரும் பூதகணங்களாகி சிவ பெருமான் திருப்பணிகளைச்செய்து கொண்டிருந்தனர். இவ்வாறிருக் குங்கால் ஓர் சமயம் தேவர்களுக்கும், இராக்கதர்களுக்கும் ஓர் யுத்த முண்டாயின. அப்போது சிவகணங்களுஞ் சென்றன. அவர்களோடு பூதகணங்களுஞ் சென்று யுத்தஞ்செய்தன. இவைகளைத் தெரிந்த இராக்ஷசத் தலைவன் சிவபெருமானிடஞ் சென்று நடந்தவைகளை முறையிட்டனன். இவைகளைக் கேள்விப்பட்ட கருணாநிதியாகிய சிவ பெருமான் கோபித்து, அப்பூத கணங்களை அழைத்து நீங்கள் நமது உத்திரவின்றி இராக்கதர்களைத் தாக்கினமையால் நீங்களும் அசுரர்க ளாருக வெனச் சபித்தனர். அவ்விதமே பூதகணங்கள் இராக்கதர்க ளாயினர்.

இஃதிவ்வாறிருக்க, பின்னர் ஓர்நாள் திருமால் முதலிய தேவர்கள் முருகக்கடவுள் தரிசனைக்காகச் சென்றபோது, தங்கள் தங்கள் வாகனங்களை வேறோரிடத்தில் நிறுத்திவிட்டு முருகக்கடவுள் சந்நிதானத்துட் சென்றனர். அக்கால் அத்தேவர்களது வாகனங்களாகிய கருடன் முதலியவைகள் தங்களைப் பணியா திருப்பதைக்கண்ட முருகக்கடவுளது மயிலும், கோழியும் கோபமுற்று அவ்வாகனங்களோடு யுத்தஞ்செய்து, அவைகளைக்கொன்றதோடு வைகுந்த முதலிய பதவிகளையும் அலங்கோலமாகச் செய்தன. இவைகளைத் தெரிந்த குமாரக்கடவுள் கோபித்து அம்மயிலையும், கோழியையும்நோக்கி நீங்கள் இராக்ஷசர்களாகக்கடவது எனச் சபித்துவிட்டு, அத்தேவர்களுக்கு அபயாஸ்தம் கொடுத்து, அவரவர்களது வாகனங்களை யெல்லாம் எழுப்பிக்கொடுத்து வைகுந்த முதலிய அவர்களது பதவிகளையும் பழையபடியமைத்துக்கொடுத்து அனுப்பினர்.

நிற்க, முன்சிவபெருமானாற் சாபத்தையடைந்த சூரன், பதுமன் சிங்கன், தாரகன் என்னும் நால்வருள் காசிபமுனிவர் மனைவியாகிய மாயையின் கருப்பத்தில் சூரன், பதுமன் என்னும் இருவரும் சூரபதுமன் என்னும் பெயரால் ஓரே உருவமாகவும் சிங்கன் சிங்கமுகாசுரனெனவும், தாரகன் தாரகாசுரனெனவும் இருநூறுயிரம் வெள்ளம் இராக்ஷச சைனியங்களோடு பிறந்து தாயின் கட்டளைப்படி, தங்கள் குருவாகிய சுக்கிரபகவானிடம் மிருத்துயஞ்ச மந்திரம் உபதேசிக்கப்பெற்று பெரிய ஓர் யாகஞ்செய்யக் கருதி 1008-யாககுண்டலங்களை ஏற்படுத்தி அதன்மத்தியில் யூபஸ்தம்பம் நாட்டி அதன்மேலிருந்து பதினுயிரவருடம் கடுந்தவஞ்செய்து, சிவபெருமானிடத்தில் ஆயிரத்தெட்டண்டங்களுக்கும் ஏகசக்ராதிபத்தியமும், இந்திர ஞாலத்தேரும் ஆக்ஞாசக்கரமும், சிங்கவாகனமும், பாசுபதமும், வச்சிர சரீரமும் கொடுக்கப்பெற்று • அவ்வப்பிரசாதத்தால் சேனைகளோடு திக்குவிசயமாகப் புறப்பட்டு, வைகுந்தம், சத்தியலோகம், அளகாபுரி, அமராபதிமுதலிய தேவலோகங்களை யெல்லாம் நாசப்படுத்தி, அங்குள்ள செல்வங்களை யெல்லாம் கைக்கொண்டு, அத்தேவர்களை யெல்லாம் சிறைப்படுத்தி, தேவமயனுல் சமுத்திர நடுவில் வீரமகேந்திரம் முதலிய பல நகரங்களை யுண்டாக்கி, சிம்மாசனுதிபதியாய் ஆயிரத்தெட்டண்டங்களையும் ஏகபோக சக்ராதிபத்யஞ் செய்துகொண்டு, எண்ணிறந்த பக்கரோடு வாழ்ந்திருந்தார்கள், அக்கால் தேவர்கள் அசுரர்களின் வாதனையினுல் துயருற்றிருந்தனர். இதனைக்கண்ட இந்திரன்


மிகவும் வருந்தி தேவர்களோடும் புறப்பட்டு திருக்கயிலாயத்தையடைந்து அங்கு சிவபெருமான் தக்கயாகத்தின் காரணமாக பர்வதராஜன் புத்திரியாக வளர்ந்துகொண்டிருக்கும் பார்வதியாரின் பொருட்டும் ஜனகாதியர்களுக்கு ஞானத்தை உணர்த்தும் பொருட்டும் கல்லால விருக்ஷ நீழலில் தக்ஷிணாமூர்த்தமாக எழுந்தருளி யிருப்பதைத் தெரிந்து, அக்கயிலையின் ஒரு பக்கத்தில் அப்பரமேஸ்வரனை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்தான், இதனைத் தெரிந்த சிவபெருமான் இந்திரன் தவத்திற்கிரங்கி அவன்முன்தோன்றி ஹே இந்திரா நீ அஞ்சவேண்டாம் நமக்கோர் புத்திரன் தோன்றுவான் அவனால் சூரபத்மனாதியோர் வலியிழந்தொழிவார்கள் தேவர்களும், நீயும் அவரவர்களுடைய பதவிகளில் சுகமே வாழ்வீர்கள் எனக்கூறிச் சென்றனர்.

இதனைக்கேட்ட இந்திரன் மிகவும் சந்தோஷமுற்று எந்த காலத்தில் சிவன் யோகத்தினின்று எழுந்திருப்பது? எப்போது கலியாணஞ் செய்துகொள்வது? எந்தநாள் அவர் புத்திரனைப் பெற்றுக் கொடுப்பது எந்தகாலம் நாம் சுகப்படுவது என்று பிரம விஷ்ணுக்களிடம் தெரிவித்து, அவர்கள் ஆலோசனையின்படி, சிவபெருமான் யோகத்தைவிட்டு, மோகத்தையடையும்படி இந்திரன் மன்மதனை ஏவினன் மன்மதன் தேவர்களுக்கிரங்கியபடி சிவபெருமான்மீது புஷ்ப பாணங்களை யேவி சிவபெருமானது நெற்றிக்கண்ணினால் எரிக்கப்பட்டு இறந்தனன். பின்னர் சிவபெருமான் திருமணஞ்செய்துகொள்ளத் தலைப்பட்டு, தேவர்கள் கூட்டம் அங்கு அதிகரித்ததினால் வடவரை தாழக்கண்டு அகத்தியரைப் பொதியமலைக் கனுப்பிவிட்டு திருமணம் முடிந்து பார்வதியாரோடு எழுந்தருளியிருக்குங் காலத்தில், இந்திரனும் மற்றதேவர்களும் சிவபெருமானிடம் சென்று முறையிட, சிவபெருமான் தனது ஐந்துமுகமும் அதோமுகமுமாகிய ஆறுமுகங்களோடு எழுந்தருளி, அவ்வாறுமுகங்களிலுள்ள ஆறு நெற்றிக் கண்களிலும் ஆறு நெருப்புப் பொறிகளைச் சிந்தி. அப்பொறிகளை வாயுதேவனையும் அக்கினிதேவனையுங்கொண்டு கங்கையில்விட, அப்பொய்கையில் அப்பொறிகள் ஒன்றாகூடி ஆறுமுகமும் பன்னிருகையுமாகி விளையாடிக்கொண்டிருந்தன. அங்கு தேவர்களெல்லாம் ஒன்றாகூடி தோத்திரஞ் செய்துகொண்டிருந்தார்கள். பின்பு அம்முருகக்கடவுள் ஒரு தாமரை மலர்மேல் ஒரு குழந்தையாகி வளர்ந்துகொண்டிருந்தன. இதனைக்கண்ட தேவர்கள் கார்த்திகைப்பெண்களறுவரை யழைத்து இக்

குழந்தைக்குப் பாலூட்டுகவெனக்கூற, அப்பெண்கள் இசைய, முருகக்கடவுள் ஆறு வேறு வேறு குழந்தையாகி அந்த அறுவரிடத்திலும் பாலுண்டு, ஒருகுழந்தை விளையாட, ஒருகுழந்தை தூங்க, ஒரு குழந்தை பாலுண்ண, ஒருகுழந்தை அழ, ஒருகுழந்தை சிரிக்க, ஒரு குழந்தை மவுனமுற்றிருக்க. வெவ்வேறு திருவிளையாடல்களைச் செய்துகொண்டிருந்தனர்.

இதிவ்வாறிருக்க, சிவபெருமான் தீப்பொறிகளைச் சிந்தியதைக் கண்ட பார்வதி பயந்தோடினள், *ஓடுங்கால் அம்மையார் காற்சிலம்பினின்று ஒன்பது மணிகள் சிந்தின, அம்மணிகளைச் சிவபெருமான் உற்றுப் பார்த்ததும் ஒவ்வொரு மணியிலுமிருந்து ஒவ்வொரு பெண்கள் தோன்றி சிவபெருமானை நோக்கிய மாத்திரத்தில் ஒன்பதுபேரும் கருப்பவதிகளானார்கள் அப்பெண்களைக்கண்ட பார்வதியார் அவர்களை நெடுநாளளவும் கருப்பத்துடனிருக்கக் கடவீர்களெனச் சபித்தனர். இதைக்கேட்ட அவ்வொன்பதுபேரும் அச்சமுற்று உடல் வியர்த்தனர். அவர்கள் வியர்வையினின்றும் இலக்ஷக்கணக்கான வீரர்கள் உதித்தனர். இவைகளைச் சிவபெருமான் முருகக்கடவுளுக்குப் படைகளாகக் கட்டளையிட்டனர்.* பின்னர், பார்வதியாருக்குக் குற்றேவல் செய்திருந்த நவசக்திகளும் நெடுநாள்சென்று தங்கள் நாபியின் வழியாக நவவீரர்களைப் பெற்றனர். இந்த நவவீரரையும் இறைவன் முருகக்கடவுளுக்குத் தம்பியர்களாயிருக்கக் கட்டளையிட்டனர்.

அதன்பின் இறைவன் சரவணப் பொய்கையிலுள்ள குமாரக்கடவுளைக் கொண்டுவரும்படி பார்வதியாரை யனுப்ப பார்வதியார் அந்த ஆறுகுழந்தைகளையும் எடுக்க, அக்குழந்தைகள் ஆறும், ஆறுமுகமும், பன்னிருகையும் ஒருடம்புமாகக் கூடிக் கந்தப்பெருமானாகவிளங்க, பார்வதியார் உடனே தமது, ஸ்தனங்களிற் சுறந்த பாலை கிண்ணத்திற் கலந்து ஊட்டி சிவபெருமானிடங் கொண்டுபோய்க் கொடுத்து சிவபெருமானது இடபாகத்திலிருந்தனள். இறைவன் திருக்குமாரரை மத்தியிலுட்காரவைத்து சோமாஸ்கந்த மூர்த்தமாயிருந்தனர். பின்னர் தேவர்களெல்லாந் திடுக்கிடும்படி அளவிறந்த திருவிளையாடல்களைச் செய்திருந்தனர். இவைகளைக்கண்ட பார்வதியார் இறைவனை வணங்கி நமது திருக்குமாரன் அற்புதத் தன்மையைக் கூறவேண்டுமென் றிறைஞ்சச் சிவபெருமான் கூறுகின்றார்; ஏ பெண்ணே!



குமாரககடவுள உற்பத்தி.

இம்முருகக்கடவுளை கங்கையில்விட்டதால் காங்கேயனென்றும், சரவணப்பொய்கையில் வளர்ந்ததால் சரவணபவன் என்றும், கார்த்திகைப்பெண்களின் முலைப்பாலுண்டதால் கார்த்திகேயன் என்றும், ஆறு உருவும் ஒருவமாகக் கலந்தமையால் கந்தனெனவும் கூறுவதாகும். இக்குமரன் நமது அனுதியான அறுமுகமே ஆறுமுகமாகக்கொண்டுள்ளவன். அம்முருகன் நமது சத்திபாதலால் நம்மைப்போல சர்வ சக்தியும் வாய்ந்தவன். இவன் நம்மைப்போல வேண்டுவார் வேண்டிய போகபாக்கியங்களை உதவும் கடவுளாவன். எனக்கூறக்கேட்ட பார்வதியார் அக்குமரன் திருவிளையாடல்களைக் கண்டு ஆனந்தமுற்றிருந்தனர்.

குமாரக்கடவுளோ கடல்களை ஒன்றுய்ச் சேர்ப்பதும், மலைகளை பெயர்த்து ஒருமிக்கச் செய்வதும், சக்ரவாளகிரியை பாதலத்தழுந்துவதும், கங்கையை அடைப்பதும், அஷ்டமா நாகங்களை மலைகளில் கட்டி இழுப்பதும், வடவாமுகாக்கினியை அவிப்பதும், சூரிய சந்திரர்களை இடமாற்றுவதுமாக யாராலுஞ் செய்தற்கரிய வீரச்செய்கைகளை விளையாட்டாகச் செய்வதோடு, எதிர்த்த இந்திரன், வருணன், வாயு, குபேரன், சூரியன், சந்திரன் முதலினோரையும் மூர்ச்சித்து விழச்செய்தனர். இவைகளைத் தெரிந்த நாரதர் தூண்டுதலால் பிரகற்பதிபகவான் வேண்டுகோளுக்கிரங்கி குமாரக்கடவுள் அத்தேவர்களை எழுப்பிக்கொடுத்து தனது விஸ்வரூபத்தையும் அத்தேவர்களுக்குக் காட்டியருளி அத்தேவர்கள் வேண்டியவாறு தம்மால் நிலைகுலைந்து கிடந்த அண்ட அடுக்குகளும், அஷ்டகுலாசலம், அஷ்டநாகம், முதலியவைகளும் பழையபடி நிலைபெற நிறுத்தினர். இவைகளைக்கண்ட இந்திரன் தேவமயனைக்கொண்டு கைலைமலைக் கருகிலிருந்த ஓர் மலையில் ஒரு உயர்ந்த கோயிலை உண்டாக்கி, அச்சந்நிதானத்தின்கண் குகப்பெருமானை எழுந்தருளச்செய்து, அபிஷேக ஆராதனைகளைச்செய்து தேவர்களோடு வணங்கி எம்பெருமானே! எங்களைத் தேவரீரது சேனைகளாகக்கொண்டு அசுரவாதனைகளைப் போக்கி காத்தருளவேண்டுமென வணங்க, குமாரக்கடவுள் ஆகுகவெனக்கூறி, தேவசேனாபதி என்னும் திருநாமத்தைப் பெற்றுப் போயினர். அம்மலையைக் கந்தமாதான மெனக் கூறுவர்.

இதன்றி கலையின்கண் நாரதர் சிவப்பிரீதியாக ஓர் யாகஞ்செய்ய, அந்தவேள்வியினின்று ஓர் செம்மறி ஆட்டுக்கடா தோன்றி அனே

கரை வருத்துவதைக்கண்ட தேவமுனிவர்கள் பிரார்த்திக்க, குமாரக் கடவுள் அத்தக்கரை வாகனமாகக் கொண்டு அத்தேவர்களையும், முனிவர்களையும் காத்தனர்.

அதன் பின்பு ஒருநாள் மற்றைத் தேவர்களோடு சிவதரிசனார்த்தம் கைலைக்குச் செல்லும் தேவர்கள் முருகக்கடவுளை வழிப்பட்டுச் செல்ல, தான்மாத்திரம் அவமதித்துச்சென்றமையாலும் அப்பிரமன் பிரணவத்திற்குப் பொருள்கூறத் தெரியாதிருந்தமையாலும் குமாரக் கடவுள் அம்மலர்மகனைக் குட்டிச் சிறையிலிட்டதன்றி, அவன் செய்யுஞ் சிருட்டித் தொழில்களையும் தாமே செய்து வந்தனர்.

அப்பால் குமாரக்கடவுள் தம்மை வழிப்பட்ட அகத்தியருக்குப் பிரணவப் பொருளையும், பதிநூலையும் உபதேசித்தருளினார். பின்னர், திருமால் புத்திரிகளாகிய சுந்தரி அமுதவல்லி என்னும் இருவரும் குமாரக்கடவுளுக்கு நாயகிகளாக வேண்டுமென்னும் இச்சையோடு தவஞ்செய்ய, முருகக்கடவுள் எதிரேவந்து நீங்கள் இந்திரனுக்கும், சிவமுனிவருக்கும் புத்திரிகளாகி வருவீர்கள். அக்கால் நாம் வந்து மணஞ்செய்துக் கொள்வோமென வரங்கொடுத்துவிட்டு, பார்வதி பரமேஸ்வரரிடஞ் சென்றிருந்தனர். அவ்வாறிருக்குங்கால் இந்திரன் முதலினோர் சிவபெருமானிடஞ்சென்று சூரபன்மனாற் படுந்துயரைத் தெரிவிக்க, சிவபெருமான் இளைய பிள்ளையாரை அழைத்து ஏகாதச உருத்திரர்களைப் படைகளாகக்கொண்டு, உனது தம்பிமார்களுடனும், மற்றைய சேனைகளுடனும் சென்று இராக்கதர்களை ஒழித்து, தேவர்களைக் காப்பாயாக எனக் கட்டளையிட்டு, வேலாயுதத்தைக்கொடுத்து அனுப்பினர். குமாரக்கடவுள் அக்கட்டளையை ஏற்று, வாயுதேவனை சாரதியாகக்கொண்டு பூதவெள்ளஞ் சூழ்ந்துவரப் புறப்பட்டனர். அவ்வாறு வரும்வழியில் கிரவுஞ்சகிரியைக்கண்டு நாரதமுனிவரால் அதன் உண்மை தெரிந்து, வீரவாகுதேவரை யனுப்ப வீரவாகுதேவர் தாருகாசூரனை யெதிர்த்து அவனது மாய ஜாலங்களையும், அவனது சைனியங்களையும் நாசப்படுத்தி, அத்தாரகனை கயிற்றாற் கட்டிக் கொண்டு வரத் தலைப்பட்டபோது, அவ்வசுரன் கிரவுஞ்சகிரியின்கண் மறைய, அக்கிரவுஞ்சகிரி தனது மாயையால் வீரவாகுதேவரை மயங்கிவிழச்செய்தன. அச்சமயம்பார்த்து தாரகன் வேறு வேறு தேரிலேறிச் செல்வதைக்கண்ட தேவர்கள் குமாரக்கடவுளிடம் தெரிவிக்க, கந்தப்பெருமான் தாமே சேனைகளோடு சென்று தாரகனையும், அவனது மாயைக்குட்பட்ட கிரவுஞ்சகிரியையும் வேலாயுதத்தை விட்டுப்

பிளந்து வீரவாகுதேவர் முதலிய வீரர்களையும் பிழைத்தெழச்செய்து, குமாரக்கடவுள் தமது சேனாசமுத்திரங்களோடு புறப்பட்டு சிவபெருமா னெழுந்தருளிய பலதலங்களையும் தரிசித்தபடிச் சென்று மண்ணியாற்றங்கரையை அடைந்து அன்றிரவு கடந்து காலையிலெழுந்து சிவபெருமானைப் பூசித்து, அப்பரமேஸ்வரன் கொடுத்தருளிய சர்வசங்காரப்படையைக் கைக்கொண்டு, திருச்செந்தூரை யடைந்து வீற்றிருந்தனர்.

அவ்வாறிருக்குங்கால் முன் தேவர்களுக்கு கொடுத்தருளிய வரத்தையும், சிவபெருமான் கட்டளை யிட்டதையும், அசுரர்களின் தீய செயல்களையும் யோசித்து வீரவாகு தேவரை குமாரக்கடவுள் அனுப்பிவைத்தனர். வீரவாகுதேவர் மகேந்திர நகரை நாடிச் சென்று இடையில் பிலத்துளழுந்திக் கிடந்த கந்தமாதன மலையை மீளவெழுந்து தோன்றச்செய்து, இலங்கைக்கு அருகிற் செல்ல, அவ்விலங்கையைக் காவல்காத்திருக்கும் அதிவீரனைக்கொன்று, மகேந்திர நகரையடைந்து. அந்நகரைக் காவல்செய்யும் கயமுகன் என்னுஞ் சூரனைக் கொன்று, அம்மகேந்திரபுரியில் சிறைப்பட்டுள்ள இந்திரகுமாரனாகிய சயந்தன் மனதைத் தேறுதலடையச்செய்து, சூரபத்மன் அரசாக்ஷி செய்யும் கோட்டையை அடைந்து, அவனது அரசாட்சியின் பெருமையையும், அவனது வீரப்பிரதாபங்களையும், மற்றவைகளையும் பார்த்துக்கொண்டே வீரவாகுதேவர் சூரபதுமன் சமீபமாகச்சென்றனர். இவரைக்கண்ட சூரபதுமன் அடேய்! நீயார்? அற்பமாகிய நீ இங்கே எப்படி வந்தனை? எனக் கோபிக்கத் தொடங்கினன். இதனைக்கண்ட வீரவாகுதேவர் ஏ சூரபதுமனே! நான் சிவகுமாரராகிய முருகக்கடவுள் அனுப்பிய தூதன், நான் இங்கே ஏன் வந்தேனென்றால்! நீ வெகு காலமாய் இந்திரகுமாரன் முதலிய அனேக தேவர்களைச் சிறையிலிட்டு வருத்துகின்றனை. அத்தேவர்களைச் சிறையினின்று விட்டுவிடுவாயாக. அன்றேல், உன் தம்பி தாரகன்கதி தெரியுமல்லவா? அதைப் போல் நீயும் உன்னைச்சார்ந்தோரும் கணப்பொழுதில் இறப்பீர்களென்பது நிச்சயம். முன்னர் சலந்தரன் முதலிய உன் குலத்தலைவர்கள் தேவர்களை எதிர்த்து குலத்தோடும் அழிந்தது தெரியுமல்லவா? அவைகளைக் கவனிப்பாயாக. முருகக்கடவுளை யாரோவென நினைக்க வேண்டாம். அவர்தான் சர்வ காரணரும், சர்வ வல்லபருமென் அறிவாயாக. என முருகக்கடவுளின் பெருமையைப் பலவாறு எடுத்துக் கூறியும் சூரபதுமன் கேளாது வீரவாகுதேவரை நோக்கி கேவலம் நீயா எனக்குப் புத்திசொல்பவன்? அந்த அற்பனாகிய சிறுவனோ

என்னை வெல்லுவன்? இத்தேவர்களைச் சிறைவிடுவேனாகில் என் வீரத்தின் பெருமை உலகில் என்னாகும்? மற்றுள்ள தேவர்களையும் சிறையிட விருக்கின்றேனாகையால் எவரையும் சிறை விடுவிக்கமாட்டேன். என் தம்பியாகிய தாரகனைக் கொன்ற பழிக்குப்பழி வாங்கச் சித்தமாயிருக்கிறேன். நீயோ தூதாக்வந்தவன் உன்னைக்கொல்வது நியாயமல்ல. நீ உடனே போய்விடுவாயாக. சற்று தாமதிப்பாயாகில் உயிரை யிழப்பாய். என, இதைக்கேட்ட வீரவாகுதேவர் கோபமுற்று அடா சூரபன்மனே! அறிவற்றவனே! நீ உய்யும்வகையைக் கூறினால் எம்மையும் குமாரக்கடவுளையும் அவமதிக்கின்றாய், முருகக்கடவுள் எல்லாத்தேவர்களுக்கும், சகல உலகங்களுக்கும், சராசரங்கட்கும் தலைவனும் அவைகளை இயக்குவோனும், அவைகளாகவும், யாவுங் காணப்படாதவனும், வேதாகமமெல்லாம் கூறும் தலைமைத் தனிப்பெருங்கருணைத் தெய்வமாகவும் உள்ளவன். அம்முழுமுதற்கடவுளை அற்பமாகப்பேசுகின்றாய் அவ்விருமாப்பை இக்கணமே காட்டுகிறேனென்னக்கூற, இதனைக்கேட்ட சூரபதுமன் தன் அருகிருந்த ஆயிரம் அசுரர்களையும் நோக்கி இவ்வீரவாகுவைச் சிறையிடுங்களெனக் கூறினன். உடனே அவ்வசுரப்படைகள் வீரவாகுதேவரை நெருங்கினர். இவர்களைக் கண்ட வீரவாகுதேவர் அவ்வாயிரவரையும் தமது ஒருகிருக்காத்தாற் பற்றி நிலத்தில் அறைந்து கொன்றனர். இதனைக்கண்ட சூரபதுமன் அருகிருந்த மகாவீரனாகிய சதமுகனைநோக்கி நீ இலக்கம் வீரரோடு சென்று அந்த வீரவாகுவாகிய அற்பனைக் கட்டிக்கொண்டுவருவாயாக. எனக்கட்டளையிட்டனன். அவ்வாறே சதமுகன் இலக்ஷம் வீரர்களோடு எதிரேவந்தான். வீரவாகுதேவர் அவ்விலக்க அசுரர்களோடு சதமுகனையும் கொன்றனர். இவைகளைக்கண்ட மற்றைய அந்நகரத்துள்ள இராக்ஷசர்களெல்லாம் திரண்டெழுந்து வீரவாகுதேவர்மேல் கதை, தோமரம் முதலிய பல ஆயுதங்களைப் பிரைபோகித்தார்கள். அவர்களையெல்லாம் வீரவாகுதேவர் மிதித்தும், நசுக்கியும், உதைத்தும், அறைந்தும், கசக்கியும், ஒருமிக்கக் கொன்று குவித்ததன்றி, அச்சூரபன்மனது அரசிருக்கை மண்டபம், கோட்டை, நகரம் முதலியவைகளையும் அழித்து, பின்னர் சூரபதுமன் ஏவவந்த சகத்திரவாகுவையும், அவனோடுவந்த இலக்ஷக்கணக்கான அசுரசேனைகளையும் எமபுரம் அனுப்பி விட்டு பின்பு எதிர்த்து வந்த சூரபதுமன் குமாரனாகிய வச்சிரவாகு என்பவனையும் அவனது சேனாசமுத்திரத்தையும் நாசப்படுத்திவிட்டு, மாலைக்காலம் வரக்கண்டுமகேந்திரத்தை விட்டு ஆகாயமார்க்கமாய், தனது விஸ்வரூபத்துடன் வீரவாகுதேவர்

இலங்காபுரியை யடைந்தனர். அந்நகரைக் காவல்செய்திருந்த யாளிமுகன் கண்டு தன் சேனைகளோடுவந்து எதிர்த்தனன். வீரவாகுதேவர் அந்த யாளிமுகனது ஆயிரந்தலைகளையும், ஆயிரக்கைகளையும் தனது கையினால் வெட்டித்தள்ளிக் கொன்றதோடு, அவனது இராக்கத சேனைகளையும் நாசமாக்கிவிட்டு, இலங்கையைக்கடந்து கந்தமாதனத்தோடு கடலையுந்தாண்டி திருச்செந்தூரை யடைந்து எதிர்கொண்ட பூதகணங்களுக்கும், இலக்கத்தொன்பதின்மருக்கும், மற்றைத்தேவர்களுக்கும் ஆனந்தக்களிப்பையுண்டாக்கி சண்முகப்பெருமான் சந்நிதியை அடைந்து நடந்தவைகளை முற்றும் கூறி நின்றார்.

ஸ்ரீ ஞான சண்முகப் பெருமான் வீரவாகுதேவர் கூறியவைகளைச் செவியேற்று தேவர்களைநோக்கி நாம் வீரவாகுதேவரையனுப்பி தேவர்களைச் சிறைவிடுத்து நீயும், உன் இனத்தவரும் சுகமே உயிர் வாழலாமெனச் சொல்லியனுப்பியும் சூரபதுமன் கேளாது இருமாந்திருக்கின்றானதலால், அச்சூரபன்மனை இனிக்கொன்று, தேவர்களைச் சிறைமீட்பதே தகுதியாம். ஆதலின் நாளையதினமே போருக்கெழுந்தருள்வோமெனக் கூறினர் வீரவாகுதேவர் இந்திரனைக்கண்டு சயந்தன் முதலினோர் செய்திகளைக்கூறி மனதைத் தேற்றினர்.

பின்னர் சூரபன்மன் தன்குமாரனாகிய வச்சிரவாகு வீரவாகுதேவரால் உயிர்துறந்ததைக்கேட்டுவருந்தி, ஒற்றரையனுப்பி பிரமனையழைத்துவாருங்களென, பிரமன் தேவர்கள் சார்பிலிருக்கின்றானென அவர்கள்கூற, வேறோர் அண்டத்திலுள்ள பிரமனையழைத்து முன்னினுஞ் சிறப்பாக தனது நகரையும், கோட்டை, முதலியவைகளையும் அலங்கரித்துக்கொண்டு பழையபடி சிம்மாசனாதிபதியாய் வீற்றிருந்தான்.

அதன்பிறகு சூரபன்மனது ஏவலை மேற்கொண்டு சிலதூதர்கள் திருச்செந்தூரையடைந்து ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளையும் அவர் சேனைகளையுங்கண்டு மீண்டுவந்து இறைவனே! திருச்செந்தூரில் பூதப்படைகளோடும், அப்படைத்தலைவராகிய நூற்றெண்மரோடும், இலக்கத்தொன்பது வீரர்களோடும் சண்முகச்சிறுவன் திருச்செந்தூரிலிருந்து கொண்டு ஒரு தூதனை யனுப்பினான். அந்தத்தூதன் நமது மகேந்திர நகருக்கு வந்ததல்லாமல் வரும் வழியில் யாளிமுகனையுங் கொன்று இலங்கையையுங் கடலையுங் கடந்துபோனான். இனி அந்தக் குமாரநாயகன் இங்கேவந்து போர் செய்யவும் எண்ணியிருக்கின்றான். இது வுண்மையென்று சொல்லி நின்றார்கள்.

அதைக்கேட்ட சூரன், தன் மந்திரிமார் சுற்றத்தார் படைத் தலைவர் முதலானவரை வரவழைத்து அவர்களை நோக்கிச் சொல்வானாயினன் எப்படியென்றால், தேவர்களை நான்சிறைசெய்தசெய்தியை இந்திரன் பரமசிவனிடத்திற்சொல்லி முறையிட்டான். அந்தப்பரமசிவன் ஒருபுதல்வனைத்தந்து அவனைநோக்கி, நீபோய்த் தேவர்களைச் சிறைவிடுத்துவாவென்றனுப்ப, அப்பாலகன் மண்ணுலகையடைந்து தாரகனையும் கிரவுஞ்சமலையையும் தன் கைவேலாற்பிளந்து செந்தூரில் வந்திருப்பதன்றி என்னிடத்திற்கும் ஒரு தூதனையனுப்பினன். அந்தத்தூதன்வந்து இங்கிருந்த சிலவீரரைக்கொன்று இந்தநகரையுமழித்தான். இதைநோக்குமிடத்து என் ஆண்மை செல்வம் ஆயுள் முதலியயாவும் அழிந்தொழிந்தனவேயன்றோ? விவேகிகள் தமக்கு நன்மையைத் தெரிவிக்கிற மந்திரிமார், சுற்றத்தார் முதலியவர்களோடு யோசிக்காமல் ஒருகாரியத்தையும் செய்யமாட்டார்கள். ஆகையால் நான் உங்களை வரவழைத்தேன். உங்கள் கருத்தென்னவென்று கேட்க, அதற்கு மேதியன் என்பவன் விடைசொல்லலாயினன், எப்படியென்றால் அவுணர்க்கரசே! கிரவுஞ்சமலையையும் உன் தம்பியாகிய தாரகனையும் கொன்றபோதே நீபோய் அக்குமரனை வெற்றிகொண்டுவரவேண்டும். அதுசெய்யாது தாமதித்ததனால் இவ்வளவு அனர்த்தங்கள் நேரிட்டன. இப்பொழுதும் நமது நகரையும் சில வீரரையும் அழித்துப்போன தூதனுக்கு இறைவனாகிய சண்முகச்சிறுவனைப் போர்செய்து வெல்ல முயலாதிருத்தல் தகுதியன்று ஆதலால் விரைந்து போர்செய்ய முயலவேண்டுமென்றான்.

இவ்வாறு மேதியன் சொல்லிமுடித்ததும், துர்க்குணன் என்பவன் வந்து வணங்கி, நீயொரு சிறியபாலகன்மேற் போவது அழகன்று. உன்படைத்தலைவரையேவி, அந்தச் சண்முகச்சிறுவனை வென்று மேம்பாட்டையடைவதே உத்தமம் என்று சொல்லிமுடித்தான்.

இப்படி துர்க்குணன் சொல்லிமுடித்ததும், தருமகோபன் என்னும் மந்திரிவந்து நீயொரு சிறுபாலகனோடு போர்புரிய வெண்ணுவது தகுதியான காரியமன்று; நமது படைத்தலைவர்களிலொருவனையனுப்பினால் அவன்போய் அந்தப் பாலகனை வென்றுவருவான் இதுதான் நீ செய்யவேண்டிய காரியமென்று சொன்னான்.

இவ்வாறு தருமகோபன் சொல்லி முடித்தவுடனே காலசித்து என்னும் பெயருள்ள வேறொருமந்திரிவந்து வணங்கி, அரசனே! திருச்செந்தூரிலிருக்கின்ற அந்தக்குமரன் இங்குவந்தால் இரண்

டொரு வீரரையேவி அவனை வெல்லலாம். இதற்கு இவ்வளவு மந்திராலோசனையும் வேண்டுமோ, எனக்குக் கட்டளையிட்டால் நான் போய் அச்சிறுவனையும், அவனோடுவந்த பூதப்படைகளையும் கட்டிக் கொண்டு வருவேனென்று சொல்லி முடித்தான்.

அதன் பிறகு, சண்டன் என்னும் மந்திரியானவன் வந்து வணங்கிநின்று, ஐயனே! இந்தச் சிறுவனை வெல்வதற்கு நீ மந்திராலோசனையுஞ் செய்யவேண்டுமோ? எனக்கு விடைகொடுத்தால் இக்கணமே போய் அக்குமாரனையும் அவனுக்கு உதவியாய்வந்த பூதப்படை முதலியவற்றையும் வென்று வருவேனென்றான.

அதன்பிறகு, அனலி, சிங்கன் முதலிய மந்திரிமாரெல்லாம் அவ்வாறே யெடுத்துச்சொல்ல, பானுகோபன் வந்து வணங்கி, ஐயனே! கிரவுஞ்சமலையையும் என் சிறிய தந்தையாகிய தாரகனையும் அந்தச் சிறுவன்கொன்ற அப்பொழுதே என்னை ஏவினால் அவனையும் அவன் படைகளையும் ஒருநொடியில் அதம்பண்ணிவந்திருப்பேன். அப்படிச் செய்யாமல் சும்மாயிருந்துவிட்டு இப்பொழுது மந்திராலோசனை செய்வது உனது அறியாமையின் காரியமேயாம். இப்பொழுதாயினும் எனக்கு விடைதந்தனுப்பினால் அவர்களை எல்லாம் போர்செய்து வென்று என் பாசத்தாற் கட்டிக் கொண்டுவந்து உன்னெதிரே விடுவேன் என்று சொல்லி முடித்தான்.

அப்போது அருகேயிருந்த வேறொரு குமாரனாகிய இரணியனெழுந்து வணங்கி! இச்சிறுவனை வெல்லும்பொருட்டு நீ மந்திராலோசனை செய்வதும் வீணேயாம். என்தமையனாகிய பானுகோபனை யனுப்புவதும் வீணேயாம், என்றான். அக்கினிமுகாசுரன் என்னும் மற்றொரு மகன் வணங்கி நின்று என்னை யனுப்பினால் அந்தப் பாலகன் முதலிய எல்லாரையும் வென்றல்லது இங்கு வரவேமாட்டேன், எனக்கு விடைதரவேண்டுமென்றான்.


அதைக்கேட்ட சிங்கமுகாசுரன் தன் தமையனாகிய சூரபன்மன் முகத்தை நோக்கி, அண்ணா உன் மந்திரிமாரும் உன்மக்களும் சொல்லும் வார்த்தைகளைச் செவியேற்று வீணாயழியவேண்டாம். அந்தக் குமரனைச் சிறுவனென்றிகழத்தகாது. அவன் பரமசிவனது நெற்றிக் கண்ணில் உதித்தவன். அவனால் நமது குலமுழுதும் நாசமடையும். இந்த அநர்த்தங்களெல்லாம் தேவர்களாலே உண்டாயின. ஆகையால் தேவர்களைச் சிறைவிட்டாயானால் குமாரநாயகன் இங்கேவந்து நம்

மோடு போர்செய்ய நினையான். நமது சிறுபிழையையும் தன்னுளத்திற்கொள்ளமாட்டான். நான்சொன்னபடி நடந்துகொள்வது உனக்குத் தகுதியும் பெருமையுமாமென்று சொல்லிமுடித்தான்!

இப்படிசொன்ன சிங்கமுகாசுரனைச் சூரபன்மன்பார்த்து அதிக கோபத்தோடு நகைத்துத் தலையசைத்து, அடாதம்பி! நான் பரமசிவனைநோக்கித் தவஞ்செய்து ஆயிரத்தெட்டண்டங்களையு மாளும் அரசுரிமையும், பெருஞ்செல்வமும், ஒருவராலும் அழிக்கப்படாத வச்சிரதேகமும் பெற்றிருக்கிறேன். இச் சிறுவனுக்கோ நானஞ்சித் தேவர்கள் சிறையினை விடுப்பேன் போபோவென்றான்.

அதைக்கேட்ட சிங்கமுகன் மீண்டும் சூரனைநோக்கி, அண்ணா! இங்கே வந்திருப்பவன் பாலகனென்றெண்ணிப் பேசுவது உன் அறிவின்மையை தெளிப்படுத்துகின்றது. நீ கடுந்தவஞ்செய்ததனால் உனக்கு அளவிறந்த செல்வம் ஆயுள் முதலியவற்றை யருள்செய்த பரமசிவனே இந்தப் பாலருமாய் வந்திருக்கின்றான், ஏனெனில், நீ தரும மார்க்கத்தைவிட்டுத், தேவர்களையெல்லாம் வருத்துகின்றாயாதலால் உன்னை வேரோடு களையவே வந்திருக்கிறான். நீயுன் செல்வப் பெருக்காலும் அவிவேகத்தாலும் இவ்வாறு கண்டபடி பேசுகிறாய் தேவர்களைச் சிறைவிடுத்து நீ பிழைக்கும்வழி தேடுவாயாகவென்று சொன்னான். இப்படி சிங்கமுகன் சொல்லுதலும் சூரபன்மன் தலையசைத்து, நீ எனக்குப் புத்திசொல்ல வேண்டுவதில்லை. நீ சிங்கமுகன் என்று பேர்படைத்திருக்கிறாய்; உன்னிடத்துள்ளது நரியின்குணமேயன்றிச் சிங்கத்தின் குணமன்று. ஆகையால் நீ பிரமன்போலப் பஞ்சாங்கஞ் சொல்லிப் பிழைக்கலாம், நீ உன் நகரம் போய்ச்சேரென்று கட்டளையிட்டான்.

அதன்பிறகு. சிங்கமுகாசூரன் திகைத்துநின்று, இவன் நமது சொல்லை யிகழ்ந்தான்; இவனது நன்மைக்கேதுவான சொற்களை நான்சொன்னால் அவற்றை யவமதித்தமையால் இவனுக்கு முடிவுகாலம் நேரிட்டுவிட்டது என்று தன்மனதில் தீர்மானித்துக்கொண்டு தலையசைகிய சூரனைநோக்கி. நான்செய்த பிழையைப் பொருத்தருள வேண்டும்; அந்தக் குமரன் இங்கே வருவானாயின், உடனே யெனக்குத் தெரிவித்தால் நான்வந்து போர்செய்து அவனைவென்று உனக்கு மகிழ்ச்சியை யுண்டாக்குவேனென்று சொல்லி விடைப்பெற்றுத் தனது நகரத்தையடைந்தான். சூரபன்மனும் தன்மக்கள் மந்திரிமார் முதலியவர்களை அவரவரிடங்களுக் கனுப்பிவிட்டுத் தான் பெருஞ் செல்வம் நுகர்ந்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தான்.



சூரபத்மன் வதை.

# சூரபன்மன் வதை.

ஸ்ரீ.

"நாரண னென்னுந் தேவு நான்முகத் தவ்னு முக்கட்
பூரணன் றானுமாகிப் புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேறு வாதியா யுயிர்கட் கெல்லாங்
காரண னாய மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம்."

முனிவர்களே! கேட்பீர்களாக. அப்பால் சூரியன் உதயமாயி னன். தேவதேவனாகிய இந்திரன் கட்டளைப்படி வாயுதேவன் இர தத்தைக்கொண்டு வந்து நிறுத்தினன். அரி பிரமேந்திராதி தேவர் கள் தத்தம் வாகனங்களில் ஏறிவந்தனர். பூத வீரர்களும் பூதவெள் ளத் தலைவர்களும், ஆரவாரித் தெழுந்தனர். பேரி, துடி, காகளம் முதலிய யுத்தவாத்தியங்களின் முழக்கம் அஷ்டதிசைகளிலும் அதிர்ந்தன. வானவர் மலர்மாரி பொழிந்தனர் யாவரும் கடலே வழியாகக் கொண்டனர். குமாரக்கடவுள் இரண்டாயிரம் பூதவெள்ளங்களுடன் ஆகாயமார்க்கமாகப் புறப்பட்டு இலங்காபுரியைக் கடந்து மகேந்திர நகரை அடைந்து அந்நகரம் பாபியாகிய அரக்கர்கள் வசிக்குமிடமாத லால், அவ்விடத்தில் தங்குவது கூடாதென நினைத்து, அதற்கடுத்த ஓரிடத்தில் தேவமயனைக்கொண்டு ஓர் பெரிய நகரத்தை உண்டாக்கி அதற்கு ஏமகூடம் எனப்பெயரிட்டு அதில் முருகக்கடவுள் தனது பரி வாரங்களுடன் எழுந்தருளினர்.

இவ்வாறு தேவதேவன் எழுந்தருளியிருக்க, நாரத மகாமுனி வர் சூரபதுமனிடம் சென்று, ஆசீர்வாதஞ்செய்து ஓ ராஜேஸ்வரா! நான் உனது குருவாகிய சுக்ராசாரிக்கு மிகுந்த அன்புடையவன். இராக்கதர்கள் க்ஷேமத்திலே அதிக சிரத்தையாயிருப்பவன். உமக்கு ஒன்று சொல்லவந்தேன். அதாவது உன்னிடமுள்ள தேவர்களெல் லாம் சிவகுமாரனாகிய முருகனிடம் சென்று உன்மேல் பலவித குறை பாடுகளைச் சொல்லிவருகிறார்கள். அம்முருகனே சிவபெருமான் உன்னை வெல்வதற்காக தமது நெற்றிக்கண்களிலிருந்துண்டாகிய அக் கினிப் பொறிகளில் தோன்றியவன் அவன்தான் மாயாபுரியில் உன் தம்பி தாரகனை கிரவுஞ்சகிரியோடுந் தொலைத்தவன். அவன்தான் பின்னர் உன்னிடம் பாலவீரவாகு வென்னும் தூதனையனுப்பினவன்.

அவனே இதோ இந்நகரத்திற்கு வடபால் பாடிவீடொன்று சமைத்துக்கொண்டு மிதமற்ற சேனைகளோடு எழுந்தருளி யிருக்கிறான் என்று கூறினர்.

இவைகளைக்கேட்ட சூரபதுமன் கோபாவேசமுற்று நாரதரே! நன்று கூறினீர். அந்தச் சிறிய பாலகனோ என்னை வெல்பவன்? என் தம்பி தாரகனை கிரவுஞ்சமலையோடு வென்ற பழிக்குப்பழி வாங்காது விடுவேனோ! சூரியனை தொட்டிலில் விளையாட்டிக்கொண்டிருந்த காலத்தில் பாய்ந்து சிறைப்படுத்திய என் மகன் பானுகோபனையனுப்பி அப்பாலகனான பகைவனையும் அவன் சேனைகளையும் வெற்றிகொள்வதை நீயே பாரும் என்று சூரபதுமன்கூற, நாரதர் சூரபதுமனை நோக்கி இதுதான் தக்கது. உன்யோசனை மிகவும் நன்றாயிருக்கிறது. தாமதிக்காமல் உடனே செய்வாயாக. உன் க்ஷேமத்திற்காக நானுந் தவஞ் செய்யச் செல்கின்றேன் என்று நாரதர் ஆகாயமார்க்கமாகப்போனார். உடனே சில தூதுவரோடிவந்து சூரபதுமனைக்கண்டு முருகக்கடவுள் பூதவெள்ளங்களோடு ஓர்பாசறையை ஏற்படுத்திக்கொண்டு இருக்கின்றனர். என்று கூறினார்கள்.

இப்பால் சூரபதுமன் தன் குமாரனாகிய பானுகோபனை யழைத்து அப்பா பானுகோபா. உன் சிற்றப்பனாகிய தாரகனைக் கொன்ற பால சண்முகன் கடலையும், இலங்கையையும் கடந்து தன் சேனாசமுகங்களோடு இந்நகரின் வடபால் வந்திருக்கின்றானாம். பிரமேந்திராதியரும் அவனைச் சூழ்ந்திருக்கின்றார்களாம். ஆஆ அவர்கள் அவ்வளவு எளிதாக இங்குவர நேர்ந்து விட்டதல்லவா? ஆயினும் குற்றமில்லை. நீ உடனே உன் சேனைகளோடு அக்குமாரனை வெற்றிக்கொண்டு வருவாயாக என்று விடைகொடுத்தனன் உடனே பானுகோபன் இதுதானா ஒருபெருங்காரியம் என்று வீராவேசத்துடன் யுத்தசன்னத்தனாய், ரதகஜ துரகபதாதிகள் புடைசூழ பல ராக்கதவீரர்கள் ஆரவாரிக்க ஜெயபேரி முதலிய வாத்தியங்கள் கோஷிக்க, பூமியதிரப் புறப்பட்டான்.

இதனைக்கண்ட நாரதமுனிவர் குமாரக்கடவுளிடஞ் சென்று ஜகதீசா! தேவரீர் சேனைகளோடு இங்கெழுந்தருளி யிருப்பதை சூரபதுமன் ஒற்றர்களால் கேள்விப்பட்டு தனது குமாரனாகிய பானுகோபனை தங்கள்மேல் போருக்கனுப்பி யிருக்கின்றான். பானுகோபனும் போர்க்கோலங்கொண்டு கடற்பெரும்படை சூழ்ந்து வருகின்றான்.

அவனை வெல்வோர் முக்கண்படைத்த முதல்வரும் தேவரீருமல்லது மற்றோரால் முடியாது. இவனை வெல்ல முடியாது திருமால் முதலினோரும் பயந்தோடினர். பலமாயைகளும் படைத்தவன். அவனை வேறு வீரர்களைக்கொண்டு வெல்லமுடியாது. என்று பானுகோபனது வீரச்செயல்களை யெல்லாம் எடுத்துக் கூறினன்.

பாலசுப்பிரமணியப்பெருமான் நாரதர் கூறியவைகளைக் கேட்டு, வீரவாகுதேவரை நோக்கி, நாம் பூதவீரர்களுடன் இங்கு வந்திருப்பதை தூதர்களால் சூரபதுமன்கேட்டு, தன் மகனாகிய பானுகோபனை நம்முடன் போர்செய்ய அனுப்பியிருக்கின்றான். நீ உடனே பூதவெள்ளங்களுடன் புறப்பட்டுப்போய், அப்பானுகோபனை சேனைகளுடன் வென்று வருவாயாக வெனக்கட்டளையிட, உடனே வீரவாகுதேவர் குமாரக்கடவுளிடம் விடைப்பெற்று இலக்கத்தெண்மர் தன்னைப் புடைசூழச் சென்று பானுகோபனை எதிர்த்து அடா பானுகோபா! நின் வரவுகண்டே குமாரக்கடவுள் என்னை யனுப்பினார். நீ என்னோ டெதிர்க்கலாம். என்ன, பானுகோபன் அடா! உன்னையும் தேவர்களையும் அந்த முருகனையும், கொல்லாமல் விடுவேனோ எனச் சபதங் கூறினன். இதற்குள் பூதவீரர்களும், அவுணவீரர்களும் ஆரவாரித்தெழுந்து சண்டை செய்தனர். இப்போரில் அவுணர்களுடைய பாணங்கள் ஒன்றுகூட பூதவீரர்கள்மேல் செல்லவில்லை. அன்றி அவுணவீரர்களே நாசமாயினர். இதற்குள் மேலுமேலும் குமாரக்கடவுள் அனுப்பும் சேனைகள் வந்து சேர்ந்துகொண்டே யிருக்கத் தலைப்பட்டது. இவைகளைப் பானுகோபன்கண்டு ஆக்னேயாஸ்திர முதலிய அனேக பாணங்களை பூதவீரர்மீது பிரையோகித்தான். இதைக்கண்ட பூதவீரருள் சிங்கன் என்பவன் ஓர் தண்டாயுதத்தைவிட்டு அப்பானுகோபனது தேரை அசையவொட்டாமல் நிறுத்தியதோடு, மகா வீரர்களாகிய அனலி, என்பவனையும், சண்டன் முதலினோரையும், மற்றப் பூதப்படைகள் சுமார் இரண்டாயிரம் வெள்ளம் இராக்ஷசப்படைகளையும் நாசமாக்கினர். இவைகளைக்கண்ட பானுகோபன் மிகவும் வருந்தி இனி நாம் சும்மாயிருப்பதிற் பயனில்லை. என்று வீராவேசத்துடன் புறப்பட்டு பூதவீரர்கள்மேல் சரமாரியாக தன் ஒற்றை வில்லைக் கொண்டே அம்புகளைப் பொழிந்தான். இவைகளைக்கண்ட பூதவீரர்கள் ஓகோ நமது இறைவராகிய முருகக்கடவுளும், வீரவாகுதேவர் முதலினோர்களும் பின்னணியி லிருக்கின்றார்கள். நாமே முன்னணி

யிலிருப்பவர்கள். இப்பானுகோபன் செய்திகளைச் சென்று கூறுவோம். என்று பூதவீரர்கள் குகப்பெருமானிடம் சென்றனர் உடனே சரவணப்பெருமான் தன்னருளால், புறப்பட்டு பலவகையாக யுத்தங்களைச்செய்து பானுகோபனது ரதம், புரவி, கொடி, படை, சேனை, முதலியவைகளை நாசமாக்கினர். இவைகளைக்கண்ட பானுகோபன் கோபமுற்று தனது மோகனாஸ்திரத்தை யெடுத்து மந்திரித்து விட்டனன் அதனால் பூதவீரர்களும், இலக்கத்தெண்மரும் மயங்கிச்சோர்ந்தார்கள். வீரவாகுதேவரும் புத்திதோன்றாது மயங்கி நின்றார் இந்நிலைமையைக்கண்ட பானுகோபன் இதுதான் சமயமென்று வில்லை வளைத்து பாணத்தைவிடுத்து கொல்லத்தக்கதென ஆரவாரித்தெழுந்தான் இதனைக் கண்ட கருணைக்கடலாகிய கந்தப்பெருமான் ஓர் அமோகாஸ்திரத்தை விடுத்து யாவரையும் மூர்ச்சைதெளியச் செய்தனர். வீரவாகுதேவர் முதலினோர் தயாநிதியாகிய சண்முகப்பெருமானது தன்னருளை வியந்து, பானுகோபனை எதிர்க்கத் தொடங்கினர். வீரவாகுதேவர் மிக்கக் கோபமுடையவராய் கடைசியாய்க் கொல்லத்தக்க ஓர் சிவாஸ்திரத்தை எடுத்து வில்லிற் றொடுத்தார். இதனைக் கண்ட பானுகோபன் ஓகோ நம்மை எதிர்த்துக் காணும் சேனைகளின் செய்கைகளெல்லாம் இறைவன் செய்கையாகவே காணுகின்றன. பூத வெள்ளங்களுள் ஒருவராவது நம்மால் இறக்கவேயில்லை. நமது அரசு வெள்ளங்களோ அப்பூதர்களால் தொலைந்தேபோயின. நமது வீர வித்தைகளும், மாயவித்தைகளும் வரப்பிரசாதமும் இவர்களிடம் செல்லவில்லை. இப்போதோ வீரவாகுதேவர் சிவாஸ்திரத்தை வில்லிற் றொடுத்துவிட்டார். அதனை விடுவாராகில் எப்படியும் நம்மைக் கொன்றேதீரும். என ஆழ்ந்த யோசனைசெய்து தனது மாயையால் மறைந்து புறங்காட்டி ஓடியே விட்டான். பூதப்படைகளும் இலக்கத்தெண்மரும் வெற்றி முழக்கத்துடன் சந்தோஷமாய் பக்த ரக்ஷகனாகிய பால சண்முகப்பெருமான் பக்கலிற் சென்று பகர்ந்தனர். அசுர வீரர்களில் உயிர்பிழைத்திருந்த சிலர் ஓடோடியுஞ் சென்று சூரபதுமனைக் கண்டு ஓ அசுரரே! தங்கள் திருக்குமாரராகிய பானுகோபன் யுத்தஞ் செய்து கொண்டே யிருந்து எங்கேயோ போய்விட்டார் தெரியவில்லை. பூதவீரர்களோ பானுகோபன் பயந்து புறங்காட்டிப் போயினன் என ஆரவாரித்துச் சென்றார்கள். சூரபத்மன் அன்றிரவு கடந்து மறுநாள் காலையில் ஆயிரம் வெள்ளம் அசுரப்படைகள் சூழ, சிவனிடம்பெற்ற சகல ஆயுதங்களையும் கொண்டு, ஆகாயமார்க்கமாய் ரதாரூடனாகப் புறப்பட்டான். இதனை இந்திரனால் குமாரக்கடவுள் தெரி

ந்து தமது பூதப்படைகளுடன் ரதாரூடராய் போர்க்களமடைந்தனர். இருதிறச் சேனைகளும் யுத்தத்தை நடத்தினர். பூதவீரர்கள் அவுணவீரர்களைக் கொன்று வெறுங்களமாக்கினர். இதனைக்கண்ட அதிகுரனை ஆயிரமாயிர இராக்கத வீரர்களுடனும், ஆயிரக்கணக்கான, ரத, கஜ, துரகங்களுடனும் வந்தெதிர்த்தனன். அவ்வரக்கனை உக்கிரனென்னும் பூதவீரன் போர்செய்து நமபுரம் அனுப்பினன். இதைத்தெரிந்த அசுரேந்திரன் தன் சேனாசமுகங்களோடு வந்து பூதவீரருள் கனகன், மத்தன், சிங்கன் முதலிய பலரைச் சாடினன், பூதவீரர்யாவரும் இளைத்தனர். இதைப்பார்த்த பூதவீரரில் தண்டகனென்பவன் போர்செய்து அவ்வசுரேந்திரனை விழச்செய்தனன் இவைகளைத் தெரிந்த இளயகுமாரனாகிய சோமுகனெழுந்தெதிர்த்து தண்டகனையும் மற்ற இலக்கத்தவரையும் சோர்வடையச்செய்து வீரவாகுதேவரை எதிர்த்தனன். வீரவாகுதேவர் நெடுநேரம் பலவகையாகப் போர்செய்து அச்சோமுகனைக் கொன்றனர்.

இதனைக்கண்ட சூரபதுமன் பூதவெள்ளத்தின்மேல் கோபாவேசத்துடன் எதிர்த்தனன். அதனால் சில பூதங்கள் இரந்தனர் சிலபூதர்கள் பலவித அலங்கோல மடைந்தனர். சில பூதர்கள் திகைத்தும், நொந்தும், சோர்ந்தனர். பின்னர் பூததலைவர்கள் எதிர்த்தனர், அவர்களையும் சூரபதுமன் அயரச்செய்தனன் பின்னர் நவவீரரில் வீரதிவாகரனென்பவனையும் வீழ்த்தினன், பின்னர் எதிர்த்த வீரராக்கதன். வீரமகேந்திரன் என்பவர்களையும் சின்னாபின்னஞ் செய்தான், இதனைக்கண்ட வீரவாகுதேவர் எதிர்க்க இவரையும் தேரின்மேற் சாய்த்தனன்.

இச்செய்கைகளை எல்லாமறிந்த சரவணோற்பவன் சூரபதுமன் எதிரேசென்று எதிர்க்க, அவர்வருவதைப்பார்த்த சூரபதுமன் முருகக்கடவுளைப் பார்த்து உன்னோடுவந்த சேனைகளெல்லாம் ஒழிந்தன. உன் சேனைத்தலைவனாகிய வீரவாகுவும் சாய்ந்தனன். நேற்றுப்பிறந்த பச்சைப் பசுப்பாலகனாகிய நீயோ என்னை வெல்லப்போகிறாய்? பாபம் உன் நகரையடைந்து உயிர்பெற்று வாழ்வாயாக எனக் கூறினன். இதைக்கேட்ட முருகக்கடவுள், உன்னைக்குலத்தோடும் வேர்களையாது போகிறவனல்லன். உன்சேவகத்தைக் காட்டுமென, சூரபதுமன் பலவித பாணங்களையும், வேல், ஈட்டி, முதலிய ஆயுதங்களையும்விட அவைகளையும், அச்சூரபதுமனது வில், தேர், சேனை முதலியவைக

ளையும் சேமத்தோர்களையும், அவனணிந்திருந்த மதாணிப்பதக்கம் முதலியவைகளையும் நாசமாக்கினர். இவைகளைக்கண்ட அவுணர்க ளெல்லாந் திரண்டு கோபாவேசத்துடன் வந்தெதிர்க்க, அப்பாப ராக்ஷச கணங்களை ஒரு சக்ராயுதத்தைவிட்டு வேரோடுங்களைந் தெறிந் தனர் இதனைக்கண்ட சூரபதுமன் குமாரக்கடவுள்மீது பிரமாஸ்திரம் விஷ்ணுவாஸ்திரம் என்பவைகளைவிட, அவைகளை முருகக்கடவுளது வேலாயுதம் ஒன்றே விழுங்கியது பின்னர் சூரன் சிவாஸ்திரத்தை விட, அதனைக் குமாரதேவர் தமது கையிற் பற்றிக்கொண்டு அச்சூர பதுமனுக்குப் பலவிதமாக இதோப தேசங்களைச்செய்ய, அதனைச் சூரன் கேளாது நாளையதினம்வந்து போர்செய்வோமென மாயமாய் மறைந்து தேவமயனைக்கொண்டு பழையபடி நகரத்தைச் சிருட்டித் துக்கொண்டு, மீண்டும் சேனைகளைத் திரட்டத் தொடங்கினன். சூரி யனும் அஸ்தமித்தனன். குமாரக்கடவுள் தமது சேனைகள் யாவரை யும் எழுப்பிக்கொண்டு பாசறையை யடைந்தனர்.

இவைகளைத்தெரிந்த பானுகோபன். பொழுது விடிந்ததும் மா யையை அடைந்து. தான் வீரவாகுதேவரால் மானமழிந்தவைகளைக் கூறி அழ இதனைக்கேட்ட மாயையானவள் விசனித்து கூறுகின்றாள்:-

"ஓவருந் தன்மையாலுயிர்கள் போற்றிடு
மூவரும் பகையெனின் முனிவர் தம்மொடு
தேவரும் பகையெனிற் சேணி லுற்றுளோர்
ஏவரும் பகையெனி னெங்ஙன் வாழ்தியால்"

"பிழைத்திடு கொடுநெறி பெரிதுஞ் செய்தலாற்
பழித்திறம் பூண்டனை பகைவ ரிந்நகர்"
அழித்தம ரியற்றிட வவர்க்குத் தோற்றனை
இழைத்திடும் விதியினை யாவர் நீங்கினார்" (ஸ்காந்தம்.)

வேதநெறியைக் கடந்தாய்; தேவர், முனிவர், சித்தர், தபசிகள், முத லிய எல்லோர்க்கும் இடுக்கணுண்டாக்கினாய்; மும்மூர்த்திகளையும் பகைத்தனை; உலகம் பழிக்க உட்படுத்தாய், பகைவர்களுக்குப் பயந்து புறமுதுகு மிட்டாய் உன்தலைவிதியை யார்தான் வெல்லக்கூ டும்? அடா என் மகனை சூரன்பெற்ற செல்வமே. உனக்கு வேண்டிய தென்னென, பானுகோபன் யாவையும் வெல்லக்கூடிய ஓர் படை வேண்டுமென, மாயையானவள் ஓர் மாயாஸ்திரத்தைச் சிருட்டித்துக் கொடுத்து குமாரக்கடவுளையும், அவரது தூதர்களையும் வாயுவேகமா

கச் சென்று உணர்வை யழித்துச் சுற்றும். இன்றைக்கு உனக்கே வெற்றியாம் எனக் கூறிச் சென்றாள். அம்மாயாஸ்திரத்தைப் பெற்று பானுகோபன் இருபதனாயிரம் வெள்ளம் சைனியங்களோடு வந்து எதிர்த்து வீரவாகு தேவர்மேல் பலபாணங்களையும், நாகாஸ்திரம், கருடாஸ்திரம் முதலிய தெய்வப்படைகளையும் யேவ, அவைகளனைத்தையும் வீரவாகுதேவர் கண்டித்து அசுரவெள்ளங்களை யெல்லாம் நாசமாக்கியதோடு அப்பானுகோபனது, தேர், படை, அம்பு, வில் முதலியவைகளையும் நாசமாக்கினர். இதையறிந்த பானுகோபன் மாயையினால் வானத்தில் மறைந்துகொண்டு மாயையினாற் கொடுத்திருந்த மாயாஸ்திரத்தைத் தியானஞ்செய்துவிட, அம்மாயாஸ்திரம் வீரவாகுதேவருடைய சேனைகளையெல்லாம் கட்டிக்கொண்டுபோய் கடலில் விட்டது. இதனைக்கண்ட நாரதர் சொல்லக்கேட்ட முருகக்கடவுள் வேற்படையைவிட அது கடலிற்கிடந்த வீரவாகுதேவர் முதலியவர்களை யெழுப்பி, மாயைப் படையின் வலியைக்கெடுத்து முருகப் பெருமான் திருக்கரத்தில் வந்து சேர்ந்தன.

வீரவாகுதேவர் பானுகோபன் தலையை அறியாமல் உயிர்வாழேனெனச் சாதங்கூறி குமாரக்கடவுளிடம் விண்ணப்பித்து, அச்சூரனது மகேந்திரநகரம் அழியும்படி ஆக்னேயாஸ்திரத்தையும், வாயுவாஸ்திரத்தையும் விட, அவ்வஸ்திரங்கள் அம்மகேந்திரம் பற்றியெறியும்படிச் செய்தன. இதனைக்கண்ட சூரபதுமன் சத்த மேகங்களையும் மழைபெய்யச்செய்து அவிப்பதைக்கண்ட வீரவாகுதேவர் வடவாமுகாக்கினி யஸ்திரத்தைவிட்டு சத்த மேகங்களும் விழுந்து கடலிற் புகச்செய்தனர். இதனைக்கண்ட சூரபதுமன் தன்மகனாகிய இரணியன் சமீபத்தில் மிக்கக் கோபத்தோடு நின்று யோசிக்கலாயினன்.

## இரணியன் யுத்தம்.

இவ்வாறு தகப்பனாகிய சூரபதுமன் ஆலோசிப்பதைப்பார்த்து, மனந்தாளாதவனாகி, அண்ணா!

"தேவரை நாஞ்சிறை செய்த தன்மையா
லாவது பாவமே யாக்கம் வேறிலை
யாவையு முணர்ந்திடு மிறைவ திண்ணமே
போவது நம்முயிர் திருவும் பொன்றுமால்"

நாம் தேவர்களைச் சிறையிட்டபாவமே நமது செல்வமாயின வல்லது வேறில்லை ஆகையால் நமது உயிர்களும், நமது செல்வங்களும் எப்ப

டியும் அழியத்தக்கதே யாம் நமக்கு வேண்டிய வரங்களையும், வாழ்வையும் கொடுத்தருளிய சிவபெருமானது அருமைத் திருக்குமாரன் மீது போருக்குச் செல்வது அழகேயல்ல. அம்முருகன் ஓர் பாலகன் என்று நினைப்பது பாவமாகும்.

"ஒன்றொரு பயன்றனை யுதவி னோர்மனங்
கன்றிட வொருவினை கருதிச் செய்வரேற்
புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூற்றும் வேண்டுமோ".

"கந்தனை யருள்புரி கடவு ளாணையைச்
சிந்தையில் மாறுகொள் சிறியர் யாவரும்
அந்தம தடைந்தன ரன்றி வன்மையா
லுய்ந்தன ரிவரென வுரைக்க வல்லமோ"

ஒருவர் செய்த நன்றியை மறந்து அவர்களுக்குத் தீமையைச்செய்வோர்களுக்கு அவர் செய்தநன்றியே எமனாக வந்து முடியும், அன்றி சிவபெருமான் திருவாணையை மறந்து அதற்குமாறாக நடந்த அற்பர்கள் அழிந்தொழிந்தனரே யல்லாமல் யார் உய்ந்தார்கள்? யாருமில்லை, அந்தக் குமாரக்கடவுள் யாரோவென்று எண்ணவேண்டாம். அவரோ

"வாசவன் குறையு மந்தண் மலரயன் குறையு மற்றைக்
கேசவன் குறையு நீக்கிக் கேடிலா வெறுக்கை நல்க
வாசிலோர் குழவி போலா யறுமுகங் கொண்டா னெண்டோ
ளீசனே யென்ப தல்லாற் பிறிதொன்றை யிசைக்கலாமோ"

இந்திரன், பிரமன், திருமால் முதலிய தேவர்களுக்கு நம்மால் நேர்ந்துள்ள குறையை நீக்கி, அவர்கட்கு வேண்டிய அழியாத வாழ்வையுங் கொடுத்து, சர்வ கோடி ஜீவராசிகளையும் கடைத்தேரச் செய்யும்பொருட்டு. ஆம்முழுமுதற் கடவுளாகிய பரமேஸ்வரனே ஆறு திருமுகங்களைக் கொண்ட ஓர் குழந்தையைப்போல் திருவிளையாடல் செய்கின்றானென் றறிவாயாக. அன்றி, அம்முருகனது திருவுருவம் இந்தக் குழந்தை வடிவுதானென் றெண்ணப்படுவதல்ல. அக்குமாரனோ,

"எண்டொகைப் பட்டவண்டம் யாவையும் புவனவைப்பும்
மண்டுபல் வளனு மேனை மன்னுயிர்த் தொகுதி முற்றும்
அண்டரும் மூவர் தாமும் அனைத்துமா கியதன் மேனி
கண்டிட விமையோர்க்கெல்லாங் காட்டினன் கந்தனென்பர்"

ஆயிரத்தெட்டண்டங்களும், இருநூற்றிருபத்து நான்கு புவனங்களும், அவைகளிலுள்ள பலவகைப் பொருள்களும், சர்வகோடி ஜீவாத்மாக்களும் தேவர்களும் அரபிரமேந்திரர்களும், மற்றவைகளும் தாமாக விளங்குவதைத் தேவதேவர்களெல்லாம் காணும் பொருட்டு கொண்ட கோலமாகும். ஆகையால் அச் சிவசண்முகத் தெய்வத்தை எதிர்த்து அழிவதைப்பார்க்கிலும் நாம் அனைவரும் அவரது திருவடியில் வீழ்ந்து, தேவர்களைச் சிறைவிட்டு, வணங்குவோமாயின் அக்குகப் பெருமான் மேலும் நம்மைக்காத்து வேண்டியவாழ்வும், வரமும், வளனும் உதவுவார் என்பதைக்கேட்ட சூரபத்மன் கோபமுற்று பலவிதமாகத் தூஷித்தனன். இதனைக்கண்ட சூரபத்மன் மகனாகிய இரணியன் அண்ணா அபசாரம். என்றுற்றெறிந்தேதோ சொன்னேன். அவைகளை மன்னிக்கவேணுமென்று குறையிறந்து சூரபத்மன் இஷ்டத்தின்படி யுத்த கோலத்துடன் அனேக சேனைகளோடு எதிர்த்து வீரவாகு தேவரால், தேர், படை, சேனைகள், முதலிய யாவு மிழந்து ஒன்றும் கூடாதவனாகி தன் மாயையினால் அருவமாய் மறைந்து மீனுருக்கொண்டு கடலில் ஒளிந்துக் கொண்டான். அன்றிரவு கழித்து செய்திகளைத் தெரிந்த சூரபத்மன் கோபங்கொண்டு தன் வேறொரு குமாரனாகிய அக்கினி முகனை யனுப்பினான்.

---

## அக்கினிமுகன் வதை.

அக்கினிமுகாசூரன் அனேக இராக்கத சேனைகள் சூழ மிக்க கோபாவேசத்துடன் போர்க்களமடைந்தான். அசுரப் படைகளும் பூதப்படைகளும் கைகலந்ததில் அவுணப் படைகள் அதோகதி யாயினர். மேகன், சோமன், முதலினோரோடு, அக்கினிமுகன் எதிர்த்து வீரவாகுதேவரால் நிரபராதியாய் நின்றான். அக்கால் தன்குலதேவியாகிய காளியை அக்கினி முகன் தியானிக்க, காளி பிரசன்னமாகி வீரவாகுதேவரை எதிர்த்து தம்மால் ஒன்றும் முடியாமல் அபயமிட்டேகியதன்றி, அவ்வீரவாகுதேவர் அவ்வக்கினிமுகாசூரன் தேர், வில், முதலியவைகளைப் பொடிபடச்செய்து தலையையும் அறிந்துத் தள்ளினார். இதைக்கண்ட அக்கினிமுகாசூரனோடுவந்த சில அவுணர்கள் கோபாவேசத்துடன் போர்செய்தொழிந்தனர். இப்போரில் வீரவாகுதேவர் தம்பிமார் எழுவரைக் காணாது, உக்கிரன் என்பவனால் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டு, கண்ணீர் சொரிந்து, தன் தம்பிமார்கள் எழுவரையும் உடனே அனுப்பும்படி எமனுக்கு ஓர் பாணத்

தில் எழுதி வில்லிற் பூட்டி யடிக்க, அப்பாணத்தைக் கண்ட எமன் உடனே அவ்வெழுவர் உயிர்களையும் தேடி கடைசியாகக் கைலாயத்திற் கண்டு படுகளத்திருந்த அவர்களின் உடல்களில்விடுக்க, அவ்வெழுவரும் உயிர்த்தெழுந்து தன் தமையனாராகிய வீரவாகுதேவரை வணங்கினர். யமன் வீரவாகுதேவரிடம் விடைபெற்றுச் சென்றான். அக்கினிமுகாசூரன் இறந்ததை அவன் தூதர்கள் சென்று சூரபதுமனிடம் விண்ணப்பித்தனர்.

---

## மூவாயிரவர் வதை.

இதனைக்கேட்ட சூரபதுமன் வருந்துகையில், அச்சூரபதுமன் மக்களாகிய மூவாயிரவரும் தந்தையின் எதிரேவந்து வணங்கி, விடைபெற்று அனேக சேனைசமூகங்களுடன் சென்று, மிகவும் கொடிய யுத்தத்தைச் செய்ய பூதப்படைகள் சோர்வதைக்கண்ட குமாரக்கடவுள் கொடுத்த வைரப்படையைக் கொண்ட பூதப்படையில் விஜயன் என்பவன் அம் மூவாயிரவரது மாயாஸ்திரத்தையும், அம் மூவாயிரவரையும் நாசமே செய்தனன். இதனைக்கண்ட சூரபதுமன் கோவென்றழுது வருந்துவதாயினன்.

---

## தருமகோபன் வதை.

இதனைக்கண்ட தருமகோபன் சூரபதுமன் மனதைத் தேற்றி, விடைபெற்று, நாற்பெரும்படைகளும் புடைசூழ போர்க்களங்குறுகி பூதப்படைகளை யெதிர்த்து வீரவாகுதேவரால் யாவுமொழிந்து, அவரது திருவடியினால் உதைபட்டிறந்தனன். தேவர்கள் பூமழைபொழிந்தாரவாரித்தனர். இதனைத் தூதுவரால் தெரிந்த சூரபதுமன் தன் பக்கட்டில் ஆழ்ந்தி வருந்தி யிருந்தனன். சூரியனும் மறைந்தான்.

---

## பானுகோபன் வதை.

இவ்விதம் சூரபதுமன் விசனிப்பதைப் பார்த்த பானுகோபன் பொழுது விடிந்ததும் சூரபதுமனை வணங்கி அளவிறந்த சைன்யங்களோடு சென்று பூதசூரர்களையும், இலக்கத்தவரையும், நவசூரரையும் எதிர்த்து பலவாறாக யுத்தங்களைச் செய்து ஒன்றும் பயன்படாது வீரவாகுதேவரால் வெட்டுண்டிறந்தனன். இவைகளைத்தெரிந்து சூரபதுமன் பலவிதமாகப் பிரலாபித்தழுது பானுகோபனுக்குச் செய்வி

னைக ளனைத்தும் செய்து சிலரை நோக்கி நமது பகைவர் யாவரையுங் கொன்றபின் எம்மகனை யாகஞ்செய்து எழுப்பிக்கொள்வேன். அவ னுடம்பை சேமித்து வையுங்களென்று சொல்லிவிட்டு ஆயிரம் முக மும் ஈருயிரம் கைகளையும் உடைய சிங்கமுகாசூரனை ஒற்றர்களால் அழைத்து, நடந்தவைகளைக்கூறி அச்சண்முகனை அவன் சேனைசமூ கங்களோடும் நாசப்படுத்திவருக எனக் கட்டளையிட்டான்.

## தசமுகன் வதை.

சிங்கமுகாசூரன் தன் அண்ணன் கூறியபடி அநேக இராக்கத வீரர்கள் புடைசூழப் புறப்பட்டான். இவனைக்கண்ட தேவர்கள் பயந் தோடினர். குமாரக்கடவுளும் பொருத எழுந்தனர். இதைக்கண்ட வீரவாகுதேவர் குமாரக்கடவுளை வணங்கி ஐயனே! நானே அச்சிங்க முகனை வதைத்து வருகிறேனெனப் புறப்பட்டு போர்க்கள மடைந்த னர் இருதிறப்படைகளும் போர்புரிந்து அனேகர் மாண்டனர். அவுண சேனாபதியாகிய தசமுகன் தண்டு, கதை, மழு, வேல், சக்கரம் முத லியவைகளைக்கொண்டு போர்புரிந்தும் ஒன்றும் முடியாது. பூதவீர ருள் சிங்கன் என்பவனால் இறந்தேயொழிந்தான். துன்முகன் என்ப வன் பூதவீரரை எதிர்த்து மானமழிந்து மறைந்தோடினான்.

## சிங்கமுகாசூரன் வதை.

இதைக்கண்ட சிங்கமுகாசூரன் என்பவன் அனேக பூதவீரரை கடித்தும், அறைந்தும், உதைத்தும் பிசைந்தும் கொன்றான். சிங்க முகாசூரனது சேனைகளையும் தேர், கரி, பரி முதலியவைகளையும் நவ வீரர்கள் நாசமாக்கியதன்றி, சிங்கமுகாசூரனது மக்களையும் கொன் றனர். பின்னர் குகப்பெருமான் வச்சிராயுதத்தை விடுத்து சிங்கமு காசூரனைக்கொன்று, தேவதுந்துமிமுழங்க, அமரர் மலர்மாரிபெய்ய, நவவீரரும் பூதவீரரும், இலக்கத்தெண்மரும் புடைசூழ, பாசறை வந்து சேர்ந்தனர். இச்செய்தியை சில அசுரர்களால் சூரபதுமன் கேட்டு ஆறாத்துயர்க்கடலில் ஆழ்ந்து வருந்தினான்.

## சூரபன்மன் வதை.

இப்பால் சூரபதுமன் ஒருவகையாய் மனந்தேர்ந்து பல அண்டங்களிலுமிருந்து பலகோடி சேனைகளைத் திரட்டி எழுபதாயிரமென்னுந் தொகைகொண்ட சிங்கம், குதிரை, பூதம் என்பவைகளைப் பூட்டிய தேரின்மீது சென்று போர்க்களங்குறுகினான். குகப்பெருமானும் தமது பூதவீரர் முதலியவர்களோடு யுத்தகளமடைந்தனர். இருதிறத்தோரும் எதிர்த்ததில் பூதவீரரில் பலர்மாண்டனர். இலக்கத்தெண்மரில் பலர் தோற்றோடினர். வீரவாகுதேவர் அவுணப்படைகளை அலைத்தழித்து வருவாராயினர். முருகக்கடவுளோ சரமாரியாக பாணங்களை விடுத்து இராக்கதசேனைகளைக் கொன்று பிணக்குவியலாக்கியதன்றி, அண்டத்திலும், அண்டகடாகங்களிலும் இருந்துவரும் அவுணப்படைகளையும் எங்கும் பிணமயமாகக் கிடத்தினர் இதனைக்கண்ட சூரபதுமன் பாணவருஷம் பொழிய வீரவாகுதேவர் நீங்கிய இலக்கத்தெண்மரும் இரியல் போயினர். வீரவாகுதேவரும் மூர்ச்சித்து முருகக்கடவுளை யடைந்தனர். குகப்பெருமான் நானாவித விற்போர்புரிந்து சூரபதுமன் பாணங்களையெல்லாம் சின்னாபின்னமாக்கினர். பின்பு இருவருடையதேரும் இருந்தாப்போலிருந்து கடலிலும், பெரும்புறக்கடலிலும், சக்கரவாளக்கிரியிலும், அஷ்டகுலாசலங்களிலும் இடசாரி வலசாரியாகச் சுழன்று நெடுநேரமுலாவி பாணவருஷங்களைப் பொழிந்தனர். பின்னர் சூரபதுமன் தேர்முறிந்து பாதாளம், சத்தியலோகம், வைகுந்தம் முதலியவைகளிற் சென்றான். இவ்வாறு சூரன் செல்லுமிடந்தோறும் குகப்பெருமானுஞ் செல்ல ஒன்றுஞ் செய்யக்கூடாதவனாய், பலவாறு எண்ணியெண்ணி வருந்தி கடைசியாய் சிவபெருமானாற் கொடுக்கப்பட்டிருந்த மாயாசக்தியையுடைய மனோவேகத்தேரை நினைய, அதுவரக்கண்டு, அத்தேர்மீதேறி, முன்னே முருகப்பெருமான் அடைத்திருந்த அண்டக்கதவைப் பாணங்களாலுடைத்து வழியுண்டாக்கி அண்டத்திற்கப்புறத்திருந்த அவுணப்படைகளை அழைக்க அப்படைகள் முருகக்கடவுளின் சமீபத்தில் நெருங்கின அவைகளை சரவணோற்பவன் திருக்கடைக்கண்ணோக்கால் இருந்த இடந்தெரியா தொழித்தனர். மீளவும் வந்துகொண்டேயிருந்த அவுண வீரர்களையும் குகப்பெருமான் தமது பஞ்சாயுதங்களை ஏவ, அப்படைகள் அண்டாண்டங்களை யெல்லாம் துருவிச்சென்று கணநேரத்தில் எங்குள்ள இராக்கதர்களையும் வேர்

கனைந்தன. இவ்வாறிருக்குங்கால், சூரபதுமன் தனக்கு சிவபெருமான் கொடுத்திருந்த சக்கரமொன்றை குணப்பெருங் குன்றாகிய குகப்பெருமான்மீது போதினன். அதைக் குகப்பெருமான் தமது திருக்கரத்திற் பிடித்துக்கொண்டனர். பின்பு சூரபதுமன் மாயையினாற் பலவுருவங்களைக் கொண்டு போர்புரிய தலைப்பட்டான். அதனைக் குகப்பெருந் தெய்வம் ஞானாஸ்திரத்தைவிட்டு அம்மாயை அனைத்துங் கெடுத்தனர். இச்சமயம் சூரபதுமன் தன்னைத்தனியனாய் ஒன்றும் புத்தியிலெட்டாது தன்தாயாகிய மாயையை நினைந்து, நடந்தவைகளைக்கூறி இறந்தார் யாவரையும் எழுப்பும் வகையைக்கேட்டனன். மாயையும் பெரும்புறக்கடலுக்கப்பாலுள்ள சஞ்சீவி மலையைக்கொண்டு முடிக்கவென மறைந்தனள். சூரபதுமன் தாயின் கட்டளைப்படி இந்திரஞாலத் தேரையனுப்பி சஞ்சீவிமலையைக் கொணர்ந்து போர்செய்யத் தொடங்கிய நாள்முதல் அன்றையவரை இறந்தார் யாவரையும் எழுப்பினன் இதைக்கண்ட கருணாமூர்த்தியாகிய கந்தப்பெருமான் தமது சிவாஸ்திரத்தைவிடுப்ப, அச்சிவாஸ்திரம் யாவரையும் அழித்து செவ்வேள் திருக்கரத்தமர்ந்தன சூரன் தன் இந்திரஞாலத்தேரை விடுத்து வீரவாகுதேவருள்ளிட்டாரை மயக்கி அண்டமுகட்டிற் கற்புறம் விடக்கட்டளையிட, அவ்விதமே செய்தன. இதனைக்கண்ட முருகன் ஒருபாணத்தை விடுத்து யாவரையும் தம்மிடம் சேர்த்தனர். அன்றி சண்முகப்பெருமான் இந்திரஞாலத்தேரை அசைவின்றி நிற்கக் கட்டளையிட அத்தேர் அவ்விதமே நின்றன. அன்றி காங்கேயன் அச்சூரபனது வில்லை குறித்து அவன் ஏவிய சூலப்படையையும் புறம்போக்கி, அச்சூரனேறிய சிங்கத்தையும் கொன்று அச்சூரன் கொண்ட சக்கரவாகப் பக்ஷியுருவத்தையும் இருதுண்டாக வெட்டி, பின்னர் அப்பதுமன் நிலம், நீர், காற்று தீயாக உருவங்களைத் தாங்கிச்செய்த அவனது மாயா ஜாலங்களையும் நிலைகுலையச் செய்து, பின்னர் அச்சூரன் மலைபோலும், கடல்போலும், மரம்போலும்; எமன்போலும், விடம்போலும், ஆயுதங்கள்போலும், பூதம்போலும், ஏககாலத்தில் பலதிசைகளும் பல உருவமாக நின்று போர்செய்வதைக்கண்ட சிவசுப்பிரமணியக்கடவுள் தமது பாணங்களால் தனித்தனியே சிதைத்து, அச்சூரனது போராற்றலை குமாரக்கடவுள் தெரிந்து அடா சூரபதுமனே! நீ பலவுருவங்களைக் காட்டுகின்றாய் நமது உருவத்தையுங் காண்பாயாக என்று கூறி சராசரங்களும் தன்னையன்றி வேறில்லாத ஒப்புயர்வற்ற பேருருவந்தாங்கி, ஆயிரங் கோடி சூரியர் ஒன்றுகூடியது போன்ற ஓர்வடிவமாய், அழகெலாந்

திரண்டு வந்ததுபோலும் அமுத கிரணங்கள் வீச, பச்சிளங் குழவி போன்ற பாலரூபமாய் நின்றார். இதனைக்கண்ட மாதவ சிரேஷ்டனாய், ஆயிரத்தெட்டண்டங்களுக்கும் ஏக சக்ராதிபதியாய் தேவர்களெல்லாம் பயந்து பணியும் பேராற்றலுடையவனாய், இறவாவரம் பெற்றவனாய், சர்வ சக்தியும் வாய்ந்தவனாய், பக்தசிரோன்மணிகளிற் றலைமைத் தெய்வமாய், சிவ குமாரர்களாகிய நவவீரர்களுக்கும் மேலானவனாய், அவ்வறுமுகச் சிவமும் மதிக்கக்கூடியவனாய் நாமெல்லாம் வணங்க நின்றவனாய் இனி நமது குமாரக்கடவுளினது திருவடியின் கீழ் மயிலாகவும். அக்குகப் பெருமானது தோளின்மேற் கோழியாகவும் தேவதேவர்களெல்லாம் பூஜிக்க வருவோனாயும் விளங்கும் சூரபதுமன் சர்வதேவ தேவோத்பனாகிய முருகக்கடவுளின் நிஜவுருவத்தை நேரிற்கண்டதும், மனமுருகி ஆராமை மேலீட்டினால் இவனை ஓர் பாலகனென்றெண்ணி மோசம்போனேனே இவன் பெருமையை தூதாகவந்த வீரவாகுதேவரும், என் தாயாகிய மாயையும், என் தம்பியாகிய சிங்கனும், மற்றவர்களும் கூறியவைகளனைத்தையும் உணராமற் போனேனே! நான் ஆளும் ஆயிரத்தெட்டண்டமும் இவனது திருவடியின் ஓர் உரோம முனையினன்றோ காணுகின்றது. இவனது திருவுருவத்தைக் காணவல்லார் இவ்வுலகத்தில் யாவரிருக்கின்றார்? நான் செய்த தபோபலத்தினாலும், நான்பெற்ற வரத்தினாலுமல்லவா சிறிது காணப்பெற்றேன்! ஆ. நான் செய்த பாக்கியம் யார் செய்தார்கள்! எல்லாமாய் விளங்குகின்ற திருவுருவத்தையும், அழகையும் எவ்வளவுகாலம் பார்த்திருந்தாலும் கண்ணினால் கணித்தற் கடங்கவில்லையே. மனதினால் அளவிடுவதற்கும் எட்டாதிருக்கின்றவனே! இவன் திருவுருவைக்கண்ட மாத்திரத்திலேயே எனது மடத்தனம் எப்படி ஒழிந்தனவோ சண்டைசெய்யவந்த எனதுகொள்கை எப்படி அழிந்தனவோ என் அகந்தைகளெல்லாம் எங்கொளித்தனவோ! என்னைக் காக்கும் பொருட்டன்றோ பாபவடிவமான எனது இராக்கத சைன்யமனைத்தும் முன்னம் ஒழித்து, பின்பு என் மாயை முழுவதையும் ஞானசக்தியினாற் போக்கி, அதன் பின்னன்றோ நிஜவடிவத்தைக்காட்டியருளினான்! இது மகா கொடியவனாகிய என்னை இரக்ஷிக்கும்பொருட்டுக் கொண்டக் கருணையல்லவா? ஆ நான் செய்த தவமே! என் புண்ணியமே! என சர்வ வல்லபனான அசுரேந்திரன் தேகம் புளகாங்கிதமுற, மயிர்க்கூச்செரிய, தேம்பித் தேம்பியழுது, ஆனந்தக்கண்ணீருகுத்து மெய்மறந்து, நாக்குழறி, அன்புமேலீட்டின் அயர்வுண்டாகி பலவாறாக நினைத்து தன் உள்ளுக்குள்ளாகவே யோசிக்கின்றான்,

"அண்ணலார் குமரன் மேனிபடிமுதன் முடியின்காறும்
எண்ணிலா வூழிகாலம் எத்திரம் நோக்கினாலும்
கண்ணினா லடங்கா துன்னிற் கருத்தினா லடங்காது."

இந்த பாலசுப்பிரமணியன் திருவுருவத்தின் பாதமுதல் சிரசு வரையிலுள்ள பேரழகையும், சராசரப்பொருள்களாக விளங்கும் விந்தைகளையும் அளவிறந்த கற்பாந்த காலங்களை நாம் ஆயுளாகக் கொண்டு கணிக்கத்தொடங்குவோமானாலும், நாம் கண்ணினால் பார்த்தறியக்கூடியதல்ல, நமது மனதினாலும் நினைத்து உணரமுடியாது.

"ஆண்டார்கள் முனிவ ரேனோ ரகிலமுங் காட்டி யண்ணல்
கொண்டிடு வடிவ முற்றுங் குறித்தியார் தெரிதற் பாலார்
எண்டரு விழிகள் யாக்கை யெங்கணும் படைத் தோர்க்கேனுங்
கண்டிட வனந்த கோடி கற்பமுங் கடக்கு மன்றே."

ஆ! இந்த ஆண்டவனே தேவர், முனிவர் முதலிய எல்லாவுயிர்களாகவும், அவ்வுயிர்கள் வசிக்கும் எல்லாவுலகங்களாவும், அவ்வுலகங்களிலேயுள்ள எல்லாப் பொருள்களாகவும் காணப்படுகின்றானே! இவன் திருமேனி முழுவதையும் தெரியக் கூடியவர்கள் யாருமேயில்லை. அப்படி காணக்கருதி இப் பரப்பிரம சொரூபரைப்போல அளவிறந்த உடம்புகளைத் தன்னுருவமாகக்கொண்டு, அளவில்லாத கண்களையும் பெற்று, முற்றறிவுடைய முதல்வனாக வந்தாலும் இவன் திருவுருவத்தையும்; இவனது பேரழகையும் காணக்கூடியதோ! அதேவேலையாகக் காணத்தொடங்கினும் கோடானுகோடி கற்பாந்தகாலங்களும் போதாதே!

"பாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கு மெட்டா
மூலகா ரணனாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றோ"

அரிபிர மேந்திராதியர்களுக்கும் மற்ற தேவர்களுக்கும், வேதவேதங்களுக்கும், மற்றை யாராலும் காணப்படாது, அவைகளுக்கெல்லாம் மூலமாய்நிற்கும் பரப் பிரம்மம் இவரேயன்றோ! இந்தப் பிரபு நம்மைகொல்ல வேண்டுமென்று நினைத்திருப்பாரானால் எப்போதோ கொன்றிருப்பார். அப்படி யின்றி நம்மைக் காத்து இரக்ஷிக்க வேணுமென்னுங் கருணையினாலேயே இந்த திருவிளையாடலைச் செய்கிறார். நான் தேவர்களைச் சிறைசெய்த தெல்லாங் கொடிதென்றோ அனேகர் கூறினார்களல்லவா? அப்படி நான் செய்ததனாலல்லவா "வேதமுதற்

கலைகாட்சி முதலளவை யின்றோர் செய்யும் சோதனை புலப்படாச் சோதி" யையான் கண்டேன், நானன்றோ பாக்யசாலி! இவனைத்தவிர நமக்கோ புகலிடமில்லை. ஆகையினால்,

"சூழுதல் வேண்டுந் தாள்கள் தொழுதிடல் வேண்டுமங்கை
தாழுதல் வேண்டுஞ்சென்னி துதித்திடல் வேண்டுந் தாலு
வாழுதல் வேண்டுந் தீமை யகன்றநா னிவர்க்கா ளாகி
தாழுதல் வேண்டும் நெஞ்சந் தடுத்தது மான மொன்றே"

உலகமுதற் காரணராக விளங்கும் இந்தப் பிரமத்தைத் தான் நமது பாதம் வலஞ்செய்ய வேண்டும், இவனைத்தான் நமது கைகள் கும்பிடவேண்டும், இவனைத்தான் நமது தலை வணங்கவேண்டும், இவனைத்தான் நமது நாவு தோத்திரஞ் செய்யவேண்டும், நமது மனமானது இவனைத்தான் தியானித்து வாழவேண்டும். இவனுக்குத்தான் நாம் அடிமையாகி யிருத்தல்வேண்டும் வேறே வழியில்லை. இன்னொரு சமயம் வாய்ப்பதரிது. என்றாலும் அந்தோ! அந்தோ! மனதினிடத்தில் மானம் என்னும் ஒரு பாவம் வந்து தடுக்கின்றதே! மானந் தடுக்கின்றதே! மானந் தடுக்கின்றதே! ஆ என் செய்வேன், இந்த அருட் பெருந்தடங் கருணைக்கடலாய் ஆறுமுகங்கொண்ட ஆண்டவன் நம்மைக் கொல்வதற்காக வந்தவனே யல்ல. தாமாக நம்மை எதிர்க்கவந்தவனு மல்ல, நமது பகைவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி வந்தவன் இவனே நாம் இத்தனை தினங்களாக யுத்தத்தைச் செய்தோம், நல்லபெருமையே யடைந்தோம். நம்முடைய உணர்வும் நம்முடம்பும் நமது வசமாக வுடையதல்ல இவ்வுடம்பு போய்விட்டாலும் இப்புகழ் அழிவதல்ல, இப்போது நாம் தேவர்களைச் சிறையினின்று விடுதலை செய்துவிட்டு இப் பரமாத்மாவை நாம் சரணாகதி அடைவோமாகில் நாம் ஆயிரத்தெட்டண்டங்களை அரசாக்ஷி செய்த கீர்த்தியும் நமது வீரத்தன்மையும் என்னாகும்? அற்பர்களைப்போல பின்னிடைந்து இந்த உடம்பையும், உயிரையும் போற்ற நாம் நினைப்பது நம்முடைய செயலுமல்ல, அதனாலாகும் பயனுமில்லை, ஆகையால் தளர்வது கூடாது, அம்முருகனோடு யுத்தஞ்செய்தே தீரவேண்டும் என்றும் அழியாத வச்சிர தேகமல்லவோ நாம் பெற்றிருப்பது நமது உடம்பு அழியாமல் நமது உயிர் எப்படி அழியும்? என்று அம்முருகக்கடவுளது மாயை மயக்குவதால் அகங்கரித்து சூரபதுமன் முன்னும் பின்னும் தோன்றவொட்டாத ஆலகால விஷம்போன்ற ஓர் இருளுருவத்தைக் கொண்டான். தேவர்கள் வேண்டுதலால் குமா

ரக்கடவுள் தமது ஞானசத்தியையேவி அச்சூரபதுமனை இருபிளவா கப்பிளந்து வரும்படி கட்டளையிட்டனர். இவ்வேலாயுதத்தைக்கண்ட வுடன் அச்சூரனது மாயைகளெல்லாம் ஒழிந்தன. ஒழியவே சூரன் நடுக்கடலிற் சென்று அண்ட முகடளாவ அடிபாகத்தில் தழைத்து பூத்துக் காய்த்து மேற்பாகத்தில் வேர்களும் பரங்களுமாக சர்வ உல கங்களும் தத்தளிக்க ஓர் பிரமாண்டமான மாமரமாகி நின்றான்.

வேலாயுதமும் தொடர்ந்து சென்று அம்மரத்தைச் சிதைத்து, அச்சூரபதுமனை மார்பின் நடுவிற் புகுந்து இருபிளவாகப் பிளந்து ஆகாயகங்கையிற் படிந்து முருகக்கடவுள் திருக்கரத்தில் வந்து சேர்ந் தன. இருபிளவாகிய சூரபதுமன் ஒருபிளவு சேவலும், மற்றோர் பிளவு மயிலுமாக உருக்கொண்டு ஞானசத்திதான்மீது போருக்கெ ழுந்து ஆரவாரித்து வந்தன, இவைகளைக்கண்ட குமாரக்கடவுள் கரு ணைகூர்ந்து மயிலை தமக்கு வாகனமாகவும், கோழியைக் கொடியாக வும் இருக்கக் கட்டளையிட்டு இதன்முன் தயக்குப் போரில் மயிலுரு வேற்று வாகனமாகவிருந்த இந்திரனையும், சேவற்கொடியாக விருந்த அக்கினிதேவனையும் பார்த்து நீங்கள் பழையபடி உங்கள் நிஜவடிவைக் கொள்ளுங்களெனக் கூறினர். சூரன், பதுமன் என இருவராகியிருந் து, பின்னர் சூரபதுமன் என ஒரே உருவமாக மாயையினிடத்தில் உதித்து அரக்கராகி தங்கள் ஆதி விருப்பத்தின்படி பின்பு மயிலும் கோழியுமாகிய சூரனும் பதுமனும் சிவ சண்முகக்கடவுள் திருவரு ளிருந்த வண்ணம் முன்னுணர்வுதோன்ற வாகனமும் கொடியுமாகி அகிலாண்டகோள மெல்லாம் வாழ்த்த அழியாத வாழ்வை யடைந் தார்கள். சகல புவனங்களும் அடைந்திருந்த இடுக்கண்களை ஒழித்த ருளிய குமாரக்கடவுளை தேவர் முதலினோர் வாழ்த்தினார்கள். இது நிற்க,

சூரபதுமன் சேவலு மயிலுமாகி அறுமுகச் சிவனை யடைந்த தைக்கேட்ட பதுமகோபன் ஆவிதுறந்தான். அச்சூரபதுமன் மனைவி கள் தீப்புகுந் தொழிந்தார்கள். முன்பு கடலிற்சென் றொளித்த இர ணியன் இவைகளைத் தெரிந்து வேறுவழியின்றி பலவாறு புலம்பி யிளைத்து சிவபெருமானைநாடி தவத்திற்குச் சென்றான். இப்பால் கரு ணாநிதியாகிய கார்த்திகேயன் வீரவாகுதேவரைவிடுத்து தேவர்களைச் சிறைவிடுத்து முன்னர் சூரபதுமன் தேவலோகத்தினின்று கொள்ளை கொண்டுபோய் தன் நகரத்தில் வைத்துக்கொண்டிருந்த காமதேனு, சிந்தாமணி, சங்கு, சக்கரம், சங்கநிதி, பதுமநிதி முதலிய பொருள்

களையெல்லாம் திருத்தணிகைக்கு எடுத்து அனுப்பினர். அப்பொருள்களோ அளவற்றனவாய் தணிகையங்கிரியையும் அதன் பக்கங்களில் அனேககாதமுள்ள இடங்களையும் கவர்ந்து கிடந்தன. அதனாலேயே அந்த க்ஷேத்திரத்திற்கு ஸ்ரீ பரிபூரணகிரி எனப் பெயருண்டாயின. இப்பால் குமாரக்கடவுள் அச்சூரபத்மன் அரசிருந்தமகேந்திரநகரை வருணனைக்கொண்டழித்து, கடலுக்கிரையாக்கிவிட்டு இறந்த தமது சேனைகளில் மற்றவர்களையும் எழுப்பிக்கொண்டு, நவவீரர், இலக்கத் தொண்மர், பூதவீரர் முதலியவர்களோடு கடலையும், இலங்கையையுங் கடந்து தேவர்கள் கொண்டாட திருச்செந்தூரையடைந்து வீற்றிருந்து, அங்கு ஓர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்திருந்து, சிலகாலஞ்சென்று, தனது பரிவாரங்களுடன் தேவர்களெல்லாம் புடைசூழ திருப்பரங்குன்றத்தை யடைந்து அங்கு தேவர்கள் வேண்டுகோளால் தேவமயனாற் சிருட்டித்துக் கொடுத்த திருக்கோயிலில் எழுந்தருளியிருந்தார்.

## காளி ஐயனார் வாகனங்கள்.

முன்னே சிவபெருமானால் சாபத்தையடைந்து சூரபதுமனுக்குத் தம்பிகளாகயிருந்த தாரகனும் சிங்கனும் தாங்கள் முதலில் நினைத்த கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளக் கருதி உப சம்புவாகிய ஸ்ரீ நந்தி யெம்பெருமானை யடைந்து, எம்பெருமானே! நாங்கள் ஆதியில் காளிக்கும் ஐயனாருக்கும் சிங்கமுகம் யானையுமாகி வாகனங்களாயிருக்கப் பலகாலம் வருந்தித் தவஞ்செய்தும் பயனற்றன வன்றோ? பலவிதமாக இடையூறுகளுண்டாய் அவைகள் ஒழிந்தனவே இனியேனும் எங்கள் கோரிக்கையை அனுக்கிரகஞ் செய்யப்படாதா என பலவிதமாகத் துதித்து, ஸ்ரீ நந்திதேவரது திருவருளால் சிங்கன் சிங்கமாகி காளியம்மைக்கும், தாரகன் யானையுருவாய் ஐயனாரப்பனுக்கும் வாகனங்களாகி வாழ்ந்துகொண் டிருக்கிறார்கள். இதற்கு முன்னர் காளியின் வாகனமான சிங்கமும், ஹரிஹரபுத்திரனுக்கு வாகனமான யானையும் முத்தியடையக் கட்டளையிட்டனர். இவ்விதம் நால்வர் கோரிக்கைகளும் நிறைவேறின.

## தெய்வயானையம்மையார் திருமணம்.

இப்பால் ஸ்ரீ ஞானசக்திதரனாகிய ஆறுமுகப்பெருமான் திருப்பரங்கிரியில் எழுந்தருளி யிருக்கும்போது இந்திரன் தன்பகைவர்களாகிய இராக்கதப்பூண்டைக் கருவறுத்து தேவர்களையும், தேவலோ

கத்தையும், தன்னையுங் காத்தருளிய குகப்பெருமானுக்கு தன் அன்பு மேலீட்டினால் தன் குமாரியாகிய தெய்வயானை யம்மையாரைத் திருமணஞ்செய்ய நினைந்து, சாட்சுண்யனாகிய சரவணோற்பவன் கட்டளைப்படி தேவர்களும், பூவுலகத்தில் முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலிய அசுரர்களும் சூழ்ந்திருக்க, வேதவேதாங்களெல்லாந் தேடுதற்கரிய நம் இளையபிள்ளையாருக்கும் தெய்வயானை யம்மையாருக்கும் சகல ஆடம்பரங்களுடன் திருமணஞ் செய்துவைத்தான். பின்னர் குமாரக்கடவுள் தெய்வயானை யம்மையாருடன் கைலாயம், வைகுந்தம், சத்தியலோகம் அளகாபுரி, இந்திரபுரி முதலிய தேவலோகங்களையடைந்து, அங்கே சூரபதுமனால் சிதைந்து கிடைந்தவைகளெல்லாம் முருக்கடவுள் புதுப்பித்துக்கொடுத்து தேவர்களையெல்லாம் தங்கள் தங்கள் இடங்களுக்கு அனுப்பிவிட்டு, பூலோகத்திற்கு வந்து கந்தவெற்பில் தெய்வயானை யம்மையாரை நிறுத்திவிட்டு தமது பரிவாரங்களுடன் புறப்பட்டு திருத்தணிகை அடைந்து தனித்திருந்தார்.

---

பத்தாவது

# பிரமன் அருள்பெறு படலம்.

---

## துதி.

மறைகளுந் தேவர் யாரு மாலயன் முதலினோரு
மறைதரு முலகம் யாவு மறியொணா தாகின்ற
இறைவனை யாளவந்த யீசனை தணிகை மேவும்
அறுமுகப் பிரம மேயெம் மாருயிர்த் தலைவா போற்றி.

உடம்பைக் காப்பது திரவியம், உயிரைக்காப்பது ஒழுக்கம், அறிவை வளர்ப்பது சாஸ்திரங்கள், அருளை வளர்ப்பது பெரியோர் தரிசனம், ஆண்டவன் திருவடிக்கு ஆளாக்கி வைப்பது பக்தி, பிறவா முத்தியைக் கொடுப்பது ஞானம், ஞானத்தேர்ந்து எப்போதும் கல்வி, பக்தி, ஞான, வைராக்கியங்களிலேயே காலத்தை நடத்தும் மகாத்துமாக்களாகிய நைமிசாரண்ய முனிவர்களே! இதுவரையில் தெய்வத்திருவாகிய சண்முகப்பெருமான் சூரபதுமன் முதலிய இராக்கதர்களை வென்று தேவர்களைக் காத்தருளிய திருவிளையாடல்களைக் கூறி

வந்தேனன்றோ! இனி அத்தேவர்கள் அச்சூரபதுமன் முதலியோரால் கவர்ந்த பொருள்களைப் பெற்று தங்கள் வாழ்வை யடைந்தவைகளையும் கூறுகின்றேன் கேட்பீர்களாக.

நமது குமாரக்கடவுள் சூரனோடு போர்புரிந்து அச்சூரபதுமனை இருகூறாகப் பிளந்து மயிலும் சேவலுமாகக்கொண்டு, தேவர்களைச் சிறைவிடுத்து, அவரவர்களிடங்களுக்கனுப்பிவிட்டு, தெய்வயானையை மணஞ்செய்துக்கொண்டு, அம்மையாரைக் கந்தகிரியில் நிறுத்திவிட்டு திருத்தணிகையில் வந்திருக்குங்காலத்தில், பிரமதேவன் தனது சத்தியலோகத்தில் தன்னிடமிருந்த வேதம் முதலியவைகளைக் காணாதவனாகி, தணிகைக்குத் தன் நாயகியாகிய சரஸ்வதியாரோடு வந்து சேர்ந்து தான் முன்னர் அத்தணிகைமலையின் கீழ்த்திசையில் ஓர் தீர்த்தமுண்டாக்கி, அதன்சமீபத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்து அருள்பெற்றானன்றோ அவைகளையும் அங்குள்ள நந்திதீர்த்தம், குமாரதீர்த்தம், முதலியவைகளையுங் காட்டி, அவைகளையெல்லாம் பூசித்து, அத்தணிகையின் பிரபாவங்களையும் கூறினன். இவைகளைக் கேட்ட சரஸ்வதியார் அன்புமேலீட்டினால் என்புருக, ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, பலவகையாகத்துதித்து, ஓர் தீர்த்தமுண்டாக்கி, அதில் மூழ்கி, அங்கு ஓர் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பூசித்தனள், பின்னர் பிரமனும், சரஸ்வதியும் குமாரக்கடவுளையடைந்து எங்களைக்காக்கவந்த ஆண்டவனே! எங்கள் பயத்தைத்தீர்த்து இரக்ஷிக்கும் கடவுளே! எல்லாமாய் விளங்கும் இறைவனே! மூவரும் பூசிக்கும் முதற்பெருந்தெய்வமே! வேதவேதாந்தங்களுக்கும் எட்டாத விமலனே! அழகெலாந்திரண்ட அருட்பெருங் கடலே! தேவநாடுபெற்ற திருவே! மண்ணும் விண்ணும் வாழவந்த மணியே! ஆறுமுகங்கொண்ட ஐயனே! இராக்கதப்பூண்டை இரியல்செய்த ஈசனே! கங்கையில்வளர்ந்த கடவுள்மாமணியே! சங்கர னீன்ற சம்புவே! ஜகமெலா முய்யவந்த சிவமே! பன்னிருகண்கொண்ட பாலவடிவே! எல்லாம் வல்ல எந்தையே! தேவரீர் திருவடியை யல்லாமல் எங்களுக்குப் புகலிடம் வேறேயில்லை யன்றோ! எங்கள் உடம்பும், உயிரும், ஊக்கமும், ஆக்கமும், உன்னையன்றி வேறில்லை யன்றோ! உப்பு அப்பையடைந்தல்லது உய்யும் வழியில்லாததுபோல நீயாகவுள்ள நாங்கள் உன்னையடைந்தல்லது உய்யும் வழியுண்டோ! இதோ வேலும் மயிலுமாக உள்ள சூரபதுமன் எங்கள் சத்தியலோகத்தை அலங்கோலமாக்கி, எங்கள் முக்கியமான வேதம் முதலிய பொருள்கள் யாவுங் கொள்ளை கொண்டு,

எங்களையுங் குற்றேவல் செய்யக் கொண்டானல்லவோ! எங்கள் பரிதாபங்களைச் சகியாது, எங்களைக் காக்கும் பொருட்டன்றோ தேவரீர் கருணாநிதியாகிய கண்ணுதற் கடவுளின் ஐந்துமுகமும் அதோமுகமும் கூடி ஆறுமுகமாய் வேறோர் மூர்த்தியைப்போல் திருவுருக்கொண்டு வந்து அவ்வசுரப்பாபிகளை நாசமாக்கி, எங்களைச் சிறைவிடுத்து, எங்கள் பதவிகளையும் கொடுத்தீர்களன்றோ! அவ்வசுரேந்திரன் கொள்ளைகொண்ட எங்கள் பொருள்களெல்லாம் இத்தணிகையின்கண் தேவரீர் சேமித்து வைத்திருக்கின்றீரன்றோ! அவைகளையும் எங்களுக்குக் கொடுத்து எங்களை ஈடேற்றவேண்டும் ஐயனே! என்று பிரலாபிப்பதை,

வடிவெலா மாகியன்பர் மனத்தினும் புறம்பு மாகி
அடியவ ருருவந் தாங்கி யடியவ ரொடுகு லாவி
அடியவர்க் கேவல் செய்து அடியார்பா லிருக்கு மன்பின்
கடிகொணற் கடம்பு வேய்ந்த கந்தவேள் கண்டான் வந்தான்

அன்பர் பணிக்கே திருவுருவந்தாங்கிய ஆறுமுகப்பெருமான் கண்டு, அவர்கள் வேண்டியவைகளைக் கொடுத்து, இன்னும் யாதுவேண்டுமென, பிரமதேவன் ஆளவந்த ஆண்டவனே அடியேன் முன்னர் உண்டாக்கிய தீர்த்தத்திற்கு பிரமதீர்த்தமெனவும், யான்பிரதிஷ்டை செய்து பூசித்த இலிங்கத்திற்குப் பிரமேச்சுரர் எனவும் வழங்குமாறு அனுக்கிரகஞ் செய்ததுபோல, சரஸ்வதியினாற் பூசித்த இலிங்கத்திற்கு சரஸ்வதீச்சுரர் எனவும், இவளாலுண்டாக்கிய தீர்த்தத்திற்கு சரஸ்வதி தீர்த்தமெனவும் வழங்குமாறு அனுக்கிரகஞ் செய்யவேண்டும் அன்றி, யாராயிருந்தாலும் சரஸ்வதி பூசித்ததினமாகிய இந்த மார்கழிமாதத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்தில் இந்த சரஸ்வதிதீர்த்தில் மூழ்கினோரும், சரஸ்வதீச்சுரரைப் பூசித்தாரும் அவர்கள் தீராவினை தீர்ந்தவர்களாகி, நன்மனைவி, நன்மக்கள், நற்செல்வம், நல்வாழ்வு, கீர்த்தி ஆயுள் முதலிய செல்வந்தழைத்து வாழவேண்டும். இதனோடு தேவரீரையும் வழிபடுவோர்களுக்கு பிறவாமுத்தியையுங் கொடுத்தருளவேண்டும். என்று பிரார்த்திக்க, குமாரக்கடவுள் அவ்வாறே ஆகுகவெனக் கூறிமறைந்தனர் எனச் சூதபுராணிகர் கூறினர்.

பதினொன்றாவது

## நாரணன் அருள்பெறு படலம்.

துதி.


எண்சீராசிரிய விருத்தம்.

அளவையெலாங் கடந்தனைத்து மாகி வேறாய்
அன்பரன்பி னுள்ளொளித்தாங் கவர்க்கு வேண்டும்
வளமனைத்து முதவுமின்ப வடிவே மூவர்
வாழ்த்துமருட் கடலேயிங் ககில கோடி
தளராமே தணிகையெழின் வரைமீ தோங்குந்
தயவேயெந் தவத்திருவே கடம்பு வேய்ந்த
இளமதியி னெழினிலவு வடிவேற் சங்கை
யெந்தாயெம் மாறுமுகத் தேவ தேவே.

---

சாந்தம், சீலம், இரக்கம், ஞானம், அடியார்பக்தி, ஈஸ்வரபூஜை, பற்றின்மை, ஆனந்தம், என்பவைகளையே பொருள்களாகக்கொண்டு, விபூதி ருத்ராக்ஷதாரிகளாய், சிவோகமே மனனமாய், சிவசொரூப மாக விளங்கும் மாதவசிரேஷ்டர்களே! இப்போது பிரமதேவன் சரஸ்வதியோடு அருள்பெற்றதைக் கூறினன். இனி இரக்ஷிப்புக் கர்த்தாவாகிய மகாவிஷ்ணுவுக்கு நமது கருணை சொரூபியாகிய கந்தப்பெருமான் திருவருள் செய்த திருவிளையாடலையுங் கூறுகின்றோம். கேட்பீர்களாக.

முன்னே சூரன், பதுமன், சிங்கன், தாருகன் என்று சொல்லிய நான்கு அசுரர்களில் தாருகன் என்பவன் தேவலோகத்தை அலங்கோலமாய் அழித்து வருஞ்சமயத்தில் தேவர்களெல்லாம் பிரமதேவனிடஞ் சென்று முறையிட, பிரமன் தன்னால் ஒன்றும் சாத்தியப்படாது, மகா விஷ்ணு மூர்த்தியினிடஞ் சென்று முறையிட்டழுதனன் இவைகளைத் தெரிந்த திரிவிக்ரமனென்கிய சீதரன் கோபமுற்று, சில தேவர்கள் புடைசூழ கருடவாகனரூடராய்ச்சென்று, அத்தாருகாசூரனோடு பலவருடங்களாக பலவிதமாகச் சண்டைசெய்தும், பாணவருஷங்களைப் பெய்தும், பலவிதமான தந்த்ரோபாயங்களைச் செய்



நாரணன் அருள்பெருதல்.

தும் ஒன்றும் பயன்படாது போகவே, தனது கையிலிருந்த சக்ராயுதத்தைக் கடைசியாகப் பிரயோகித்தார். அச்சக்ராயுதம் அத்தாருகன்முன் ஒன்றுஞ் செய்யக்கூடாததாய் வலியிழந்து, அவன் கழுத்தை அறிவதற்குப் பதிலாக அவன் கழுத்தில் ஓர் மாலையைப்போல் தங்கி ஓர் சிறந்த ஆபரணம்போ லிருந்துவிட்டன. இதனைத் தாருகன் கண்டு அத்திருமால் அறியாவண்ணம் மறைந்திருக்கச் செய்தான். மகாவிஷ்ணு நெடுநேரம் பார்த்தும் சக்கரம் வாராமையினால் அயர்ந்து, நிராயுதபாணியாகி, அத்தாருகனுடைய சேனைகள் முன்னம் நிற்கக் கூடாதவனாய்த் திரும்பி தனது வைகுந்த நகரஞ் சென்றனன். இப்பால் தாருகாசூரன் யாரும் எதிரிகளில்லை யெனத்தெரிந்து தனது இராக்கத சைனியங்களோடு தன் அரண்மனைக்குச் சென்று, கழுத்திலுள்ள சக்ராயுதத்தை தன்னாற் கூடியமட்டும் எடுத்துப்பார்த்தும், அனேக இராக்ஷசர்களைக் கொண்டு எடுத்துப்பார்த்தும் அச்சக்ராயுதம் வாராமையால், சரி இதோர் கண்டபூஷணமாக இருக்கட்டும் என விட்டு விட்டான். அப்பாற் சிலகாலம் பொருத்து அகிலம் உய்யும் பொருட்டாகவே அருளுருவங்கொண்ட ஆண்டவனாகிய ஆறுமுகப்பெருமான் போருக்கெழுந்து கிரவுஞ்ச கிரியைப்பிளந்து தாருகனைச் சங்காரஞ் செய்து படுகளத்தைச் சோதனை செய்கின்றபோது தாருகாசூரனது கழுத்தில் பாலசூரியனைப்போல் சந்திரிகை வீசப் பிரகாசிக்குஞ் சக்ராயுதத்தைக் கண்டு ஓ ஓ இது நமது அச்சுதன் கையிலேந்தியிருந்த ஆக்ஞா சக்கரமல்லவா என எடுத்து தன் மார்பில் ஓர் பூஷணம்போல் அணிந்து சென்று, அதன்பின்னர் மற்றைய அசுரர் வாதனைக ளனைத்தும் ஒழித்து திருச்செந்தில், திருப்பரங்கிரி, கந்த வெற்பு முதலியவைகளிற் றங்கிப் பின்னர் தணிகைமலையில் எழுந்தருளியிருந்தனர்.

இவைகளைத் தெரிந்த மாதவனாகிய வைகுந்தவாசன், வணங்குவாரை வாழ்விக்கும் வடிவேற் பெருமான் திருத்தணிகையிற் றங்கியிருப்பதையும், தேவர்கட்கெல்லாந் திருவருள் புரிவதையுங்கேட்டு ஆனந்த மேலிட்டு தணிகாசலத்திற்கு வந்து, அதன் சமீபம் ஒருநாழிகைவழி தூரத்தில் ஓர் அழகிய இடத்தைக் கண்டு, அங்கு ஒரு திருநகரம் உண்டாக்கி, அங்கு சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து, ஓர் தீர்த்தமும் உண்டாக்கி, சுத்தஞான விரத சீலராய், விபூதி ருத்ராக்ஷ சிவசின்னங்களைப்பூண்டு, அறிவையும் அகத்தையும் அதோமுகமாக்கி, அந்தக் கரணேந்திரியங்களுக் கதீதமான அமல ஞான பூசைசெய்து

அனேககாலம் நிஷ்டை கூடியிருந்தனர். இதனைக்கண்ட சர்வலோக சரண்யனாகிய கைலாசபதி ரிஷபவாகன ரூடராய் காக்ஷிகொடுத்து ஏ! பக்தா! நீ விரும்பியவாறு சக்ராயுதம் பெறுவதற்கு ஸ்ரீஞானசத்திதரனாகிய சரவணோற்பவனைக் கருதிப் பெறுவாயாக. எனக்கூறி, அத்திருமால் கோரியபடி அந்நகரத்திற்கு "மாதவபுரம்" எனப் பெயர்வழங்குக வென ஆசீர்வதித்து அந்தர்த்தானமாயினர்.

அதன்பின்னர் பாற்கடற் றுயிலும் பரந்தாமன், அற்புதத் தனிக்கூத்தாடும் அம்பல நாடகின் அருளிருந்த வண்ணம் தணிகைமலையை அடைந்து, தாயினுஞ் சிறந்த சண்முகப் பெருமான் சந்நிதானமுற்றி, குமாரதீர்த்தத்திற் குளித்து, சந்நிதானத்துட்சென்று, சாஷ்டாங்கமாக விழுந்து, கும்பிட்டு, பன்னிரு கண்கொண்ட பாலவடிவே! சத்திவேற் றாங்குஞ் சண்முகச் சிவமே! மண்ணுலகோங்கவந்த வாழ்வே! அனந்த வேதம் அறிவரும் அழகே! மூவருந் தேவரும் முனிவரும் வாழ்த்தும் மூர்த்தியே! என்னை யீடேற்ற எழுந்த யீசனே! எனப் பலவாறு துதித்து மீண்டும் வணங்கி, யழுது வலம்வந்து, கிரிப்பிரதக்ஷணஞ்செய்து அதன் மேற்றிசையில் ஓர் சுனைக்கரையில் "அருவமும் உருவுமாகி, அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்" பாகிய முருகக் கடவுளைக் கோரி ஓர் தீர்த்தமுண்டாக்கி, அதன் கரையில் ஓர் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து சிலகாலம் ஆராதித்திருந்து, பின்னர் தன் உடம்பு முழுவதும் புற்றுமூடச் சிலகாலந் தவஞ்செய்திருந்தனர். அப்பாற் சிலகாலஞ் சென்று இத்தவத்திற் கிரங்கிய வேத வேதங்களுக்கும் எட்டப்படாதவராகிய விசாகப் பெருமான் மயில்வாகன ரூடராய் எழுந்தருளி தரிசனங்கொடுத்து, அன்ப! நெடுநாள் தவஞ்செய் திளைத்தனை உமது தவத்திற்குச் சந்தோஷித்தனம் உமக்கு வேண்டியது யாது? என விஷ்ணுமூர்த்தியின் உடம்பைத் தடவிக் கொடுத்து ஆசிகூற திருமருமார்பனாகிய திருமால் அங்கம் புளகமுற, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, ஆடிப்பாடி, அனந்தமுறை வீழ்ந்து வீழ்ந்து கும்பிட்டு, நாக்குழறி, மயிர்க்கூச்செறிய, மெய்விதிர்த்துத் தேவர்களை ஈடேற்றவந்த சிவக்கொழுந்தே! கங்கைபிற் றவழ்ந்த கடவுண்மாமணியே! பார்வதி முத்திடும் பிச்சிளங் கிளியே! என்றும் மாறாத தேவரீரது பாத பக்திவேண்டும். என்மீது தேவரீரது கருணை என்று மிருத்தல் வேண்டும். தேவரீரது பொன்னடிக்கே அடியேன் ஆளாக வேண்டும். என் வாழ்வை நான் அடைய விணையுளதேல், அன்று தாருகனாதியோர் என்னி

டம் கவர்ந்தொழிந்த சங்கு, சக்கரம் முதலியவைகளை யான் பெற அருளல் வேண்டும். அன்றி அடியேன் உண்டாக்கிய இத்தீர்த்தமும், இச் சிவலிங்கப் பெருமானும் என்பெயரால் வழங்க வேண்டும். இத் தீர்த்தத்தில் மூழ்கி, இச் சிவக்குறியைப் பூசிப்பவர் யாரானாலும் நோய் வாய்ப்படாது, புனிதராகவேண்டும், அவர்கள் எவ்வித பழி, பகை, பாபம், சாபம், கோபம், பேய் முதலிய வைகளாற் பிடிக்கப் பட்டவர்களாயிருந்தாலும் அவைகளெல்லாம் அகன்று, அவர்கள் புண்ணியர்களாகி, கல்வி, ஞானம், செல்வம் முதலியவைகளைப்பெற்று வாழவேண்டும். எனப் பிரார்த்திக்க; ஆலிலைத் துயிலும் ஆதி நாராயணன் விரும்பியவாறு வரங்களைக் கொடுத்து, சுதரிசன மென்னுஞ் சக்ராயுதமும் பாஞ்சசன்யமுங் கொடுத்தருளி மறைந்தனர்.

அந்நாள் தொட்டு விஷ்ணுவினால் பிரதிஷ்டைசெய்த சிவலிங் கப்பெருமானுக்கு விஷ்ணு வேஸ்வரர் என்றும், அவ்விஷ்ணுவினா லுண்டாக்கிய தீர்த்தத்திற்கு * விஷ்ணு தீர்த்த மென்றும் பெயர் வழங்குகின்றது. பின்னர் அந்த தசாவதாரனாகிய தாமோதரனுக்கு சண்முகப் பெருமான் காக்ஷிகொடுத்தருளிய நாளாகிய பங்குனிமீ உத்திர நக்ஷத்திரங்கூடிய ஆதிவாரத்தன்று இத்தீர்த்தத்தில் மூழ்கி, விஷ்ணு வேஸ்வரரைப் பூசித்து, பின்னர் குமாரக்கடவுளையும் வழி படுவோர் புண்ணியராகி, இஷ்டார்த்தங்களை யடைந்து, மேலான மோக்ஷ சம்பத்தையும் பெறுகின்றார்கள். விஷ்ணு தீர்த்தத்தில் மூழ்கி, விஷ்ணு வேஸ்வரரைத் தரிசிக்காமல் குமாரக்கடவுளை மாத்திரம் வழிபடுவோர்கள் முருகக்கடவுளுக்குப் பிரிய மில்லாதவர்களாகவே முடிகின்றார்கள்.

* விஷ்ணு தீர்த்தம்:— என்பது மலையின் மேல் மேற்பாகத்தில் குருக்கள் மார் வீடுகளுக்கு எதிரிலுள்ளது.

பனிரெண்டாவது

# இந்திரன் அருள்பெறு படலம்.

ஸ்துதி.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஒருபுலவன் சிறைவிடுத்தோர் வேடராகி
யொருபுலவர் தம்மையெய்த் தெழுதி நாவில்
ஒருபுலவர் பிழைமறுத்தோ ரியனூற்காட்டி
ஒருபுலவர் தமிழையென்றுஞ் சுமந்து தோளில்
ஒருபுலவர் தம்மைவழி மறித்துக் கும்பத்
தொருபுலவர்க் கிலக்கணநூ லோதி சங்கத்
தொருபுலவ ராகிமறைத் தமிழ்த்தே னல்கும்
ஓர்புலவ ராயகுக னிருதாள் போற்றி.

முனிவர்களே! இதுவரையில் குமாரதேவர் நாரணனுக் கருள்புரிந்த சரித்திரத்தைக் கூறினே னன்றோ! இனி இந்திரனுக் கருள்புரிந்த அற்புதத் திருவிளையாடலைக் கூறுகின்றேன் கேட்பீர்களாக.

இந்திரன் முன்னர் சூரபதுமனாதிய அசுரர்களுக்குப் பயந்து குமாரக்கடவுளை யடைந்து அவரை மயிலுருத்தாங்கி, சூரசம்மாரமானபின், தனது இந்திரபதவியைக் கைக்கொண்டு, தன் அன்புமேலீட்டினால் குணப்பெருங் குன்றாகிய குமாரக்கடவுளுக்குத் தனது குமாரத்தியாகிய தெய்வயானையம்மையைத் திருப்பரங்கிரியில் திருமணஞ் செய்வித்தன னன்றோ! அதன்பின்பு இந்திரன் தன்னிடமிருந்த சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, காமதேனு முதலியவைகளை சூராதியர்கள் கொள்ளை கொண்டதனாற் காணாதவனாகி வருந்தியதன்றி மற்றைத் தேவர்களும் தத்தம் பொருள்களைக் காணாது முறையிடுவதையுங் கருதி, அத்தேவர்களோடும் தெற்கின்கண் தொண்டைநாடுற்று, திருத்தணிகைக்குத் தென்றிசையில் கடப்ப விருக்ஷங்களடர்ந்த ஓரிடங்கண்டு, அங்கு ஓர் திருநகரத்தை உண்டாக்கி, அங்கு தவஞ்செய்யக்கருதி, ஓர்தீர்த்தமேற்படுத்தி, அதன் கரையில் ஓர் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து நெடுநாள் பூசித்து, பின்பு நிஷ்டைகூடி சிலகாலமிருந்தனர். இதனைக்கண்ட காளகண்ட சதுர்ப்புஜ திரிநேத்ரதாரராகிய சிவபெருமான் இந்திரன் தவத்திற்கிரங்கி பிரசன்னராகி அன்

பனே நீ நம்மைக் கோரியவைகளை நீர் திருத்தணிகையின்கண் நமது இளைய பிள்ளையாரை வேண்டிப் பெறுவாயாக வெனக்கூறி மறைந்தனர். இந்நகரைக் கடப்பமா நகரமெனவும், இச்சிவலிங்கப்பெருமானை அமராபதீச்சுரர் எனவும் வழங்குகின்றனர்.

இப்பால் இந்திரன் சிவாக்ஞைபிருந்தவண்ணம் தேவர்களோடு தணிகையையுற்று, மலைமீதேறி குமாரதீர்த்தம் முதலியவைகளில் மூழ்கி, குமாரக்கடவுளை வணங்கி கிரிப்பிரதக்ஷணஞ் செய்து, சந்நிதானத்தின் தெற்கில் ஒரு சுனையிருப்பதைப்பார்த்து அதில் தேவலோகத்திருந்து செங்கழுநீர்க்கொடிகளை தேவர்களைக்கொண்டுவரவழைத்து நாட்டி அச்சுனையருகில் விநாயகக்கடவுளைப் பிரதிஷ்டை செய்து, அந்நீலோற்பல மலரால் விநாயகரைப் பூசித்து வந்தனன். அதனால் அவ்விநாயகப் பெருமானுக்கு செங்கழுநீர்ப் பிள்ளையார் எனத் திருநாமம் வழங்குகின்றன. இப்பால் இந்திரன் அச்சுனையருகில் ஓர் சிவலிங்கந் தாபித்து தேவதேவர்களுக்கும் எட்டப்படாத சித்துருவாகிய சிவசுப்ரமணியக் கடவுளை தியானித்து, அந்நீலோற்பல மலரால் அருச்சித்து நெடுங்காலம் பூசித்திருந்தனன். இதனைக் கண்ட சராசரமுந் தாயாக விளங்கும் சாட்குண்யனாகிய சண்முகப் பெருமான் இந்திரன் எதிரேதோன்றி அன்ப! யாதுவேண்டி வேண்டுகின்றாய் என, இந்திரன் அருவுருவங்கடந்த ஆண்டவனே! கருணையே உருக்கொண்ட காங்கேயா! அகிலாண்ட முய்யவந்த அருட்குன்றே! வானோரிடுக்கண் களைந்த மணியே! தேவரீர் திருவடி நீழலையன்றி வேறிடமில்லோம். ஆதலால் முன்னர் சூரபதுமனாதியர் எங்கள் தேவலோகத்திருந்த செல்வ மனைத்தும் கொள்ளைகொண்டதைத் தேவரீர் திருவுளந்தெரியுமன்றோ! அவ்வசுர சம்மாரத்தின் பின்னர் அப்பொருள்களெல்லாம் இத்தணிகைக்கண் சேமித்திருக்கின்றன வன்றோ! அவைகளில் இங்கு வந்திருக்கும் தேவர்களின் பொருள்களை அவரவர்களுக்குக் கொடுப்பதன்றி, அடியேனுடைய சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, காமதேனு முதலியவைகளை எனக்குக் கொடுத்தருளும்படி பிரார்த்திக்கின்றேன். அன்றி, அடியேனால் தேவலோகத்தி லிருந்துகொண்டு வந்து நாட்டிய இந்நீலோற்பலக் கோடி * காலை, பகல், மாலை என்னும் முக்காலங்களிலும் புஷ்பிப்பதை, முக்காலங்களிலும்

* தணிகையாற்றுப்படை.

"காலை நண்பகல் மாலைமுப் பொழுதும்
ஒவகல் வைகல் மலர்மூன் று தெரிக்கும்
நீலப் பைஞ்சுனை நகர்கண்டு தொழுது."

பூஜைகொண்டு, மூன்றுவேளைகளிலும் அணிந்தருளவேண்டும் இதன்றி இத்தீர்த்தமும், இச்சிவலிங்கப்பெருமானும் அடியேன் பெயரால் விளங்கவேண்டும். இத்தீர்த்தத்தில்மூழ்கி, இச்சிவலிங்கப்பெருமானை வணங்குவோர் எந்தக் குலத்தில் பிறந்தவர்களாயிருந்தாலும், எத்தொழிலைச்செய்பவர்களாயிருந்தாலும், எவ்வளவு கொடிய பாப, துஷ்டர்களாயிருந்தாலும் அவர்களெல்லாம் புனிதர்களாகி, புத்திமான்களாகி, புண்ணியர்களாகி, புருஷோத்தமர்களாகி, தேவரீரது பொன்னடிக்காளாக வேண்டும் எனப்பிரார்த்திக்க, கண்டாரைக் கடைத்தேற்றுங் கருணாநிதியாகிய கந்தப்பெருமான் இந்திரன் வேண்டியபடியே அவரவர்களுடைய பொருள்களை அவரவர்களுக்குக் கொடுத்துவிட்டு, தேவேந்திரனுக்கு சங்கநிதி முதலியவைகளையும் கொடுத்தருளி, அவனுண்டாக்கிய மூர்த்தியை இந்திரேச்சுரரெனவும் அத்தீர்த்தத்தை இந்திரதீர்த்தமெனவும்வழங்க வரமளித்து, மறைந்தனர்.

மூன்று வேளைகளிலும் வேளைக்கொன்றாக புஷ்பிக்கும் நீலோற்பலமலரை வேளைக்கொன்றாக இன்றளவும் குமாரக்கடவுள் பூஜைகொள்ளுகின்றார். இந்நீலோர்ப்பலசுனை நாளதும் இந்திர நீலச்சுனை எனவும் செங்கழுநீரோடையென்றும், இதனைத் தெலுங்கில் கல்ஹார தீர்த்தமெனவும், இந்திரத்தீர்த்தமெனவும் வழங்குவதோடுஇத்தீர்த்தமே அபயமென்றடைந்தாரை ஆதரித்தாளும் நமது ஆண்டவனாகிய ஆறுமுகப்பெருமான் அபிஷேகங் கொண்டுவருகின்றனர். இத்தீர்த்தத்தில்மூழ்கினவர்களெல்லாம் கல்வி அறிவு, ஒழுக்கம், ஞானம் புத்திரப்பேறு, கீர்த்தி முதலிய இகபர வாழ்வுகளைப்பெற்று சித்திப்பார் சிந்தையில் வாழுந் தேவசேனாபதியாகிய சிவ சண்முகப்பெருமான் திருவருளையும், திருவடி நிழலையும் பெருகின்றார்கள். அத்தணிகையை இந்திரன் பூஜித்ததினாலேயே இந்திர நகரம் எனவும் கூறப்படுகின்றனர் எனச் சூதபுராணிகர் கூறி, குமாரக்கடவுளைப் பலவாறு தோத்திரஞ் செய்து தியானித்து, நிஷ்டைகூடி யிருந்து *பின்னர்கூறுவாராயினர்.

---

* இந்த இந்திரன் அருள்பெறு சரித்திர சாரத்தைத் தற்கால் அச்சிட்டிருக்கும் திருப்புகழ் முதற் புத்தகத்தில் உள்ள தணிகைத் திருப்புகழ் 64-ல் 5, 14, 22, 25, 26, 27, 31, 34, 36, 37, 40, 44, 51, 52, 56, 62, 63, 64,-ம் திருப்புகழ்களிற் காண்க.

இந்த இந்திர தீர்த்தத்திலிருந்து பிரதி மாசி மாதம் ரேவதி நக்ஷத்திரத்தில் (பிரமோற்சவத்திற்காக ஆரம்பிக்கும் துவஜாரோகணத்திற்கு முன்னாள்) தாசிகள் தலைமீது புற்றுமண் கொண்டுவரப்படுகின்றது.

## ஐராவதக் காக்ஷி.

புண்ணிய மெலாந் திரண்டுருக் கொண்டது போல விளங்கும் நைமிசாரண்ய முனிவர்காள்! முன்னர் நமது தெய்வத்திருவாகிய செவ்வேளுக்குத் தேவேந்திரன் தெய்வயானையம்மையாரைத் திருமணஞ் செய்வித்தானெனக் கூறினேனல்லவா! அக்கால் அசுரரைவென்று அமரரைக் காத்த ஆண்டவனுக்கு சீதனமாக இந்திரன் தனது பட்டத்து யானையாகிய வெள்ளையானை முதலிய அளவிறந்தசெல்வங்களைக் கொண்டுவந்து கொடுத்தனன். அவைகளில் ஓர் பெரியசந்தனக்கல் இன்னும் ஆபத் சகாயக்கடவுள் எதிரில் வைக்கப்பட்டிருக்கின்றன. நீலோற்பலச் செடிகள் நாளதும் பிரகாசிக்கின்றன. அனேக திரவியங்கள் சுரங்கத்திற் இருக்கின்றன. அனேகங் கையாளப்படுகின்றன. இந்திரவிமானம் உற்சவங்காணப்படுகின்றன அவைகளுள் தற்கால் தணிகைச் சந்நிதானத்தின் வெளிப்புறம் துவஜஸ்தம்பத்தருகில் இருக்கும் நான்கு கொம்புகளையுடைய ஐராவதமென்னும் வெள்ளையானையும் ஒன்று.

இந்த ஐராவதத்தை இந்திரன் சீதனமாகக் கொடுத்தபோது கலியுகத்திற் கண்கொண்ட தெய்வமாகிய கந்தப்பெருமான் இந்திரனை நோக்கி அன்ப! இந்த ஐராவதம் உனது பட்டணத்து யானையாதலால் பொன்னுலகத்திலேயே இருக்கட்டும் என மறுக்க, இந்திரன் அடியேனை வாழ்வித்த ஆண்டவனே! ஒருவர் கொடுத்துவிட்ட பொருளை மீண்டும் பெறுவாராயின் "தத்தாப ஹாரம்" என்னும் தோஷமுண்டாகும் என்பது பிரமாண மாகையால், நான் மீண்டும் பெறுதற்கில்லை. இத்யானை தேவரீரது திருமுன் இருக்குமாயின் என் ஞாபகம் தேவரீருக்கு இருந்துகொண்டேயிருக்கும் நானும் புனிதனுவேன். எனது வாழ்வும் பெருகும், என் நாடும் செழிக்கும் ஒருக்கால் பகைவர் நேரிடுங்கால் உனக்குத் துணைவேண்டுமே அக்கால் என்ன செய்வாய் எனத் தேவரீருக்குத் திருவுளமிருக்குமாயின், இந்தயானை இங்கிருந்தபடியே எனது பொன்னுலகைப் பார்த்திருந்தாலே போதும், அதனால் ஐராவதம் இரண்டுலகத்திலும் இருக்கும் பாவனையாகும் என இந்திரன் பிரார்த்தித்தனன். ஐராவதமும் பணிவார்க்குப் பாக்யமெல்லா முதவிப் பாத நிழலையுங்கொடுக்கும் பாலசண்முகக் கடவுளைப் பணிந்து, ஆண்டவனே அடியேனை அடிமையாகக் கொண்டு ஆண்டருளவேண்டும் என விண்ணப்பஞ்செய்தன, அதனால் குமாரக்கடவுள் அவ்வாறே ஆகுக என அனுக்கிரகிக்க, அவ்வெள்ளையானை இந்திரதிசையாகிய கிழக்கு நோக்கி சிலாரூபமாக நாளது வரையுமிருக்கின்றன. இந்த ஐராவதத்தை வலம்வந்து கும்பிட்டுப் பூசித்து பின்னர் குமாரக் கடவுளைத் தரிசிப்பவர்கள் இந்திர பதவியை அடைகின்றார்கள்.

பதின்மூன்றாவது

# நாகம் அருள்பெறு படலம்.

துதி.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

எண்ணுவா ரெண்ணமெலா மினிது நல்கும்
ஏற்றுவா ரேற்றமெலா மெய்தச் செய்யும்
கண்டார்தங் குலமுழுதுங் காத்துப் போற்றும்
கதியளிக்கும் விதிமாற்று மருதச் சூழல்
அண்டர்குலாந் தணிகையெழின் மலைமீ தோங்கும்
அழகைமா மணிச்சுனையை யரும ருந்தை
தண்ணமுதை யருட்கடலை யகலா வன்பைச்
சற்குருவைச் சண்முகனைச் சார்ந்து வாழ்வாம்.

முனிவர்காள்! "எங்கே எங்கே மனமோடி இளையோரென்ன வீழ்ந்தாலும், அங்கே அங்கே நின்றெழுப்பி யகண்டவறிவி னடைவிப்பாய்"

என்பதுபோல மனதைக் கணநேரமும் புறம்விடாது, சாந்தம் சத்தியம், ஞானம், தவசு என்பவைகளிலேயே அம்மனதைச் செலுத்துகின்றவர்களாய், ஒருமுறை கரும்புதின்னவன் மீண்டுமீண்டும் கரும்பு தின்ன ஆசையும் அன்பும் கொள்வதுபோல், சிவப்புராணங்களில் மேலும் மேலும் அன்பும், அவைகளைக் கற்றார்பால் கேட்கமேலு மேலும் ஆசையும் நீங்கள் பெற்றிருப்பதால் நீங்களெல்லாம் சிவகணங்களென்றே உங்கள்பால் எனக்கும் அன்பு அதிகரிக்கின்றன. ஆகையால் கூறத் தொடங்குகின்றேன், கேட்பீர்களாக.

முன்னோர் காலத்தில் தேவர்களும், இராக்ஷசர்களும் ஒன்றுகூடி திருப்பாற்கடல் கடையத் தொடங்கி, மந்தரகிரியை மத்தாக்கி வாசுகி என்னும் நாகராஜனைக் கொண்டு இழுக்கப்பட்டமையால், வாசுகி என்னும் பாம்பு மந்தரகிரியில் உரைந்து தேகமுற்றும் புண்ணாகி மெலிவுற்று, சேஷசயனனாகிய க்ஷீராப்தியை அடைந்து ஓ! வைகுந்த

வாசா! மூவுலகு மளந்த முராஹரியே! அடியேன் உடம்புமுற்றும் புண்ணாக்கி, சகித்தற் கொண்ணாச் சஞ்சலமடைகின்றேன். ஈடேற்றவேண்டுமெனப்பிரார்த்திக்க, ஸ்ரீமந் நாராயணன் நாகேந்திரனை நோக்கி, அப்பனே! உனக்குற்றநோய் மந்தரகிரியில் உரைந்துற்றது மாத்திரமன்று, அப்பாற் கடலிற்றோன்றிய ஆலகாலவிஷச் சுவாலையாலுமுற்றதாகையால், இதனைத்தீர்க்கும் பரமாவுஷதம் விண்ணோடு காத்த விசாகப் பெருமான் திருவருளும், அதனைக்கூட்டுவிக்கும் சடாக்ஷரத்தியானமு மல்லது வேறில்லை. இதனைப்பெறும் இடம் மூவருந்தேவரும் முறைமுறை பரவும் தொண்டைநாட்டுத் திருத்தணிகையேயாம். அம்மலையின்கண் எல்லா நோய்களையும், எவ்விதபாபங்களையும் எவ்வித விஷயங்களையும் போக்கும் அளவிறந்த தீர்த்தங்களும், ஜீவசஞ்சீவியும், அளவிறந்த சித்தர், முத்தர், பத்தர், பாவலர் முதலினோர்களும் நிறைந்திருப்பனவாகும். சர்வ சித்தியும் கொடுத்து பரமுத்தியையுங் கொடுக்கவல்ல சர்வசமய முடிவாய் விளங்கும் வைதிக சைவம் தலைசிறந்து விளங்குவதாகும் ஆகையால் அந்த உத்தமோத்தம தலத்தையடைந்து, அங்கு மலைமேலோங்கும் மாமணிக்குன்றை வழிப்பட்டுய்யக் கடவாய். எனக்கூறினர்.

இதனைக்கேட்ட நாகவேந்தன் தணிகையை யடைந்து நகர்ப்பிரதக்ஷணமும், கிரிப்பிரதக்ஷணமுஞ் செய்து, அங்குள்ள ஒவ்வோர் தீர்த்தத்திலும் முழுகி, ஒவ்வோர் மூர்த்திகளையும் தரிசித்து, குமார தீர்த்தத்தில்முழுகி, சர்வதேவ சொரூபராகிய சண்முகப்பெருமான் சந்நிதானத்தை வலம்வந்து சந்நிதானத்துட்சென்று ஐயன்திருமுன் நின்று அடித்தாரை ஆதரிக்கும் ஆண்டவனே! குருமூர்த்தமாகிவந்த தெய்வ மருந்தே! வானுலகும் மண்ணுலகும் வாழச்செய்த தெய்வமே! அடியேனையும் இரக்ஷிக்கவேண்டும். கைவிடாதே ஆண்டவனே! கைவிட்டால் வேறே துணையே கிடையாது, என்று கைகட்டி, வாய்பொத்தி, வீழ்ந்துவீழ்ந்து கும்பிட்டுச் சென்று, சந்நிதானத்தின் மேற்பக்கம் ஓர் தீர்த்தமுண்டாக்கி, அதனருகில் சிவலிங்கப்பெருமானைத் தாபித்து சண்முகப்பெருமானைக் கோரி தவஞ்செய்து வந்தனன். இவ்வாறு நாகராஜன் செய்யுந் தவத்திற்கிரங்கி வச்ராயுதமேந்திய வடிவேற் பெருமான் அவனெதிருற்று காக்ஷிகொடுத்து அன்ப! உனக்கு வேண்டியதென்ன வெனக்கேட்க, வாசுகி ஆண்டவனைப் பார்த்து நான்மறை சொல்லும் ஞானமணியே! ஆறிருகண்கொண்ட அண்டர்நாதனே! தேவாசுரர் கடல்கடைந்த நான் மந்தரகிரியிற் பிணி

க்கப்பட்டு உரைந்ததன்றி ஆலகால விஷச்சுவாலையாலுந் தாக்கப்பெற்று வருந்துகின்றேன், தீராநோய் தீர்க்குந் தெய்வம் தேவரீர் மீட்ட திருத்தணிச்செவ்வேளே எனப் பலர்வாய் பகரக்கேட்டுற்றேன், தீர்த்தருளல் வேண்டும். எனக்கூற, பக்தரக்ஷகனாகிய பாலசுப்பிரமணியக் கடவுள் கிருபாநோக்கஞ்செய்து இவ்வாசுகியின் தேகத்தைத் திருநீற்றால் தடவி, ஏ! வாசுகி! உன் வினைதீர்ந்தன, இன்னும் வேண்டியதென்னென, தெய்வானை மகிழுந்தலைவர்! நானுண்டாக்கிய தீர்த்தமும், மூர்த்தியும் உன் பெயராற் பிரகாசிக்க வேண்டுகின்றேன். அன்றி இத்தீர்த்தத்தில் மூழ்கி, இம்மூர்த்தியை வழிபடுவோர் யாராயினும் அவர்கள் நோயற்றவாழ்வும், குறைவற்றசெல்வமும், பிறவாப் பெருமுத்தியும் பெற்றுய்யுமாறு திருவருள் செய்யவேண்டும் என விண்ணப்பஞ்செய்ய, தணிகையிலோங்குந் தனிப்பெருந்தெய்வம் அவ்வாறே ஆகுக வெனக்கூறி அந்தர்த்தானமாயினர்.

இப்பால் வாசுகி மந்தரகிரியில் உரைந்திளைத்த நோயும், விஷச்சுவாலையாலாகிய புண்ணுந் தீர்ந்து, திடகாத்திரமும், நல்ல பலமும், வச்சிரதேகமும், சாந்தமனமும், சிவபக்தியும், ஞான உணர்ச்சியும் பெற்றுச் சென்று, திருமலையடைந்து ஆபத் பாந்தவா! அனாதரக்ஷகா! தேவரீரரல்லவோ இந்த வாழ்வு எனக்குக் கிடைத்தது! தேவரீரல்லவா எனக்கு முதற்றெய்வம்! என வாழ்த்தி நாகலோகஞ் சென்றனன்.

தவேந்திரர்களே! வாசுகி சென்றபின் வாசுகியினாலுண்டான தீர்த்தத்தை நாக தீர்த்தமென்றும், வாசுகியாற் பூசித்த சிவலிங்கத்தை நாகேஸ்வரரென்றும் வழங்குகின்றனர். அத்தீர்த்தத்தில்முழுகினோர் விஷரோகம், நேத்திரரோகம், கர்மரோகம், பூதப்பைசாச தோஷம் முதலியவைகளைப்போக்கி, கல்வி, செல்வம், முதலியவைகளைப் பெற்று, குமாரானுக்கிரகத்தையே அடைகின்றார்கள். இந்த தீர்த்தத்தை நாகசுனை எனவுங் கூறுகின்றனர்.

---



பதினொன்காவது

# இராமன் அருள்பெறு படலம்.

ஸ்துதி.

அறுசீராசிரிய விருத்தம்.

[ரே
மறைபாடுமணியேநான்மறைமுடிவே மறையனந்தம்வாழ்த்துமொன்
முறைமுறையேவான்பரவுமுத்தேவெம் முதல்வாமும்மூர்த்தியானே
இறைவாவெனெம்மானேசடம்பணியும்பன்னிருதோளோர்தாய்வாணர்
பிறையாருந் தணிகைவளர் மருந்தேசுப் பிரமணியே வாழ்விப்பாயே.

---

நான்கு வேதங்களுங் கொழுந்துவிட்டுப் படர்வதுபோலும், எங்கும் சிவபூஜை, எங்கும் வைதிகத் தசாங்கம், எங்கும் ஈஸ்வரனது அனந்த கல்யாணகுண பாராயணம், எங்கும் வைதிக ஒழுக்கம், எங்கும் நிஷ்டை, எங்கும் யோகம், எங்கும் ஞானம், எங்கும் வேதசாரமாகிய பிரசங்கம், எங்கும் அரஹர, சங்கர, சம்போ, சதாசிவ, அம்பல நாடக, சிவ சிவ என்னும் சிவநாமோச் சாரணமாக விளங்கும்

நைமிசாரண்ய முனீந்திரர்காள்! இதுவரையில் நாகேந்திரன் குமாரக் கடவுளை யடைந்து நீராகுலைத் தீர்ந்து பெருவாழ் வடைந்த பெருமையைக் கூறினேன். இனி இராமர் அருள்பெற்றுய்ந்ததனையும் கூறுகின்றேன் கேட்பீர்களாக. என்று சூத புராணிகர் கூறுகின்றார்.

முன்னர் அயோத்தியைப் பரிபாலனஞ் செய்திருந்த தசரதச் சக்ரவர்த்தியின் திருக்குமாரராய் விளங்கிய ஸ்ரீராமபிரான் தன் சிறியதாயார் கைகேசியின் போதனைக்குட்பட்ட தன் தந்தையாகிய தசரதர் கட்டளையால் ஜானகியோடு காட்டில் வசிக்குங்காலத்தில் தசமுக இராவணன் சீதையைக் கொண்டுபோய் விட்டமையால் பலவிதமாக வருந்தி, அகத்தியரை அடைந்து முனிவர் பெருமானே! எனது நாயகியைக் கவர்ந்த அசுரப்பாவியை அழிக்கவும், மீண்டும் ஜானகியை நானடையவும் கருணைசெய்தல்வேண்டும் என விண்ணப்பிக்க, அகஸ்திய மகாமுனிவர் ஸ்ரீராமரைப்பார்த்து எவ்வித சங்கடங்களையும் தீர்த்து, எல்லா சித்திகளையும் கொடுக்கக்கூடியது சிவபூஜையன்றி வேறேயில்லை. நீர் கூறும் இராவணன் சிவ வரப்பிரசாதத்தாலன்றோ பேராற்றலையும் பெருவாழ்வையும் பெற்று இக்காரியத்தைச்செய்தான்! அவ்வரத்தையும் அவன் ஆற்றலையும் அழிப்பதற்கு அதைக்கொடுத்த அம்பல நாடகனாகிய ஆண்டவனை யடைந்துய்வாயாக. மற்றவர்களால் சிவன் கொடுத்த வரத்தைக்கெடுக்க முடியாது. ஆகையினால், சிவானுக்கிரகத்தைப் பெறுவாயாக எனக்கூறி, விபூதி, ருத்ராக்ஷ, பஞ்சாக்ஷர மகத்துவங்களையும், அவைகளை அனுஷ்டிக்கும் உபாயங்களையும் கூற, ஸ்ரீராமர் கருணைத் தடங்கடலாகிய கண்ணுதற் பெருமானைப் பூசித்து, ஐயனே! அனைத்துலகும் அனைத்துயிருமாய் நின்ற ஆண்டவனே! தாயாகவும், தாரமாகவும், தந்தையாகவும் மாமனாகவும், மைந்தனாகவும், மாற்றாராகவும்வந்து வாழ்விக்கும் மாதேவா! எண்ணுவார் எண்ணத்திலே யிருந்து ஈடேற்றும் ஈசனே! அபயமென்றடைந்தாரை அஞ்சேலென்றாதரிக்கும் அருட்கடலே! கருவினும் பரிந்தூட்டிக்காக்குங் கடவுளே! நானென மதிக்கும் கர்மேந்திரியங்களும், உடப்பும் அஷ்ட மூர்த்தமாக விளங்கும் தேவரீருடைய தல்லவோ! இவைகளை ஈடேற்றுவது தேவரீரைப் பொருத்ததல்லவோ எனப் பிரார்த்திக்க, சிவபெருமான் கருணைகூர்ந்து எதிரேவந்து, ராமா! நீ மனிதவாழ்வு அற்பமென மதித்திலை. ஆதலின் ஞானோபதேசஞ் செய்கின்றோம். அதனைக்கொண்டு பிறந்ததனாற் பெறவேண்டும் பெரும்பயனைப் பெற்றுய்வாயாக. எனக்கூற, ஸ்ரீராமர் அதனை மறு

த்து அம்பலத்தாடும் அருட்பெருஞ் சோதியே! கல்லாலிருந்த கனக்
வெற்பே! குருந்தடி முளைத்த குணப்பெருங் குன்றே! என் சத்துரு
வைக்கொன்று, ஜானகியைப் பெற்றல்லது சஞ்சலந்தீரேன். ஜானகி
என் எதிரிலேயே இருக்கிறாள் போலிருக்கிறது. அசுரர்களின் கொடு
மைகளை எண்ணும்போதெல்லாம் என் கை கால்கள் பதருகின்றன
எவ்வாறு நான் சிவஞானம் பெறுவேன்! தேவரீர் பெருங்கருணையை
மறுத்துதற் கஞ்சுகின்றேன் எனப் பலமுறையும் வீழ்ந்து வீழ்ந்து
வணங்கி வருந்துவதைக் கண்ட கைலாசபதி புன்னகைசெய்து, ஆசீர்
வதித்து இராக்கதரை வெல்லும் வல்லமையையும், அதற்குவேண்டும்
அஸ்திர சஸ்திரங்களையும் கொடுத்து அந்தர்த்தானமாயினர். அவை
களை ஸ்ரீராமர் பெற்றுச் சென்று இராவண சம்மாரஞ் செய்தபின்
னர் அவ்விராகவன் இராமேச்சுரத்திற் சென்று அகத்தியமகா முனி
வர் உபதேசஞ் செய்தபடி விபூதி ருத்ராக்ஷ தாரியாய், பஞ்சாக்ஷர
தியானத்துடன் சிவபூஜைசெய்து சிவபிரானை நோக்கி வலிதாளவந்த
சிவமே! ஏழையேன் எண்ணத்தை ஈடேற்றிய ஆண்டவனே! என்னை
வாழவைத்த மணியே! இராவணனுக்குத் தேவரீர் கொடுத்தருளிய
வரத்தை மாற்றுஞ் சக்தியை தேவரீர் அடியேனுக்குக் கொடுத்தரு
ளியதனாலன்றோ கொண்டகருத்தை முடித்தேன். தேவரீர் முன்னர்
ஞானோபதேசஞ் செய்வதாய்க் கொண்ட திருவுளத்தை எனது அஞ்
ஞானத்தால் வீணே இழந்தேன். வேறே கதியில்லேன். அதனை இக்
கால் அனுக்கிரகித்து பிறவிப் பெருநோயைப் போக்கொழிக்க வேண்
டும் பிரபுவே! எனப்பிரார்த்திக்க, தன்னை யன்றியில்லாத் தனிப்பெ
ருந் தெய்வமாகிய சங்கரன் கருணைகூர்ந்து, அன்பனே! எவரையும்
கன்மமானது விடாது. கன்மமானது ராஜ்யம், திரவியம், மனைவி,
மக்கள், சுற்றம், ஸ்னேகம், டம்பம், முதலிய சொரூபங்களாக வந்து
இழுத்து இழுத்து அலைந்து அலைந்து பரகதியை விலக்குகின்றது.
அந்த நிலையில் நீயும் இருக்கின்றாய், அந்நிலையிலிருந்து சித்தசாந்தம்
பிறக்காது சித்தசாந்தமின்றி ஞானமும் நிலைபெறாது, அப்படி ஞானத்
தை அடையும் வினை உமக்கிருக்குமாயின், திருத்தணிகையை அடை
ந்து, ஆங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கி நமது இளைய பிள்ளையாரை
வழிப்பட்டு, நீ விரும்புவதை அக்குமார குருவினிடத்தில் பெற்றுய்
வாயாக, என மறைந்தருளினர். இவைகளைக்கேட்ட ஸ்ரீராமர் தனது
பரிவாரங்களுடன் தணிகைக்கு வந்து நந்திதீர்த்தம் முதலிய பல தீர்
த்தங்களிலும் மூழ்கி, பல மூர்த்திகளையும் வணங்கி, நந்தியாற்றின்
வடகரையில் ஆறுமுக ஸ்வாமிகள் சந்நிதானத்திற் கருகில் ஒரு சிவ

லிங்கந்தாபித்து, அதன் சமீபத்தில் ஓர் தீர்த்த முண்டாக்கி நமது தேவசேனாதிபதியாகிய சிவக்கொழுந்தைத்தியானித்துத் தவஞ்செய்திருந்தனர் இதனைக்கண்ட விசாகன் பிரசன்னராகி, ஏ இராகவா! நீ விரும்பும் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவாயாக என பசு, பதி பாச, இலக்கணங்களை உபதேசித்து, அவ் வீரராகவனது பரிபக்குவத்தைக் கண்டு கிருபாநோக்கஞ்செய்து, தனது திருக்கரத்தால் அவ் வீராமனைத் தடவிக்கொடுத்து ஆசீர்வதித் தனுப்பினர்.

இவ்வாறு ஸ்ரீராமச்சந்திரன் அசுரர்களை விஜயஞ் செய்துவந்தமையால் விஜயராகவர் என்னும் பெயராயின. சிவதீர்த்தமாகிய நந்தி தீர்த்தத்தில் மூழ்கி, சிவனடியார்களுள் தலைமைப் பெரும் அடியாராய் விளங்கிய விஜயராகவப் பெருமானைச் சேவை செய்பவர்கள் பெருஞ் செல்வம், பெருஞ் குடும்பம், பெரும், வாழ்வு, பெரும், போகம், பெரும், பதவிகளை அடைகின்றார்கள்.



பதினைந்தாவது

## நாரதர் அருள்பெறு படலம்.

### துதி.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

முருகாநான் மறைமுடிவே மூவ ரேற்றும்
மூர்த்தியே யாறிருகண் மணியே வானோர்
பெருமானே யுலகுயிரும் பிறவு மாய
பிரமமே யருந்துணையே காங்கே யாயெம்
மருட்கடலே யாளவந்த வடிவேற் செங்கை
ஆண்டவனே தணிகைவாழ் சிவமே சைவக்
குருமணியே அன்பரெலாம் வாழ வந்த
குகனேயெம் முயிர்த்தலைவா வாழ்விப்பாயே.

சிவத்தியான பரராய், விபூதி ருத்திராக்ஷ சிவசின்னங்கள் பிரகாசிக்க, பஞ்சாக்ஷர தியானத்துடன், சிவபெருமானது அனந்தநாம கல்யாண குணானுபவங்களையே பிரசங்கித்து, பரமனையே பாடும் அடியாராய் விளங்கும் சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களைப் பார்த்து முத்தியே பொருளெனக் கொண்ட முனிவர்காள் நமது ஆண்டவனாகிய ஆறிரு கண்கொண்ட ஆறுமுகக் கடவுளின் அருள்விளையாடல்களைக் கூறினேனன்றோ! அவைகள் அளவிறந்தன வாகும். அவைகளுள் இன்னும்சிறிது கூறுகின்றேன் கேட்பீர்களாக.

சிவபெருமானை அவர் சமீபத்திலேயே இருந்து பஜித்துக்கொண்டிருப்பவராகிய நாரதபகாமுனிவர் ஒருக்கால் சிவபெருமானை வணங்கிவந்து சத்தியலோகத்தை அடைந்து தன் தந்தையாகிய பிரமதேவனைக்கண்டு, எந்தாய்! நமது கருணாநிதியாகிய சிவபெருமான், அகிலாண்ட ரக்ஷகனாயும், சகலாண்டமும் வாழ்த்திவணங்குந் தனிப்பெருந்தலைமைத் தெய்வமாயும், மிக்காரும் ஒப்பாரு மற்றவித்தகனாயுமிருக்க, அப்பரமபதி கதியற்ற பரம ஏழையைப்போல் கந்தையுங்,கரித்துணியும், தோலும் வாலும் அணிந்திருப்ப தென்னகாரணம்? இதன்றி பலவித ஆபரணங்களிருக்க எலும்பும், இறகும், பாம்பும் அணிந்திருப்ப தென்னகாரணம்? பலவிதமாக நல்ல வாசனையுள்ள திரவியங்களிருக்க, சாம்பலைப் பூசிக்கொள்ளுவ தென்னகாரணம்? இதுவுமன்றி நானாவிதமான விமானங், தேர், கரி, பரி, பல்லக்கு முதலியவைகளிருக்க எருதை வாகனமாகக்கொண்டிருப்ப தென்னகாரணம்? என சிலவற்றைக் கேட்க, பிரமதேவன் நாரதரைப் பார்த்து மைந்தா! நீ கேட்பதெல்லாம் நியாயம். அந்த அந்தரங்கக் கருத்தை நான் உனக்கு விளக்கிக் காட்ட வல்லனல்லன். அவைகளைப்பற்றி அந்த அம்பல நாடகனாகிய ஆண்டவனே கூறவல்லவனன்றி மற்றையோர் யாருங் கூறுவாரில்லை அன்றி அவரது ஐந்துமுகமும் அதோமுகமுமே ஆறுமுகங்களாய் அவதரித்துள்ள பக்தரக்ஷகனாகிய பாலசுப்பிரமணியக் கடவுள் கூறுவார். அவரை யடைந்து நீகேட்க விருப்பமிருக்குமானால்,திருத்தணிகையை அடைந்து கேட்டுணர்வாயாக எனக்கூறினன்.

இதனைக்கேட்ட நாரதர் மீண்டும் பிரமதேவனை நோக்கி, அண்ணலே! குமாரக்கடவுள் குன்று தோறாடிய குமரனன்றோ! அவர் எழுந்தருளியிருக்குமிடம் கைலை, கந்தமாதானம், செந்தில், சீரலைவாய் முதலிய திவ்விய ஸ்தலங்கள் அனந்தமிருக்க, தணிகையை மாத்திரம் ஏன் விசேஷித்துக் கூறினீர் எனக்கேட்க, பிரமதேவன் நாரத

ரைப்பார்த்து மைந்தா! உலகத்தில் யார்க்கும் இராஜஸ்தானம், போகஸ்தானம், ஞானஸ்தானம் என மூன்றிடங்களுண்டு, அவைகளில் குகப்பெருமானுக்கு தணிகை ஞானஸ்தானமாகும், குமாரக்கடவுள் மற்றத்தலங்களில் தேவர்களின் பொருட்டும் அசுரவாதனையின் பொருட்டும் எழுந்தருளியதாகும். பின்னர் முருகக்கடவுள் எல்லா வாதனைகளையும் ஒழித்து, தேவதேவர்களுக்குற்ற இடுக்கண்களெல்லாம் அகற்றி, அத்தேவர்களை விண்குடியேற்றி, எல்லாக்குறைகளையும் அகற்றி, யாதொரு காரியமுமின்றி நின்மல சொரூபராய் தணிந்த இடம் தணிகையாகும். இத்தலத்தில் தான் தேவர்கள்முதலினோர் வேண்டிய வரங்களையும், வாழ்வுகளையும், பதவிகளையும், ஞானங்களையும் பெற்றுப் போகிறார்கள். யானும், திருமாலும் இத்தணிகையில் தான் குமாரக்கடவுளை யடைந்து வேண்டிய ஞானோபதேசங்களையும் எங்கள் தொழில்களையும், எங்கள் பதவிகளையும் அடைந்தோம். அகத்தியரும் நந்தியெம்பெருமானும், சிவபெருமானும் அத்தணிகையிற்றான் எம்பெருமானிடம் ஞானோபதேசம் பெற்றார்கள். அத்தணிகையிற்றான் குமாரக்கடவுள் தனியராய், ஞானமேவடிவாய்குருமூர்த்தமாய், வேண்டுவோர் வேண்டியவைகளைக் கொடுப்பவராய் விளங்குவதாகும். அன்றி அத்தணிகையென்னுந் தலத்திற்றான் சிவதத்துவாமிர்தம் என்னும் நந்திதீர்த்தமும், உள்ளூர ஊன்றி நினைத்து அந்நிலையில்நிற்பவர்களை ஞானமயமாகச் செய்யும் திருவருளும் இருக்கின்றன. ஞானசண்முகப்பெருமான் பற்றற்றோனாய், பரம ஞானனாய், நின்ற திருக்கோலமாய், ஞானசத்தியை மாத்திரம் கையிற்றாங்கியவனாய் விளங்குவது இத்தணிகையேயாகும், இதனாலேயே தணிகையென்னும் க்ஷேத்திரம் ஞானபுரியெனவும், சித்திநகரம் எனவும் எளிதாகத் தெரியலாம், அம்மலையோ அம்முருகனைப்போல் ஆறுசிகரங்களும் ஜீவசஞ்சீவியும் அனேக பரம ஔஷதிகளும் விளங்கப் பெற்றதாகும். அம்மலையிலும், அதற்கடுத்த பச்சரிசிமலை, கரியமலை முதலியவைகளிலும், அம்மலைகளின் குகைகளிலும், சுரங்கங்களிலும் இன்னும் எண்ணற்ற ஞானிகளும், தபசிகளும், முனிவர்களும், சித்தர்களும், நிஷ்டைகளுக்கன்றி மற்றோர்கண்களுக்குக் காணமாட்டார்கள். ஆனாலும் நீ நேரிற் கண்டு பயபக்தியாக தரிசிக்கலாம். இதனாலேயே திருத்தணிகை சிவலோகத்திற்குச் சரியான ஞானபுரி என நீ தெரிவாயாக. என அத்தணிகையின் மகத்துவங்களிற் சிறிது கூறினர்.

இவைகளைக்கேட்ட நாரதர், ஆனந்தபரவசராகி, சிந்தை முற்றும் சிவசுப்பிரமணியக்கடவுள் திருவடிக்கேயாக்கி, தியானபராபரா

யிருந்து சிறிது தெளிந்து, பிரமதேவனிடம் விடைபெற்று திருத்தணிகையை யடைந்து, சிவதத்துவாமிர்தம், குமாரதீர்த்தம், இந்திரநீலச்சுனை முதலிய தீர்த்தங்களில் மூழ்கி, கிரிப்பிரதக்ஷணஞ்செய்து விரதசீலராயிருந்து ஓர் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து அங்கு பலகாலமிருந்து பூசித்து, பின்னர் அம்மலைமேற் சென்று, முருகக்கடவுள் சந்நிதானத்தைபடைந்து தமது மகதியாழைக்கையிலேந்தி இசைகூட்டி சாமகீதம்பாடி கந்தப்பெருமானது கல்யாண குணானுபவங்களை வாழ்த்தி ஓ சற்குருமணியே! சிவஞான தீக்ஷாகுருவே! குமாரகுருவே! சிவகுருவே! ஞான சத்தி தரனே! எவ்வுலகும் ஈடேறவந்த ஈசனே அடியேனது அறியாமையின் அபசாரங்களை மன்னித்து ஆண்டருளவேண்டும் ஐயனே எனத் தவஞ்செய் திருந்தனர்.

இதனைக்கண்ட இரத்தினவேலேந்திய இறைவன் கருணைகூர்ந்து நாரதமகாமுனிவர் எதிரே தோன்றி, நாரதரே! உனது அருந்தவத்திற்கேவந்தோம். நீர் விரும்புவதென்னென, நாரதர் குமாரக்கடவுளைப் பணிந்து குரு மூர்த்தமாகவந்த கோலமே! குணப்பெருங்குன்றே! குகப்பெருமானே! ஓர் சந்தேகம் அதாவது உலக முதற்காரணராகிய பரமேஸ்வரர் எதாலும் குறைவற்றவராயிருந்தும், எருதை வாகனமாகக்கொண்டதும், சாம்பலைப் பூசியதும் யாது காரணம்? என்பதை தேவரீர் விளக்கியருள வேண்டுமெனக் கேட்க, செந்தமிழ்த்தெய்வமாகிய தெய்வசிகாமணி நாரதரை நோக்கி அன்ப! கடவுள் என உலக முற்றுங் கூறுகின்ற கண்ணுதற் பெருமான்

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே"

என்றபடி தாம் ஒருவரே பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், இரவி, மதி, ஆன்மா என்னும் அஷ்டமூர்த்தமாக விளங்குகின்றார். இதனை உலகாகாரமாகிய நீர்பூசித்த அண்டவடிவான இலிங்கரூபத்தினாலேயே அறிந்துகொள்வாயாக. "அஞ்ஞனைசெந்திடில் அணுவசைந்திடும்" என்றபடி அவரே சிருட்டி, திதி, சங்கார, திரோபவ, அனுக்கிரகங்களை நடத்துகிறவர் என்பதை பஞ்ச கிருத்தியத் தாண்டவமூர்த்தமாக விளங்குவதைச் சிதாகாசமாய் தில்லையின் நடராஜ மூர்த்தத்தா லறிவாயாக. என்றும் அவர் யாதும் மற்ற நித்ய ஞானானந்தசொரூபர் என்பதை தில்லைப்பேரம்பலத்தின்கண் காட்டப்படுகிற வெளியாலும் அறிவாயாக. அவரது நிஜவடியைக் கூறுமிடத்தில், அவர்

ஜாதி குலம் பிறப் பிறப்பு பந்த முத்தி
யருவுருவத் தன்மை நாமம்
ஏதுமன்றி எப்பொருட்கு மெவ்விடத்தும்
பிறிவறநின் றியக்கஞ் செய்யும்
"சோதி" யாவர், இவர்

"வேதமுதற்கலை காட்சிமுதலளவை விரிஞ்சன்முதல் விண்ணோர் செய்யுஞ்சோதனை யுளகப்படாச்சோதி" யாகையால், "நின்மல, நிரைஞ்சன, நிராதார, நிர்விஷய, நித்தொந்த நிர்க்குண நிமலனே" இப்படியனிவ்வுருவ னிவ்வண்ணத்தன், இவனிறைவனென்றெழுதிக்காட்டொணாது. ஆயினும் அப்பிரபு அன்பே திருமேனியாகக்கொண்டு,

"அறிவறியான் றனையுடையத் தேக மாக்கி
அங்கங்கே உயிர்க்குயிரா யறிவு கொடுத்தருளாற்
செறிதனால்" என்றபடி.

தம் அகண்டவெண் மூர்த்தங்களினின்று அணுவென் மூர்த்த ஜீவ பேதங்களாய், அவைகளுக்கு உயிரும், அறிவுமாய், அவைகளை இயக்குவோனுமாய், அவைகளின் வேறு காணாதவனாய், அவைகளை இரக்ஷிக்குங் கருணாசொரூபியாய் அவரவர்கள் இஷ்டம்போல் அவர்

"யாதொரு தெய்வங் கொண்டீரத் தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்" என்றபடி

ஒருவரே எண்ணிறந்த சமய தேவர்களாகியும், தாமே வலிது அருளுருவந்தாங்கியும், பக்தர்களின் இச்சைவழி அனந்த நாமரூபமுற்று கொண்ட திருமேனிகள் அளவற்றன வாகும், அவைகளில் ஒருமூர்த்தமாகும் நீர் கூறிய ரிஷபாரூட மூர்த்தம். அந்த ரிஷபம் யாது? அதனைச் சிவபெருமான் ஆரோகணித்த தேனெனில்:—பிரம விஷ்ணு இந்திராதிய தேவதேவர்களும் மற்றுள்ள சராசரங்களும் பிணி, பசி, மூப்பு, இளமை முதலியவைகளின் வாய்ப்பட்டு பிறந்திறக்குந் தொழில்களை யுடையனவா யிருப்பவைகளைப்பார்த்த நான்கு பாதங்களையுடைய தருமதேவதையானது அத்தகைய துக்கங்களுக் காளாகாமலும், பிறப்பிறப்புகளிற் சுழன்றிளைக்காமலு மிருக்கக்கருதி எளிதிற்றிருவருள் செய்யும் இறைவனை நோக்கி பலகாலம் வருந்தித் தவஞ்செய்து, சரணாகதி நீயே என அடைந்த சந்திரனைக்காத்த தயாநிதியே மறலியை வீழ்த்தி மார்க்கண்டனைக்காத்த மணிவண்ணா! பார்வதி வேண்டப் பாதியுடற்றந்த பவழக்குன்றே!

"வஞ்ச நமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி யுனையடைந்தேன் ஐயனே பராபரமே"

என பலவாறு வேண்ட, அடைந்தாரை யாதரிக்கும் அருட்பெருங் கருணைத் தடங்கடலாகிய ஆண்டவன் கருணைகூர்ந்து, என் அரும் பெரும் அன்பே! அஞ்சேல் நீ என்றும் இன்னல்படாது, இறவாது, எம்மை இடபமாகத் தாங்கி இருப்பாயாக. என ஆசிகூறி ஆட்கொண்டதாகும். அன்றி, இந்த ரிஷபம் சிவத்தின் அகண்டவியாபக நித்யானந்த வடிவில் எவ்வாறிருக்குமென்னில்:—மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் கரணங்கள் நான்கையும் நான்கு பாதங்களாகக் கொண்ட ஜீவன் என்னும் பசுவாகும் அந்த அந்தக் கரணங்கள் நான் நடத்தி ஆட்கொள்பவர். பதியென்னும் சிவம் என உணர்த்துவதை யும் அறிவாயாக.

ஏ நாரத! ஏகபாதமும், இரு ஒளியும் மும்மூர்த்தியும், நால்வகைத் தோற்றமும், பஞ்சகிருத்தியமும், ஆறுகுணமும், ஏழுலகும், எண்மூர்த்தமும், நவபேதமுமாகி யாதுமல்லாநின்ற இறைவன் அளவற்ற பரிமளத் திரவியங்களிருக்க, விபூதியில் விருப்பமுற்ற தென்னவெனில்:-சிவபெருமான் அக்கினியே வடிவாகவுள்ளவர். அந்த "ஆதி பகவன் ஞானவடி வழலிற் பூசித்து நித்திபமாய்" விளங்குவது இயற்கைத் திருநீறாகும். இதன்றி,

தணிகைப் புராணம்.

"பூதியா முறைமையும் புகலக் கேட்டியால்
கோதிலா மனுமுறைக் கொற்ற வேந்தனே
பாதியாள் சத்திபத் தினியின் வைகுற
வேதிலா ணவந்தபு மிணையில் வேதியன்."

"ஊழியே பாணிக ளுலப்பி லண்டமே
கேழிலா மண்டபங் கேழ்த்த வேதிகை
ஆழிசூழ் புவியவி யரிமெய் யாதியா
வாழிமா மெய்ம்மைவண் பசுக்கா ளாவியா"

"நெற்றியங் குண்டத்து நெடித டங்கிய
பொற்றநீள் விழியெரி புணர்த்து வேள்விசெய்
தற்றமில் வேள்வியி லவிர்வெண் பூதியைப்
பற்றற வுயிர்க்கெலாம் படிவத் தாக்கினன்."

ஆணவமலத்தை நீக்கி ஆண்டருளும் அமலன் பிரளய வெள்ளமே நீராகவும், அண்டாண்டங்கள் மண்டபங்களாகவும், கயலாற்சூழ்ந்துள்ள உலகங்களையே மேடைகளாகவும் அரிபிரமேந்திராதி சகல தேவர்களையும் அவியாகவும், மற்றை உயிருடலனைத்தும் பசுக்களாகவும், தமது நெற்றிக்கண்ணிலாகிய ஞானக்கினியையே தீயாகவுங்கொண்டு * சருவ சங்கார யாகஞ்செய்தருளி, அந்நீற்றை விஞ்ஞானகலர். பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களுக்கும் உதவியதன்றி, தாமும் அணிந்தனர். எனவே சர்வேஸ்வரனாகிய சங்கரன் எல்லாம் அழிந்தும், தாம் அழியாது, யாவையும் அழிக்கப் படுபவனென்றும், அழிப்பன வனைத்தும் அவனையன்றி வேறில்லையாகையால் அவனிடத்திலேயே லயமாகின்றனவென்றும், அவனையன்றி அணுக்கூறும் வேறாகாதன வென்றும், அதே "நீறுபூத்த நெருப்பாக" சிவபெருமான் விளங்குவ தென்றும், மாயா சம்பந்தமாகிய படைப்புங் காப்பும் நீங்கிய சருவ சங்கார நீற்றைத் தரிப்பவரே அம்பலநாடகன் அடிக்கணைய்தும் அடியவர் என்றும், இதனால் உலகில் தனிப்பெருந் தலைமைக் கடவுள் சிவபெருமான் ஒருவரெனவும் உணர்வாயாக. எனக் கூறியதன்றி, நாரதருக்கு மற்றைய சந்தேகங்களையும் பெத்தமுத்தியென்னும் இரண்டிடங்களுக்கு மேற்றவாறு, தத்துவார்த்தங்களை விளக்கிக்காட்டி ஞான சாதனத்தையும் புகுத்தி, குன்று தோறாடிய குமாரக்கடவுள் மறைந்தனர். இவைகளைக்கேட்ட நாரதர் ஆனந்தமுற்று முதற்பெருங் கடவுளாகிய முருகப்பெருமானை வணங்கி, வாழ்த்தி, வானடைந்தனர்.

நாரதர் பூசித்த இலிங்கத்தை நாரதேஸ்வரரெனவும், அதனருகிலுள்ள தீர்த்தத்தை நாரத தீர்த்தமெனவும் வழங்கப்படுகின்றன. இத்தீர்த்த ஸ்நானஞ் செய்து, நாரத லிங்கத்தைப் பூசிப்பவர்கள் வேதாக மோக்த சத்சமயமாகிய சைவநெறியிற் றலைசிறந்து சிவஞான வாழ்வைப்பெற்று சிவத்தோ டிரண்டறக் கலக்குஞ் செல்வர்களாகின்றார்கள். இதன்றி வேண்டுவார் வேண்டிய வாழ்வையும் பெறுகின்றார்கள். எனச் சூதபுராணிகர் கூறினார்.

---

* கடல்விட நுகர்ந்த தொல்லைக் கடவுள்பின் னழிக்குங் காலை
யுடலுயி ரகலம் யாவு மொடுங்கிய விடம தன்றோ
சுடலைய தாகு மந்த சுடலைகா ணனைய சோதி
நடனவில் கின்ற வெல்லை நாடருந் தலைமைத் தந்தே.

## பதினாறாவது
# களவுப் படலம்.

ஸ்துதி.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பாரேழுந் திசையனைத்தும் பிறவு மாகி
பலவேறு மூர்த்தியா யடியா ரன்பின்
சீரேரு மருட்குன்றே தேவதேவே
சித்தியெலா முதவுகின்ற திருவே நாளும்
போரேரு மாயைகுல மெல்லா மாய்த்த
பொற்பேயெம் புண்ணியமே வடிவேற் செங்கை
தேரேறு மாறுமுகச் சிவமே மேலாந்
திருத்தணிகைப் பெருமானே யருளு வாயே.

முனீந்திரர்களே இதுகாறும் ஜெகத் ரக்ஷகனுகிய சிவசுப்பிரமணியக்கடவுள் திருவிளையாடல்களைக் கூறிவந்தேனன்றே! இனி அவ்வடிவேற் பெருமான் வள்ளி நாச்சியாரை மணப்புரிதற் பொருட்டு நடத்திய அருட் பிரபாவங்களையுங் கூறிவருகின்றேன் கேட்பீர்களாக. எனச் சூதபுராணிகர் கூறுகின்றார்.

### தெய்வயானையம்மையார், வள்ளியம்மையார் என்னும் உபய நாச்சியார் ஆதி உற்சவம்.

உபேந்திரன்:—முன்னர் இந்திரனைப்பெற்ற கசியபர் அதிதி என்பவர்கள் நெடுங்காலந் தவஞ்செய்ததற்கிரங்கி விஷ்ணுமூர்த்தி ஐந்தாவது அவதாரமாக வாமனாவதாரங்கொண்டு மூவுலகத்தையும் மூவடியால் அளந்து திரிவிக்கிரமன் என்னும் பெயரைத்தாங்கி, பின்னர் அமுதவல்லி, சுந்தரி என்னும் இருபெண்களைப் பெற்றனர்.

தவம்:—அப்பெண்கள் இருவரும் மிக்கப் பேரழகுடையவர்களாய் வளர்ந்துவரும் நாளில், அழகெலாந் திரண்டுற்ற அறுமுகக்கடவுளின் அற்புதத் திருவிளையாடல்களையெல்லாங் கேட்டு, எவ்விதமாவது அக்குமாரக்கடவுளை மணம்புரிய வேண்டுமெனக் கருதி, அப்பெண்கள் இருவரும் கைலாயத்தை யடைந்து, அங்கு கங்கையின் அருகில் சரவணப்பொய்கையின் தீரத்தில் அனேககாலமாகத் தவஞ்செய்துக்கொண்டிருந்தார்கள்.

முருகக்கடவுள் கட்டளை:—இப்பெண்களின் தவத்திற் கிரங்கிய தயாநிதியாகிய சரவணோற்பவன், கந்தமானத்தைவிட்டு, இமயகிரியில் சரவணப்பொய்கையில் அப்பெண்மணிகளின் முன்னர் தோன்றி, காக்ஷிகொடுத்து, பெண்மணிகாள்! உங்கள் கருத்து யாதெனக் கேட்க, அம்மாதர் இருவரும் பாலசண்முகப்பிரமமே! எங்கள் இருவரையும் தேவரீர் நாயகிகளாகக்கொண்டு இரக்ஷிக்கவேண்டும். எனக்கூற, குகப்பெருமான் அமுதவல்லியை நோக்கி நீ இந்திரனுக்குப் புத்திரியாகி வளர்ந்துகொண்டிருவென்றும், சுந்தரியைநோக்கி நீ மண்ணுலகில் தொண்டைநாட்டு மேற்பாடியில் மான் வயிற்றிற்பிறந்து நம்மைக் கோரி பிரார்த்தித்துக்கொண்டிருக்கும் வேடராஜனிடம் தோன்றி வளர்ந்துகொண்டிருவென்றும், பின்னர் யாம் வந்து உங்களை மணம் புரிகின்றோம் எனவும் கூறிமறைந்தனர்.

தெய்வயானை யம்மையார்:—இப்பால் அமுதவல்லி இந்திரபுரியை அடைந்து ஓர் குழந்தை வடிவமாய் இந்திரன் முன்சென்று ஓ! மகேந்திரா தேவரீரது தந்தையாகிய கசியபர் புத்திரரும் தங்கள் தம்பியுமாகிய திரிவிக்கிரமர் என்னும் உபேந்திரர் மகள். என்னை தாங்கள் தான் இரக்ஷிக்கவேண்டும். எனப் பிரார்த்திக்க, இந்திரன் இக்குழந்தையின் ஞானசௌந்தரியத்தையும். பிரம தேஜஸையுந் திருவருட் பார்வையையுங் கண்டு அனந்தமுற்று என் அரும்பெரும் புண்ணியமே உருக்கொண்ட அன்னாய்!, என அங்கையிலேந்தி தனது பட்டத்து யானையாகிய ஐராவதத்தை அழைத்து எனது குமாரியாகிய இக்குழந்தை நம்மையெல்லாம் இரக்ஷிக்கவந்த ஒருதெய்வம். இவளால் நாம் ஏதோ பெரிய சம்பத்தை அடைவதற்கான குறிகள் தோன்றுகின்றன. ஆகையால் இந்த அம்மையாரை நீபெரிதும் பாராட்டி வளர்த்து வருவாயாக. எனக்கட்டளையிட, அந்த ஐராவதம் அந்த அம்மையாரை மனோவதி நகரத்திற் கொண்டுபோய் அரிது பெரிதும் பாராட்டி வளர்த்துவந்தன. அதனால் அந்த அம்மையார் தெய்வயானை எனப்பெயரேற்றனள். அப்பால், அவ்வம்மையார், சூரசம்மாரத்தின் பின்னர் இந்திரன் குமாரக்கடவுளுக்கு தம்மை அசுரவாதனையினின் றகற்றி தம் வாழ்வை கொடுத்ததற்குக் கைம்மாறாக திருமணஞ் செய்விக்க, அம்மையார் ஆதியிற்றவங்கிடந்து கொண்ட கருத்தைப்போல் அக்குமாரக்கடவுளுக்கு நாயகியாகி வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

தொண்டை நாடு:—எல்லா தேவர்களும், மூவர்களும், சித்தர்முத்தர் பத்தர் பாவலர்களும் வந்து வந்து வணங்கி வழிப்பட்டு வாழ்வை

யடைவதற்கு முக்கியமானதாயும், எல்லா வளங்களும் நிரைந்து, எல்லா சுகங்களையும் கொடுப்பதாயும் எண்ணிறந்த தேவாலயங்களையும், அளவற்ற தீர்த்தங்களையும், பாலிநதி, சேயாறு, பெண்ணைநதி சொர்ணமுகி, சங்கராபரணி முதலிய நதிகளையும் பொருந்திய தெய்வீகமானது தொண்டை நாடு.

வள்ளி மலை:—அத்தொண்டை நாட்டில் எல்லா வளப்பங்களும் பொருந்தி சித்தர், முனிவர், தபசிகள் முதலிய அனேகர் நிறைந்துள்ள லவலகிரி என்றோர் அழகிய மலையிருக்கிறது. அது பிற்கால் வள்ளியம்மையார் அவதரித்த காரணத்தால் * வள்ளிமலை என வழங்கப்படுகின்றது.

கண்ணுவ முனிவர்:—ஒருக்கால் வைகுந்தத்தில் திருமால் உபேந்திரருடன், இலக்குமிசமேதராய் அந்தரங்கமான விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கிற சமயத்தில் கண்ணுவமுனிவர் அங்குவந்தனர். இம்முனிவரை அவர்கள் தங்கள் ரகஸ்ய வார்த்தைகளின் பரவசத்தினால் கவனியாமலும் உபசரியாமலும் இருந்ததால் கண்ணுவர்கோபமுற்று நீங்கள் மூவரும் முறையே ஊமையாகவும் வேடனாகவும், மானாகவுமாகி, வனத்திற் சஞ்சரிக்கக்கடவது எனச் சபித்துச் சென்றனர்.

சிவமுனிவர்,—முன்னே கூறிய லவலகிரியில், திருமால் கண்ணுவமுனிவர் சாபத்தின்படி விபூதி, ருத்ராக்ஷ தாரணராய், பஞ்சாக்ஷ தியானபரராய், மரவுரியுடுத்து சிவமுனி என்னும் பெயரைத் தாங்கி ஒரு புன்னைமரத்தின்கீழ் தவஞ்செய்துக்கொண்டிருந்தனர்.


பெண்மான்:—மகாலக்ஷ்மி அந்த லவலகிரிச் சாரலில் ஓர்பெண்ணாக உருக்கொண்டு, மற்ற மானினங்களோடு திரிந்து, பயமும், மருட்சியும் கொண்டு நாயகனைக் காணாது வருந்தி திரிந்துக்கொண்டிருந்தன.

குமரன்:—உபேந்திரன் அந்த லவலகிரிக்கு இரண்டரைநாழிகை வழி தூரத்தில் உள்ள மேற்பாடி என்னும் சிற்றூரில் வேடர்குலத்தில் தோன்றி, அங்குள்ள வேடர்களால் தாங்கள் வசிக்கும் குறிஞ்சியென்னும் நிலத்தெய்வமும், தங்கள் குலத் தெய்வமுமாகிய குமாரக்

* வள்ளிமலை என்பது காட்பாடிக் கருகிலுள்ள திருவலம் ரெயில்ஸ்டேஷனுக்கு தெற்கில் 8-ம் மைலிலிருக்கிறது.

கடவுளின் திருப்பெயராகிய குமரன் என்னும் பெயரால் அழைக்கப்பட்டு, பின்பு வேடுவர்களுக்கு அரசனாகி, அவ் வேடுவகுலத்தில் ஓர் தெய்வம்போலும் ஒரு கன்னிகையை மணம்புரிந்து, குமாரக்கடவுள் திருவருளால் சில ஆண்குழந்தைகளைப் பெற்று, பெண்குழந்தையில்லாமல் தானும் தன் மனைவியும் மிகவும் வருந்தி, தான தருமங்களைச் செய்தும், பலவித விரதமிருந்தும், ஆறுமுகக்கடவுளைப் பூசித்தும், அவருக்குத் திருவிழா நடத்தியும், காய்கனி கிழங்கு தேன் தினைமா முதலியவைகளை நிவேதனைசெய்தும் ஆண்டவனே பெண் குடி பெரியகுடியென்று சொல்லுகிறார்களே? எங்களுக்கு ஓர் பெண்குழந்தையை அனுக்கிரகஞ் செய்யவேண்டும், என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். இப்படிப் பிரார்த்தித் திருக்கும்போது முருகக்கடவுள் திருவருளினால் ஆகாயத்தில் ஓர் அசரீரியாக "ஓர் பெண்குழந்தை கிடைக்கும் வருந்தாதீர்கள்" எனக்கூறக் கேட்டார்கள். இவ்வாறிருக்குங்கால்,

வள்ளியம்மை அவதாரம்:—லவலகிரிச் சாரலில் தவஞ்செய்துக் கொண்டிருக்கிற திருமாலாகிய சிவமுனிவர் தவச்சாலைக்கெதிரில் முன்கூறிய இலக்குமியாகிய பொன்மயமான புள்ளிமான் மிக்கசம்பிரமும் அழகும் உடையதாய் உலாவுவதும், புற்களை மேய்ந்துகொண்டிருப்பதும், சிறிது முன்னுணர்வுண்டாய் சிவமுனிவர் சமீபம்சென்று மேய்வதும், அவரை மோப்பமிடுவதுமாக சஞ்சரித்திருந்தன. இதனைக்கண்ட சிவமுனிவர் முருகக்கடவுள் திருவருளும், சிறிது முன்னுணர்வுந் தோன்ற ரூபலாவண்ணியங்களைப் பெற்றுள்ள தருணமங்கையைக்கண்ட காமுகனைப்போல காமமயக்கமுற்று, தவவுறுதியையும் இழந்து, ஐவகை இன்பத்தில் காக்ஷியின்பத்தை அனுபவித்தவராய் பின்னர் வருந்தி, விகாரம் நீங்கி உடனே ஸ்நானஞ்செய்து பரிசுத்தராகி பழையபடி தவத்திலிருந்தனர். இவ்வாறு சிவயோகியாரது பார்வை மாத்திரத்திலேயே அப்பெண்மான் வயிற்றில், அம்மலைச்சாரலில் தவஞ்செய்திருந்த சுந்தரியார் முருகக்கடவுள் திருவருளிருந்தவண்ணம் கருவாகப் பிரவேசிக்க, அப்பெண்மான் கருப்பமுற்று, தத்தளித்து தள்ளாடி சிலநாட்சென்று மலையின்மேற்போய் புற்களை மேய்ந்திருக்கிறபோது கருப்பவாதனையுண்டாக அங்குவேடர்கள் சில்லாக்கோலினால் வள்ளிக்கிழங்கு தோண்டியெடுத்த ஓர் குழியில் பிரசவித்து, அக்குழந்தை தன் இனமாக இல்லாதிருப்பதைப் பார்த்து மருண்டு விலகிப் போய்விட்டது.



வள்ளியம்மை அவதாரம்.

குமரன் வேட்டை மேற்செல்லுவது:—இவ்வாறு லோகநாயகியாய் எமது தயாவிபவ சண்முகப் பெருமான் மனதிற் கினிய நாயகியாய்வரும் அம்மையார் தாயின்றி பசியால்வருந்தி கைகால்களை உதறி, அழுதுக்கொண்டிருந்தாள்! இச்சமயம் வேடாதிபதியாகிய குமரன் தன் இனத்தவர் பலர்சூழ தங்கள் குலவழக்கப்படி தன நாயகியுடன் வேட்டைமேற் புறப்பட்டான். புறப்படுகிறபோதே அநேக நல்ல சகுணங்களைக் கண்டான். அன்று நல்ல வேட்டையை ஆடினான் எல்லோரும் கூடி குறிஞ்சித் தெய்வமாகிய குமாரக் கடவுளைக் கொண்டாடி ஆனந்தக்கடலில் மூழ்கினவர்களைப்போல் சந்தோஷத்துடன் வருகிறபோது, திருத்தணிகைச் சண்முகப்பெருமான்; திருவருளிருந்தவண்ணம் லவலகிரியின்மேல் ஓர் குழந்தை அழுஞ் சப்தத்தை கேட்டார்கள். எல்லோரும் ஓடித்தேடி வள்ளிக்குழியில் ஓர் பெண் குழந்தை யிருப்பதைக்கண்டார்கள். சுற்றுமுற்றும்பார்த்தார்கள். யாரையும் காணோம். அன்று ஆறுமுகப்பெருமான் அறைந்த திருவாக்கின் பலனாக அம்மணியைக் கண்டோம் என ஆரவாரித்தார்கள். ஆனந்தங்கொண்டார்கள். ஆடினார்கள், குமரன் ஆராவன்புடையவனாய் அம்மையாரைக் கையிலெடுத்து ஆடிப்பாடி ஆனந்தங்கொண்டு அருகேயிருந்த தனது நாயகி கையில் கொடுத்தான். அந்த வேட அரசியானவள் ஆ என்தவப்பேறே! எங்கள் புண்ணியமே! தெய்வத் திருவே! எங்கள் பாக்கியமே என உச்சிமோந்து, முத்திட்டு உடம்பைத் தடவிக்கொடுத்து, பெருமகிழ்ச்சியை அடைந்து தன் கொங்கைகளில் திடீரென்று பூரித்துச் சொரிகின்ற முலைப்பாலை வயிறு நிரம்ப ஊட்டி, தன் சிற்றூராகிய மேற்பாடிக்குக் கொண்டுபோய், முருகக்கடவுளைவேண்டியும் வனதேவதைகளுக்குப் பலியிட்டும், எல்லா வேடுவர்களுடனும் கைக்கோத்தாடியும், வெறியாட்டயர்ந்தும், தங்கள் குறிஞ்சிப்பறையை முழக்கியும், விருந்திட்டும், திருவிழா நடத்தியும், குழந்தைக்கு முத்து பவளமணி, புலிநகம், மயிற்பிச்சம் முதலியவைகளால் அலங்கரித்து, நிலப்பொட்டிட்டு, முருகனைக்கோரி விபூதிதடவி, புலித்தோலிட்ட தொட்டிலிற் கிடத்தி பெண்கலி தீர்த்த பெருமாட்டியே! என்னருந்தவமணியே என பலவாறு வாழ்த்தி, வள்ளிக்குழியிலிருந்து எடுத்ததனால் வள்ளியம்மை யெனப் பெயரிட்டு சீராட்டி, பாராட்டி வளர்த்து வந்தனர். வள்ளியம்மையார் நாளொருமேனி, பொழுதொருவண்ணமாக இளம்பிறைச் சந்திரனைப்போல வளர்ந்து தேமல்பரந்து, குடும்பை மென்முலைகள் வெளிப்பட பன்னிரண்டு



வள்ளி தினைப்புனங்காத்தல்.

வயதுள்ள பாலகுமாரத்தியாகி தருணமங்கையெனப் பலர்கூற இருந்தனள்.

வள்ளி தினைப்புனங்காத்தல்:—வேடராதிபதியாகிய குமரன் தன் குமாரத்தியாகிய வெள்ளியம்மையார் தருணப்பருவமடைந்திருப்பதை யோசித்து, தன் குலாசாரப்படி தங்கள் தினைப்புனத்தில் தினைப்பயிர் செழித்து கதிர்விட்டிருப்பதை கிளிமுதலியவைகளால் சேதாரமாகாதபடி காவல் காக்கும் பொருட்டு வள்ளியம்மையாரை அழைத்துக்கொண்டுபோய் கொல்லையின்மத்தியில் பரண்கட்டி அதிலிருக்கச் செய்து, கையில் கவணைக்கொடுத்து அம்மணி! மற்ற புனங்களில் வேடுவப் பெண்கள் காவல்செய்து வருவதுபோல், பக்கத்திலுள்ள பெண்களோடு காவல் செய்துக்கொண்டிருப்பாயாக என கட்டளையிட்டுச் சென்றான்.

ஆலோலம்:—எல்லாம் வல்ல இறைவிபாய், அகிலாண்ட நாயகியாய், ஸ்ரீ ஞான சண்முக கடவுளின் திருவருட்சத்தியாய் விளங்கும் வள்ளியம்மையார் ஏதோ ஓர் வேடப்பெண்போல, மற்ற வேடுவப் பெண்களுடன் தினைப்புனத்தின்கண் பரண்மீதிலிருந்து தினைப்புனம் முற்றும் சுற்றிச் சுற்றிப் பார்த்து, தினைக்கதிரைக் கெடுக்கும் கிளி, அன்றில், புறு, மாடப்புறு, பன்றி, மான், கடம்பைமுதலியவைகளைப் பார்த்து, கூ - கா - உஸ்-ஓ எனக் கூவியும், கவணைக் கையிலெடுத்து ஒருமுனைக் கயிற்றை ஆள்காட்டி விரலில் முடிந்துகொண்டு மற்றொரு முனையை பெருவிரலால் அழுத்திப்பிடித்து மத்தியில் கற்களை வைத்து கிறுகிறெனச் சுழட்டி வீசியும், ஜோ என்னும் இரைச்சலுடன் அசையும் தினைப்புனத்தை காவல்செய்து, அதட்டி ஆலோலம் ஆலோலம், மாடப்புறுக்களே மயில்களே ஆலோலம், கொக்குகளே வக்காவே குயில்களே ஆலோலம், மரங்கொத்தி பக்ஷிகளே மைனாவே ஆலோலம், சிட்டுகளே காடைகளே சேவல்களே ஆலோலம், ஆள்காட்டி பக்ஷிகளே அன்றில்களே ஆலோலம், மடையனே கோட்டானே வலியனே ஆலோலம், கருங்கொக்கே விச்சுளியே காக்கையே ஆலோலம், ஊர்க்குருவிப் பக்ஷிகளா உள்ளானே ஆலோலம், கிளுவையே தூக்கணமே கிளிகளா ஆலோலம், பொன்னந்தட்டானே ஓ புறுக்களே ஆலோலம், சாரும்வானப் பாடிகளே தாராவே ஆலோலம், கருங்குருவி சூறைகளே கவுதாரி ஆலோலம், காட்டுப்பறவைகளே ஆலோலம் ஆலோலம், மான்களே பன்றிகளே மரைகளே ஆலோலம், அணில்காள் எலி நரிகாள் கடம்புகாள் ஆலோலம், என படால் படால்

என கற்களை எறிந்து ஓட்டி வள்ளி நாய்ச்சியார் தினைப் புனத்தைக் காவல் காத்திருந்து, தன் தகப்பன் முதலினோர் வேளை வேளைக்குக் கொண்டுவந்து கொடுக்கும் தேன், தினைமாவு, பழங்கள், காய்கள், கிழங்குகள், பலகாரங்கள் முதலியன்வைகளைப் புசித்துக்கொண்டு,மற்ற தோழிகளோடு வசித்துக்கொண்டிருந்தாள்.

விண்குடி யேற்றிய விசாகப்பெருமான் கந்தகிரியிற் சென்று, தெய்வயானை யம்மையாருடன் குலாவியிருந்து, முன் வள்ளியம்மை யாருக்குத் திருவுளம்பற்றியதனை நிறைவேற்றக்கருதி, தனியாகப் புறப்பட்டுவந்து தணிகையிலிருந்து சமயத்தை எதிர்பார்த்திருந்தனர்.

நாரத மகாமுனிவர்:—இவர்கள் இவ்வாறிருக்க, திரிலோக சஞ்சாரியாகிய நாரத மகாமுனிவர் சரிகமபதநி என்னும் ஏழிசை மகதி யாழைக் கையிலேந்தி சாமகீதம் பாடிக்கொண்டு சகல க்ஷேத்திர தீர்த்தங்களையும் அனுஷ்டித்துக்கொண்டு தெய்வீகமான வள்ளிமலைக் கருகில் வருகிறபோது பலவித வளங்களைப் பொருந்தி, சோலைகளும், சுனைகளும் சூழ்ந்து மங்களகரமாய் விளங்கும் அழகிய புனத்தையும், அங்கு செழித்தோங்கி, கதிர்களை விட்டு வளர்ந்திருக்கிற தினைக்கொல்லைகளையும், அவைகளில் ஒன்றில் பரண்மேலிருந்து கவணை யேந்தி ஆயாலோட்டிக்கொண்டு காவல் செய்திருக்கும் அகிலாண்ட நாயகியையும் பார்த்து, பார்த்த மாத்திரத்தில் என்புருக அன்புருகி ஆனந்தப் பரவசமாய் அம்மையாரது முன்வரலாறுகளையும், தற்கால நிலைமையையும், அழகையும் நினைந்து நினைந்துருகி கும்பிட்டு கீழே விழுந்து வணங்கி பலவிதமாக வாழ்த்தி, முன் குமாரக்கடவுள் அம்மையாருக்கு கொடுத்திருக்கும் வரத்தை நிறைவேற்றி வைக்கப் பேராவலுற்று, திருத்தணிகைக்குச் சென்று அகிலாண்ட ரக்ஷகனாகிய ஆறுமுகப் பெருமானை யடைந்து வணங்கி சாமகீதங்களாற் றுதித்து, ஸ்ரீ வள்ளியம்மையார் பிறந்ததுமுதல் அன்றையவரையில் இருக்கும் வரலாறனைத்தும் விபரமாய்க்கூறி, ஆண்டவனே அந்த லோகநாயகியாகிய பெண்ணமுதத்தை ஆட்கொள்ளுவதாக முன்னே அனுக்கிரகஞ்செய்திருப்பதுபோல தாமதிக்காமல் சென்று தடுத்தாண்டு இரக்ஷிக்க வேண்டும். ஐயனே! தாமதஞ் செய்யாதே, இன்னும் சோதிக்காதே! என்று பலமுறையும் வேண்டினர்.

## குமாரக்கடவுளின் திருவிளையாடல்.

இவ்வாறு நாரதர் சொல்லியவைகள் யாவும் தணிகையெம்பெருமான் கேட்டு, சந்தோஷித்து, நாரதரே! உன் போஷபுக்குவந்தோம். என விடைகொடுத்தனுப்பி விட்டு, மகா விஷ்ணுவாகிய சிவமுனிவரது குமாரத்தி வள்ளியம்மையாரை ஆட்கொள்ளத் திருவுளமிரங்கி, அருட்பெருஞ் சோதியாகிய ஆண்டவன் தன் அற்புதத் திருக்கோலத்தை மறைத்து, பஞ்சேந்திரியச் சேஷ்டையை யடைந்து, பிரபஞ்சமாயையிலுழலும் மானிடத் திருவுருத்தாங்கி, வேதவேதங்களுங் காண்பரிய திருவடிகளில் வீரகண்டை கலீரெனச் சத்திக்க, சல்லடமும், கச்சையும், இடையிற் பிரகாசிக்க, புஷ்பமாலைசூடி, அம்பு வில்களைக் கைகளிலேந்தி, சிகையை கொண்டையாகமுடிந்து, பலகறைத் தாழ்வடம்பூண்டு, பாதங்களில் செருப்பணிந்து, வேடுவத் திருக்கோலமாய், தணிகையை விட்டு, தேவ தேவர்களெல்லாம் பூசிக்கும் திருவடியானது பருக்கைக் கறடுகள்நிறைந்த காட்டின்வழிநடந்து செல்ல வள்ளிமலையை அடைந்து, மலைமீதேறி தினைப்புனத்தில் பரண்மேலிருந்து ஆயாலோட்டும் மின்னலைப் பழித்து, விளங்கும் திருமேனியையுடைய வள்ளியம்மையாரை நேரில் பார்த்து, புன்னகை செய்து ஏ மாதரசி! பெண்மணியாகிய உன்னை உனது இந்த தருணப்பருவத்தில், சருவ மங்கள தேஜோவதியாய், ரூபலாவண்யம் நிறைந்திருப்பதைக் கண்டும் இந்த கொடுங்காட்டில் சரப, சார்த்தூல, பேரண்ட முதலிய பக்ஷிகளும், வேங்கை, புலி, முதலிய மிருகங்களும், கொடிய விஷ ஜந்துக்களும், நிறைந்திருக்கும், இம்மலைச்சாரலில் யாதொரு உதவியுமின்றி தனிமையாய் இந்த அற்பத் தொழிலைச் செய்ய வைத்துப்போன வேடர்களுக்குப் பகுத்தறிவை பிரமதேவன் படைக்கவில்லைபோலும், எனக் கூறிக்கொண்டே சமீபமாக வரத்தொடங்கினர்.

வள்ளியம்மையார் விண்ணோர் பெருமாகிய வேடுவர் வருகிறபோது சிறிது அச்சமும் நாணமும் உடையவளாய், இவன் யாரோ! என்னசெய்வானோ! எனச்சிறிது பயந்தவளாய் தலைகுனிந்து அந்தப் புறந் திரும்பி, பூமியைப்பார்த்து தன் காற் பெருவிரலால் பூமியைக் கீண்டு, உள்ளுக்குள்ளாகவே ஆறிரு கண்கொண்ட ஆண்டவனே! ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா! குறிஞ்சித்தலைவா! எங்கள் குலதேவதையாகிய குமாரக்கடவுளே! இந்த சமையம் ஆதரிக்கவேண்டும் ஆண்டவனே கைவிடாதே! ஓ! கருணாநிதி காப்பாற்றவேண்டும் ஐயனே! என தியானித்திருந்தனள்.

இப்பால், கங்கையிற் றவழ்ந்த கடவுண்மா மணியாகிய காங்கேயன் காமவலையிற் சிக்கி கலங்கும் காமுகனைப்போல வள்ளியம்மையாரது செய்ப்பசந்து, கருத்து, நீண்டு, மலரணிந்துள்ள, கூந்தலைப்பார்த்து பெண்மணியே! நானோ வெகுதூரத்திலிருந்து வந்தேன். இவ்விடம்விட்டு அப்புரம் போகக்கூடவில்லை, நீ யாரென்பதை தெரிய விரும்புகிறேன். ஆகையால் உன்பெயரைக்கூறுவாயாக. அதற்கிஷ்டமில்லாவிடில் உனது ஊர் எது அதையாவது கூறுவாயாக. அதைக் கூறவும் முடியாதென்னில் உனது ஊருக்குப்போகும் வழியையாவது கூறுக, அப்படி உன் அமுதமொழியை மொழிய மனமில்லாவிட்டாலும் போகட்டும். உன் முகத்தையாவது காட்டுவாயாக. அதுவு மிஷ்டமில்லாத பக்ஷத்தில் எனது ஒரு கடைக்கண் பார்வையை யாவது என்மேற் செலுத்திப்பார்த்தல் வேண்டும். அப்படியும் கூடாதெனில் புன்னகையாவது செய்வாயாக. இவ்விதம் ஏதாவது செய்து உன் அன்பை வெளியிட உனக்கு இரக்கமில்லாமற் போகுமானால் உனக்கு எக்காலத்தும் மாறாத பாவமும், பழியும் உன்னைச்சேரும். இது சத்தியம். ஆகையால் பராமுகமாயிருப்பதை விட்டுவிடு, என்று காமாந்தகாரனாய் வருந்தி யுழலுவாரைப்போல் கைகளைநீட்டி, கெஞ்சி, குறையிறந்து வருந்தி நின்றிருந்தார். இது,

"உலைப்படுமெழுகதென்ன வுருகியே யொருத்திக்காதல்
வலைப்படுகின்றான் போல வருந்தியே யிரங்காநின்றான்
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலிற் றோன்றி
யலைப்படு தன்மைத் தன்றோ அறுமுக னாட லெல்லாம்

முனிவர்களே! வானத்திலுள்ள பூரணச் சந்திரன், பூமியில் பல நீர்நிலைகளில் அந்நீர்களின் அசைவு, சுழியல், அலைதல்களில் எப்படி வேறுவேறு விகற்பித்து கலங்கி காட்டுமோ அதுபோல் வேதவேதங்களுக்கும் எட்டாத பரப்பிரம்மமாகிய சுப்பிரமண்ணிய சிவம் தனது ஓர் அருள்விளையாட்டாகக் கொண்ட கருணையேயன்றி, அவர் இயற்கைக்குண விளையாட்டே யல்ல,

தவ சிரோன்மணிகாள்! இவ்விதம ஆண்டவன் இச்சா சத்தியாகிய வள்ளியம்மையாரைப் பார்த்து பற்களைக்காட்டி தன் மையற்பெருக்கைக்காட்டி, மன்மத வடிவைக் காட்டி, இங்கித வார்த்தைகளைப் பேசி, முகமலர்ச்சியுடன் வழக்காக வாதாடிக்கொண்டிருக்கிறபோது, வேடராஜன் வள்ளியம்மையாருக்கு திரிகாலக்கிரமமாக தினம்

உணவுகளைக் கொண்டுவந்து கொடுக்கும் வழக்கப்படி, உணவுகளை எடுத்துக்கொண்டு, தன் பரிசனர்களிற் சிலர் பக்ஷி, மிருகாதியவைகள் பயந்தொளித் தோடும்படி கூக்குரலிட்டு, குறிஞ்சிப்பறைகளை முழக்கியும் வேகத்துடன் வந்தனர்.

வேலவர் வேங்கைமரமாதல்:—இவ்வாறு வரும் வேடுவர் ஆரவாரத்தைக் கண்ட காங்கேயனாகிய கதிர்வேற் பெருமான், அவ்வேடுவர் தன்னைப் பார்க்குமுன், தனது உருவை மறைத்து.

தணிகைப் புராணம்.

"உலைவறு மறைகளு மோங்கு நூல்களுங்
கலைகளு முழுவதுங் கதித்து வேர்முதல்
இலைமுடி வாயுரு விளைய வாங்கத
னிலைபெறு முயிரென நிமலன் னின்றனன்"

வேதங்களே வேராகவும், ஆகமங்களே அடிமரங்களாகவும் கலைஞானங்களே கவைகளாகவும், தரும சாத்திரங்களே தளிர்களாகவும், கருணையே காய் கனி முதலியனவாகவும் தழைத்துப்பூத்து அவைகளுள் தானே உயிரென நிரைந்து அடர்ந்தோங்கிய வேங்கைமரமாகி நின்றிருந்தனர். இவ்வாறிருக்குங்கால், உணவு கொண்டுவந்த வேடராஜன் அருள்விலாசமே அழகுருக்கொண்டு, ஆனந்தப் பார்வையோடு, நவமணிகளா லிழைத்த ஓர் சித்திரக்கொடியைப்போல் மெல்ல அசைந்து முகவாட்டத்துடன் தினைப்புனத் திருந்த நற்தெய்வமாகிய வள்ளியம்மையாரைக் கண்டு, அம்மணீ என்னருந் தவமே! என்னசோர்ந்திருக்கிறாய்? என் முகவாட்டமுற்றனை? பசித்தனைபோலும் என உபசரித்து தாம்கொண்டுவந்த காய், கனி, தேன், தினைமா, அன்னம் முதலியவைகளைக் கொடுத்து உண்ணச்செய்து, ஆசிகூறி திரும்புங்கால், வேங்கை மரத்தை கண்டனன். தன்னுடன் வந்தவர்களைநோக்கி இதேது நாம் இத்தனை காலமாகப் பார்த்ததில்லை, இதென்ன அதிசயமென்ன, மற்ற வேடுவர்கள் இவ்வேங்கைமரத்தை இக்கணமே வெட்டி யெறிவோமென ஆரவாரஞ் செய்தனர். வேடராஜன் அம்மையாரை நோக்கி என் அரும்பெரும் பேறே! இம்மரம் ஏது? என, அம்மையார் அண்ணா! நானும் இப்போதுதான் பார்த்தேன், இதன் வரலாறு எனக்குந் தெரியவில்லை, இதென்னமோ மாயமாயிருக்கிறது. எனக்கூற, முற்று முணரும் முருகக்கடவுள் திருவருள் முன்னின்று தள்ள, வேடராஜன் வள்ளியம்மையாரைப் பார்த்து திருவிற்

றிகழுந் தெய்வமணியே! இந்தமரம் ஏதோ ஒரு நன்மைக்காகவே தோன்றியிருக்கின்றன. நான் இடையிடையே நமது குலதேவதையாகிய குமாரக்கடவுளை நோக்கி, இந்த வெய்யலில் நமது குழந்தை எப்படியிருக்கிறாளோ! ஆண்டவனே! நீதான் துணையிருக்கவேண்டும். உனது வரத்தாற் பிறந்தவள் அவளை காத்து ரக்ஷிக்கவேண்டுங் கருணாநிதியே! என பிரார்த்தித்திருந்தேன். அதனால் அந்த அறுமுகச்சிவத்தின் அருளே இந்த மாமாயிருக்கலாமென்றும் நினைக்கிறேன். நீயும் எப்போதும் கந்தா! கடம்பா! சதிர்காமா! காங்கேயா! கதிர்வேலா! கார்த்திகேயா! என தியானித்த வண்ணமாயிருக்கின்றாய் அதனாலும் அத்தயாநிதியாகிய தணிகேசனது தன்னருளினாலும் இத்தரு தோன்றியுமிருக்கலாம். எது எப்படியானாலும் நமது குலத்தைக்காக்கும் குணப்பெருங் குன்றாகிய குகேசன் குமாரசிவம், குருபரன் உன் கூடவேயிருந்து காப்பார். நீ எதற்கும் அஞ்சாதே. இவ்வேங்கைமரம் அழகெலாந் திரண்டு, ஆனந்தம் பூத்து, அருண்மணம்வீசி, உன் அருகிலேயே தோன்றியது உன் அருந்தவமேயாகும். ஆதலின் இம்மரம் உனக்கு நிழலாகவும், நீ ஆனந்த விளையாட்டடைவதற்கு வேண்டிய காய் கனி முதலியவைகளாகவும், நீ முடித்துக்கொள்ளப் பரிமள மிகுந்த புஷ்பங்களைக் கொடுப்பனவாகவும் இருக்கின்றன இது இப்படியே இருக்கட்டும் எனக்கூறி புகழ்ந்து பரிசனர்களோடு சென்றான்.

இவ்வாறு வேடராஜன் சென்றதும், சொற்பதங்கடந்த சுயம்பிரகாசராகிய சுப்பிரமணிய சிவம், அம்மையாரை யாட்கொள்ளும் அன்பின் பெருக்கால் ஓர் அருள்விளையாட்டாக காமச்சுழலிற் கட்டுண்டு கலங்கும் கானவர்போல் முன்னே கொண்ட வேடுவத் திருவுருவைத் தாங்கி, முன்னினுஞ் சிறந்த பதினாறு வயதினையுடைய மன்மதனைப் போலுங் காளைவடிவாய், அந்த மங்கைமணியாகிய வள்ளியம்மையார் முன்னேசென்று, பலவிதமாக வர்ணித்து, அடி அழகிற் சிறந்த அன்னமே! நானே வெகுதூரத்திலிருப்பவன் உன் அழகையும், அன்பையும், அதிசயங்களையும் அறிவுடைமையையுங், கேட்டு ஆவலாய் அடைந்தேன் என் உடம்பும், உயிரும், உள்ளமும், உன்வசமே யாகிவிட்டது. உன்னைவிட இனி வேறே கதியேயில்லை. ஆ என் அழகின்கொழுந்தே! உன்னைவிட்டு நான் எப்படிப்போவேன்? எப்படி என்மனம் துணியும்? அடி மாதர்கள் மணியே! வைரக்கொழுந்தே! மாணிக்கக் கனையே! மாதவத்திருவே! உன் கடைக்கண்ணாற் சற்றுப் பார்க்கப்

படாதா! கவிழ்ந்த தலையைச் சற்றே நிமிரப்படாதா! உன் ஆசையால் என்னுயிர் பதைக்கின்றது! எனக்கு வேறே ஒன்றும் தோன்றவில்லை. அடி கண்மணி! சிறிது என்னைப் பார்த்து, புன்னகையுடன் சிறிது முத்தங்கொடுத்து என் உயிரைக் காக்கப்படாதா! என்னை உன் தாமரை மலரைப்போன்ற கையினால் தழுவினால் என்ன கெட்டுவிடும்? அடிபாதகி! உன்மேற் கொண்ட மோகாக்கினி என் உடம்பைக் கொளுத்துகிறதே! என் உயிரை வதைக்கிறதே இது உனக்குத் தருமமா என்னாலாக வேண்டியதையாவது கேட்பாயாக. அடி அன்பே! உன் கருத்தென்னடி, அடி பெண்மணியே! நீ இந்த இழிகுலத்திற் பிறந்து, இந்த பேய்கள் வசிக்கும் காட்டில் இந்த அற்பமான காவற்றொழிலைச் செய்து இந்த வபதில் இப்படி ஈனமுற இருப்பது தகாது. நீ என்னோடு வருவாயானால் உனக்கு தேவலோகத்துள்ள எல்லா சுகங்களையும் பெற்று, அரம்பாஸ்திரீகள் உன்னை வணங்கும்படியான வாழ்வையும் பெறுவாய். என பலவாறு எடுத்துக்கூறி மிகவும் வருந்தி கெஞ்சி பல்லைக்காட்டி நகைமுக முடையவராய் நின்றனர்.

இவைகளைக்கேட்ட வள்ளியம்மையார் பல்லைக்காட்டி, கெஞ்சி, வருந்தி வாட்ட முற்றிருக்கும் குமார வேடரது உள்ளக் குறிப்பையுணர்ந்து தலைகுனிந்த வண்ணமாய் எதிரே நிற்கும் செவ்வேளைப் பார்த்து, ஐயா! நான் இழிகுல வேடப்பெண் தங்களைப் பார்த்தால் தங்கள் அழகும், பருவமும், தேஜசும், நடைநொடியும் இராஜகுமாரரோ, கந்தர்வரோ, தேவர்களில் ஒருவரோ! எங்கள் குலத்தெய்வமாய், என் மனம் முற்றும் கொள்ளை கொண்டவராய் விளங்கும் அந்த தணிகை மலையில்வாழும் என் உயிர்த்தலைவராகிய பாலசுப்பிரமணிய குமாரக்கடவுளோ என நினைக்கிறேன். தேவரீர் மனிதரேயல்ல ஆகையால் தாங்கள் ஏழையாகிய இழிகுல என்னை நான் தனியாயிருப்பதறிந்தும், என்னை ஏமாற்றுவதும், என்னை இச்சிப்பதும் தங்களுக்கு அழகல்ல. புலி பசித்து புல்லைத் தின்னுமா? தின்னாது அது போல் தேவரீர் வீரத்தன்மைக்கு என்னை இச்சிப்பது தகாது. என பல நியாயங்களைக் கூறியிருந்தனள். இச்சமயம் திடீரென்று திடுக்கிடும்படி வன வாத்திய முழக்கங்களுடன் வேடராஜன் வருவதாயினன். இக்குறிப்பைத் தெரிந்த வள்ளியம்மையார் வேடுவரைப் பார்த்து ஐயா! அதோ என் தகப்பனார் அனேக வேடுவர்களுடன் வருகிறார். அவர்களோ கொடியவர்கள் நிர்த்தாட்சண்ணிய முடையவர்கள்,

இத்தருணம் நீ இங்கேயிருந்தால் உன் உயிர்க்கே முடிவுண்டாகும். நீர் சீக்கிரமாக ஓடிப்போய் உயிர்பிழைப்பீராக எனக்கூறினர்.

* குமாரக்கடவுள் விருத்தயோகியாக வருதல்:— இதைக் கேட்ட இறைவன் ஓகோ நம்மை நோக்கி வள்ளி "இத்தருணம்" என்று அன்பாய்க்கூறினள். எனக்கருதி மனம் பூரித்து ஓர் விருத்த வேடங் கொண்டு, சந்யாசியைப்போல் ஆரவாரத்துடன் வரும் வேடர்கள், எதிரிற்சென்று வேடராஜனைப்பார்த்து † தமது விபூதிபையிலிருந்து விபூதி எடுத்து பரிபூரண கடாக்ஷத்துடன் வேடராஜன் கையிற்கொடுத்து வேடர்பெருமானே! நீ நிறைந்த செல்வமும், நிலைத்தவாழ்வும், நீடித்த ஆயுளும் பெற்று வாழ்வாயாக என ஆசீர்வதிக்க, வேடராஜன் விபூதியை அணிந்து கொண்டு, அந்த விருத்த சந்யாசியாரது திருவடிகளில் தன் சிரசுபடும்படி வீழ்ந்து கும்பிட்டு, ஸ்வாமிகாள் இக்கொடிய காட்டில் வந்தது நாங்கள் செய்த புண்ணியமேயாகும். தங்களுக்கு வேண்டியதென்னமோ அதைத் தெரிவித்தால் இக்கணமே வருவித்துக் கொடுக்கிறேன். வேண்டியதைச் சொல்லுங்களென, அப்பா! நான் சரீரம் தளர்ந்தவன். எமக்கொன்றும் இச்சையில்லை. நான் வந்த இடத்தைத் தேடியிருக்கிறேன். இந்த வள்ளிமலையிற்றேயன்றி, நீங்கள் அன்பாகக் கொண்டாடுகிற குமரியைக்கலந்து தற்கால் எனக்குண்டாயிருக்கும் மனோமயக்கத்தை நீக்கிக்கொள்ள நினைத்து நெடுந்தூரத்திலிருந்து வருகிறேன். இந்த உபகாரத்தை நீங்கள் செய்வதுதான். உங்களுக்குப் புண்ணியம் என்று சிலேடையாக பெரியவர்கூற, வேடராஜன் ஸ்வாமி! உங்கள் இஷ்டப்படி * இந்த வள்ளிமலையிலுள்ள குமரிதீர்த்தத்தில் முழுகி உங்கள் இஷ்டத்தை முடித்துக்கொள்ளுங்கள், பின்பு என் குமாரத்தி தனித்திருக்கிறாள். அவளுக்குத் துணையாகவும் இருங்கள். இடையிடையேவந்து விசாரித்துக் கொள்ளுங்கள் என அதிகமும் பிரார்த்தித்து அழைத்துக்கொண்டு போய், வள்ளியம்மையாருக்கு வேண்டிய உணவுகளைக் கொடுத்து,

---

திருப்புகழ் 259.

* "அக்ராப் பொடியின் மெய்யிடாக் குறவர்
அர்ச்சியாய்த் தொழுமு—கிலேயை, அப்ப"

திருப்புகழ் 293.

† "அருவிக் குன்றடையப் பரவிச் செந்தினைவித்
தருகைமக் குன்றவருக்—கொளியோனே"

அம்மணி! இந்தப் பெரியவர் குமரியாட வந்திருக்கிறார். நாம் செய்த புண்ணியம் இவர் இங்கே வந்தது இவர்சொல்லும் புத்திமதிகளைக் கேட்டு, இவருக்கு வேண்டியதைக் குறைவு செய்யாமல் கவனி, இவர் உனக்கு பெரிய துணையாயிருப்பார். எனச்சொல்லிவிட்டுச்சென்றான்.

பெரியவர் அம்மையாரைப் பார்த்து பெண்மணியே! அதிகபசியாயிருக்கிறது. ஆயாசம் நிற்கமுடியவில்லை என பரதவிப்பதை வள்ளியம்மையார் பார்த்து இரக்கங்கொண்டு தேன், தினைமாவு, கனிகள் முதலியவைகளைக் கொடுக்க, பெரியவர் அவைகளைப் புசித்து விட்டு, பின்னும் வள்ளியம்மையைப் பார்த்து, அம்மணீ! நான் வெய்யலில் விடாய்ப்பட்டு வந்து இந்த தேன் தினைமா முதலியவைகளைத் தின்றதினால், கண்டத்தில் அடைத்துக்கொண்டிருக்கிறது. ஒன்றும் சகிக்க முடியவில்லை. என்ன செய்வேனென, கபட சந்யாசியின் கருத்தறியாது, உண்மை யென்றே நம்பி வள்ளியம்மையார் மனமிரங்கி பெரியவரே! இந்த மலைக்கடுத்த ஏழுகுன்றுகளையுங் கடந்து போவீரானால் அங்கே ஓர் சுனையிருக்கிறது. சீக்கிரம்போய் ஜலம் சாப்பிட்டு வாருங்கள் என, சந்யாசியானவர் அம்மையாரைப்பார்த்து அம்மா! நானோ தளர்ந்த கிழவன், தாகம் நாவுவரண்டுபோகிறது. காலோதள்ளாடுகிறது. இதோடு எப்படி வழிதெரிந்து போவேன். இங்கு நான் முன்பின் வந்த பழக்கமுமில்லை. ஆகையால் நீ ஒன்றும் சிரமம் பாராட்டாமல், தாமதியாமல் சீக்கிரம் வந்து சுனைநீரைக் காட்டிவிட்டு உடனே திரும்பிவிடு இதுதான் உனக்குப் புண்ணியம் உனக்கு சிவபெருமான் எல்லா வளங்களையும் வாழ்வையும் உண்டாக்குவாரெனப் பரிதவிக்கும் கள்ள சந்யாசியின் பாசாங்குகளை வள்ளியம்மையார் உண்மையென்றே கருதி, மிகவும் இரக்கமுடையவளாய் பரணைவிட்டுக் கீழே இறங்கி, ஸ்வாமி வாருங்கள் என அழைத்துக்கொண்டுபோய் சுனையைக் காட்ட, கிழவர் விடாய் கொண்டவரைப்போல் ஜலத்தை வாரி வாரி யுண்டு தாகந்தெளிந்தவரைப்போல் சந்தோஷமுகத்துடன் அம்மையாரைப் பார்த்து பெண்ணமுதே!

"ஆகத்தை வருத்துகின்ற வரும்பசி யவித்தாய் தேண்ணீர்
தாகத்தைத் தவிர்த்தா யின்னுந் தவிர்ந்தில தளர்ச்சி மன்னோ
மேகத்தை யனைய கூந்தல் மெல்லியல் வினையேன் கொண்ட
மோகத்தைத் தணித்தி யாயின் முடிந்ததென் குறையதென்றான்."

---

திருப்புகழ் 315.

* "வள்ளிபடர் கின்ற வள்ளிமலை சென்று
வள்ளியை மணந்த—பெருமானே"

என் உடம்பைச் சோரச்செய்த கொடிய பசிநோயைத்தீர்த்தாய்! பின்னர் தாகவிடாயையும் தீர்த்தாய்! ஆனாலும் என் மனத்தளர்ச்சியோ நீங்கவே யில்லை. அந்த குறையானது உன்னாலன்றி தீராது, அதைத்தீர்த்தால் உனக்குக் கோடி புண்ணியமாகும் என, வள்ளியம்மையார் கள்ள சந்யாசியின் கருத்தறியாது தாத்தா! அதென்ன சொல்லுங்களென, பெரியவர் பல்லைக்காட்டி * கும்பிட்டு அடிபெண்ணே! நான் உன்மேற்கொண்ட மோகத்தைத் தவிர்த்தியாயின் முடிந்ததேன் குறையதென்று கூறினர். இதனைக்கேட்ட அம்மையார் நகைத்து, நடுநடுங்கி, பெருமூச்செறிந்து, சீறி, கோபக் குறிகளோடு கிழவரைப்பார்த்து ஐயா பெரியவரே! நீர் வயதில் மாத்திரம் பெரியவரானீரே யல்லாமல் வயதிற்குத் தக்கபுத்தி உமக்கில்லை. நீர் எம்மைக் கும்பிடுவதாலும், கெஞ்சுவதாலும், பல்லைக் காட்டுவதாலும்! பிதற்றுவதாலும் எந்த பிரையோசனமும் உண்டாகாது. என்னை ஏமாற்றி இவ்வளவுதூரம் அழைத்துவந்து இந்த இடரான இடத்தில் நீர் சரசவார்த்தைகளைப் பேசுவது தகாது. உமக்கு கொக்கிறகைப்போல் தலையும் தாடியும் நரைத்ததே யல்லாமல் புத்தி நரைக்கவில்லை. நீர் ஏதோ பெரிய தவசியைப்போல வேஷந்தரித்து வந்து இப்படி இழிகுலத்தாளாகிய என்மேல் இச்சைகொண்டு பலவிதமாக பிதற்றுகிறீரே இது உனக்குத் தகாது. உமக்கோ கொஞ்சமும் அறிவே கிடையாது. எங்கள் வேடர்குலத்துக் கெல்லாம் ஒரு பெரிய வசையை உண்டாக்கி வைக்க நீர் நினைப்பது உனக்கு அடாது, என் தந்தைமுதலாகிய வேடுவர்கள் இதைத் தெரிந்தால் உம்முயிரும் எம்முயிரும் இன்றோடு ஒழிந்தேவிடும். நீர்கொண்ட பயித்தியம் உமது தவவேடத்திற்குத் தகாது. என் தினைக்கொல்லை என்ன கதியாயிற்றோ நான் போகிறேன். என வள்ளியம்மையார் புறப்பட்டாள்.

ஆபத் சகாய விநாயகர்:—இவ்வாறு வள்ளியம்மை வேகமாய் நடந்து போவதைக்கண்ட கள்ள சந்நியாசி சற்று திகைத்து, ஓர் எண்ணந்தோன்ற, "பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்"

---

திருப்புகழ் 317.

* "வரையின்கண் வந்துவண் குறமங்கைக பங்கயம்
வாநின்று கும்பிடும்—பெருமாளே".

322. "மலைகொண்ட வேடுவர் காலூ டேபோய்க்
குறமங்கை யாளுட னேமா லாயே
மயல்கொண்டு லாயுவள் தாள்மீ தேவீழ்—குமரேசா"

என்னும் விநாயகக்கடவுளைப் பிரார்த்தித்து அண்ணா! தேவரீர் ஓர் யானையுருவேற்று என்னை மீறிச்செல்லும் வள்ளியை மறித்து அடியேனை ஈடேற்ற வேண்டும் எனப் பலவாறு வேண்டினர். அபயமென்றுரை அஞ்சேலென் றுதரிக்கும் ஆனைமுகப்பெருமான் ஓர் பருத்த மதயானை வடிவேற்று அஷ்டதிசைகளும் அதிர வீறிட்டு, தும்பிக் கையை நீட்டி, எதிரிற்கண்ட மரங்களை வேருடன் பறித்து வீழ்த்தி ஆரவாரத்துடன் வள்ளியம்மையார் முன்னே வரத்தொடங்கினர்.

அம்மையார் சம்மதித்தல்:—இக்காலையில் தனது தவமுடிவும் முருகக்கடவுள் திருவருளும் ஒன்றுபட, வள்ளியம்மையார் யானையைக்கண்டஞ்சி, பயந்து, வேர்த்து, நடுக்குற்று, யாதோருதவியுங்காணாது வேகமாக ஓடி முன் பிறப்பிற் கங்கைக்கரையில் எதைக்கோரித் தவஞ் செய்தனளோ அதனைப் பெருபவளாய் முருகக்கடவுளாகிய விருத்த சந்யாசியைப் பின்புறமாகச் சேர்த்துக் கட்டிக்கொண்டு தாத்தா! உன் இஷ்டப்படி யெல்லாம் நடக்கிறேன். இந்த மதயானை என்னை ஒன்றுஞ் செய்யாதபடி காப்பாயாக என வேண்டி அழுதனள். இதைக்கண்ட குமாரக்கடவுள் அடி பெண்மணி! அஞ்சாதே எனக்கூறி, தேகம் பூரித்து சந்தோஷத்துடன் விநாயகக் கடவுள் மறைந்து போம்படி தியானிக்க, விநாயகப் பெருமான் மறைந்ததும், குமார சிவம் வள்ளியம்மையைத் தழுவிக்கொண்டுபோய் ஓர் * பூங்காவனத்தையடைந்து கலந்து இன்பமுற்று, தமது ஆறுமுகமும் பன்னிருகரங்களும் பிரகாசிக்க நிஜவுருவத்துடன், மயில்வாகன ரூடராய் காக்ஷி தந்தனர்.

இவ்வாறு காக்ஷியளித்த பாலசண்முகக்கடவுளை வள்ளியம்மையார் பார்த்து பேரானந்தக் கடலுள் அழுந்தி, பலவாறு துதித்து,

"மின்னே யனையசுடர் வேலவரே யிவ்வுருவம்
முன்னேநீர் காட்டி முயங்காம லித்துணையுங்
கொன்னே கழித்தீர் கொடியேன்செய் குற்றமெலாம்
இன்னே தணித்தே யெனையாண்டு கொள்ளுமென்றாள்."

எங்கள் குலதெய்வமாகிய இறைவனே! என்னரும் பெருந்தவமே! நான் கோரியிருந்த குணப்பெருங் குன்றே! தேவரீர் தங்கள் நிஜவுருவத்தை முன்னமேகாட்டி அடியாளை ஆட்கொள்ளாது. ஆண்

திருப்புகழ் 306.

* "திருத்தமுத் தமிழ்க்கவிக் கொருத்துமைக் குறத்தியைத்
தினைப்புனைக் கிரித்தலத்—திடைதோயும்"

டவனே! என்னையும் ஒரு பொருளாக நினைத்து எதற்காக இந்நேரம் இவ்வளவு திருவிளையாடல்களைச் செய்தீரையனே! நானோபேதைமையால் ஏதேதோ பேசிவிட்டேன்; என் அபசாரங்களை மன்னிக்கவேண்டும் பிரபுவே! அடிமையை இந்நிமிஷம் முதல் தேவரீரது அடிமையிற்சேர்த்து ஆட்கொள்ளவேண்டுந்தேவா! என்று பலவாறுவேண்டி நிற்பதைக் குமாரக்கடவுள் கண்டு, அடி மாதரசி! நீ என் அம்மானாகிய திருமால் மகளாகி எம்ம்மக்கோவி தவஞ்செய்து எமதுகட்டளைப்படி நீ மான் வயிற்றிற் பிறக்க, இவ்வவதாரத்தில் உமக்கு அனுக்கிரகஞ் செய்தற்காகவே நாம் உன்மீது கொண்ட அன்பின் மிகுதியால் இத்திருவிளையாடல்களை நடத்திளேம். ஆகையால், நீ பேசியவை யனைத்தும் நமது அன்பின் மிகுதியான ஸ்தோத்திரங்களேயாகும். சந்தோஷத்துட னிருப்பாயாக. என பரிபூரண கடாக்ஷத்துடன் இருகரங்களாலுந் தழுவி, நீ இங்கு வந்து நெடுநேரமாயின நீ முன்னே தினைப்புனஞ் செல்வாயாக. நாமும் பின்பற்றி வருவோமென, வள்ளியம்மையார் தினைப்புனத்தை யடைந்து, அப்பால் சண்முகப் பரமனைப்பணிந்து, முன்னிலும் எண் மடங்கு அன்புமேலிட கண்ணுங் கருத்துங் கந்தன்பாற் கிடப்பக் கவணைக் கைக்கொண்டு ஆயாலோட்டி தினைப்புனங் காவல் செய்திருந்தனள்.

அக்கால் அடுத்த கொல்லையிற் காத்திருந்த பாங்கியானவள், வள்ளியம்மையாரது தோற்றமும், பேச்சும், நடைநொடிகளும் வேறாகக் காண்பதைக் குறிப்பாலுணர்ந்து, இனி நடப்பதனையுங் கவனிப்போமென நிதானித்து, அம்மணி! இந்நேரமாக எங்கு போயினையென, அம்மையார் நாணமும், தலைகவிழ்தலுமாக அச்சத்துடன் வெய்யல் வேட்கையால் சுனையில் நீராடினேனென, பாங்கி நகைத்து அம்மணி! உன் விழிரேகைகள் செவந்தும் முகத்திற் குருவியர்வும் உடம்புவாட்டமுற்றும், வாயிதழ்கள் வெளுத்தும், கைவளையல்கள் தளர்ந்தும், கொங்கைகள் பசலைபோர்த்து விம்மியும், மொழிகள் பரிவுகாட்டிக் குழறவும், இன்பச் சோர்வின் நஷ்டையும், அனல் தாவும் வாய்க்கீறியும் உனக்கு உண்டாக்கிய சுனை எங்கிருக்கிறது எனக்கேட்க. வள்ளியம்மையார் ஒன்றும் அறியாதவர்போல் தோழி! நான் உன்னை ஆதரவாகக்கொண்டு இங்கே யிருக்க, எனக்கு இல்லாத ஏதேதோசில குற்றங்களைக் கற்பிக்கின்றாயே இது தகுமா என பிணங்கி இருவரும் தர்க்கஞ் செய்துக்கொண்டிருக்கிறபோது அடைந்தாரைக் காக்கும் ஆறுமுகப்பெருமான் இதே தக்க சமயமென்று ஓர் வேடர் போற்றி

ருவுருக்கொண்டு, அம்பு, வில், இடைவாள், காற்செருப்பு, மயிற்பீலி, கச்சை, சல்லடம் முதலியவைகளைப் பூண்டு வெகு விரைவாகப் புறப்பட்டு வந்து, வள்ளியம்மையாரையும், தோழியையுங்கண்டு, அதட்டி பெண்காள்! என் கைபாணத்தினால் அடிபட்டு உதிரமொழுக வீறிட்டு ஒரு யானை இவ்விடத்தில் வந்ததா பார்த்தீர்களா சாடையாவது தெரியுமா? துரத்திவிட்டீர்களா? எங்காவது ஒளித்து வைத்திருக்கிறீர்களா எனக்கேட்டு பாலசண்முகக் கடவுள் நிற்பதைக்கண்டு,

தோழியானவள் குமார வேடரைப்பார்த்து, ஐயா! நீர் யார்? நாங்களோ பெண்கள், எங்களிடம் உமது சாமார்த்திய மெல்லாம் எதற்காகப் பேசுகிறீர்? என்று மறுமொழி கூறிவிட்டு, உள்ளுக்குள் இருவர் நாட்டத்தையும் பார்த்து ஓ ஓ இவர்கள் குறிகள் வேறாகக் காட்டுகின்றது. தேகமுற்றும் தழைகளை மூடிக்கொண்டு, பறவைகளைப்போல வஞ்சகக் குரல்களைக் காட்டி பக்ஷிகளைப்பிடிக்கும் வேடர்களின் சூழ்ச்சியைப்போல காணுகின்றன. இவர்களின் முகங்களிலும் விழிகளிலும் மையற்குறி புலப்படுகின்றன. இனி இங்கிருப்பது தகாது என தனது கொல்லைக்குப் போய்விட்டாள். இவ்வேடரும் பின்சென்று, பெண்மணிகாள்! நீங்கள்தான் எனக்கு சுற்றமும், துணையும், சினேகமும், நீங்களே உங்களுக்கு வேண்டியவைகளைக் கூறுவீர்களாயின் இத்தக்ஷணமே அழைத்துக் கொடுக்கிறேன். நீங்கள்சொல்லும் பணிவிடைகளைத் தட்டாமற் செய்யக் காத்திருக்கிறேன் கோபங்கொள்ளாமல் என்னைக் காக்கவேண்டும். என, பாங்கியானவள் மீண்டும் ஐயா! உலகுள்ளவரையில் எங்கள் குலத்திற்கு மாறாத வசையை உண்டாக்க நினைப்பது அழகல்ல. நீங்கள்கொண்ட கருத்தை மறந்துவிடுங்கள். என, குமாரக்கடவுள் பாங்கியைப்பார்த்து, இந்த வள்ளி வேடப்பெண்ணல்ல, நீ அவளை கேவலமாகப் பேசுவது அடாதென, பாங்கியானவள் ஐயா! இனி வேடர்வருவார்கள் அவர்களோ கொடியவர்கள், அவர்கள் உன்னைக் கண்டால் எமபுரமே யனுப்பிவிடுவர். உடனே போய்விடும். எனப் பயமுறுத்தினள், இதைக்கேட்ட குமாரதேவர் புன்னகையுடன் தோழியைப்பார்த்து பெண்மணி! நீ இன்று உன் நாயகியாகிய வள்ளியோடு என்னைச் சேர்த்து வைக்காவிடில் அவள் வடிவை ஏட்டில் எழுதி மடலேறி, உங்கள் ஊர்களின் வீதிகளில் ஓட்டிவைப்பேன். யாவரும் அப்போது வெளிப்படையாய் அறிந்து கொள்வார்கள் என, பாங்கி வேலவரை பார்த்து ஐயா! மடலேறவேண்டாம் சற்று தயவுசெய்து அந்த மாதவி சோலையிற்போய் மறைந்திருங்கள். அங்கு அம்மையாரை அழைத்து வருகிறேனென

வாக்குறுதிசெய்ய, பாங்கி சொல்லியபடி முருகன் சென்று மறைந்திருந்தனன். பாங்கியானவள் வள்ளிநாச்சியைக்கண்டு மிகவும் வணங்கி, வேடர் மையலுற்றிருப்பதையும் இனிவரும் பகை, பழி, பாவங்களையும் எடுத்துக்கூறி அவள் மனதைத் தேற்றி, அழைத்துக் கொண்டு போய் மாதவி சோலையில் விட்டு, அம்மணி! நீ இங்கேயே இரு உனக்கேற்ற புஷ்பங்களைப் பறித்துவருகிறேனெனப் போய்விட்டாள். அக்கால் வள்ளியம்மையார் காதற் கணவராகிய காங்கேயப் பெருமானைக் கருதி கண்ணோக்கியிருக்க, அவள் எதிரில் பழையபடி கந்தப்பெருமான் எழுந்தருளி இன்பவிளையாட்டயர்ந்து, பாவாய்! உன்தந்தை வருவன் பழையபடி தினைப்புனஞ் சென்றிரு. நாளையதினம் வருகிறேன். என மறைந்தனர். உடனே வள்ளியம்மையார் பிரிவாற்றாது பிரிந்துவந்து தோழியுடன் கலந்து தினைப்புனத் திருந்தனள்.

இச்சமயம் தினைக்கதிர்கள் முதிரக்கண்ட வேடராஜன் தினையை அறுவடை செய்துவிட்டு வள்ளியம்மையை வீட்டுக் கழைத்துக்கொண்டுபோய் விட்டான். வள்ளியம்மையார் கந்தப்பெருமானை சதா நினைந்தவளாய் ஏக்கமுற்று யாருடனும்பேசாமலும், நல்ல உடைகளையணியாமலும் இருந்து ஒருநாள் திடீரென்று சோர்ந்துவிழுந்தனள். இதனைக்கண்ட அம்மையாரது தாய் முதலினோர் எடுத்து மார்புடன் அணைத்து அம்மையாரது உடம்பை குறிப்பாகப்பார்த்து, தேககாந்தி குறைந்தும், உடல் துவண்டும், வளையல்கள் தளர்ந்தும், விழிகளில் நீர் பெருகியும், நரம்புகள் பசலைகொண்டு பூரித்தும், தனங்களில் நகக்குறி பட்டும் இருப்பவைகளைப்பார்த்து, தினைக்கொல்லையிலிருந்த காலையில் ஏதோ தேவதை சோங்கிற்றென்று தங்கள் குலதேவதைகளாகிய குறமூதாட்டியையும், முருகக்கடவுளையும் வேண்டி பூசையிட, ஒருவன்மேல் திடீரென்று சுப்பிரமணியர் ஆவேசம்தோன்றி அடே வேடுவர்களே! இது என்னால் நேர்ந்ததே எனக்கு சந்தோஷ முண்டாகப் பூசை போடுவீர்களானால் இப்போதே அவள் சுகமாய் எழுந்திருப்பாளெனக்கூற, இதைக்கேட்ட அம்மையார் ஆனந்தப் பரவசமுற்று களைதெளிந் தெழுந்தனள். அவள் தாய்தந்தை முதலினோரும் சந்தோஷித்தனர்.

இப்பால் முருகக்கடவுள் மறுதினம் வழக்கப்படி தினைப்புனத்திற்கு வந்து பார்த்து வள்ளியைக்காணாது வருந்தி; அர்த்தராத்திரியில் வேடரது சிற்றூரிற் சென்று, அம்மையாரது குடிசைக்கருகிற் போய் சைகையாகக் கையைத்தட்ட, பாங்கியானவள் அரவந் தெரிந்

து, வெளியில்வந்து இரகசியமாய் ஐயா! இப்படியும் இந்தக் கருக்கலில் வரலாமா? உங்களுக்கு இங்கே தக்கபடி இடமுமில்லை. அப்படி ஏற்பட்டாலும் பின்பு அம்மையார் உங்களைப் பிரிந்திருக்கத்தரியாள். ஆகையால் அம்மையை உங்களிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் விடுவது நலமெனக்கூறிச் சென்று வள்ளி நாயகியைக் கண்டு யாவுங் குறிப்பாக உணர்த்தி அழைத்து வந்து, அம்மையாரது அருமை பெருமைகளையும், வேடரது கொடுமைகளையும் கூறி வாழ்த்தி யனுப்ப, முருகக்கடவுள் அம்மையாருடன் வேடுவர் சிற்றூரை யகன்று ஓர் சுனைக்கருகில் ஓர் சோலையிற்சென்று இன்புற்றிருந்தனர். இது இவ்வாறிருக்க,


வேடுவர்கள்:—விடியற்காலமானதும் வள்ளிநாயகியைக்காணாது அனேக வேடுவர்களோடு புறப்பட்டு நாலாதிசையிலும் தேடிப்பார்த்துவருங்கால், ஆண்டவன் அம்மையோடு எழுந்தருளியிருந்த சோலையில் சில வேடுவர் நுழைந்து உற்றுப்பார்த்து, பல வேடுவர்களையும் திரட்டிக்கொண்டு பேரிரைச்சலுடன் உருத்ராகாரமாய் நெருங்கினார்கள் வேடராஜன் முன்னணியில் நின்று தன் பரிவாரங்களுடன், தன் மகளைக் களவாடிய கள்ளன் அஞ்சாது வள்ளியம்மையாரோடு எழுந்தருளியிருப்பதைக்கண்டு சரமாரியாகப் பாணங்களைப் பொழிய, அப்பாணங்கள் சடசட, சிடுசிடு, குறுகுறுவென இரைந்துசென்று ஆண்டவனுடம்பில் அருச்சிக்கும் புஷ்பங்களைப்போல் அவருடம்பிற்படடுதைக்காது சிதறிக்கிடந்தன. இவைகளைக்கண்ட ஆண்டவன் வள்ளியம்மையார் சகியாது வருந்துவதன்மேல், தமது சேவற்கொடியை நினைக்க, சேவல் விரைவாக வந்து பேரொலி எழ ஒருமுறை கூவின, இம்முழக்கத்தைக்கேட்ட வேடுவர்கள் விஷப்பரிசம் பட்டவர்களைப் போல் பொறிபுலன்கள் கலங்கி, ஒருவர்மேலொருவர் வீழ்ந்து யாவரும் ஒருமிக்க மாண்டார்கள்.

---

பதினேழாவது

# வள்ளியம்மையார் திருமணப் படலம்.

வேடுவர் உயிர்பெற்றெழுதல்:—இவைகளைக் கண்ட வள்ளியம்மையார் வேடுவர்களிறந்து கிடப்பதைக் கண்டு அவர்களிடத்தில்தான் வளர்ந்ததை நினைந்துருகி தன்தந்தையும், தன் சகோதரர் எழுவ



சுப்பிரமணியக்கடவுள் வள்ளியம்மையை திருமணம் செய்தல்.

ரும், சுற்றத்தாரும் இறந்து கிடப்பதைப் பார்த்து மனம் உருகி, ஆறுக்கவலையினால், கண்ணீர் தாரைதாரையாகப் பெருக, விம்மிவிம்மியழுது சோருகின்றதை குமாரக்கடவுள் குறிப்பாலுணர்ந்து, அம்மையாரை சோதிப்பவராய், அச்சோலையை விட்டு செல்லத்தொடங்கினர். அம்மையாரும் அழுத வண்ணமாய் பின்பற்றிச்சென்றார்.

நாரதர்:—இவைகளை முற்றுமுணர்ந்த நாரதமகாரிஷி குமாரக்கடவுளை வணங்கி ஐயனே, அடியேன் முன்னர் அம்மையாரைப் பற்றி கூறிச் சென்றபின் நடந்தவை யாதென, குமாரக்கடவுள் நாரதரை நோக்கி, தாம் தணிகையைவிட்டுப் புறப்பட்டது முதல் நாளதுவரை நடந்தவைகளைக்கூற, இவைகளைக்கேட்ட நாரதர் ஆண்டவனே! தங்கள் பொருட்டுப் போற்றி வளர்த்த தந்தை, சகோதரர், சுற்றத்தார் யாவரையும் இவ்வாறு செய்தல் தகுமோ! அவர்களிடம் வளர்ந்து, அவர்களால் பாராட்டி, சீராட்டிப்பெற்ற அம்மையார் உள்ளம்வருந்த அழைத்துப்போதல் அழகோ! தேவரீர் நிஜவுருவத்தைக்காட்டி அவர்கள்பால் அம்மையை மணம் புரிவீராயின் அவர்கள் தேவரீரை பூசித்து வேண்டிய சந்தோஷ ஆரவாரத்துடன் அனுப்புவார்களன்றோ! அவ்வாறின்றி கள்ளவேடம் பூண்டு அவர்கள் அரும்பெறும் அன்பாக வளர்ந்த அம்மையாரை களவாடிப் போவதென்னில் அவர்கள்மனம் வருந்தாதிருக்குமா. அவர்களை எழுப்பி அம்மையார் கவலையைத் தீர்த்து அவர்களை ஆதரிக்கவேண்டும் ஐயனே! என, குகப்பெருமான் அவ்வாறே ஆகுகவெனக்கூறி, நாயகியாரோடு பூஞ்சோலையை அடைந்து, வள்ளியம்மையைப்பார்த்து, அடி பெண்கள் நாயகமே! நீ வருந்தவேண்டாம். உன் சுற்றத்தாரை எழுப்புவாயாக எனக்கட்டளையிட, அம்மையார் அதற்கிசைந்து அறுமுகச்சிவத்தைப்பணிந்து, வாழ்த்தி தந்தை சகோதரர், சுற்றத்தார் முதலியவர்களைப் பார்த்து அழுது என் அரிய ஆசைப்பிதாவே! என் அன்பிற் சிறந்த அண்ணன்மார்களே! என்னைப் போற்றி வளர்த்த என் பந்துமித்திரர்களே! என் ஒருத்தியின் பொருட்டால் அந்தோ உங்களுக்கு இப்படி நேர்ந்ததற்கென்செய்வேன் இதுவும் நமது ஆண்டவன் அருள்விளையாட்டே ஆதலின் எழுந்திருப்பீர்களாக என ஒவ்வொருவரையும் தட்டித்தட்டி எழுப்ப, யாவரும் எழுந்தனர். அவர்கள் முன்னர் கருணாநிதியாகிய காங்கேயன் ஆறுமுகமும், பன்னிருகையும், கடப்பமாலையும், வச்சிராயுதம், வேலாயுதம், முதலிய துவாதசப்படைகளும் பிரகாசிக்க தமது நிஜரூபத்தைக் காட்டி எதிரில் நின்றனர். இவ்வாறு நின்ற குமாரக்கடவுளைக்கண்ட வேடுவர்கள் பலவாறு துதித்து ஆண்டவனே

எங்கள் மாசுபடாத குலத்திற்கோர் வசையை உண்டாக்கினீர், ஆயினும், தாங்கள் அம்மையாரோடு எங்கள் குறிச்சிக்கு எழுந்தருளி சந்திர சூரியர், அக்கினி தேவர்கள், கடவுளர்கள், சுற்றத்தார் முதலினோர் சாக்ஷியாக திருமணஞ்செய்துக்கொண்டு, எங்கள் மரபுக்கடுத்த சிறப்புகளைப் பெற்று தங்களிஷ்டப்படி வள்ளியம்மையாரை அழைத்துப் போகவேண்டும் எனப் பிரார்த்திக்க, அவர்களைநோக்கி நாம் அவ்வாறே தணிகையில் மணம்புரிவோம் அங்கு வாருங்களெனக்கூறி அம்மையோடு தணிகைக்குச்சென்று வீரவாகுதேவர் முதலினோர் புடைசூழ வீற்றிருந்தனர். சிவபெருமான் உமாதேவியாரோடு குமாரலிங்கத்தினின்று தோன்ற, குமாரக்கடவுள் அவர்களை வணங்கி நிற்க, நாரதர் சமீபத்தில் வந்து இம்மாசிமீ பூச நக்ஷத்திரமே திருமணத்திற்கேற்றதெனக் கூறி புரோகிதராக அமைந்தனர். ஆபத் சகாய விநாயகக்கடவுள் உத்திரவின்படி குமாரக்கடவுள் வீரவாகுதேவரையனுப்பி கந்தகிரியினின்று தெய்வானையம்மையாரை அழைத்துவந்தனர். தேவமயனால் கலியாண மண்டபம் நியமிக்கப்பட்டது. தேவர்களெல்லாம் வந்து சேர்ந்தனர். சர்வாடம்பரங்களும் பொருந்த வள்ளியம்மையாருக்கும், குமாரக்கடவுளுக்கும் கலியாணச் சடங்குகள் நடைபெறுவதாயின. வேடராஜன் தன் நாயகியோடு வாச நீரேற்றுத் தத்தஞ்செய்ய அனைத்துயிரும் புரக்கும் ஆண்டவனாகிய ஆறுமுகப்பெருமான் வள்ளி நாச்சியாரை மணம் புணர்ந்தனர். உடனே அம்மையாருக்கு தேவதேஜசும், இமையா விழியும், நிழல்தரா உருவும், வாடா மாலையும், மாசுந் தூசும் வியர்வையுந் தோன்றுவுடலும் உடனே பொருந்த தேவர்களில் ஒருவளாயினள். மணச்சடங்கு முடிந்ததும், தேவ தேவர்கள் எல்லாம் விடைபெற்றுத் தத்தம் இருக்கையை அடைந்தனர். அப்பால் வள்ளியம்மையார் தேவசேனையின் திருவடிகளில் வீழ்ந்தனள். தெய்வானை யம்மையாரும் வள்ளியம்மையாரை இருகரங்களாலுந் தழுவி எடுத்து எனது அரிய துணையாகவந்த தங்கையே என அணைத்து, முதுகு தடவி, குமாரக்கடவுளைநோக்கி ஆண்டவா இந்த வள்ளியார்? என, முருகக்கடவுள் இவ்விருவர்களின் முற்பிறப்பின்நிலைமைமுதல் நாளதுவரையுள்ள சரித்திரங்களைக்கூறினர்.

பதினெட்டாவது

# தணிகைத் தல மகத்துவம்.

முனிவர்காள் கேட்பீர்களாக, என மீண்டும் சூதபுராணிகர் கூறுகின்றார்:—இவ்வாறு குமாரக் கடவுள் வள்ளி நாயகியாரைத் திருமணம் புரிந்து, சகலதேவர்களும் வாழ்த்த, வேடர்களது சகல ஆடம்பரங்களையும் பெற்று திருத்தணிகையை அடைந்தவுடன், அம்மையார் முருகக்கடவுளைப் பணிந்து, ஆண்டவனே இத்தல மகத்துவத்தைச் சிறிது அனுக்கிரகஞ் செய்யவேண்டுமெனக் கேட்க, குமாரக் கடவுள் அம்மையைப் பார்த்து பெண்மணி! இம்மலையானது உலகமுண்டானபோதே தோன்றியதாகும். நாம் மிகவும் கொடிய சூரபதுமனாதியவர்களை வெற்றிகொண்டு இம்மலையை அடைந்த மாத்திரத்தில் அதனால் நேர்ந்த சிரமங்களகன்று தணிவுபெற்றோம். அன்றி சமீபத்தில் உன் தந்தை முதலிய வேடுவர்களுடன் போராடி வருந்தியகளையும் இம்மலையை உற்ற மாத்திரத்தில் தணிந்தன. அதனால் இம்மலைக்குத் திருத்தணி எனவும், செருத்தணி எனவும் பெயர்களாயின நமக்கு எண்ணிறந்த தலங்களிருந்தாலும் இத்தணிகையில்,

(காந்தபுராணம்)

* "கோடியம்பியும் வேய்ங்குழ லூதியுங் குரலா
னீடு தந்திரி யியக்கியு மேழிசை நிறுத்துப்
பாடியுஞ் சிறு பல்லியத் தின்னிசை படுத்து
மாடுதும்விளை யாடுது மிவ்வரை யதன்கண்."

தணிகைபுராணம் விடையருள்பெறு படலம்.

"பழிதீர் குறும் பல்லிய மியம்பி
குழலூதியுங் கோடுக ளிசைத்து
மெழுவான்றகர் மஞ்ஞையிவை யூர்ந்தும்
விழைவால் விளை யாட்டயர் மீண்டே"

---

* செகுசெகண கெணசெகுத செக்குச்செ குச்செகுத
கிருதசெய செயகிருத தொக்குத்தொ குத்தொகுத
டிமிடடிமி டிமிடமிட டிட்டிட்டி டிட்டிமிட டிடிதீதோ
திரிகடக கடகதிரி தித்திக்கிர திக்ரிகட
திமிர்ததிமி திமிர்ததிமி தித்தித்தி தித்திதிதி
செணுசெணுத தணசெணுத தத்தித்தி குத்ரிகுட ததிதீதோ
தகுடதிகு திகுடதிமி தத்தத்த தித்திகுட
குகுகுகு குகுகுகுகு குக்குக்கு குக்குகுத
தாராரா ரிரிர்ரிரி றற்றித்த றிற்றிரிரி எனவேநீள்
சதிமுழவு பலவுமிரு பக்கத்தி சைப்பமுது
சமையப்பயி ரவியிதய முட்கிப்ர மிக்கவுயர்
தணிகைமலை தனில்மயிலி னிர்த்தத்தி னிற்கவல பெருமானே
என திருவாய் மலர்ந்த தனையும் யூகிக்கத் தக்கது.

நாம் நீங்காமலிருந்து, கொம்புகளை ஊதியும், வேணுகானஞ்செய்தும், தந்திரி வாசித்தும், சப்த சுரங்கங்களாலாகிய வீணையை மீட்டியும், பலவித வாத்தியங்களை முழக்கியும், பல இசை பொருந்திய பாடல்களைப்பாடியும் இம்மலைக்கண் * ஆனந்தத் தாண்டவஞ் செய்துக் கொண்டிருப்பதாகும்.

இதன்றி இம்மலையின் மகத்துவங்களை நாம் அளவிட்டுக் கூற முடியாததாகும். இம்மலையின்கண் பல ஓஷதிகளும், ஜீவ சஞ்சீவிகளும், பல முனிவர்களும், சித்தர்களும், யோகிகளும், ஞானிகளும், நிறைந்திருக்கின்றனர், இங்கு மூழ்கினவர்களுக்கு மூன்று பிறவிகளிலும் செய்த பாபங்களைப் போக்கி, அவர்கள் இஷ்டார்த்தங்களைக் கொடுத்து, பிறவாப் பெருஞ் செல்வமாகிய பேரின்ப முத்தியையுங் கொடுக்கும் அளவற்ற தீர்த்தங்களிருக்கின்றன. இம் மலையிற்றான் சர்வ லோகேஸ்வரராகிய சாக்ஷாத் உமாபதியும், நந்திதேவரும், அரி பிரமேந்திராதி தேவர்களும், நாரதாதி ரிஷிகணங்களும், மனுவாதி வேந்தர்களும் நம்மைக்குறித்து, வாழ்த்தியும் வணங்கியும், பூசித்தும் தவஞ்செய்தும், நிஷ்டை கூடியும், பல திருப்பணிகளைச் செய்தும், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தும் வழிப்பட்டு வேண்டிய போகபாக்கியங்களைப் பெற்று, பொன்னுலக வாழ்வையும் பொருந்தினார்கள்.

என குமாரக்கடவுள் வள்ளியம்மையாருக்கு இது முதலாகிய, தல மகத்துவங்களையும், விரத பலன்களையும், தீர்த்த பலன்களையும், மூர்த்தி சொரூபங்களையும், தணிகையை அடைவார் அனுஷ்டிக்கும் நெறிகளையும் கூறினார்.

* பரமேஸ்வரர் பார்வதியார் காண பஞ்ச கிருத்தியத் தாண்டவஞ் செய்வதுபோல, அவரது இளைய குமாரராகிய பாலசுப்பிரமணிய சிவமும், வள்ளி நாயகியார் காண நடனஞ் செய்வரென்பதை அருணகிரி நாதரும் திருப்புகழ் முதற் புத்தகம் 307-ம் கவியின் பிற்பாதியில்,

## பிரமேசுரர்.

முனிவர்காள்! கேட்பீர்களாக:—இவ்வாறு குமாரக்கடவுள் பிரணவியாகிய * வள்ளியம்மையாருக்கு தணிகாசல மகத்துவங்களை கூறி அம்மையாருடன் (காந்தம் தக்ஷகாண்டம் 230)

"இவ்வரை யொருசார் தன்னி லீராறு தோளுடைய வெந்தை
மைவிழி யணங்குந் தானும் மாலப னுணரா வள்ளல்
ஐவகை யுருவி லொன்றை யாகம விதியா லுய்த்து
மெய்வழி பாடுசெய்து வேண்டியாங் கருளும் பென்றான்."

அத்தணிகை மலையின் ஒருபக்கத்தில் சிவசாதாக்கியம் ஐந்தனுள் ஒன்றாகிய கர்ம சாதாக்கியமென்னும் சதாசிவ பிரமலிங்கத்தை ஸ்தாபித்து ஆகமவிதிப்படி வழிபாடுகளைச் செய்து பூசித்து, திரிகரணசுத்தியாக மெய்யன்புடன் தியானித்து வேண்டிய வரங்களைப் பெற்றார்கள். இச்சதா சிவலிங்கத்தையே பிரமேசுரரென நாளதும் பூசிக்கப்படுகின்றனர். இம்மூர்த்தியைப் பூசிப்பவர்க ளெல்லாம் எல்லா வளங்களையும், வாழ்வுகளையும், பெற்று வான நாடும் பெறுகிறார்கள்.

அகோரமுனிவர் அருள்பெற்றது:—முனிவர்காள்! பின்னர் அகோரன் என்னும் ஓர் மாதவ சிரேஷ்டர் ஒருவரிருந்தார். அவர் விரதசீலராய், குமாரக்கடவுளை மெய்யன்புடன் பூசித்து, ஆதிவாரம் விஷ்ணு தீர்த்தத்திலும், சோமவாரம் நந்திபாறு சிவகங்கை என்பவைகளிலும், மங்களவாரம் நாகதீர்த்தம், நாரததீர்த்தம் என்பவைகளிலும், புதவாரம் பிரமதீர்த்தத்திலும், குருவாரம் இந்திரதீர்த்தத்திலும், சுக்கிரவாரம் குமார தீர்த்தத்திலும், சனிவாரம் அகஸ்திய தீர்த்தத்திலும் கிரமப்படி மாறி மாறி மூழ்கிக்கொண்டிருந்து, அவரது தீராவினை தீர்ந்து, இம்மை மறுமைப் பயன்களாகிய இகபர ஞானங்களையும், வேண்டிய வரங்களையும் பெற்று முத்தியடைந்தனர்.

---

* மூர்த்தி, தலம், தீர்த்தம், விரதம், அனுஷ்டானம் என்பவைகளை தணிகைப்புராணம், காந்த புராணம் முதலியவைகளிற் கூறுவதைப்போல விரிவுரைய இந்நூலிடந் தாரமையால் விரிவஞ்சி விடுத்தனம். முருகன் திருவருள்.

பத்தொன்பதாவது

## விரத விசேஷப் படலம்.

முனிவர்காள்! இம்மட்டோ குமாரக்கடவுளுக்கு முக்கிய தினமானது சுக்கிரவாரம், சோமவாரம் என்பவைகளும், கிருத்திகை, விசாகம் என்னும் நக்ஷத்திரங்களும், சஷ்டி, பௌர்ணமி என்னுந் திதிகளும் முக்கியமானவைகளாகும். இக்காலங்களில் குகப்பெருமானை விரதசீலராயிருந்து கூடிய புண்ணியங்களைச் செய்து, துதிப்பவர்களும், பூசிப்பவர்களும், அவரது சந்நிதானத்தை யடைந்து வலம்வந்து தரிசிப்பவர்களும் நற் செல்வம், நன்மனைவி, நன்மக்கள், நல் வாழ்வு, நற்கல்வி, நற்கீர்த்தி முதலியவைகளைப் பெற்று, இஷ்டார்த்தங்களை யடைந்து, ஆண்டவன் அருளுக்கு ஆளாகி, பிறவியை எடுத்ததனாற் பெறவேண்டிய பெருமுத்தியையும் அடைகின்றார்கள்.

மேற்கூறிய தினங்களில் முன்னாளும், பின்னாளும் பகல் ஒருவேளை ஆகாரமுண்டு, அத்தினங்களில் முழுதும் விரதமிருந்து ஆறுமுகப்பெருமானைத் தியானித்து பக்திசெய்து, பிரசங்கம், காலக்ஷேபம், அவரது சரித்திர பாராயணம் முதலியவைகளிற் காலத்தை கழித்து, அப்பிரபுவை அலங்கரித்து அழகுபார்த்து ஆராதித்து, அவரடியார்களை வழிப்படுவோர் நிகரற்ற செல்வ வந்தர்களாகி, எல்லாவாழ்வும் பெற்று தேவர்களே யாகிறார்கள்.

பகீரத மகாராஜன்:—தன் அரசாட்சியைப் போக்கடித்து விட்டு மனைவி மக்களுடன் வருந்தி வனவாச முற்று வழிதோன்றாது சோர்ந்து கடைசியாய் மேற்கூறிய விரதங்களில் ஒன்றை வைராக்கிய மாக மூன்று வருட காலம் நடத்தி தன் இராச்சியத்தையும், தன் மேலான சம்பத்துகளையும், கோரிய சித்திகளையும் பெற்று செவ்வேள் திருவடிக்கு ஆளானான்.

நாரத மகா முனிவர்:—ஒருக்கால் சத்தரிஷிகளில் ஒருவராகக் கருதி சுப்பிரமணிய உபாசனையுடன் பரணி பின்நேரம் ஒருபோது உணவுகொண்டு கார்த்திகை உதயத்தில் தீர்த்தஸ்நானஞ்செய்து மனதைப் புறம்விடாது, ஆசாரிய சேவை செய்து, மூன்றுகை ஜலபானம் பண்ணி, முருகக்கடவுளது அனந்த நாம கல்யாண குணானுபவங்களை

பாடி வாழ்த்தியும், புராண பிரசங்க, காலக்ஷேபாதிகளிற் பொழுதைச் செலுத்தியும், தியானித்தும், நிஷ்டைசெய்து மிருந்து, மறுநாள் உதயம் உரோகணியில் அனுஷ்டானக் கிரமத்துடன் அடியார்களோடு பாரணை செய்து உறங்கா திருந்து சேவற்கொடியோன் திருவருள்பெற்று தேவரிஷிகளில் சிரேஷ்டராயிருக்கும் பாக்கியத்தை பெற்றனர்.

முற்பிறப்பில் வேடனாக யிருந்த சந்திமான் என்பவரும், அரசனாக யிருந்த அந்திமான் என்பவரும் மேற்படி கிருத்திகை விரதத்தை அனுஷ்டித்து வேண்டிய போக பாக்கியங்களைப்பெற்று, இராஜராஜர்களாகி இடையெழு வள்ளல்களில் இவர்களும் இரு வள்ளல்களாய் உலகம் புகழ இருந்தார்கள்.

திரிச்சங்கு மகாராஜன்:—தான் முற் பிறப்பில் பிராமணரா யிருந்து, மிக்க ஏழையாய், குடும்ப பாரத்தி லுழன்று வருந்தி கடைசியாய் ஓர்முனிவர் அனுக்கிரகத்தால் கிருத்திகைவிரதத்தைக்கைக் கொண்டு அகிலாண்டரக்ஷகனாகிய ஆறுமுகக்கடவுள் அருளையடைந்து அடுத்தபிறப்பில் திரிச்சங்கு மகாராஜனெனப் பிறந்து இன்னும் அழியாத பெயரை யடைந்திருக்கிறான்.

தேவர்கள்:—ஐப்பசிமீ சுக்கிலபக்ஷம் பிரதமைமுதல் சஷ்டிவரையில் விரதசீலராகயிருந்து சஷ்டிவிரதத்தை அனுஷ்டித்து, சப்தமியில் பாரணை செய்து பூசித்து மேலான தேவபோகங்களை அடைந்தார்கள் இவ்விரதத்தை எண்ணற்ற முனிவர்களும், முத்தர்களும், அனுஷ்டித்து வேண்டிய சித்தி முத்தியாதிகளை யடைந்தனர்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி:—ஆளவந்த ஆண்டவனாகிய ஆறுமுகப் பெருமான் அரும் பெரும் விரதங்களை அனுஷ்டித்து, அரியதொண்டுகளைச் செய்து, அகிலத்தை ஆண்டதோடு அமரர்களையும் ஆதரித்து ஐயனது அருளையும் அடைந்தான்.

ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமிகள்

ஸ்தலம், திருவுருவம், கோழி, மயில், வேல், ஆயுதங்கள், தெய்வயானையம்மையார், வள்ளியம்மையார், வேடர்கள், அசுரர்கள் என்பவர்களின்

# தத்துவார்த்தப் படலம்.

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளின் ஸ்தானம்.—ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் எழுந்தருளியிருக்கும், திருத்தணிகைமலை யெனப்படுவது சூரனாதி அரக்கராகிய, ஆணவம், மாயை, காமியம், என்னும் மும்மலங்களையும், வேடராகிய சுவை ஒளி, ஊறு ஓசை, நாற்றம், என்னும் ஐம்புலன்களையும் ஒழித்து தணிந்து நின்ற இடமாகிய "லலாடஸ்தானமாம்"

அவர் திருவுருவம்:—ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு முற்றறிவு' எல்லையில்லாத இன்பம், இயற்கையறிவு, பேரருளுடைமை, வரம்பிலாற்றல், தம்வயமுடைமை ஆகிய ஆறு சுத்தகுணங்களும், ஆறுதிருமுகங்களாகவும், மற்ற கலியாணகுணங்கள் ஏனைய அவயவங்களாகவும் அமையப்பெற்றிருக்கும் அருட்கோலமே திருமேனியாம். இதனால் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுடைய திருவுருவம் பஞ்சபூதங்களாலாகிய ஸ்தூல, சூட்சுமமுதலிய பௌதிகதேக மல்லவென்பது பெற்றும். ஆனதால் தேகங்களுக் குரிமையாகிய குணதோஷங்கள் ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகளுக்குச் சற்றேனுமில்லையென்பது பெற்றும்

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டகம், வில், மழு, வேல் ஆகிய இப்பனிரண்டும் பன்னிருகை ஆயுதங்களாம், இப்பனிரண்டில் வேலாயுதந்தவிர மற்றப் பதினோராயுதங்களும், பதினொரு உருத்திரர்களாகும். இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்னும் மூன்று சத்திகளும், மூன்றிதழாயமைந்த அடுக்கே வேலாயுதமாம். இதனால் ஆயுதங்கள், கொல்லன்முதலிய தொழிலாளிகளால் செய்யப்பட்டு, உயிரைவதைத்து, நிணந்தோய்ந்து, உதிரத்தைக்குடிக்கும் ஆயுதங்கள் போலல்ல வென்பதாயிற்று. கோழிநாத தத்துவமாம், அவர் வாகனமாகிய மயில் விந்து தத்துவமாம், அவர்படையாகிய பூதகணங்கள் தத்துவக் கூட்டங்களாம்.

தெய்வயானையம்மை, வள்ளியம்மை என்னும் இரண்டு தேவிகளும் முறையே ஞானசக்தியும், கிரியாசக்தியுமாவர். சிலர் வேலாயுதத்தை ஞானசக்தி யென்றும், வள்ளியம்மையை இச்சாசக்தியென்றும், தெய்வயானையம்மையைக் கிரியாசக்தி யென்றும் சொல்கின்றனர். வேறு சிலர் வேலாயுதத்தை முன்சொன்னபடி இச்சா, ஞான, கிரியாசக்திகளி னடுக்கென்றும், தெய்வயானையம்மை, வள்ளியம்மை இவர்களையே முறையே சிற்சக்தி, பராசக்திகளென்றுஞ் சொல்கின்றனர் ஆகையால் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு தேவிமாரென்பவர் காமோற்பத்திக்கு ஏதுவாய்ச் சிற்றின்ப அனுபவத்தை விளைவிக்கும் உலகத்து மனைவிமார்போல் ஆகாரென்பது துணிந்த பொருள். ஆன்மாக்களுக்கு மோட்ச இன்பங் கொடுக்க விரும்பும் விருப்பம், "இச்சாசக்தி," அதற்கு வேண்டியவைகளை அறியும் அறிவே "ஞானசக்தி," அறிந்தவைகளைச் செய்யும் செயலே "கிரியாசக்தி," உயிர்க்கொளியாய் நிற்பது, "சிற்சக்தி," பிராணன் முதலிய வாயுவாக நிற்பது "பராசக்தி."

அவர் செய்கை—சூரபத்மன், சிங்கமுகாசூரன், தாருகாசூரன் என்னும் மூன்று அசுரர்களை முறையே ஆணவம், மாயை, காமியம், ஆகிய மும்மலங்களென்றும், அவ்வசுரர்களால் பந்திக்கப்பட்டதேவர்களை ஆன்மாக்களென்றும் மேலோர் சொல்கின்றனர். ஆதலால் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அசுரர்களையழித்து தேவர்களை யிட்சித்தன ரென்பது ஆணவமுதலிய மலங்களையறுத்து ஆன்மாக்களை ஆட்கொண்டன ரென்பது பாரமார்த்திகபாவமாம். வேடர்களென்பது, ஐம்புலன்களாம்; அவரிடையில் வளர்ந்த வள்ளிநாயகியார் ஜீவாத்துமாவாம். தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் அறியாமல் வளர்ந்த ஜீவாத்துமாவாகிய வள்ளிநாயகியாரை, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் ஐம்புலவேடர்களின் மயக்கமறுத்துத் தனக்கடிமை கொண்டன ரென்பது பெற்றும்.

என சூதபுராணிகர் கூறி, ஒருவாறு தணிகைத் தலமகத்துவத்தை முடித்தனர். இவைகளைக்கேட்ட முனிவர்கள் யாவரும் ஒருங்குதிரண்டுவந்து அத்தணிகையின்கண் குமாரக்கடவுளைப் பூசித்து இஷ்டார்த்தங்களை யடைந்தனர்.

## தணிகைப் புராண வசனம்

## முற்றுப் பெற்றது.

ஓம் சண்முக ஞான குருப்யோ நம:

---

இத்தணிகைப் புராண வசனம் சென்னை சமரச ஞானானந்த சபையாரால் பார்வையிடப்பட்டது.

# முக்கிய கவனிப்பு.

இவ்வள்ளியம்மைத் திருமணப்படல சரித்திர சம்பந்தமாக திருத்தணிகையில் வழக்கப்படி, பிரதி சித்திரைமீ மிருகசீரிட நக்ஷத்திரந் தொடங்கி பௌர்ணமி வரையில் நடைபெறும் குமாரக்கடவுள் பிரமோற்சவத்தில் 8-வது நாள் இரவு தெய்வயானை கல்யாணமும், வள்ளியம்மையார்விவாதமும், 10-ம் நாள் தணிகைக்குக் கிழக்கில் சுமார் 5-மயிலுள்ள விநாயகபுரத்தில் தேவ சேனையாரது தாய் வீடென முருகக்கடவுள் போய்வரும் உற்சவமும் கவனிக்கத்தக்கது. இதன்றி,

பிரதி மாசிமீ அசுவனி நக்ஷத்திரமுதல் 10-நாள் நடைபெரும் பிரமோற்சவத்தில் 6-ம் நாள் மஞ்சள்நீர் உற்சவமும், அன்றிரவு தாசிகளால் நடத்தும் காமக்கூத்தும், 8-ம் நாள் இரவு குமாரக்கடவுள் மலையின்மேற்புறம் அடிவாரத்தில் இறங்கி வள்ளியம்மையாரைத் திருடுதலும், வேடர், கூட்டக்காட்சியும் அன்று விடியர்காலம் வள்ளியம்மையாருக்கும் குமாரக்கடவுளுக்கும் திருக்கல்யாணம் நடைபெறுதலும், வள்ளிதெய்வானை தர்க்கங்களும், 11-ம் நாள் வள்ளியம்மையாரது தாய்வீடென ஏழுசுனைக் கருகிற் சென்று கலியாண மருவு உண்ணுதலும் இக்காலத்தும் நடைபெறுகின்றதை எவருங் காண்க.

வள்ளி மலையில் உள்ள குமரியென்னுந் தீர்த்தத்தில் வள்ளியம்மையார் ஸ்நானஞ் செய்த காலங்களில் மஞ்சளுரைத்த அடையாளங்கள் இன்றுங் காண்க.

ஸ்ரீ சுப்பிரமணியவிலாசம்பிரஸ், நெ. 324, தங்கசாலைதெரு மதறாஸ்.